மருதநாயகம்

ஆற்காடு நவாபின் படைத் தளபதி
முகமது யூசுப்கான் (கான்சாகிப்)
தொடர்பான குறிப்புக்கள்

டாக்டர். **ந. இராசையா**

மருதநாயகம்*

டாக்டர். **ந. இராசையா**
எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,

ஞானமுருகன் எழுத்தகம்
3/110, அயன்கொல்லங்கொண்டான்
இராசபாளையம் வட்டம் - 626 142
விருதுநகர் மாவட்டம்
தொலைபேசி எண் : 04563 - 245728

பதிப்பு விபரம்

பதிப்புரிமை	-	ஆசிரியருக்கு
நூல் தலைப்பு	-	மருதநாயகம்
மொழி	-	தமிழ்
இரண்டாவது பதிப்பு	-	டிசம்பர் 2007
புத்தக அளவு	-	21 - 14 (1 X 8)
அச்சிட்ட புத்தகங்களின் எண்ணிக்கை	-	1000
படம்	-	வரலாற்று ஆய்வு
மொத்தப் பக்கங்கள்	-	6 + 160 = 166
பதிப்பிற்குப் பயன்படுத்திய தாள்	-	சேசாயி
விலை	-	ரூ. 80/-
ஆசிரியர்	-	டாக்டர். **ந. இராசையா** எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,
வெளியீட்டாளர் முகவரி	-	**ஞானமுருகன் எழுத்தகம்** 3/110, அயன்கொல்லங்கொண்டான் இராசபாளையம் வட்டம் விருதுநகர் மாவட்டம் - 626 142.
அச்சிட்டோர்	-	உமையாள் பிரிண்டிங் பிரஸ் 689, தெற்கு வைத்திய நாதபுரம் தெரு, இராஜபாளையம் - 626 117. போன் : 04563 - 224890



கான்சாகிப்
காலத்தில்
தென் தமிழ்நாடு
திருச்சி
வைகை
மதுரை
சிவகங்கை
வைகை
இராமநாதபுரம்
சங்கரன் கோவில்
திருவில்லிபுத்தூர்
சேத்தூர்
சிவகிரி
கொல்லங்கொண்டான்
வாசுதேவநல்லூர்
நெற்கட்டும்செவல்
ஊத்துமலை
பாஞ்சாலங்குறிச்சி
சுரண்டை
திருநெல்வேலி
பாளையங்கோட்டை



நன்றி 'தமிழ்வீரன் பூலித்தேவன்'



சம்மட்டிபுரத்திலுள்ள யூசுப்கான் சமாதி

ஆற்காடு நவாபு

உள்ளே

1. முன்னுரை - 1
2. முகமது யூசுப்கான் - ஓர் அறிமுகம் - 8
3. மருதநாயகம் தொடக்க விழாவில் எலிசபெத் ராணி - 12
4. இதழ்களில் மருதநாயகம் - பேட்டிகள் - 18
5. தினமணியின் பார்வையில் மருதநாயகம் - 30
6. சாவியின் பார்வையில் மருதநாயகம் - 43
7. குமுதம் பார்வையில் மருதநாயகம் - 50
8. மருதநாயகம் படத்தின் பெயரை மட்டும் மாற்றினால் போதுமா ? - 63
9. வல்லபாய் படேலும், மருதநாயகமும் - 65
10 செம்மலர் பார்வையில் மருதநாயகம் - 69
11. இதயம் பேசுகிறது பார்வையில் மருதநாயகம் - 83
12. மருதநாயகம் - ஒரு சந்தர்ப்பவாதி - 85
13. இதயமே நூறு கோடி கொடு - 87
14. குங்குமம் பார்வையில் மருதநாயகம் - 88
15. மருதநாயகமும் மகாத்மா காந்தியும் - 95
16. கமல் மன்னிப்புக் கேட்க வேண்டும் - 104
17. சினிமா ஸ்பெஷல் பார்வையில் மருதநாயகம் - 106
18. மருதநாயகம் படப்பிடிப்பு சூடுபிடித்தது - 117
19. மக்கள் விரோதி மருதநாயகம் - 119
20. மஹதியின் பார்வையில் மருதநாயகம் - 123
21. ஆவணங்களில் மருதநாயகம் உண்மை வரலாறு - 129
22. மருதநாயகம் - மதத்தில் குழப்பம் - 131
23. மருதநாயகம் - சாதியில் குழப்பம் - 132
24. மருதநாயகம் பிறப்பும் இறப்பும் - 136
25. வீரபாண்டிய கட்டபொம்மன் - மருதநாயகம் இறப்பில் குழப்பம் - 137
26. பூலித்தேவன் சிந்தில் கான்சாகிபு - 148
27. முடிவுரை - 151

முன்னுரை

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இராசபாளையம் பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள மிட்டாய்க் கடையில் ஒரு இனிப்புப் பொட்டலம் வாங்கி, அதனைப் பிரித்துப் பார்த்த போது, அதில் ஒரு இனிப்பான செய்தி இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். "சுதந்திர உள்ளம் கொண்ட பாளையக்காரர்களை அடக்குவதில் கான்சாகிபு கண்ணுங் கருத்துமாய் இருந்தான்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

"1759-ஆம் ஆண்டு சூலை 2-ஆம் தேதி, கான்சாகிபு 6400 சிப்பாய்களையும், 600 குதிரை வீரர்களையும் கொண்டு ஒரு பெரும் படையுடன் சுதந்திர வீரர்களை வாட்டி வதைக்கும் நோக்கத்துடன் ஏகாதிபத்திய கொடுங்கோலர்கள் சார்பில் புறப்பட்டான். முதலில் பூலித்தேவரும், வடகரைப் பாளையக்காரரும் கைப்பற்றியிருந்த கொல்லங்கொண்டானைப் பிடித்தான்" என்னும் செய்தி அதில் இருந்தது. அந்தத் தகவல் எந்த நூலில் வெளியிடப்பட்டது என்ற குறிப்புக்கள் அதில் இல்லை. பின்னர்தான் அச்செய்தி "கும்மந்தான் சாகிபு" என்னும் நூலில் பக்கம் 16-ல் பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதியிருப்பது என்று தெரிய வந்தது. 1

நான் சேத்தூரில் பிறந்து வளர்ந்தாலும் என் மனைவியின் ஊரான கொல்லங்கொண்டானில் தற்போது குடியிருந்து வருகிறேன். என் மனைவி ஞானம் அந்த ஊரிலுள்ள தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றி வந்தாள். இந்த ஊரின் முன் வரலாறு எனக்குத் தெரியாததாலும், இதுவரை அந்த ஊரில் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாகக் கேள்விப் படாததாலும் எனக்கு இது வியப்பூட்டும் செய்தியாக இருந்தது. அதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஆர்வம் மேலோங்கியது.

இந்தச் செய்தியைப் பற்றி முதலில் என் மனைவியிடம் கேட்டேன். "இந்த ஊரில் முன்னர் வாழ்ந்து வந்த குறுநில மன்னன் வாண்டயாத்தேவர் ஆற்காடு நவாபையும், ஆங்கிலேயரையும் எதிர்த்துப் போரிட்டான். அதனால் இந்த ஊரிலுள்ள கோட்டை அழிந்தது" என்று பெரியவர்கள் சொன்னதாகக் கூறினாள்.

ஊரிலுள்ள வயதான பெரியவர்களிடம் கேட்டபோது, கோட்டைச் சுவர்கள் இருந்த இடத்தையும், கோயில் சுவர்கள் இடிக்கப்பட்டுக் கிடந்த இடத்தையும், கோயில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு ஆங்காங்கே சிதறிக் கிடந்தவற்றையும் காண்பித்தனர்.



கொல்லங்கொண்டானில் உடைக்கப்பட்ட கற்சிலைகள்



இடிக்கப்பட்டு எஞ்சி நிற்கும் கோட்டைச் சுவர்கள்

அந்தச் சண்டையில் ஏராளமான மக்கள் போரிட்டு மாண்டனர். மற்றவர்கள் ஊரை விட்டு ஓடிவிட்டனர். பின்னர் இரண்டு, மூன்று வருடங்களுக்குப் பிறகு மீண்டும் மக்கள் இவ்வூரில் வந்து குடியேறினர் என்னும் வீர வரலாற்றை தொடர் கதைபோலக் கூறினர். இதனைத் தொடர்ந்து கான்சாகிபு குறித்து விரிவான நூல் வெளியிடவேண்டும் என்று எண்ணியதுண்டு. அந்த பலதடவைகள் வெளியிட முயன்றும் பயன்கிட்டவில்லை. மாவீரன் பூலித்தேவன் பற்றிய ஆய்வு நூல்கள் வெளியிட முடியாத பொருளாதார நிலை ஒருபக்கம் இருந்தது. மாவீரன் பூலித்தேவனின் வரலாற்று ஆய்வு நூல்களை வெளியிடும்போது, கான்சாகிபு பற்றிக் கிடைக்கும் செய்திகளையும் சேர்த்து வெளியிட்டு வந்தேன்.

"இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்" என்னும் நூலை 1985-ல் வெளியிட்டேன். அதில் கான்சாகிபுவின் வரலாற்றை வெளியிட்டேன். எனக்குக் கிடைத்த வரலாற்றுச் செய்திகள் தவறாகக்கூட இருக்கலாம். கான்சாகிபு வரலாறு வெளிவரவேண்டும் எனும் ஆவலில் வெளியிட்டேன். கான்சாகிபுவின் சமாதியைக் கண்டுபிடித்து 'மாமன்னன் பூலித்தேவன்' என்னும் நூலில் அறிமுகப்படுத்தினேன். மற்றும் நான் வெளியிட்ட நூல்களிலெல்லாம் முகமது யூசுப்கான் பற்றிய செய்திகளை வெளியிட்டு வந்தேன். 1

கான்சாகிபு சிறந்தவீரன் என்பதால், அவன் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தேன். தென்பகுதியிலுள்ள சில ஊர்களில் கான்சாகிப்பின் பெயரில் இருப்பதை ஆய்வு செய்தேன். திருவில்லிபுத்தூரின் அருகிலுள்ள "மம்சாபுரம்" என்னும் ஊர் "முகமது கான்சாகிப்புரம்" என்னும் பெயரைக் கொண்டுள்ளது. "கான்சாகிப்புரம்" என்பதை "கான்சாபுரம்" என்று அழைக்கின்றனர். "குமந்தாபுரம்" என்னும் ஊரின் பெயர் "கொம்மந்தான்புரம்" என்னும் பெயரைக் கொண்டுள்ளது.

தொடர்ந்து கான்சாகிப்பைப் பற்றி ஆய்வுசெய்யும் வேளையில் கமல்ஹாசன் "மருதநாயகம்" திரைப்படம் வெளியிடப் போவதாக செய்திகள் வந்தன. "கான்சாகிபு, இந்திய விடுதலைப்போரின் முதல் நாயகன்" என்று கமல் அறிவித்த செயலானது விடுதலைப் போராட்டத்தையே கொச்சைப்படுத்துவதாக இருந்தது. அனைவரும் அதற்கு எதிர்ப்புக்குரல் கொடுத்தனர். விவாத மேடைகள் தோன்றின. "மருதநாயகம் உண்மை வரலாறு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்தேன். பல கட்டுரைகள் எழுதினேன். "மேடைமணி" என்னும் இதழ் கட்டுரைகளை வெளியிட்டது. இதன் நகல் கமல்ஹாசனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்குக் கீழ்கண்ட நூல்கள் தேவைப்பட்டன.

1. கான்சாகிபு எழுதிய கடிதங்கள்	(1750 முதல் 1764 வரை)
2. திருநெல்வேலி கெசட்டியார்	(1917)
3. கும்மந்தான் சாகிபு	(1960)
4. மாவீரன் கான்சாகிபு	(1961)
5. கான்சாகிபு சண்டை	(1972)
6. Yusufkhan - S.C. Hill	(1987)
7. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்	(1994)
8. கான்சாகிபு	(1997)
9. மாவீரன் கான்சாகிபு	(1997)
10. மருதநாயகம்	(1997)
11. பூலித்தேவன் சிந்து கதைப் பாடல்	(2000)

உண்மையை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் ஆதங்கம் எனக்கு ஏற்பட்டது. கான்சாகிபு வரலாற்று நூல்கள் எங்கு கிடைக்கும்? என்னும் ஆர்வத்தினால் இந்த வட்டாரத்திலுள்ள நூலகங்கள் அனைத்திலும் சென்று பார்த்தபோது ஒருசில நூல்கள் கிடைத்தன.

1. குருகுஹதாசப்பிள்ளை எழுதிய 'திருநெல்வேலிச் சீமை சரித்திரம்' (1931)

2. பேராசிரியர். ந. சஞ்சீவி எழுதிய 'வீரத்தலைவர் பூலித்தேவர்' (1958)

3. துர்க்காதாஸ் எஸ்.கே.சுவாமி எழுதிய 'புரட்சித்தலைவன் பூலித்தேவன்' (1958)

4. வ. வேணுகோபால் எழுதிய 'புரட்சித்தலைவன் பூலித்தேவன்'- நாடகம் (1959)

5. பேராசிரியர் ந. சஞ்சீவி - 'கும்மந்தான் கான்சாகிபு' (1960)

6. தமிழ்வாணன் எழுதிய 'கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' (1965)

7. தமிழ்வாணன் எழுதிய 'பூலித்தேவன்' - நாடகம் (1985)

8. பேராசிரியர். ந. சஞ்சீவி எழுதிய 'கும்மந்தான் கான்சாகிபு' (1960)

மேலும் பல நூல்கள் கான்சாகிப்பைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

கான்சாகிபு வரலாற்றைத் தேடிக் கொண்டிருக்கும் போதே, மாவீரன் பூலித்தேவனின் வரலாற்றுச் செய்திகள் ஏராளமாகக் கிடைத்தன. அவைகள் நான் டாக்டர் பட்டம் பெறுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தன. கான்சாகிபு, பூலித்தேவன் ஆகியவர்களின் ஆய்வுக்கு சென்னையிலுள்ள எழும்பூர் ஆவணக் காப்பகம், தொல்பொருள் ஆய்வு நூலகம், கன்னிமாரா நூலகம், உ.வே. சாமிநாத அய்யர் நூலகம், தேவநேயப்பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம், சென்னைப் பல்கலைக்கழக நூலகம், கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம், அடையாறு நூலகம், மதுரைப் பல்கலைக்கழக நூலகம் மற்றும் பல நூலகங்கள் பேருதவியாக இருந்தன.

இராசபாளையத்திலுள்ள காந்திகலை மன்றம், திருவள்ளுவர் மன்றம், நூலக ஆணைக்குழு பொது நூலகம், சேத்தூர் சேவுகப்பாண்டிய அரசு மேனிலைப்பள்ளி நூலகம், மற்றும் பென்னிங்டன் நூலகம் ஆகியவற்றிலும் உள்ள நூல்கள் உதவியாக இருந்தன.

நான் எழுதி வெளியிட்டுள்ள நூல்களான 'இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்', 'விடுதலைப்போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு', 'மாமன்னன் பூலித்தேவன்', 'பதினெட்டாம் நூற்றாண்டின் போர்வாள் மாவீரன் பூலித்தேவன்', 'பூலித்தேவன் சிந்து' ஆகியவற்றில் கான்சாகிபு பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில், கான்சாகிப்பைப் பற்றி பிரபல சினிமாப் படத் தயாரிப்பாளரும், நடிகருமான கமல்ஹாசன் "மருதநாயகம்" என்னும் தலைப்பில் திரைப்படம் எடுக்கப்போவதாக அறிவிப்பு வந்துள்ளன. முன்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

"மருதநாயகம்" என்னும் வரலாற்றுத் திரைப்படத்தைத் தயாரித்து வெளியிடப் போவதாக பிரபல படத் தயாரிப்பாளரும், நடிகருமான கமல்ஹாசன் சில ஆண்டுகளுக்கு முன்னர் விளம்பரம் செய்து வந்தார். அப்போது அந்தத் திரைப்படத்தைப் பற்றிய கருத்துக்களை ஆதரித்தோ, எதிர்த்தோ யாரும் விமர்சனம் கூறவில்லை.

தற்போது "மருதநாயகமே சுதந்திரப் போரின் முதல்வீரன்" என்னும் வரலாற்றுத் திரைப்படத்தை தயாரித்து வெளியிடப் போவதாக கமல்ஹாசனின் பேட்டிகள் தமிழக இதழ்களில் வெளிவந்துள்ளன. 2

"மருதநாயகம் சுதந்திரப் போரின் முதல் வீரன்" என்று கமல்ஹாசன் கூறினார். அதனால் மருதநாயகம் திரைப்படத்தைப் பற்றிய விமர்சனங்களைப் பலரும் கூறலாயினர்.

"கிணறு வெட்ட பூதம்" என்னும் தலைப்பில் கமலின் பிரமாண்டத் தயாரிப்பு, வரலாற்றுச் சர்ச்சையைக் கிளப்புகிறது. மருதநாயகத்தின் பிறப்பு, சாதி, மதம், தேசிய உணர்வு பற்றியெல்லாம் சர்ச்சைகள் கிளப்பப்படுகின்றன" என்று டைம்ஸ் ஆப் இந்தியா வெளியிட்டுள்ளது. 3

"மருதநாயகம் உண்மை வரலாறு" என்னும் தலைப்பில் நான் எழுதிய கட்டுரையை 'மேடைமணி'யில் தொடர்ந்து வெளியிட்ட ஆசிரியர் எஸ். நடராசன் அவர்களுக்கும், இந்நூலின் உண்மையான வரலாறு தமிழக மக்களிடம் இருக்க வேண்டும் என்னும் அவாவினால் எனக்கு ஊக்கம் கொடுத்து வந்த எம். தவசிப்பாண்டியன் அவர்களுக்கும், மாவீரன் பூலித்தேவனின் வரலாற்றை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்னும் துடிப்பினால், மக்கள் விரோதி மருதநாயகத்தின் துரோக வரலாற்றையும் வெளியில் கொண்டுவர வேண்டும் என்று எனக்கு ஊக்கம் கொடுப்பதுடன் பல உதவிகளையும் செய்து வரும் திரு. ச. பூசத்துரை அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.சி. கில் எழுதிய 'யூசுப்கான்' என்னும் நூலின் குறிப்புக்களையும், கம்பெனியாரின் ஆங்கிலக் கடிதங்களையும் தமிழில் மொழி பெயர்ப்பு செய்து கொடுத்த கந்தசாமி - பாண்டிமாதேவி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மருதநாயகம் உண்மை வரலாறு" என்னும் தலைப்பில் நான் எழுதிய கட்டுரை 'மேடைமணி' இதழில் வெளிவந்த போது வாசகர்கள் எனக்கு அளித்த ஆதரவுக்கும்;

"கமலுக்கு எதிர்ப்பு" "மௌனம் கலையட்டும்" என்னும் எனது கட்டுரையை வெளியிட்ட 'கல்கி' இதழ் ஆசிரியருக்கும்; கல்கி வட்ட மேஜையில் பாராட்டி எனது கருத்தை ஏற்றுக்கொண்டு எழுதிய வாசகருக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சர்ச்சைக்குரிய படங்களையே எடுப்பதா?" "நடிகர் கமல் மீது வரலாற்று ஆய்வாளர் பாய்ச்சல்" என்னும் தலைப்பில் நான் எழுதிய கட்டுரையை பெரிய தலைப்பிட்டு வெளியிட்டுள்ள 'தினபூமி' இதழ் ஆசிரியருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மருதநாயகம் ஒரு சந்தர்ப்பவாதி" என்னும் கட்டுரையை வெளியிட்ட "இந்து தமிழன்" இதழ் ஆசிரியர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"கமல் மன்னிப்புக்கேட்க வேண்டும்" என்னும் தலைப்பில் 'வாசகர்கள் பாய்கிறார்கள்' என்னும் பகுதியில், நான் எழுதிய கட்டுரையை வெளியிட்டுள்ள "குங்குமம்" இதழ் ஆசிரியருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலின் நாயகனை, மருதநாயகமென்றும், யூசுப்கான் என்றும் கான்சாகிபு என்றும் குறிப்பிட்டுள்ளேன். பேட்டி வழங்கிய நாயகனை கமல் என்றும் கமல்ஹாசன் என்றும் குறிப்பிட்டுள்ளேன். கிழக்கிந்தியக் கம்பெனியாரை ஆங்கிலேயர் என்றும், கும்பினியர் என்றும் வெள்ளையர் என்றும் குறிப்பிட்டுள்ளேன்.

இந்நூலிலுள்ள குறைகளை எடுத்துக்கூறினால் அடுத்து வரும் பதிப்பில் திருத்திக்கொள்ள உதவும்.

இந்நூலுக்கு வாசகர்கள் தனது இதயப்பூர்வ வரவேற்பினை வழங்கினால் பெரிதும் மகிழ்வேன்.

டாக்டர். **ந. இராசையா.**

1. கும்மந்தான் கான்சாகிபு - ந. சஞ்சீவி. பக்.16.

2. குமுதம் - 23-10-97, பக்.6

3. இந்தியா டுடே - அக்டோபர் - 22- 1997, பக். 36.

முகமது யூசுப்கான் ஓர் அறிமுகம்

முகமது யூசுப்கான் உண்மை வரலாற்றை எழுத ஆரம்பித்த போது ஆந்திர மாநிலத்தின் முதல்வரும், பிரபல சினிமா நடிகருமான திரு. என்.டி. ராமராவ் நடித்த "பாதாளபைரவி" என்னும் திரைப்படம்தான் என் நினைவுக்கு வந்தது.

"பாதாளபைரவி" திரைப்படத்தில் "உள்ளதைச் சொல்லவா?" "உள்ளதை இல்லையென்று சொல்லவா?" என்று பல சந்தர்ப்பங்களில் என்.டி. ராமராவ் கூறுவார். அப்போது அவரின் தாயார், "உள்ளதையே சொல்லு" என்று சொல்லுவார். அதன் பின்னர் என்.டி.ராமாராவ் உண்மையைச் சொல்லி அடிவாங்காமல் தப்பித்துக்கொள்வார். அந்தக் காட்சிதான் என் நினைவுக்கு வந்தது.

முகமது யூசுப்கானின் உண்மை வரலாற்றைக் கூறுவதா? அல்லது உண்மை வரலாற்றை இல்லையென்று கூறுவதா என்னும் கேள்வி எழுந்தது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலில் பெயரில் ஒரு குழப்பம். முகமது யூசுப்கான் என்றும் மருதநாயகம் என்றும் அழைக்கின்றனர். இதில் உண்மையான பெயர் என்ன? முகமது யூசுப்கான் என்பதேயாகும். சிலர் விருப்பப்படி கான்சாகிப் என்றும் மருதநாயகம் என்றும் அழைக்கின்றனர். இதனால் அவனின் உண்மையான பெயரான முகமது யூசுப்கான் பிரபல்யமாகாமல் கான்சாகிப்பும், மருதநாயகமும் முன்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன. பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும் சிறந்த நடிகருமான கமல்ஹாசன் 'மருதநாயகம்' என்னும் தலைப்பில் திரைப்படம் எடுக்கப் போவதாக அறிவித்த பிறகு 'மருதநாயகம்' என்னும் பெயரே பரவலானது.

இந்நூலின் தலைப்பை உண்மையான பெயரான முகமது யூசுப்கான் என்றுதான் எழுதவேண்டும். ஆனால் திரு. கமல்ஹாசன் முகமது யூசுப்கானை 'மருதநாயகம்' என்னும் பெயரால் அழைத்ததால் அதுவே உண்மைப் பெயராக அமைந்துவிட்டது. இந்நூலில் முகமது யூசுப்கான், கான்சாகிப், மருதநாயகம் ஆகிய பெயர்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. நூலின் தலைப்பும், "மருதநாயகம் உண்மை வரலாறு" என்று பெயரிட வேண்டிய சூல்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதற்காக வருந்துகிறேன்.

“மருதநாயகம்” சாதியில் சோழிய வேளாளர். இவரது பிறப்பிடம் இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த பனையூர் என்பர். இவரது இளம்பிராயத்தில் அடங்காத சுபாவமுடையவராக இருந்து பெற்றோர்களின் சொற்களுக்குக் கீழ்ப்படியாது, மனம் போன போக்கெல்லாம் போய்த்திரிந்து விட்டுப் புதுச்சேரிக்குச் செல்ல, அங்கு காலசேபத்திற்கு மார்க்கமின்றி கடைசியாக, ஓர் ஐரோப்பிய துரையை அடுத்து மூன்றரை வருடங்களாகக் குற்றேவல்களைப் புரிந்து, தகாத செயல்களைச் செய்ய அவரால் நீக்கப்பட்டு, பின்பு பர்டன் துரையைப் போய் அடைய, அவரால் தமிழ், தெலுங்கு, இங்கிலீசு, பிரஞ்சு, இந்துஸ்தானி, மலையாளம் முதலிய பாசைகளைச் சிறுகச்சிறுகப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டு, நவாபுவின் சர்வீசில் சேர்ந்து, தண்டல்காரராகவும், சுங்கவசூல் கலெக்டராகவும் பின்பு பட்டாளத்தில் சிப்பாயாகவும், நாயக்காகவும், ஹவில்தாரராகவும், சுபேதாராகவுமிருந்துவிட்டு படே சாகிப்புக்கு விரோதமாகப் பரங்கி மலையில் செய்த சண்டையின் திறமையில் இவருக்கு ஒரு கவர்னர் வேலையைக் கொடுப்பதென்று தீர்மானமாக, இவரது இராணுவச் சக்தியைக் கண்டு வியந்த அக்காலத்திய சர்வ கிழக்கு பிரிட்டிஷ் கும்பினியாரின் கும்மந்தார்களுக்குள் தலைமை பூண்டிருந்தவருமான ஜெனரல் லாரன்ஸ் துரையால் கும்மந்தாராக நவாபு சைனியத்தில் ஆங்கிலப் பார்வையில் அமர்ந்தனர். இவருக்கோர் பரங்கிப்பெண்ணை ஆர்க்காட்டில் வைத்து விவாகமாகியது. ஆங்காங்கு நாம் முன்னம் சொல்லியுள்ள விஷயங்களின்படி நவாபுக்கு துரோகமாக நினைத்தாரென்று தூக்கிலிடப்பட்டார். அவரது வலது கையைக் கிழித்து அதனுள் ஒரு தங்கச்சிமிழை அடக்கஞ்செய்து வைத்திருந்தனரென்றும், அதன் சக்தியால் அவரை எந்தவிதமான கொடுந்துன்பங்களாலும் இம்சித்துக்கொல்ல முடியாதென்றும், அவரைத் தூக்கிலிடவும் அவர் சாகாமலிருக்கத் தூக்குக்கயிறே இத்து விழுந்ததென்றும், இரண்டாவது தடவையிலும் அவ்விதமே தூக்கிலிட மறுபடியும் கயிறு அறுந்தது என்றும், மூன்றாம் தடவையில் தங்கச்சிமிழை நீக்கிவிட்டுத் தூக்கவும், தூக்குக்கயிறு அதனுடைய வேலையைச் சரியாகச் செய்து மரணத்துக்குக் காரணமாகவும் நின்றதென்று“ மதுரைச் சீமை சரித்திரத்தில் கண்டிருக்கிறது. 1867-ஆம் வருஷத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் ‘இந்தியாவில் ஆங்கிலேயர்களின் இச்சைகளின் நோக்கம்’ என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளதாக குருகுஹதாசப்பிள்ளை தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1]

முகமது யூசுப்கானின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள ஆதாரமாக “கான்சாகிபு சண்டை” என்னும் நூல் உள்ளது. யூசுப்கானின் வரலாற்றில் கடைசி ஏழு ஆண்டு நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்டது. பிறப்பு, வளர்ப்பு, இளமைக்காலம், தென்னாட்டுப் பாளையக்காரர்களோடு இவன் நடத்திய போர்கள் ஆகியவை பற்றிய விவரங்களை இக் கதைப்பாடல் மிகவும் சுருக்கமாகக் கூறுகிறது.

பனையூரில் பிறந்த கான்சாகிபை முஸாலாளி என்ற பிரெஞ்சியன் வளர்த்தான். பிரட்டன் என்னும் ஆங்கிலத் தளபதியிடம் இவன் வேலைக்குச் சேர்ந்தான். ஆங்கிலம் கற்று ஆற்காட்டு நவாபின் படையில் சேர்ந்தான். படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று கான்சாகிபு, ஆற்காட்டு நவாபின் படையின் கமாண்டராக ஆனான். இந்தப் பதவியைத் தமிழில் கம்மந்தான், கும்மந்தான் என்று கதைப்பாடல் கூறுகிறது. இவனைப் பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் சேவகத்தில் அமர்த்திக் கொண்டனர். டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்களுக்கு எதிராக பிரிட்டிஷார் நடத்திய சில போர்களில் இவன் பங்கு பெற்று வெற்றி பெற்றான். பரங்கிப் பெண்ணான மாஷா என்பவளை மணந்து கொண்டான்.

வரிவசூல் செய்ய ஒரு படையோடு யூசுப்கான் சென்னையிலிருந்து ஆங்கிலக் கம்பெனியரால் அனுப்பி வைக்கப்பட்டான். தென்பாளையங்களின் தலைவரான பூலித்தேவனோடு பல போர்கள் நடத்தினான். முடிவில் அவனுடைய கோட்டையான நெல்கட்டுஞ்செவ்வலை அழித்தான்.

மதுரை மன்னனாகத் தேவை, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளே என்று நவாப் நினைத்தான். கம்பெனியின் நிர்வாகத்திலிருந்து தம்முடைய நிர்வாகத்திற்கு கான்சாகிபை மாற்றிவிட வேண்டுமென்று கம்பெனியை நவாபு வேண்டிக் கொண்டான். இவ் வேண்டுகோளை கம்பெனி ஒப்புக்கொண்டது. ஆனால் கான்சாகிபு நவாபின் மேலதிகாரத்திற்குள் வர மறுத்தான். நவாபு கான்சாகிபை சுபேதார் பதவியிலிருந்து நீக்கவும், மதுரை ஆட்சியைத் தானே கைப்பற்றவும், ஒரு படைக்குத்தானே தலைமை தாங்கி தெற்கு நோக்கி வந்தான். அதற்குத் துணையாகக் கம்பெனியும் ஒரு படையை அனுப்பி வைத்தது. இவ்விரண்டு படைகளுக்கும் பிரிட்டன் என்ற ஆங்கிலத் தளபதி தலைமை தாங்கினான்.

மதுரைத் தளவாய், சீனிவாசராவுக்கும், மார்ச்சண்டுக்கும் லஞ்சம் கொடுத்து தந்திரமாகக் கான்சாகிபுவைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தான். கோட்டைக்கு வெளியில் கொண்டு வந்து அவனைத் தூக்கிலிட்டார்கள். கான்சாகிபு மதுரைச் சுபேதாரான பிறகு ஏழு வருஷங்கள் மதுரையில் ஆட்சி செலுத்தினான். அதன் பிறகு நவாபோடும் கம்பெனியோடும் பகைமை கொண்டு போர் நடத்தி வஞ்சமாகச் சிறைப்படுத்தப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான். இந்த நிகழ்ச்சிகளைத்தான் கதைப்பாடல் கூறுகிறது. 2

இக்கருத்தை வலியுறுத்திய இரண்டு நூல்களும் பொதுவான கருத்துக்களைக் கூறியதுடன், மிகப்பழமையான நூல்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1. குருகுஹதாசப் பிள்ளை - திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம் - 1931 - பக் 159.

2. நா. வானமாமலை - கான்சாகிபு சண்டை - 1972 - பக். 6.

"மருதநாயகம்" தொடக்கவிழாவில் எலிசபெத் ராணி

சென்னைக்கு வரும் இங்கிலாந்து ராணி சினிமா சூட்டிங் பார்க்க வேண்டும் என்று பிரிட்டிஷ் கவுன்சில் கமலிடம் கேட்டுக் கொண்டது. அப்போது மருதநாயகம் சூட்டிங் ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டிருந்தார் கமல். ஒரு திரைப்பட ஆரம்ப விழாவிற்கு இங்கிலாந்து ராணி வருவாரா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என்ன கதை என்று கேட்டனர். புத்தகத்தைக் கொடுத்தேன். ராணியார் ஒப்புக்கொண்டதாகப் பேட்டியில் சொன்னார். 1

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் வருகையால் சென்னை மாநகரமே திக்குமுக்காடிப் போனது. அவர் தங்குவதற்கு தாஜ் ஹோட்டல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ராணிக்கு விருப்பமான "ஹெர் மெஜஸ்டி" என்னும் உணவு வழங்கப்பட்டது. இந்த உணவைச் சாப்பிட்ட ராணி வெகுவாகப் புகழ்ந்தாராம். 2

தொடக்க விழாவில் கலந்துகொள்ள இங்கிலாந்து ராணி குறிப்பிட்ட நேரத்தில் வந்தார். பூச்செண்டு கொடுத்து முதல்வர் கருணாநிதி வரவேற்றார். எம்.ஜி.ஆர்.பிலிம் சிட்டியில் நடந்த இந்த விழாவிற்கு கோட்டை நுழைவாயில் போல் செட் போட்டு, யானை, குதிரைகள், பிரிட்டிஷ் சிப்பாய்கள் வேடத்திலும் பலரை நிறுத்தி வைத்து, ராணி எலிசபெத்துக்கு ரத்தினக் கம்பள வரவேற்பளித்தார். கமல் மருதநாயகம் வேடத்திலேயே இருந்தார். ராணியை வரவேற்றார். மகாராணி, முதல்வர், கமல் ஆகியோர் உள்ளே வந்து அமர்ந்ததும் விளக்குகள் அணைந்தன. ராணியார் இருக்குமிடம் மட்டும் மங்கலான வெளிச்சம். கலைஞர் காமிராவை முடுக்கியதும் த.மா.கா. தலைவர் மூப்பனார் கிளாப் அடிக்க படப்பிடிப்பு துவங்கியது. இயக்குனர் கமலின் குரல் எங்கிருந்தோ ஒலித்தது. வெளிச்சம் சூழ்ந்தது. சிம்மாசனத்தில் கான்சாகிபு அமர்ந்திருந்தான்.

ஓம்புரி ஒரு வசனத்தைப் படிக்க அருகில் நாசர் நின்று கொண்டிருந்தார். அவர் படித்ததும் உணர்ச்சிவசப்பட்ட கான்சாகிபு சிம்மாசனம் விட்டிறங்கி வந்தான். வசனங்களை முழங்கினான்.

"யார் யாருக்குத் தண்டனை கொடுக்கிறது என்று ஒரு மரியாதை இல்லை? இந்த மண்ணை விலைக்கு வாங்க வந்தவங்க இந்த ஆங்கில, டச், பிரஞ்ச்! இவங்க எல்லார்க்குமே நம்ம மண்ணை தரகுபேசி இருக்கிறார் நவாபு. இரண்டு பேருமே வந்தேரிகள்! சரித்திரம் தெரியாத இவர்கள் என்னிடம் கேள்வி கேட்கிறார்கள். இந்த மண்ணைப் பற்றித் தெரியாதவர்கள்

எனக்கும் இந்த மண்ணுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறார்கள். இந்த மண்ணில் வாழும் என்னிடம் கேட்கிறார்கள். இந்த மண்ணில் என் மூதாதையர்களின் சாம்பலும் கலந்திருக்கிறது. காற்றை விலை பேசப் பார்க்கிறார்கள். கடலை விலை பேசப் பார்க்கிறார்கள்

நான் யார்?

நான் இந்த மண்!

நான்தான் விதை!

நான்தான் உரம்!

நான்தான் வேர்!

இந்த மண்ணை தரகு பேசி விற்க எனக்கே உரிமை இல்லை. எவனுக்குமே உரிமை இல்லை என்கிற போது இந்த நவாபுக்கு ஏது உரிமை! வரட்டும் சந்திப்போம்! அற்பத்தனமும், திமிரும் பணபலம் இருந்தால் வந்துவிடும் போலிருக்கிறது. இது எனக்கு வராமலிருக்க! இன்ஷா அல்லாஹ்'' என்று கமல்ஹாசன் வசனம் பேசி நடிப்பதை ஆர்வத்துடன் மகாராணியார் பார்த்துக் கொண்டிருந்தார்.

இங்கிலாந்து சாம்ராஜ்யத்தை எதிர்த்து ஒரு தமிழன் வசனம் பேச அந்த சாம்ராஜ்யத்தின் மகாராணியே கேட்பது என்றால் அது சாதாரணமானதல்ல என்று "தேவி" வார இதழ் (29-10-97) கூறியுள்ளது. 3

'இந்திய சுதந்திர வீரர்களின் ஒருவரான மருதநாயகத்தின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படத்தை இந்தியாவை ஆண்ட ராணி கௌரவிக்கிறார் என்பதில்தான் சரித்திரம் எத்தனை எத்தனை எதிர் எதிர் துருவ நிலைகளை சந்திக்கிறது?' என்று கல்பனா என்பவர் கூறியுள்ளார் 4.

முகமது யூசுப்கான் எந்த நாட்டுக்கு விசுவாசமாக இருந்தானோ அந்த நாட்டின் இளவரசியையே அழைத்து வந்து மருதநாயகம் திரைப்படத்தை உலகம் அறியச் செய்துவிட்டார் கமல்ஹாசன்.

'தேவி' இதழ் கூறியுள்ள கருத்தைப் பற்றிச் சிந்திப்பது இன்றியமையாததாகும். 'எவனுக்குமே உரிமையில்லை' என்பதில் 'எவன்' என்னும் சொல் ஆங்கிலேயச் சுட்டுவதாகத் 'தேவி' இதழ் வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். 'ஆங்கிலேயருக்கும் உரிமையில்லை, ஆற்காடு நவாபுக்கும் உரிமையில்லை' என்றாவது வசனம் பேசியிருக்க வேண்டும். அப்படிப் பேசியிருந்தாலும் கூட இங்கிலாந்து சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் பேசினார் என்று ஏற்றுக்கொள்ளலாம். ராணிக்கு முன்னால் இங்கிலாந்து சாம்ராஜ்யத்தின் எதிர்ப்பைப் பற்றி ஒருவார்த்தை கூடச் சொல்லாதது எப்படி

எதிர்ப்பாகும்? எங்கள் மண்ணைத் தரகு பேசி விற்க இந்த நவாபுக்கு ஏது உரிமை என்ற கேள்வியை எழுப்பியவர், அதை வாங்க ஆங்கிலேயருக்கு ஏது உரிமை? என்று கேட்டிருக்க வேண்டும். பக்கத்தில் ராணி இருந்ததால் அவ்வாறு கேட்கவில்லை என்பது தான் உண்மை. இதிலிருந்து முகமது யூசுப்கான் ஆற்காடு நவாபைத்தான் எதிர்த்து வந்திருக்கிறான், ஆங்கிலேயரை எதிர்க்கவில்லை என்பது தெளிவாகிறது. இந்த எதிர்ப்பை முகமது யூசுப்கான் வரலாறு முழுவதும் காணலாம்.

இந்திய சுதந்திர வீரர்களில் ஒருவரான மருதநாயகம் பற்றி கல்பனா கூறியிருப்பது (புதிய பார்வை - 97) ஏற்றுக்கொள்ள இயலாது. மருதநாயகம் எந்த வகையில் சுதந்திரப் போராட்ட வீரன் என்று ஆதாரமில்லாமல் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சரித்திரம் எத்தனை எத்தனை எதிர்எதிர் துருவநிலைகளைச் சந்திக்கிறது என்று கூறிவிட்டு, எதிர் எதிர் துருவ நிலைகளைச் சுட்டிக்காட்டவில்லை.

மருதநாயகம் திரைப்படத் தொடக்கவிழாவைப் பார்த்தால் எதிர்எதிர் துருவ நிலையைக் காணலாம் என்பது உண்மை. சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளாத டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி கேமராவை இயக்க வைத்தது ஒரு துருவம். சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட தியாகி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.கருப்பையா மூப்பனார் முதல் கிளாப் அடித்து படப்பிடிப்பைத் துவக்கி வைத்தது மற்றொரு துருவம். தேசத் துரோகி கான்சாகிபை, இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் முதல்வீரர் மருதநாயகம் என்னும் பாத்திரத்தில் நடித்துக் காட்டிய பிரபல படத்தயாரிப்பாளரான கமல்ஹாசன் வேறொரு துருவம். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இங்கிலாந்து ராணி எலிசபெத் மற்றுமோர் துருவம். இந்த விழாவில் கூறப்பட்ட தவறான தகவல்களைத் தாங்கிக்கொள்ள முடியாத பார்வையாளர்கள் ஒரு பக்கம். இப்படி துருவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

மருதநாயகம் எந்த அளவுக்கு ஆங்கிலேய அரசுக்கு உதவிகரமாக இருந்திருக்கிறார் என்ற தகவல்களைத் திரட்டி இங்கிலாந்து ராணியின் தனி அலுவலர்களிடம் கொடுத்திருக்கிறார் கமல்ஹாசன். அந்த ஸ்கிரிப்டைப் படித்த பிறகே ராணிஎலிசபெத் மருதநாயகம் பட விழாவுக்கு வர ஒப்புக்கொண்டார் என்று 'ஜுனியர் விகடன்' கூறியுள்ளது. 5

இதிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. மருதநாயகம் ஆங்கிலேய அரசை எந்த அளவிற்கு எதிர்த்தார் என்ற தகவலை ராணியிடம் கூறவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. கமல்ஹாசன் அவ்வாறு கூறியிருப்பாரேயானால் ராணி எலிசபெத் மருதநாயகம் படவிழாவிற்கு வர மறுத்திருப்பார் என்பது உறுதி.

மருதநாயகம் ஆங்கிலேய அரசை எதிர்த்து இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முதல் வீரரானார் என்று தகவல்களைத் திரட்டி இங்கிலாந்து இராணியின் அனுமதியை வாங்கியிருந்தால் கமல்ஹாசனுக்கு ஒரு சபாஷ் போட்டிருக்கலாம்.

மருதநாயகம் ஆங்கிலேய அரசுக்கு எந்த அளவிற்கு உதவியாகவும், விசுவாசமாகவும் இருந்திருக்கிறார் என்ற சம்பவங்களைச் சுட்டிக் காட்டியே மருதநாயகம் திரைப்படத் துவக்க விழாவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று 'ஜூனியர் விகடன்' (அக்டோபர் 9-1997) தெளிவாகக் கூறியுள்ளது. ஆம். இது முற்றிலும் உண்மை. 6

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய சிப்பாய்களுக்கு முதல் கமாண்டராக நியமிக்கப்பட்ட முதல் தமிழனே மருதநாயகம் தான். இந்திய மண்ணில் ஐரோப்பியப் போர்முறைகளை முதலில் கடைப்பிடித்தவரும் மருதநாயகம்தான் என்று 'தினத்தந்தி' கூறுகிறது. 7

இந்தச் செய்தியிலிருந்து ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்தவர்களில் மருதநாயகமே முதல்வராவார் என்பது புலப்படும்.

தமிழர்களைக் காட்டிக் கொடுத்த மருதநாயகம் எப்படி விடுதலைப் போராட்ட முதல்வராவார்?

'மருதநாயகம் என்னும் யூசுப்கானைத் தூக்கில் போட்ட நாள் அக்டோபர் 15' என்று கும்பினியரின் ஆவணங்கள் தெளிவாகக் கூறுகின்றன. கமல்ஹாசனின் வேதப்புத்தகமான எஸ்.சி.ஹில் எழுதிய 'யூசுப்கான்' என்னும் நூலில் பக்கம் 226-ல் யூசுப்கானின் மரணம் பற்றிய செய்தி அக்டோபர் 15-ஆம் நாள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ON THE 15TH OCTOBER THE NAWAB WROTE TO MADRAS :

"TODAY, BEING MONDAY THE REBEL WAS HUNG AT FIVE O' CLOCK IN THE EVENING WHICH STRUCK A TERROR INTO THE HEARTS OF OUR ENEMIES." இதைப்பற்றி Country Correspondence, 1764 No. 205-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 8

வரலாற்று ஆய்வாளர்களும் அதைச் சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.

அவ்வாறு உண்மைச் சம்பவங்கள் இருந்தும், கமலுக்கே தெரியாமல் அமைந்துவிட்ட சிலிர்ப்பூட்டும் 'தற்செயல்' மீது நம்பிக்கை வைத்து, 1764-ஆம் ஆண்டு இதே அக்டோபர் 16-ஆம் தேதிதான் மருதநாயகம் மதுரையில் தூக்கில் போடப்பட்டார் என்னும் தவறான செய்தியை வெளியிட்டுள்ளது 'ஜூனியர் விகடன்' 9

இத்துடன் விட்டுவிட்டார்களா? இதில் கட்ட பொம்மனையும் வம்புக்கு இழுக்க வேண்டுமா? கட்டபொம்மன், மருதநாயகம் ஆகிய இருவருக்குமே இன்றுதான் நினைவு நாள். விடுதலைக்காகப் போராடிய அவர்களின் நினைவுநாளில் இவ்விழாவினை நடத்த கமல்ஹாசன் தீர்மானித்தது பாராட்டுக்குரியது என்று தமிழக முதல்வர், கலைஞர் கருணாநிதி திரைப்படத் துவக்க விழாவில் பேசினார். 10

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி உண்மையான வரலாற்றைக் கூறாமல், தவறான வரலாற்றைக் கூறியது பெரும் பிழையை ஏற்படுத்தாதா? இது மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ? இங்கிலாந்து ராணி எலிசபெத் கலந்து கொண்டார் என்று பெருமை பேசிக்கொள்பவர்கள் இத்தகைய தவறான வரலாற்றுச் செய்திகளைத் தவிர்த்திருக்க வேண்டாமா? பெரியவர்கள் கலந்து கொள்ளும் விழாவில் இத்தகைய முரணான தகவல்கள் இடம் பெறலாமா? இதுவே நாளைக்கு உண்மையான வரலாறாக விளங்கும் அல்லவா?

மருதநாயகம் நினைவு நாள் அக்டோபர் 15. கட்டபொம்மனின் நினைவு நாள் அக்டோபர் 16. மருதநாயகம் திரைப்படத் துவக்க விழா அக்டோபர் 16-இல் நடைபெற்றது. கட்டபொம்மனின் நினைவு நாளான அக்டோபர் 16-இல் தான் மருதநாயகம் படத் துவக்க விழாவும் நடந்தது.

இராணியார் வந்து தொடங்கி வைத்த நாளில்தான் மருதநாயகம் தூக்கிலிடப்பட்டார் என்று தெரிந்தது என 'தேவி' தீபாவளி மலர் 1998 - பக்கம் 56-ல் குறிப்பிட்டுள்ளது. (11) மருதநாயகத்தைத் தூக்கிலிட்ட நாள் அக்டோபர் 15. மருதநாயகம் படத்தை இராணி தொடங்கி வைத்த நாள் அக்டோபர் 16. இராணியார் வந்து தொடங்கி வைத்த நாள்தான் மருதநாயகம் தூக்கிலிடப்பட்ட நாள் என்று தெரிந்தது என்ற தவறான தகவலை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இந்தச் சாதாரணமான சிறிய தவறு என்ன விளைவை ஏற்படுத்தியது தெரியுமா? தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி பேசும்போது "கட்டபொம்மன், மருதநாயகம் ஆகிய இருவருக்குமே இன்றுதான் நினைவுநாள். விடுதலைக்காகப் போராடிய அவர்களின் நினைவு நாளில் இவ்விழாவினை நடத்தத் தீர்மானித்தது பாராட்டுக்குரியது" என்று குறிப்பிட்டது தான்.

தவறான தகவலை முதல்வர் மூலம் வெளியே கொண்டு வந்த கமலுக்கு ஒரு சபாஷ் போடலாம். இந்த முரண்பாட்டை ஒரு பத்திரிக்கையாவது கண்டுகொள்ளவில்லை என்பதுதான் உண்மை. கமல்ஹாசனுக்கு எடுத்துக்கூறினால் அதைக் கண்டு கொள்வதே கிடையாது. 'சிலர் சுயநலத்துக்காக இது அல்ல, அது அல்ல என்று கூறிக்கொண்டே இருப்பார்கள். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை' என்று கூறிவிடுகிறார்.

உண்மையை ஒப்புக்கொண்டு தவறைத் திருத்திக் கொள்வதுதான் சாலச் சிறந்தது. வரலாற்றுச் சான்றுகளைக் கட்டிக் காத்திடுவோம்! வாரீர் !

1. தேவி - தீபாவளி மலர் - 1998.
2. தமிழன் எக்ஸ்பிரஸ் - அக்டோபர் 1997.
3. தேவி - 29-10-97.
4. புதியபார்வை - பக். 16. 31-அக்டோபர்-1997
5. ஜுனியர் விகடன். அக்டோபர் - 19-1997
6. மேற்படி இதழ் - 97
7. தினத்தந்தி - 31-10-97
8. Country Correspondence 1764 P. No. 205.
9. ஜுனியர் விகடன் - அக்டோபர் - 19 - 1997. பக்.10.
10. தினமணி - அக்டோபர் - 17.1997 - பக். 10
11. தேவி - தீபாவளி மலர் - 1998. பக்.56

இதழ்களில் மருதநாயகம் பற்றி பேட்டிகள்

'மருதநாயகம்' திரைப்படத்தைப் பற்றிய பேட்டிகளை அனைத்து இதழ்களும் வெளியிட்டன. இந்தப் பேட்டிகள் அனைத்தும் மருதநாயகத்திற்கு நல்ல விளம்பரங்களைக் கொடுத்தன. மருதநாயகம் திரைப்படமாக எடுக்கப்படப் போவதால் கமல்ஹாசனின் பேட்டிகள் தமிழகத்தின் மூலை முடுக்குகுளில் எல்லாம் வெடித்தன. இதனால் பட்டி, தொட்டியிலெல்லாம் 'மருதநாயகம்' பெயர் மேலோங்கி விளங்கியது. அவனுடைய உண்மைப் பெயரான முகமது யூசுப்கான் பெயர் மங்கி மறைய ஆரம்பித்தது. அடுத்து வந்த ஒட்டுப்பெயரான கான்சாகிபும் மறையலாயிற்று. வரலாற்றாளர்களைத் தவிர்த்து மற்றவர்களிடம் கேட்டால் யூசுப்கான் யார்? என்று தெரியாமல் விழிப்பார்கள். மருதநாயகம் யார்? என்று கேட்டால் கமல்ஹாசன் நடிக்கும் திரைப்படம் என்று தங்கு தடையின்றிப் பதில் வரும்.

இத்தகைய நிலை தமிழகத்தில் அனைவரையும் சிந்திக்க வைத்தது. தங்கள் கருத்துக்களை இதழ்களுக்குத் தெரிவித்தனர். இதனால் மருதநாயகம் பற்றிய சர்ச்சைகள் தோன்றலாயின. உயர்ந்த பதவிகளில் இருந்து, நாட்டுக்கு நல்ல கருத்துக்களை வழங்கியவர்கள் முதல் சாதாரணமானவர்கள் வரை மருதநாயகம் பற்றிய விவாதத்தில் பங்கேற்றனர். இதனால் மருதநாயகம் சர்ச்சை விவாதப் பொருளாக ஆகிவிட்டது. எத்தனையோ இதழ்களில் இந்த சர்ச்சைகள் வெளிவந்திருந்தாலும், நமக்குக் கிடைத்த பேட்டிகளை மட்டும் வழங்குகிறோம்.

தமிழக இதழ்களான தினமணி 17-10-97, விகடன் பேப்பர் 17-10-97, ஜுனியர் விகடன் 19-10-97, மணிச்சுடர் 19-11-97, தினகரன் 20-10-97, இந்தியா டுடே 22-10-97, தமிழன் எக்ஸ்பிரஸ் 22-10-97, புதிய பார்வை --10-97, குமுதம் 23-10-97, குங்குமம் 24-10-97, தேவி 29-10-97, சாவி 30-10-97, ரோஜா - - 11-97, எ நாவல் டைம் --11-97, மணிச்சுடர் 19-11-97, ஹீரோ - - 11-97, எழுகதிர் - - 11-97, தினத்தந்தி 28-11-97, செம்மலர்- -12-97 ஆகிய இதழ்கள் நான் முந்தி, நீ முந்தி என்று வரிந்து கட்டிக் கொண்டு 'மருதநாயகம்' செய்திகளை வெளியிட்டு நல்ல விளம்பரங்களைக் கொடுத்தன. உலக அளவில் விளம்பரப்படுத்தப்பட்டன என்று சொன்னால் கூட மிகையாகாது.

இதைத் தொடர்ந்து தனி நபர் பலரும் 'மருதநாயகம்' திரைப்படம் பற்றிய சர்ச்சைகளில் ஈடுபடலாயினர். திரு. கே.வி. குணசேகரன், பேராசிரியர். ஹ.மு. நத்தர்சா, டாக்டர் அ. இராமசாமி, டாக்டர் கி. வெங்கட சுப்பிரமணியம், திருவாளர்கள் நகைமுகன், போஸ், அ. மார்க்ஸ், சி.ஆ.சி. புலவர், திரு. அ. அஹமது பஷீர், கார்த்திக், ஏ.வி.எம். சரவணன், மல்லவி,

எம்.எஸ். உமர்பாருக் தாவுத், ஏகாம்பரம், ஹேக்கோ, ஹீரோ ராஜய்யா, டாக்டர். அரு. கோபாலன், சுஜாதா ஆகியோர் மருதநாயகம் திரைப்படத்தை ஆதரித்தும், எதிர்த்தும் குரல் கொடுத்தனர்.

தமிழக இதழ்களும், தமிழக ஆய்வாளர்களும், பிரமுகர்களும், சாதியவாதிகளும் 'மருதநாயகம்' திரைப்படம் பற்றிய செய்திகளை வெளியிட்டு வந்த நேரத்தில் தேவரின மக்களின் மாநில அமைப்பான 'தேவர் பேரவை' 'மருதநாயகம்' திரைப்படத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தது. (1) அதில், இந்திய விடுதலைப் போரில் முதல் முழக்கமிட்டு ஆங்கிலேயப் படையெடுப்பை எதிர்த்து வீரத்துடன் போரிட்ட பூலித்தேவனின் வரலாற்றைத் திரிபு செய்து, விடுதலைப் போருக்கு அணு அளவும் தொடர்பில்லாத 'மருதநாயகம்' பற்றித்திரைப்படம் எடுத்துவரும் நடிகர் கமல்ஹாசனை வன்மையாகக் கண்டிப்பதுடன், 'மாமன்னன் பூலித்தேவனைக் காட்டிக் கொடுத்து ஆங்கிலேயரின் கைக்கூலியாகச் செயல்பட்ட மருதநாயகம் வரலாறு திரைப்படமாக வெளிவரும் போது அதை எதிர்த்துத் 'தேவர் பேரவை' தன் எதிர்ப்பைக் காட்ட தேவையான போராட்டத்தைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும்' என்று குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

'மருதநாயகத்தைத் தியேட்டரில் ஓட விடமாட்டோம்' என்னும் தலைப்பில் "ஒரு துரோகியை, விசுவாசமில்லாதவனை நம்முடைய மண்ணுக்கும் விசுவாசமில்லாமல், தன்னை உயர்த்தி விட்டவனுக்கும் விசுவாசமில்லாமல் நடந்துகொண்டதால் பாதிக்கப்பட்ட மருதநாயகம் என்ற கான்சாகிபைப் பெரிய தியாகியாகக் காட்ட முயற்சி செய்கிறார். மருதநாயகம் அவனுடைய விசுவாசமின்மை காரணமாகத் தூக்கிலிடப்பட்டானே தவிர, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகத் தூக்கிலிடப்படவில்லை" என்று தனித்தமிழர் கழகத் தலைவர் நகைமுகன் குறிப்பிட்டுள்ளார். 2

"அவன் ஆங்கிலேயரின் ஏவல் நாயாகவும், அவர்களின் ஆதிக்கம் தமிழகம் முழுவதும் படரக் காரணமானவனாகவும், அவர்களின் ஆதிக்கத்தை ஏற்க மறுத்து நெஞ்சுயர்த்திய சுதந்திரப் போராட்ட வீர மறவர்களைக் கடித்துக் குதறி ரத்தம் குடித்த கொடூர மிருகமாகவும் அந்நியரின் லாப வேட்கையைப் பூர்த்தி செய்ய தன் தாய்நாட்டு மக்களைக் கொன்று குவித்து, கசக்கிப் பிழிந்து வரி வசூல் செய்த மக்கள் விரோதியாகவும், இன்றுள்ள எந்த அரசியல்வாதியையும் மிஞ்சும் அளவுக்குப் பதவிப்பித்து பிடித்து அலைந்த இழி பிறவியாகவும், தன்னை அடையாளம் காட்டுகிறான்" என்று ஹீரோ ராஜய்யா குறிப்பிட்டுள்ளார். 3

"மருதநாயகம் தமிழ்நாட்டில் இரண்டாவது கொள்ளைக் காரனே!" என்னும் தலைப்பில் "உண்மையான தமிழ் வீரர்களை இருட்டடிப்புச்

செய்யவும், தமிழினத் துரோகிகளையும், விரோதிகளையும் தமிழகத்தின் கதாநாயகர்களாக வெளிச்சம் போட்டுக்காட்டவும் இங்கே ஒரு சக்தி தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றது என்பதுதானே உண்மை" என்று டாக்டர். அரு. கோபாலன் குறிப்பிட்டுள்ளார். (எழுகதிர் - நவம்பர்-97) இதனைத் தொடர்ந்து பல எதிர்ப்புக் குரல்கள் ஒலித்தன. 4

'மருதநாயகம்' திரைப்படத்தைப் பற்றி ஆதரவுக் குரல்களும் ஒலித்தன. அவ்வாறு ஒலித்த குரல்கள் பெரும்பாலும் மருதநாயகத்தின் குணநலன்களைப் பற்றியதாக இல்லாமல் வேறுவிதமாக இருந்தது.

'மருதநாயகம்' தமிழனின் பெருமையை உலக அளவில் நிலைநிறுத்தும். தமிழரின் கனவை நனவாக்குகிறார். திரைஉலகில் பொன் எழுத்துக்களால் எழுதப்படக்கூடிய சாதனை" என்று ஏ.வி.எம். சரவணன் குறிப்பிட்டுள்ளார் (தேவி - 29-10-97. பக்கம் 21) 5

"தமிழனாய் பெருமைப்படுவதா? இந்தியனாகப் பெருமைப் படுவதா? மருதநாயகம் நிகழ்ச்சி இந்தத் துறைக்கு மிகவும் பெருமையை சேர்த்திருக்கு. இந்தியாவில் எந்த மொழியிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்ததில்லை. கலைத்துறையைச் சேர்ந்த எனக்கு பெருமையா இருக்கு" என்று நடிகர் கார்த்திக் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

'மருதநாயகம்' திரைப்படம் மாபெரும் வெற்றிபெறும். கமல் நம்மவர். இந்தியன். தமிழர். உலக அளவில் உயருவதற்கு அனைவரும் உற்சாகம் தர வேண்டும். புதிய வரலாறு படைக்கப் போகும் கமலுக்கு நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று ஜி. அசோகன் குறிப்பிட்டுள்ளார். (எ நாவல் டைம் - நவம்பர் - 97) 6

"ஆங்கிலேயரைத் தைரியமாக எதிர்த்துப் போரிட்ட முதல் சுதந்திர போராட்ட வீரன்" என்று குணசேகரன், நத்தர்சா போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (இந்தியா டுடே - அக்டோபர்-22-10-97)

"பலருக்கும் தெரியாத மருதநாயகம் என்ற வரலாற்றுப் பக்கத்தை வெள்ளித்திரையில் வெளிச்சம் போட்டுக்காட்ட கமல் என்ற கலைஞர் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்காகத் தொழிலாளிகளும், படைப்பாளிகளும் பேதமில்லாமல், மோதலில்லாமல் ஒருமித்து கை கொடுத்து மகிழ வேண்டும்" என்று சாவி கூறுகிறார். (சாவி - 30-10-97) 7

'மருதநாயகம்' திரைப்படம் பற்றிய சர்ச்சைகள் வளர்ந்து கொண்டு வரும் நேரத்தில்-எதிர்ப்போர், ஆதரிப்போர் ஆகியவர்களின் சர்ச்சைக்குரிய ஐயத்தைப் போக்குவது படத்தயாரிப்பாளரான கமல்ஹாசனின் கடமை.

ஆனால், கமல்ஹாசன் சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதை மறந்து, பலரின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய அளவிற்கு முரணான கருத்துக்களை பேட்டிகளின் வாயிலாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

கமல்ஹாசன் அவர்களின் பேட்டிகளிலிருந்து ஒரு சில கருத்துக்களை மட்டும் எடுத்துக்காட்டுவது சாலச் சிறந்ததாகும். “மருதநாயகம்’ எல்லாத் தமிழனுடைய தன்னம்பிக்கையையும் கொஞ்சம் நிமிர்த்தி .... நிமிர்த்தி வைத்திருக்கிற ஒரு வார் ஜோல்சர். இதை வெவ்வேறு ஆட்கள் வெவ்வேறு சுயநலத்துக்காக, மருதநாயகம் இது அல்ல ... இது வரல ... இது இல்லனு ... சொல்லிக் கிட்டிருக்காங்க ... அதையெல்லாம் பத்தி எனக்குக் கவலையில்லை. மருதநாயகத்தோட சரித்திரமும், அந்த ஆள் வாழ்ந்த வாழ்க்கையும் எனக்குத் துணையாக இருக்கு” என்று கமல்ஹாசன் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். (குமுதம் 23-10-97. பக்கம் 6) 8

கமல்ஹாசன் பேட்டி ஐயப்பாடுகளைப் போக்கும் வண்ணம் அமையாமல், “இதையெல்லாம் பற்றி எனக்குக் கவலை இல்லை” என்று பொறுப்பைத் தட்டிக் கழிப்பது நல்லதல்ல. இச் செயலானது பிரச்சனைகளைத் தீர்க்கவும் உதவாது. எதிர்ப்பாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு நேர்மையான பதிலை வழங்குவதாகவும் இருக்காது.

மருதநாயகத்தோட சரித்திரமும் அந்த ஆள் வாழ்ந்த வாழ்க்கையும் கமலுக்குத் துணையாக இருக்கலாம். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

“ஒவ்வொருவரும் அவங்கவங்களுக்குத் தேவையான இனப் பற்றுகளுடன் மருதநாயகத்தை அணுகினாங்கன்னா, மருதநாயகத்தோட நெருப்பு சுட்டுவிடும்” என்று கமல்ஹாசன் பயமூட்டலாம். அதைப்பற்றியும் நமக்குக் கவலை இல்லை.

“அது நிஜம். என்னை அந்த நெருப்பின் உஷ்ணம்தான் அருகில் செல்ல ஆசையை வளர்த்தது. விட்டில் பூச்சியாக மாறி, அந்த நெருப்பின் ஈர்ப்பில்தான் போனேன்” என்று கமல்ஹாசன் கூறுவதைப் பற்றியெல்லாம் நமக்குக் கவலையில்லை.

‘அவ்வளவு நேர்மையான ஆள். அவரைப் பற்றின புத்தகத்தை வெள்ளைக்காரனே எழுதியிருக்கிறார். இந்துஸ்தான்ல நான் பார்த்த போர் வீரர்களிலே சிறந்தவர் மருதநாயகம்னு ஒரு வெள்ளைக்காரரே எழுதி இருக்கிறார்’ என்று கமல்ஹாசன் கூறியுள்ளார். அதைப்பற்றியும் நமக்குக் கவலை இல்லை.

இராபர்ட் கிளைவை விட சிறந்தவர்னு ஒருத்தர் சொல்றாரு. அதைப் பற்றியெல்லாம் நமக்கு கவலையில்லை. ஆனால் மருதநாயகம் எந்த வகையில் ‘முதல் இந்தியன்’ என்பதற்கும், எந்த வகையில் ‘நேர்மையான

ஆள்' என்பதற்கும், வெள்ளைக்காரன் எழுதிவிட்டால் ஆதாரமாகிவிடுமா? நான் பார்த்த போர் வீரர்களில் தலைசிறந்தவர் மருதநாயகம் என்று சொன்னால் அது உண்மையாகிவிடுமா?. 'சுதந்திரப் போரின் முதல்வீரன்' என்பதற்கும் தகுந்த விளக்கத்தைக் கமல்ஹாசன் கூறாமல் இருப்பதுதான் நமக்குக் கவலை தருவதாக உள்ளது. இதைத்தான் மருதநாயகம் எதிர்ப்பாளர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாமன்னர் பூலித்தேவனைக் காட்டிக்கொடுத்து, ஆங்கிலேயரின் கைக்கூலியாகச் செயல்பட்டவர் மருதநாயகம் என்பதை மருதநாயகம் எதிர்ப்பாளர்கள் தெளிவாகக் கூறிவிட்டனர்.

'முதல் சுதந்திரப் போராட்ட வீரன் மாவீரன் பூலித்தேவரல்ல. மருதநாயகமே முதல் சுதந்திரப் போராட்ட வீரன்' என்று கமல்ஹாசன் மறுத்துக் கூறியிருக்க வேண்டும். அல்லது 'நான் தயாரித்து வரும் மருதநாயகம் திரைப்படம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. எதிர்ப்பாளர்கள் கூறும் கருத்துக்கள் இதில் இடம்பெறவில்லை' என்று மறுப்புச் செய்திகளையாவது வெளியிட்டிருக்க வேண்டும்; அல்லது 'எதிர்ப்பாளர்களின் கருத்துக்களுக்கு ஆதாரமில்லை; தவறானவை என்று அறிக்கையாவது விட வேண்டியது கமல்ஹாசனின் கடமையாகும்.

கமல்ஹாசன் தயாரிக்கும் மருதநாயகம், சாதாரணத் திரைப்படமோ, நாவலோ, சிறுகதையோ அல்ல. அவ்வாறு திரைக்கதையைத் தயாரிக்கும் போது யார் கேட்டாலும் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. மருதநாயகம் பாத்திரம் சுதந்திரப் போராட்டத்தின் அடிப்படையான வரலாறாக இருப்பதால் விளக்கம் கேட்பவர்களுக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இது கமல்ஹாசனின் கடமை.

ஆனால் மருதநாயகம் திரைப்படமோ, இந்திய விடுதலைப் போராட்டத்தை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படும் படம். விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக இருந்தால் சமுதாய மக்களிடமிருந்து எதிர்ப்புக்கள் எழத்தான் செய்யும். அதற்குப் பதில் கூறுவதை விடுத்து, அதைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை என்று கமல்ஹாசன் கூறியிருப்பது பொருத்தமுடைய செயல் அல்ல.

மக்கள் மத்தியில் இது போன்ற பிரச்சனைகள் எழுப்பப் பட்டுவிட்டதால் 'மருதநாயகம்' திரைப்படக் கதையை மூடி மறைக்க வேண்டிய அவசியமில்லை. பகிரங்கமாகக் கதையை வெளியிடுவது சமுதாய நீதியைக் காப்பாற்றுவதற்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. கமல்ஹாசன் அதைச் செய்யத் தவறியமை இரண்டு சமூகத்தினரிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து. மருதநாயகம் திரைப்பட டிரைலர் வந்த நேரத்தில் மருதநாயத்திற்குச் சிலை வைக்க வேண்டும் என்னும் கோரிக்கை 'நாடார் சமுதாயப் பாதுகாப்புப் பேரவை'யின் சார்பாக வெளியிடப்பட்டது. (விகடன் பேப்பர் 17-10-97) 9

சமூக நீதிக்காகவும், சமத்துவத்துக்காகவும் வாழ்ந்த மருதநாயகம் விடுதலை வேட்கையில் பிரிட்டிஷாருக்கு எதிராகப் போர் தொடுத்ததால் தூக்கிலிடப்பட்டார் என்று கமல்ஹாசனுக்கு ஆதரவாக அறிக்கை விட்டது நாடார் பேரவை.

முதல் சுதந்திரப் போராட்ட வீரர் மருதநாயகத்திற்குத் தமிழக அரசு தகுந்த நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும். தலைநகர் சென்னையில் அவருக்கு முழுஉருவ வெண்கலச்சிலை நிறுவ வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைப் பார்த்த, தமிழகத்தின் பிரதான சாதியான தேவரினம் "ஆங்கிலேயக் கைக்கூலி மருதநாயகம் - விடுதலைப் போருக்கு அணு அளவும் தொடர்பில்லாத மருதநாயகம்" என்று கூறுகிறது. ஆனால் மற்றொரு சாதியான நாடார் பேரவை, சுதந்திரப் போராட்ட முதல் வீரர் மருதநாயகம் என்று கூறுகிறது. இது புதிய சிக்கலை உருவாக்கியுள்ளது.

கமல்ஹாசனின் அறிவிப்பு தெளிவாக இல்லாததால், இரண்டு சாதிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் உண்டாகிவிட்டன. தனி மனிதர்களிடையே இருந்த மருதநாயகம் சர்ச்சை, இரண்டு சாதிகளிடையே படர ஆரம்பித்துவிட்டது. அது மட்டுமல்லாது, மருதநாயகம் இந்து மதமா? முகமதிய மதமா? என்னும் சர்ச்சை வேறு எழுந்துள்ளது. சாதியில் நிலவிய சர்ச்சை மதத்திலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

கமல்ஹாசன் ஓர் இந்துத்துவவாதியாகச் செயல்படுகிறார் என்பது விமர்சனம். உங்கள் பதில் என்ன? என்று கமலிடம் கேட்க அதற்கு 'முஸ்லிமாக மாறும் இந்து, இந்து மதத்திற்குப் பெருமை சேர்க்கிறானா ? இஸ்லாமுக்குப் பெருமை சேர்க்கிறானா ? நான் இதற்குப் பிற்பாடு பதில் சொல்லிக் கொள்கிறேன்' என்று அவர் பதில் கூறினார்.

இந்த வினாவிற்கு உடனடியாகப் பதில் கூறி ஐயத்தைப் போக்குவதை விடுத்து 'இதற்குப் பிற்பாடு பதில் சொல்லிக் கொள்கிறேன்' என்று கூறியிருப்பது மதம் பற்றிய சர்ச்சைகளை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. எரிகிற நெருப்பில் வெண்ணெய் வார்த்தாற் போல் ஆகிவிடும். எனவே, பதில்களை உடனே தெளிவாக்குவது கமல்ஹாசனின் கடமை. அந்தக் கடமையிலிருந்து கமல் தவறுவாராயின் மேலும் பல்வேறு சிக்கல்கள் உண்டாகலாம்.

பல்வேறு சிக்கல்களை உண்டாகிவிடக் கூடாது என்பதற்காக கமல்ஹாசனைச் சந்தித்து, மருதநாயகம் பாத்திரத்தை விளக்கிக் கூற வேண்டும் என்று சென்னைக்குச் சென்றேன். கமல்ஹாசன் அலுவலகம் சென்று அவரின் நேர்முக உதவியாளரைச் சந்தித்து சில நூல்களை அவரிடம் கொடுத்து கமல்ஹாசன் பார்வைக்கு வழங்கும்படி வேண்டினேன். அவரும்

ஆவலோடு புத்தகத்தைப் படித்துவிட்டு அலுவலக உதவியாளரிடம் கொடுத்து கமல் வீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி கூறினார். அவருடைய பெயர் சுப்பிரமணிய செட்டியார் என்று எண்ணுகிறேன். ஞாபகமில்லை. நல்ல பண்பாளர்.

மறுநாள் அவர் சொன்னபடி அதே நேரத்திற்குச் சென்றேன். அப்போது கமல் வீட்டிலிருந்தார். நேர்முக உதவியாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கமலுடன் பேசினார். நான் காத்திருப்பதாகச் சொன்னார். அதற்கு கமல், அவர் கொடுத்த புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். அதைப் பற்றி பின்னர் பேசிக் கொள்ளலாம். படம் எடுக்கும் போது தகவல் கொடுக்கிறேன். அப்போது தாங்கள் வந்து நேரில் பேசிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். மருதநாயகம் விளம்பரங்கள் தொடர்ந்து வரலாயின. எனக்கு ஒரு தகவலும் வரவில்லை. மருதநாயகத்தின் உண்மையான வரலாறு வெளியுலகத்தினருக்குத் தெரிய வேண்டும் என்பதற்கா 'மருதநாயகம் உண்மை வரலாறு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி அனுப்பினேன். அதன் நகலை கமலுக்கு அனுப்பி வைத்தேன். பத்திரிக்கைகளுக்கு அவர் கூறும் பேட்டிகளை மையமாகக் கொண்டு எழுதினேன். பலருடைய கேள்விகளுக்கு நேரடியான பதில்களைத் தராமல் கிண்டல் செய்யும் தோரணையில் பதில்கள் இருந்தன. ஆனால் எனக்கோ எந்தவிதமான பதிலும் வரவில்லை.

"மருதநாயகம் எல்லாத் தமிழனுடைய தன்னம்பிக்கையையும் கொஞ்சம் நிமிர்த்தி நிமிர்த்தி வைத்திருக்கிற ஒரு வார் ஜோல்சர். இதை வெவ்வேறு ஆட்கள், வெவ்வேறு சுயநலத்துக்காக, மருதநாயகம் அது அல்ல... இது வரல.... இது இல்லைன்னு... சொல்லிக்கிட்டு இருக்காங்க. அதையெல்லாம் பத்தி எனக்குக் கவலையில்லை" என்று ஏற்கனவே சொன்ன கமல் என்னையும் அந்த பட்டியலில் சேர்த்துள்ளார் என்று தெரிந்தது.

சற்று அமைதிக்குப் பின் 'மீண்டும் மருதநாயகம் வருகிறார்' என்ற ஆரவாரம் பத்திரிக்கை உலகில் பரபரப்பானது.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறுகள் இன்னமும் ஒருசார்பாகவே எழுதப்பட்டு வருகின்றன. இப்போக்கை உடனடியாக மாற்ற வேண்டும். உண்மைக்குப் புறம்பாக எழுதுவது ஒரு வரலாற்று ஆசிரியருக்கு உகந்ததல்ல. இந்தியா விடுதலை பெற்று, ஐம்பதாவது விழாவும் கொண்டாடிவிட்டோம். இருப்பினும் இன்னமும் திரும்பத்திரும்ப தவறான வரலாறுகளையே எழுதிக்கொண்டு வருகின்றனர். விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதுகிறவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனையே முதன்மைப்படுத்தி எழுதி வருகின்றனர்.

வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தது 1760. அவர் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே, 1755-இல், இந்தியாவில் முதன்முதல் வரிகேட்டு வந்த ஆங்கிலத் தளபதியான அலெக்சாண்டர் கெரான் என்பவனை ஓடஓட விரட்டியடித்தார் மாவீரன் பூலித்தேவன். அப்போது பாஞ்சாலங்குறிச்சி மன்னனாக இருந்த பொல்லாப்பாண்டிய கட்டபொம்மன், கெரானுக்கு பணிந்து கப்பத்தொகையைக் கட்டினார். இவர் வீரபாண்டிய கட்டபொம்மனின் தாத்தாஆவார். வரலாறு இவ்வாறு இருக்கும்போது, 1799-இல் வெள்ளையரை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனின் விடுதலைப் போர் எப்படி முதல் போராகும் ? வேண்டுமென்றே இத்தவறை செய்து வருகின்றனர். ஒரு பொய்யைப் பல தடவை திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே வந்தால் அது மெய்யாகிவிடும் என்று கூறிவருகின்றனர் போலும்.

"குடத்துள் விளக்காக இருந்த அந்த விடுதலைப் போர் வீரனை குன்றின்மேல் ஏற்றிவைத்துவிட்டார் தலைவர் ம.பொ.சி. அவர்கள்" என்று அ.மா.சாமி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். 10

'நமது தமிழ்நாட்டில் தீவிரம் பூண்டு முழங்கிய வீரபாண்டிய கட்டபொம்மனே முதல் இந்திய வேந்தன் என்று வரலாறுகள் கூறுகின்றன. ஆனால் கட்டபொம்மனுக்கு முன்னேயும் ஒரு தமிழன் வெள்ளையரை எதிர்த்து வீரவாள் சுற்றினான். அவர் பெயர் புலித்தேவன் என்ற பூலித்தேவன்'. 11

'வடபுலத்தில் சிப்பாய்ப்புரட்சி நடப்பதற்கு 65 ஆண்டுகளுக்கு முன்பே பூலித்தேவர் போர்க்கோலம் பூண்டார்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1806-இல் வேலூரில் நடந்த சிப்பாய்க் கலகத்திற்கு 56 வருடங்களுக்கு முன்பும், ஜான்ஸி ராணி நடத்திய கலகத்திற்கு 102 ஆண்டுகளுக்கு முன்பும் மாவீரன் பூலித்தேவன் ஆங்கிலேயரை எதிர்த்தார்.

"தென்தமிழகத்தின் தேசியப் புதுமலர்ச்சி, மைசூர் எழுச்சி கடந்து நீடித்துத் தழைத்ததாயினும், அது திப்புவுக்கு முன்னும், ஹைதருக்கு முன்னும் தொடங்கிவிட்டது எனலாம். அது 1750-லிருந்தே திருநெல்வேலி மாவட்டத்தின் மேலைச்சீமையில் பூலித்தேவர் தலைமையில் நெற்கட்டுஞ் செவ்வலில் முகிழ்த்தது. மைசூர் ஆட்சியை ஹைதர் கைப்பற்றுவதற்கு முன்பே அவனுடன் தொடர்பு நாடிற்று. பின் அவன் எழுச்சி இராமநாதபுரத்தில் படர்ந்து, சிவகெங்கையில் 1772 முதல் கொழுந்து விட்டு எரிந்தது. 1790-க்குப் பின் பாஞ்சாலங்குறிச்சியில் புயல்வேகத்தில் ஆர்ப்பரித்தெழுந்து அதன் இறுதிக் கொழுங்கனல் 19-ஆம் நூற்றாண்டின் முதலிரண்டு ஆண்டுகளில் பாஞ்சாலங்குறிச்சியையும் சிவகெங்கையையும் உட்கொண்டு மீண்டும் தென் தமிழகமெங்கும் அழன்றெரிந்தது. தென் தமிழகத்தில் அடங்கிய தீ அடுத்த ஐம்பது ஆண்டுகளில் வளர்ந்தது" என்று பேராசிரியர் கா. அப்பாத்துரை தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். 12

பேராசிரியர் கா. அப்பாத்துரை அவர்கள், நடுநிலையோடு நின்று விடுதலைப் போராட்ட வரலாற்றை தெள்ளத் தெளிவான சான்றுகளுடன் நிறுவியுள்ளார். 'பூலித்தேவன்தான் 1750-இல் இருந்தே முழங்கினார்' என்று தமிழகத்தின் முதல்வர் 'முதல் விடுதலைப் போர் எது?' என்பதைத் தெளிவாகக் கூறினார்.

"தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையரை எதிர்த்து முதலிலே களம் சென்று கடகம் ஏந்தி இறுதியாக சுதந்திரத்திற்காக தன்னையே பலி கொடுத்துக்கொண்ட பூலித்தேவன். அமெரிக்க உள்நாட்டுப் போர், பிரெஞ்சுப் புரட்சி ஆகிய புரட்சிகள் நடைபெறுவதற்கு முன்னரே இந்தியாவில் விடுதலைப் புரட்சியை நடத்தியவர்தான் இங்கே நம்முன் சிலையாக நிற்கின்ற மாவீரன் பூலித்தேவன். நான் சொல்லுகின்ற நேரத்திலேயே வீரம் கொப்பளிக்கின்றது. அப்படிப்பட்ட வீரன் வாழ்ந்த மண் இந்த மண்" என்று தமிழக முதல்வர் கலைஞர் கூறினார். அத்தகைய வரலாறும் பாரம்பரியமும் மாவீரன் பூலித்தேவன் ஒருவருக்கே இருந்தது. அவருடைய வரலாறு இதற்குப் பிறகும் மறைக்கப்பட்டு வருவது கேலிக் கூத்தாக உள்ளது. 13

'விடுதலைப் போரில் முதல் முழக்கம் இட்டவர் பூலித்தேவனா ? கட்டபொம்மனா ?' என்ற பட்டிமன்றச் சர்ச்சை முடிந்தது. சர்ச்சைகளைத் தொடங்கி வைத்த ம.பொ.சி.யும், 'கல்கண்டு' தமிழ்வாணனும் இயற்கை எய்திவிட்டனர். சர்ச்சைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டன.

முதலாவது சர்ச்சை முடிந்தது. "மழை விட்டாலும் தூவானம் விட்டபாடில்லை" என்பதைப் போல் பூலித்தேவன் விடுதலைப் போராட்ட வீரனா? மருதநாயகம் விடுதலைப் போராட்ட வீரனா? என்னும் சர்ச்சையை பிரபல படத் தயாரிப்பாளரும், திரைப்பட நடிகருமான கமல்ஹாசன் தொடங்கி வைத்தார். அவர் வைத்த நெருப்பு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டது. எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தார் போல் அனைத்துப் பத்திரிக்கைகளும் மருதநாயகம் பற்றிய செய்திகளை மிக்க ஆர்வத்துடன் வெளியிட்டன. மருதநாயகம் என்னும் நெருப்பு தமிழகத்தில் மட்டுமல்லாது பிரிட்டிஷ் ராணி எலிசபெத் வரையிலும் அழன்று எரிந்தது.

இந்த நெருப்பைத் தடுத்து நிறுத்த ஒரு தமிழ்வாணன் இங்கு இல்லை. சிலர் கமல்ஹாசனின் மருதநாயகத்தை எதிர்த்தனர் என்றாலும் பலரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இத்தகைய சூழ்நிலையில் மருதநாயகத்தைப் பற்றிய உண்மை வரலாற்றை இந்த நாட்டு மக்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டும் என்னும் அவாவினால் "மருதநாயகம் உண்மை வரலாறு" என்னும் என்னுடைய கட்டுரையை 'மேடைமணி' தொடர்ந்து வெளியிட்டது.

இந்தக் கட்டுரைகளை கமல்ஹாசன் அவர்களுக்குத் தொடர்ந்து அனுப்பி வைத்தேன். நான் எழுதிய நூல்களையும் அனுப்பி வைத்தேன். அதை அவர் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. மருதநாயகத்தின் துரோகத்தைப் பற்றி எடுத்துக் கூறினால் உண்மை தெரியவரும் என்று இரண்டொரு நாள் சென்னையிலுள்ள கமல்ஹாசன் அலுவலகத்திற்குச் சென்றும் பார்க்க முடியவில்லை. இதை மருதநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்வதா ? அல்லது தோல்வி என்று சொல்வதா ?

'மேடைமணி' இதழில் வெளிவந்துள்ள மருதநாயகம் பற்றி கமல்ஹாசன் மௌனம் சாதித்தாலும், வாசகர்களின் விமர்சனங்கள் குறிப்பிடத்தக்கவை. "மருதநாயகத்தின் லட்சணத்தை ஆதாரங்களுடன் புட்டுப்புட்டு வைக்கின்ற அறிஞர். ந. இராசையா பாராட்டுக்குரியவர். கட்டுரையைத் தயவு செய்து கமலுக்கு அனுப்பி வையுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளனர். 16

'மேடைமணி' மூலம் தமது அழுத்தமான ஆனால் ஆழமான கருத்துக்களை வரலாற்று மூலமாகக் கொண்டுவந்து நிறுத்தி, கமல்ஹாசன் அவர்களுக்கு 'மருதநாயகம் வரலாறு தமிழ் மண்ணின் களங்கம்' என்பதை எடுத்துக் கூறினார் பேராசிரியர் இராசையா. வரலாற்றுத் திரிபுகளுடன் மருதநாயகம் படம் வெளிவரக்கூடாது என்று சொல்லி, கமல் அவர்களுக்கு கடிதம் மூலம் தமது கருத்தை தெளிவுபடுத்தியுள்ளார் இராசையா. ஆனால் அதையும் மீறிப் படம் எடுக்கப்படும், வெளிவரும் எனும் செய்தியும், வரலாற்று நாயகன் பூலித்தேவனின் வீரவாழ்வு, கொச்சைப்படுத்தப் படுமேயானால் தமிழகத்தின் தென்பகுதி மக்கள் கொதித்தெழுவர் என்ற செய்தியும் தெரிவிக்கப்படுகிறது. 7

"இராசையாவின் கமல்ஹாசன் பற்றிய கருத்துக்களை வரவேற்கிறேன். மேலும் கமல் மதிக்கும் பெரியாரை மட்டும் ஈ.வெ.ரா. என்றோ ராமசாமி நாயக்கர் என்றோ குறிப்பிடாமல் பெரியார் என்று அழைப்பதன் காரணமென்ன ? வேறு எவரும் அந்தப் பட்டத்துக்கு உரியவராகக் கூடாது என்ற எண்ணமா ? அல்லது தைரியமில்லையா ?" 14

வாசகர்கள் பலரும் மருதநாயகம் வரலாற்றைத் தொடர்ந்து எழுத வேண்டும் என்று கடிதங்கள் எழுதுகின்றனர்.

மருதநாயகம் வரலாற்றை விரிவாக எழுத வேண்டும் என்று பெரியவர்கள் வேண்டினர். அவர்கள் விருப்பத்தை மேற்கொண்டு, மருதநாயகம் வரலாற்றுக் குறிப்புகளைக் கண்டுபிடித்துத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டேன்.

ஏற்கனவே 1985-இல் நான் "இந்திய விடுதலைப் போரின் முதல்முழக்கம்" என்னும் நூலை வெளியிட்டேன். அதில் முகமது யூசுப்கான் பற்றிய குறிப்புக்களையும் வெளியிட்டுள்ளேன். 1992-இல் வெளியிட்ட "மாமன்னன் பூலித்தேவன்" என்னும் நூலில் முகமது யூசுப்கானைப் பற்றி சற்று விரிவான முறையில் ஆய்வு செய்து சமாதி புகைப்படத்துடன் வெளியிட்டேன். அப்போது முகமது யூசுப்கானின் சமாதியைக் கண்டுபிடிக்க ஐந்து வருடங்கள் ஆயின. சமாதி பிரபலமாகாத நேரம். மதுரையில் பள்ளி வாசலுடன் சேர்ந்து இருப்பதால் முகமது யூசுப்கான் சமாதி அநேகம் பேருக்குத் தெரியவில்லை. சமாதிப் படம் எஸ்.சி. ஹீல் புத்தகத்தில்தான் அறிமுகம் செய்யப்பட்டது. என்னுடைய மாமன்னன் பூலித்தேவன் என்னும் நூலில் யூசுப்கான் சமாதி புகைப்படம் வெளியிட்டேன்.

வரலாற்றாளர்கள் மத்தியில் உலவிக் கொண்டிருந்த முகமது யூசுப்கான் மக்கள் மத்தியில் உலவ ஆரம்பித்தான். மருதநாயகம் என்னும் பெயரில் கமல்ஹாசன் அறிமுகப்படுத்தினார்.

முதன்முதலில் தினமணி 14-11-97, 21-11-97, 9-1-98 ஆகிய இதழ்களில் மருதநாயகம் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. விவாத மேடைகள் தோன்றின. காரசாரமான கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன. கமல்ஹாசனின் பேட்டிகள் அனைத்து இதழ்களிலும் வந்தன. அவற்றில் தவறான தகவல்கள் இடம் பெற்றன. அதற்குரிய பதில்களை சம்மந்தப்பட்டவர்களுக்கு எழுதினேன். அவர்களிடமிருந்து பதில்களும் வந்தன. கமல்ஹாசனிடமிருந்து பதில் எப்போதும் வருவதில்லை. ஆனாலும் தொடர்ந்து அனுப்பி வருகிறேன். மருதநாயகம் பற்றிய ஆய்வும் பல தளங்களில் வளரலாயிற்று.

இந்நிலையில், மருதநாயகம் உண்மை வரலாற்றை ஆய்வு செய்து மக்களுக்கு அறிமுகப்படுத்துவது இன்றியமையாதது எனக் கருதுகிறேன். பலர் உண்மை வரலாற்றை வெளியிட்டுள்ளனர் என்றாலும், தமிழகத்திலுள்ள இதழ்களுக்குக் கமல் கொடுத்துள்ள நேர்காணலின் மூலம் கொடுக்கப்பட்ட செய்திகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட உள்ளது.

1. தினமணி 14-11-97.
2. ஹீரோ நவம்பர்-97.
3.மேற்படி நூல்.
4. எழுகதிர், நவம்பர்-97.
5. தேவி, 29-10-97. பக்.21.
6. எ நாவல் டைம், நவம்பர்-97.
7. சாவி. 30-10-97.
8. குமுதம், 23-10-97.
9. விகடன் பேப்பர், 17-10-97. பக். 6
10. அ.மா. சாமி, இந்திய விடுதலைப் போர்
11. அ.மா. சாமி, இந்திய விடுதலைப் போர்
12. அப்பாத்துரை, கா. தென்னாட்டுப் போர்க்களங்கள்
13. தியாகபூமியின் தீரர் வரலாறு.
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி - 1999 பக். 19

14. சி. சுப்புராஜ், கோவை - மேடைமணி.
15. மேடைமணி
16. கல்கி

தினமணியின் பார்வையில் மருதநாயகம்

"கான்சாகிபு - யூசுப்கான்" "மருதநாயகம் - சர்ச்சை" என்னும் தலைப்புகளில் தினமணி நவம்பர் 14, 1997, ஜனவரி 9, 1998 ஆகிய இதழ்களில் டாக்டர். கி. வேங்கிட சுப்பிரமணியம் அவர்களின் கட்டுரைகளும், 'கமல்ஹாசன் கவனிப்பாரா ?' என்னும் தலைப்பில் தினமணி நவம்பர் 21, 1997 இதழில் முனைவர் அ. இராமசாமி அவர்கள் எழுதியுள்ள கட்டுரையும் தமிழ் மக்களின் சிந்தனைகளைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன.

மேற்சொன்ன கட்டுரைகள் யாவும் மருதநாயகம் பற்றி விவாதங்களைத் தோற்றுவித்துள்ளன. தமிழகத்தில் இது போன்ற விவாத மேடைகள் தோன்றுவது புதிதல்ல. "வீரபாண்டிய கட்டபொம்மன் தான் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முதல் முழக்கம் முழங்கினார்" என்று ம.பொ.சி-யும்; இந்தக் கருத்தை அறவே மறுத்து 'கல்கண்டு' தமிழ்வாணன் அவர்களும் தமிழகத்தில் விவாத மேடைகளைத் தோற்றுவித்தனர். அவை தமிழக மக்களைச் சிந்திக்க வைத்தன. தற்போது "மருதநாயகம்" பற்றிய விவாத மேடை.

இந்திய விடுதலைப் போரின் முதல் வீரன் மருதநாயகமா ? பூலித்தேவனா ? என்னும் விவாத அரங்கைத் தமிழக மக்கள் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

"மருதநாயகம்" விவாத மேடையைத் தோற்றுவித்துள்ள கட்டுரையாளர்கள் இருவரும் சாதாரணக் குடிமக்கள் அல்லர். டாக்டர். கி.வேங்கிட சுப்பிரமணியம் தமிழகக் கல்வித் துறையில் பல ஆண்டுகளாகச் சேவை செய்து, படிப்படியாக பல பதவி உயர்வுகளைப் பெற்று மிகவும் உயர்ந்த பதவிகளான தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநராகவும், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத் துணை வேந்தராகவும் மற்றும் பல பெரிய பதவிகளில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள ஒரு மூத்த கல்விச் சிந்தனையாளர். மற்றொருவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக பதிவாளரும், வரலாற்றுப் பேராசிரியருமான முனைவர் அ. இராமசாமி. தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக உள்ளார்.

"மருதநாயகம்" பற்றி இவர்களிருவரும் கூறியுள்ள கருத்துக்கள் தமிழகத்தில் மேலும் பல விவாதங்களைத் தோற்றுவிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வெளி வரவிருக்கும் மருதநாயகம் திரைப்படத்திற்கு நல்ல விளம்பரங்களைத் தந்து கொண்டிருக்கின்றன இந்த விவாத மேடைகள்.

"பூலித்தேவன் சிந்து" என்னும் நாட்டுப்புறப் பாடல்களைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்து, ஆய்வு செய்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவன் என்னும் முறையில் என்னுடைய கருத்துக்களையும் கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

"யூசுப்கானின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்தேன். கர்ண பரம்பரைக் கதைகளும், பாடல்களும் உண்டு. அப்படியொரு பாடலில் மருதநாயகம் இஸ்லாமானார் என்று தொனிக்கும் ஒரு குறிப்பு இருக்கிறது. வேறு சான்றுகள் நானறிந்தவரை இல்லை. அவர் பிறவி முஸ்லீம் என்று கொள்ளலாம். இதுதான் சரி" என்று டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் கூறிய கருத்துக்களை மறுத்து "யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லீம் என்பதற்கு ஆதாரம் இல்லை. அவர் பனையூரில் ஒரு வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பெயர் மருதநாயகம். வரலாற்று நூல்களில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டுள்ளன" என்று முனைவர் அ. இராமசாமி கூறியுள்ளார்.

அதற்குப் பதில் கூறும் வகையில் கான்சாகிபு பற்றி வெளிவந்துள்ள முதல் நூலான எஸ்.சி.ஹீல் எழுதிய "YUSUFKHAN - THE REBEL COMMANDANT" என்னும் புத்தகத்தில் மருதநாயகம் சங்கதியே வரவில்லை. இந்து மதத்திலிருந்து மருதநாயகம் கான்சாகிபாக மதம் மாறியிருந்தால் நிச்சயம் இப்புத்தகம் இது பற்றிக் கூறியிருக்கும். எனவே கான்சாகிபு ஒரு பிறவி முஸ்லீம்" என்று டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

"மருதநாயகம் பிள்ளை" என்னும் குறிப்பு எஸ்.சி.ஹீல் புத்தகத்தின் முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், "மருதநாயகம் சங்கதியே வரவில்லை" என்று என்ன பொருளில் கூறினாரோ தெரியவில்லை. டாக்டர் கி.வெங்கட சுப்பிரமணியம் தான் பதில் கூற வேண்டும்.

'கர்ண பரம்பரைக் கதைகளும், பாடல்களும் உண்டு. அப்படியொரு பாடலில் "மருதநாயகம் இஸ்லாம் ஆனார்" என்று தொனிக்கும் ஒரு குறிப்பு இருக்கிறது' என்று கூறிய டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம் இந்தப் பாடல் வரிகளை எடுத்துக்காட்டி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

வரலாற்று நூல்களில் யூசுப்கான் பிறவி முஸ்லீம் என்பதற்கான சான்றுகளில்லை என்று பேராசிரியர் அ. இராமசாமி கூறியுள்ளார். ஆனால் "இந்து மதத்திலிருந்து மருதநாயகம் கான்சாகிபாக மதம் மாறியிருந்தால் நிச்சயம் எஸ்.சி.ஹீல் புத்தகம் கூறியிருக்கும். அந்த புத்தகம் கூறாததால் கான்சாகிபு ஒரு பிறவி முஸ்லீம்" என்னும் கருத்தை டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் கூறியுள்ளார். இருவரும் அவரவர்கள் கூறிய கருத்துக்களுக்கான நேரடிச் சான்றுகளை எடுத்துக்காட்டவில்லை.

என்னுடைய ஆய்வின்படி மருதநாயகத்தின் பிறப்பு, வளர்ப்பு ஆகியவை பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் கூறும் "கான்சாகிபு சண்டை" என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல் நூலை முதன்முதலில் பெரிய எழுத்துக்களில் கொழும்பு, சரஸ்வதி புத்தகச் சாலை வெளியிட்டது. அதன் பின்னரே பேராசிரியர் நா. வானமாமலை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட "கான்சாகிபு சண்டை" என்னும் நூலை மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

மேற்கண்டுள்ள நூலில் "விசையாலீம் குலம் விளங்க வருதீரன்" என்னும் பாடல் வரியின் மூலம், ஆலீம் குலம் என்று குறிப்பிடுவதால் கான்சாகிபு ஒரு பிறவி முஸ்லீம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

மேலும் எஸ்.சி.ஹீல் எழுதிய நூலில் "khan (Sahib) is by birth a Moor and is descended from the ancient seed of that nation" என்னும் குறிப்பு 286-ஆம் பக்கத்தில் உள்ளது.

"MOOR" என்னும் சொல்லுக்கு வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அராபிய கலப்பின "இஸ்லாமியர்" என்னும் பொருளை சென்னைப் பல்கலைக் கழக அகராதி பக்கம் 646-இல் கூறுகிறது. இக்குறிப்பின்படி கான்சாகிபு அராபிய கலப்பின இஸ்லாமியர் இனத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது. இதையே ஆதாரமாகக் கொள்ளலாம்.

'கும்மந்தன் கான்சாகிபு இராமநாதபுரத்துப் பனையூரில் இந்து வேளாளனாகப் பிறந்து, மருதநாயகம் பிள்ளை என்ற பெயரைக் கொண்டிருந்தான் என்று செவி வழிச்செய்திகள் கூறுகின்றன. இஸ்லாமியச் சமுதாயத்தைத் தழுவினார் என்பது எந்த அளவுக்கு மெய்யானவை என்பது விளங்கவில்லை' என்று பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதியுள்ள 'கும்மந்தன் கான்சாகிபு' என்னும் நூலில் பக்கம் 1-ல் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். செவிவழிச் செய்தியை முடிவான ஆதாரம் என்று சொல்வதற்கில்லை.

"கான்சாகிபு இந்துவாகப் பிறந்து பின் முஸ்லீமாக மாறினார் என்னும் செய்தியை ஓர் ஆய்வாளன் என்ற முறையில் நிராகரிக்கிறேன்" என்று பேராசிரியர் ஹ.மு. நத்தர்சா மறுப்பதுடன் இந்து வேளாளராய்ப் பிறந்த மருதநாயகம், எங்கே எப்போது முஸ்லீமாக மாறினார் என்பதற்கு எத்தகைய சரித்திரச் சான்றுகளும் கிடைக்கவில்லை என்று கூறி 'கான்சாகிபு ஒரு பிறவி முஸ்லீம்' என்று தன்னுடைய ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளார். இது ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

கான்சாகிபு வேளாளர் குலத்தில் பிறக்கவுமில்லை; பெயர் மருதநாயகம் பிள்ளையுமில்லை என்பதை எடுத்துக்காட்டியுள்ளார் மஹதி என்பவர். மேலும் பல ஆதாரங்கள் உள்ளன. இதுவரை கிடைக்கப் பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் 'கான்சாகிபு ஒரு முஸ்லீம்' என்பதே உண்மை.

‘கான்சாகிபு இந்துவாக இருந்தாலும், இஸ்லாமியராக இருந்தாலும் அவரது வீரதீர சாகசங்கள் வரலாற்றில் இடம் பெற வேண்டியவை’ என்று டாக்டர். கி. வேங்கட சுப்பிரமணியம் கூறியதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

கான்சாகிபின் பகைவர் அன்றைய ஆற்காடு நவாபு முகமது அலி. ஆற்காடு நவாபு கடைசி வரை கான்சாகிபை நிம்மதியாக விட்டதில்லை என்று டாக்டர். கி. வேங்கிட சுப்பிரமணியம் கூறியுள்ள கருத்தை மறுத்து, “நவாபு, யூசுப்கானுக்கு ஆதரவாகயிருந்து அவரைத் தளபதியாக்கி மதுரைக்கு அனுப்பி வைத்தார். அவர் மதுரையில் தனி ஆட்சி தொடங்கிய பின்னர்தான் அவருக்கும், நவாபுக்கும் இடையே பிரச்சனைகள் தோன்றின” என்று பேராசிரியர் அ. இராமசாமி கூறியுள்ளார்.

இதற்குப் பதில் கூறும் வகையில் ஆற்காடு நவாபு கான்சாகிபின் நெருங்கிய நண்பர் என மதுரைப் பேராசிரியர் கூறியதை மறுத்துள்ளார் டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம். “ஆற்காடு நவாபு, கான்சாகிபு பற்றி பொறாமையினால் அவர் நேற்று முளைத்தவர், கேவலமானவர் என்று கூறிய ஆவணக் குறிப்புகள் உள்ளன. நவாபு கான்சாகிபை இகழ்ந்தார். கான்சாகிபும், நவாபைப் பெரிதும் பொருட்படுத்தவில்லை. இது பற்றிப் பல சம்பவங்கள் உள்ளன. ஆற்காடு நவாபும், கான்சாகிபும் நண்பர்கள் அல்ல” என்று டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் மறுத்துள்ளார்.

என்னுடைய ஆய்வின்படி ஆற்காடு நவாபும், கான்சாகிபும் நெருங்கிய நண்பர்கள் என்னும் விவாதமே தவறானதாகும். ஆற்காடு நவாபு, முகமது அலி, திருச்சியைத் தலைநகரமாகக் கொண்டு தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருந்தார். அவரிடம் கான்சாகிபு பணியாளராக அமர்ந்தார். படிப்படியாக உயர்ந்து ஆற்காடு நவாபின் படைத் தளபதியானார்.

தமிழ்நாட்டில் பிரெஞ்சுக்காரருக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே நடைபெற்ற போர்களுக்கெல்லாம், ஆங்கிலேயருக்கு ஆதரவாக கான்சாகிபை அனுப்பி வைத்தார் ஆற்காடு நவாபு. கான்சாகிபுக்கும், ஆங்கிலேயருக்கும் நெருக்கம் ஏற்பட்டது. கான்சாகிபின் திறமையைக் கண்ட ஆங்கிலேயர் அவரைத் தங்கள் பக்கம் இழுக்க முயன்று வந்தனர். ஆங்கிலேயரின் முயற்சியால் கான்சாகிபு ஆற்காடு நவாபின் படையிலிருந்து விலகி, ஆங்கிலப் படைத்தளபதியானார். தமிழனான கான்சாகிபு, அந்நியனான ஆங்கிலேயருக்குப் படைத்தளபதியானது, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரை படிந்த தொடக்கமாகும்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து வந்த தொடர்கதைதான் ஆற்காடு நவாபுக்கும், கான்சாகிப்பிற்கும் ஏற்பட்டுள்ள குரோதங்கள். ஆங்கிலேயரின் அதிகாரம், ஆற்காடு நவாபுக்கு கட்டுப்பட்டிருந்த தென்றாலும், கான்சாகிபு ஆற்காட்டு நவாப்பிற்கு கட்டுப்படாமல் இருந்தார்.

இதன் அடிப்படையில் பார்த்தால் ஆற்காடு நவாபு ஓர் ஆட்சியாளன். ஆற்காடு நவாபிடம் வேலை பார்த்த ஒரு பணியாளன் கான்சாகிபு. இருவரையும் நண்பர்கள் எனக் கூறுவது பொருந்தாது.

சென்னையை லாலி 1758-இல் முற்றுகையிட்ட போது கான்சாகிபு ஆங்கிலேயருடன் சேர்ந்து போராடி வெற்றிவாகை சூடித்தந்தார். அதற்கு நன்றி கூறும் முகத்தான், ஆங்கிலேயர் ஆற்காடு நவாபின் அனுமதியுடன் 1759 மே மாதம் கான்சாகிபை மதுரையின் ஆளுநராக நியமித்தனர். அதன் பின்னர் ஆற்காடு நவாபுக்கும், கான்சாகிப்புக்கும் ஏற்கனவே தோன்றியிருந்த பிரச்சனைகள் கான்சாகிப்பின் இறுதிக்காலம் வரை வளர்ந்து கொண்டே வந்தன. ஆனால் ஆற்காடு நவாபு கடைசி வரை கான்சாகிபை நிம்மதியாகவிட்டதில்லை என்று கூறும் டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

ஆற்காடு நவாபு, கான்சாகிபின் மீது, எவ்வளவு குரோதம் கொண்டிருந்தாரோ, அதற்கு மேல் கான்சாகிபு, ஆற்காடு நவாபின் மீது குரோதம் கொண்டிருந்தார். அதற்கான காரணங்களும், ஆதாரங்களும் பல உள்ளன.

'மதுரையில் ஆளுநராக இருந்தபோது அவர் கான்சாகிபு என்றே அழைக்கப்பட்டார் என்பது உண்மை. ஆவணங்களிலும் அவர் பெயர் அப்படித்தான் இடம் பெற்றுள்ளது. அதை யாரும் மறுக்கவில்லை' என்று கூறும் பேராசிரியர் அ. இராமசாமி கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதே. மதுரையில் ஆளுநராக இருந்ததால் "மருதநாயகம்" என அழைக்கப்பட்டார் என்பதைத் தவறு என்று சொல்வதற்கில்லை. இதற்கு வரலாற்று ஆதாரம் இல்லை என்று கூறுவது போல் ஆரம்பத்தில் "மருதநாயகம்" என்னும் பெயரைக் கொண்டிருந்தார் என்பதற்கும் ஆதாரம் இல்லை.

கான்சாகிபு மதுரையை ஆண்டுவந்த போது மக்கள் அவரை "மதுரை நாயகர்" என்று அழைத்திருக்கலாம். அதுவே மருவி "மருதநாயகம்" என்று வந்திருக்கக்கூடும். கான்சாகிபு இஸ்லாமியராக இருந்ததால் நபிகள் நாயகத்தின் பிரதிநிதியாக மதுரையை ஆண்டு வந்தார் என்பதால் "மருதநாயகம்" என்னும் பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும். இதற்கெல்லாம் எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது. ஆராய்ச்சியாளர்களின் மதிப்புரைகளையே சான்றாகக் கொள்ளலாம்.

மதுரை சம்மட்டிபுரம் "மேலக்காட்டுப்பொட்டல்" என்று டாக்டர் கி.வேங்கிடசுப்பிரமணியம் அழைத்ததில் தவறில்லை. கான்சாகிபைத் தூக்கில் போடும் போது மதுரையின் மேற்குப் பக்கத்தில் தான் சம்மட்டிபுரம் இருந்தது. "மதுரைக்கு மேற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள சம்மட்டிபுரம்" என்று மஹதி கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

“மேற்குக்காட்டுப் பொட்டல்” என்பது “மேலக்காட்டுப் பொட்டல்” என்று மருவி அழைக்கப்பட்டு இருக்கலாம்.

“கான்சாகிபு ஒரு பெரிய மரத்தில் தூக்கிலிடப்பட்டார்” என்று கூறுவதால் “மாங்காட்டுப் பொட்டல்” என்று அழைக்கப் பெற்று; அச்சொல்லே மருவி “மேங்காட்டுப் பொட்டல்” என்று வழக்கில் வந்திருக்கலாம். அதையே ஆங்கிலேயர் “மெயின் கார்டு கேட்” என்று அழைத்தனர் போலும் “மெயின் கார்டு கேட்” என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு வலிமையான பாதுகாப்புப் படை வைத்திருக்கும் இடம்; மதுரைக்கு வாயில் முகப்பு உள்ள முக்கிய வழி என்றும் பொருள் கொள்ளலாம். தவறு செய்தவர்களை அடைத்து வைத்திருக்கும் இடமாகவும் அது இருந்ததாலும் கான்சாகிபு அங்குதான் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் என்று வரலாறு கூறுவதால் “மெயின் கார்டு கேட்” என்பதே “மேங்காட்டுப் பொட்டல்” என்று வழக்கில் வந்திருக்கக்கூடும். மதுரை என்பதை மருதை என்று சொல்பவர்களை இன்றும் காணலாம்.

சம்மட்டிபுரத்திலுள்ள கான்சாகிபு கல்லறை இஸ்லாமியர் பொறுப்பில் உள்ளது என்பது சரியானதேயாகும். ஷேக் தாவுத்தீன் குமாரர் ஷேக் இமாமு என்பரால் இந்தச் சமாதி 1808-இல் கட்டப்பட்டதாக சமாதியிலுள்ள கல்வெட்டு கூறுகிறது. இந்தச் சமாதி தற்போது மிகவும் பெரிய அளவில் விரிவாக்கப்பட்டுள்ளது.

‘சரித்திர ஆசிரியர்களுக்கே கான்சாகிபு வரலாறு தெரியாது’ என்று டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் கூறியிருப்பது ஆசிரியர்களைக் கொச்சைப்படுத்தும் செயலாகும் என்று பேராசிரியர் அ. இராமசாமி கூறியுள்ளார்.

மேலும் தமிழக சரித்திர ஆசிரியர்கள் கான்சாகிபை ஆராய்ச்சி செய்து பல நூல்கள் வெளியிட்டுள்ளனர். கல்லூரிகளில் வரலாறு எடுத்துப்படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ்நாட்டு வரலாற்றில் கான்சாகிபு சரித்திரம் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத் தேர்வுகளில் கான்சாகிபு பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன என்று சரியான விளக்கத்தைத் தந்துள்ளார்.

18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர்களான மாவீரன் பூலித்தேவன், முத்துராமலிங்க சேதுபதி, முத்துவடுக நாதர், வேலு நாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமத்துரை, மருதுபாண்டியர் ஆகியோரைக் காட்டிலும் அதிகமாக வரலாற்று ஆவணம் பெற்றவர் கான்சாகிபு என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. வெளி வந்துள்ள நூல்களை விரிவான பட்டியலிட்டுக் காட்டலாம். எஸ்.சி.ஹீல் எழுதிய புத்தகத்திலுள்ள பின் குறிப்பைப் பார்த்தாலே தெரியும். ‘நம் சரித்திர ஆசிரியர்களுக்கே தெரியாது’ என்று டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் கூறும் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதற்கு விளக்கம் கூறும் முறையில் "பேராசிரியர் எவரையும் இழிவுபடுத்தும் நோக்கில் அல்ல. அவர்கள் மீது பெருமதிப்பு வைத்திருப்பவன் நான்" என்று டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் சமாதானம் கூறினாலும் அடுத்துவரும் வரிகள் ஆராயத்தக்கதாகும். நம் சரித்திர ஆசிரியர்களுக்கே தெரியாது. இப்போது இவரைப் பற்றிய திரைப்படம் வரவிருக்கிறது. கமல்ஹாசன் சிறப்பாகச் செய்வார் என்று நாடு நம்பியிருக்கிறது என்று குறிப்பிட்டதின் உள் நோக்கம் யாது ?

சரித்திர ஆசிரியர்களைக் காட்டிலும், கமல்ஹாசன் சிறப்பாகச் செய்வார் என்றும்; நாடு நம்பியிருக்கிறது என்றும்; கூறியிருப்பது சரித்திர ஆசிரியர்களை கொச்சைப்படுத்துவது ஆகாதா ? சரித்திர ஆசிரியர் வரலாற்றைக் கூட்டியோ, குறைத்தோ வணிக நோக்கோடு செய்யார். ஆகையால் சரித்திர ஆசிரியரோடு கமல்ஹாசனை சம்பந்தப்படுத்துவது பொருந்தாத ஒன்று. கமல்ஹாசனை நாடு நம்பி இருக்கிறதோ, இல்லையோ; டாக்டர்.கி. வேங்கிட சுப்பிரமணியம் கமல்ஹாசனை முழுமையாக நம்பியிருக்கிறார் என்பது வெளிப்படை.

இந்த விவகாரத்தைத் தொடர்ந்து தமிழ்மகன் என்பவர் தினமணியின் சார்பாகக் கமல்ஹாசனிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு "படம்தான் அதற்கு பதிலாக இருக்கும். இப்போது கூறுவது சரியில்லை. அதுவுமில்லாமல் இந்தச் சர்ச்சைகளைத் தீர்த்து வைப்பது என் வேலையும் இல்லை. எனக்கு வேறு வேலைகள் இருக்கின்றன" என்று கமல்ஹாசன் கூறிய பதில், அவரை நம்பிய டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியத்திற்குச் சரியான பதிலாகும்.

கமல்ஹாசனின் இந்தப்பதில் பொறுப்புள்ள ஒரு தயாரிப்பாளர் கூறும் பதிலல்ல. "சர்ச்சைகளைத் தீர்த்து வைப்பது என் வேலையில்லை" என்றால் சர்ச்சைக்குரிய படத்தைத் தயாரிப்பது எந்த வகையில் நியாயமாகும் ? என்பதைத் தமிழ் மக்களின் தீர்ப்புக்கு விட்டுவிடுகிறேன்.

'தமிழகச் சரித்திரத்தை நம் கல்வி இலாகா புறக்கணித்து விட்டது' என்ற குற்றச்சாட்டை டாக்டர் கி. வேங்கிடசுப்பிரமணியம் தமிழ் மக்களின் முன்பு வைத்துள்ளார்.

தமிழகச் சரித்திரம் புறக்கணிக்கப்பட்டது. மறைக்கப்பட்டது என்பது வரலாற்றாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. ஆனால் தமிழகச் சரித்திரத்தை நம் கல்வி இலாகா புறக்கணித்து விட்டது என்று அவருடைய வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். தமிழகத்தின் பள்ளிக் கல்வி இயக்குநராக அவர் பணியாற்றிய போது மேற்கொண்ட முயற்சிகளைத் தடுத்தது யார்? பாடத்திட்டம் தயாரிக்கும் குழுவிற்கும் அவரே தலைவர். அவ்வாறு இருந்தும் தமிழகச் சரித்திரம் புறக்கணிக்கப்பட்டது ஏன் ? என்னும் வினாக்களுக்கு விளக்கம் தருவது அவருடைய கடமை.

பணியில் அவர் இருக்கும் போது தமிழக சரித்திரத்தைப் புறக்கணிக்காமல் பார்த்துக் கொள்வதும், விடுபட்டுப் போன சரித்திரத்தை சேர்த்துக்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதும் அவருடைய கடமையாகும். அப்போது அதைப் பற்றிய கருத்துக்களைக் கூறாமல் ஓய்வு பெற்ற பின் விமர்சனங்களைக் கூறுவது பொருத்தமான செயல் அல்ல.

கான்சாகிபின் சாதனைகளில் ஒன்றாக நெற்கட்டும் செவ்வல் கோட்டை முற்றுகையில் பூலித்தேவரை பணிய வைத்தார் என்னும் கருத்தை டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் கூறியுள்ளார். "பூலித்தேவர் பணிந்தார்" என்று கூறும் செய்தி தவறானதாகும்.

1761-இல் பூலித்தேவர் கான்சாகிபிடம் "தோல்வியடைந்தார்" என்பது உண்மை. "பணிந்தார்" என்பது உண்மையல்ல. "தோல்வி" என்பது சண்டையின் முடிவில் ஒருவருக்கு ஏற்படும் வெற்றி இழப்பு. "பணிதல்" என்பது அடங்குதல் அல்லது வணங்குதல் என்பது பொருள். "தோல்வியடைதல்", "பணிதல்" என்பது வெவ்வேறான பொருள்களைக் கொண்டுள்ளன. பணிந்தார் என்பதைச் சரணடைந்தார் என்று சொல்வாரும் உண்டு.

பூலித்தேவருக்கும், கான்சாகிப்பிற்கும் 1761-இல் நடைபெற்ற போரில் பூலித்தேவர் தோல்வியடைந்ததும், கான்சாகிபின் கைகளில் சிக்காமல் தப்பித்து கடலாடிக்குச் சென்று விட்டார் என்பது தான் உண்மை. பூலித்தேவர் சரணடைந்தார் என்று கான்சாகிபு மேலிடத்திற்கு எழுதிய கடிதம் கூறுகின்றதே தவிர வேறு எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது.

'பெயர் பெற்ற பூலித்தேவரை, யூசுப்கான் பிடிக்க எவ்வளவு முயன்றும் சாத்தியப்படவில்லை' என எம்.எஸ். இராமசாமி ஐயங்கார், திருநெல்வேலி என்னும் நூலில் பக்கம் 58-ல் குறிப்பிட்டுள்ளார்.

மாவீரன் பூலித்தேவர் கான்சாகிபின் கையில் சிக்கியிருந்தால் சும்மா விட்டிருப்பாரா ? பூலித்தேவரை எப்படியும் தொலைத்துக் கட்ட வேண்டும் என்று ஒவ்வொரு வினாடியும் துடித்துக் கொண்டிருந்தவர் கான்சாகிபு. கும்பினி மேலதிகாரி பைகாட் பிரபு என்பவருக்கு கான்சாகிபு எழுதிய கடிதத்தில் கூட பூலித்தேவரின் தலையைக் கொய்து கொண்டு வந்து தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன் என்று எழுதியுள்ளார். அக்கடிதம் Country Correspondence 1756 கடிதம் எண் 255-இல் உள்ளது. பூலித்தேவரின் படைத்தளபதிகள் 5 பேரைக் கட்டி வைத்துப் பீரங்கியால் சுட்டுப் பொசுக்கியவர் கான்சாகிபு. அந்தக் கறை படிந்த இடம்தான் மகமது கான்சாகிப்புரம் என்று அழைக்கப் பெற்றது. தற்போது மம்சாபுரம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது. அத்தகைய எண்ணங்கொண்ட கான்சாகிபுக்கு பூலித்தேவர் கிடைத்திருந்தால் சும்மா விட்டிருப்பாரா?

“ஜாலியன் வாலாபாக்” படுகொலையைப் போல் கொல்லப்பட்ட மாவீரன் மதுரை மன்னன் மருதநாயகம் என்று டாக்டர் கி.வேங்கிட சுப்பிரமணியம் கூறியிருக்கும் கருத்து, சுதந்திரப் போராட்டத்தை இழிவு படுத்துவது.

ஜாலியன் வாலாபாக் என்னும் தோட்டத்திற்குள் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தை ஜெனரல் டயர் என்பவன் 1600 தோட்டாக்களால் சுட்டான். பெரியவர்கள், சிறுவர், சிறுமியர் உட்பட 500 பேர் மாண்டனர். 2500 பேருக்கு மேல் படுகாயம் அடைந்தனர். ஜாலியன் வாலாபாக்கில் சுதந்திரத்திற்காக உயிர் தியாகம் செய்த தியாகிகளையும், மதுரை மன்னன் மருதநாயகத்தையும் இணைத்து ஒப்புமை கூறுவது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. ஜெனரல் டயருக்கும் கான்சாகிபுக்கும் ஒப்புமை கூறியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். கான்சாகிபின் மக்கள் விரோதப் போக்கிற்குப் பல சான்றுகள் கூறலாம்.

கள்ளர்கள் எந்தக் காலத்திலும் ஆற்காடு நவாபின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதில்லை. நவாபு வரி கேட்ட போதெல்லாம், ‘வானம் மழை பொழிகின்றது, எங்கள் மாடுகள் எங்கள் வயலை உழுகின்றன. நாங்கள் வயலில் பாடுபட்டு உழைக்கிறோம். எக்காரணத்தைக் கொண்டும் கப்பம் கட்ட இயலாது’ என்று முழங்கினர்.

கான்சாகிபு இந்த விடுதலை முழக்கத்தை ஏற்கவில்லை. அந்த மக்களைக் கொன்று குவித்தார். அவர் ஒரு ஊரில் மட்டும் 500 கள்ளர்களைக் கொன்றார். அந்த மாதம் முழுவதும் இத்தகைய அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் செய்து வந்தார் என்பது ப. சிவனடி எழுதிய ‘இந்திய சரித்திரக்களஞ்சியம்’ என்னும் நூலில் பக்கம் 375-ல் குறிப்பிட்டுள்ளது.

பயந்து தப்பியோடிய மக்களை கான்சாகிபு இரக்கமின்றிக் கொல்லவும் செய்தார் என்று டாக்டர் கு. ராசய்யன் ‘மதுரை வரலாறு’ என்னும் நூலில் பக்கம் 168-இல் குறிப்பிட்டுள்ளார்.

‘கான்சாகிபு மதிப்பளிக்காத வார்த்தைகளை மக்களிடம் பேசுவதுடன் அச்சுறுத்தலும் மேற்கொண்டு வருகிறார்’ என்று தீத்தாரப்பமுதலியார் கம்பெனியாருக்கு 2-8-1756-இல் எழுதிய கடிதம் Country Correspondence பக்கம் 111-இல் உள்ளது.

கான்சாகிபைப் பற்றி வரலாறுகள் இவ்வாறு கூறும்போது ஜாலியன் வாலாபாக் படுகொலையையும், கான்சாகிபின் கொலையையும் ஒப்பிட்டுக் கூறுவது பொருந்தாது.

தேசப்பிதா மகாத்மா காந்தியைக் கொலை செய்த கோட்சே என்பவன் தேசத் துரோகியா ? விடுதலைப் போராட்ட வீரனா ? இதற்குரிய விடை எதுவோ அதுதான் கான்சாகிபுக்கும் உரிய விடையாகும். மக்களே தீர்ப்புக் கூறுங்கள்!

“யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே” என்பது பழமொழி “மருதநாயகம் திரைப்படம் வரும் பின்னே; அதன் விளம்பரம் வரும் முன்னே” என்னும் இன்றைய பழமொழிக்கு ‘தினமணி கதிர்’ எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மருதநாயகம் படப்பிடிப்பு காரைக்குடியில் தொடங்கும் செய்தியை ‘மருதநாயகம் பராக் ! பராக் !’ என்னும் தலைப்பில் கமல்ஹாசன் படத்துடன் 9-8-1998 தினமணி கதிர் விளம்பரப் படுத்தியது. அதற்குப் பின்னர்தான் காரைக்குடி மக்களுக்கே மருதநாயகம் படப்பிடிப்பு நடப்பது தெரியவந்தது. பல்லாயிரக்கணக்கான தேசாபிமானிகளைக் கொன்று குவித்த மருதநாயகத்தைப் பாராட்டிப் புகழாரம் சூட்டுகிறது தினமணி.

தினமணி 14-11-1997, 9-1-1998 ஆகிய இதழ்களில் முறையே கான்சாகிபு, யூசுப்கான், மருதநாயகம் சர்ச்சை என்னும் தலைப்பில் கட்டுரைகளை வெளியிட்டது. இந்தக் கட்டுரைகள் தமிழகத்தில் பெரிய சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டன. இதன் மூலம் கமல்ஹாசனின் மருதநாயகத்திற்கு நல்ல விளம்பரங்களைத் தேடித்தந்தது தினமணி.

தினமணி 14-11-1997, 9-1-1998 -இல் வெளியிட்ட ‘மருதநாயகம் சர்ச்சை’ மீது “மருதநாயகம் விவாத மேடை” என்னும் தலைப்பில் 28-1-1998 - இல் ஒரு கட்டுரை எழுதி அனுப்பினேன். சர்ச்சைக்குரிய கட்டுரைகளைப் பிரசுரம் செய்துவிட்டு, அதற்கு ம்றுப்புக்கூறும் கட்டுரையைப் பிரசுரிக்காதது குறிப்பிடத்தக்கது.

சர்ச்சைக்குரிய கட்டுரையாளரான டாக்டர். கி.வேங்கிட சுப்பிரமணியம் அவர்களுக்கு 28-1-1998, 30-3-1998 ஆகிய நாட்களில் கடிதங்கள் எழுதப்பட்டது. அதற்கு அவர் 31-3-98-இல் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், “அற்புதமாக ஆராய்ச்சி செய்துள்ளீர்கள். பாராட்டுக்கள்” என்று கூறி விவாத மேடையைத் தொடராமல் முடித்துக்கொண்டார்.

மருதநாயகம் பற்றிப் படஉலகிலும் வெளியிலும் தினசரி ஏதாவது செய்திகள் வந்த வண்ணமிருக்கிறது. ‘சமூகத்தில் எல்லாத் தரப்பினரையும் ஏதோ ஒரு வகையில் பாதித்திருக்கக் கூடிய படம் மருதநாயகம்’ என்னும் உண்மையைத் தெரிந்தோ, தெரியாமலோ தினமணி ஏற்றுக்கொண்டு வெளியிட்டிருப்பது வியப்பாக உள்ளது.

தினமணியின் நூற்றாண்டுச் சேவையைப் பாராட்டி சென்னையில் “மாவீரன் பூலித்தேவன் விருது” வழங்கப்பட்டது. தியாகியின் விருதைப்பெற்ற தினமணி - இந்திய விடுதலைக்கு முதல் குரல் கொடுத்த பூலித்தேவனை எதிர்த்து - ஆங்கில ஏஜெண்டாகக் கப்பம் வசூல் செய்ய வந்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்று குவித்த மருதநாயகம் என்னும் யூசுப்கானைப் பற்றி கமல்ஹாசன் தயாரிக்கும் திரைப்படத்தை ஆதரிப்பது வியப்பாக உள்ளது.

சாதி, மதம் ஆகியவற்றிற்குள் செல்லாமல், தனி நபர் துதிபாடாமல், நடுநிலை இதழாகத் திகழ்ந்து நாட்டின் தேசியத்தைக் காக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பங்கள்.

இந்தியா விடுதலையடைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்தப் பொன்விழா ஆண்டில் எத்தனையோ தியாகச் செம்மல்களை நினைத்துப் பூரித்துப் போகின்றோம். அவர்களை நினைக்கும் வகையில் பொன்விழாச் சுவரொட்டிகள் மூவண்ணங்களில் எங்கு பார்த்தாலும் சுவர்களை அலங்கரிக்கின்றன. "துரோகியும் தியாகியாகலாம்" என்பதை நிரூபிக்க 'மருதநாயகம்' என்னும் திரைப்படத்தை எடுத்து இந்தப் பொன்னாளில் பரிசாகத் தரப்போகிறார் கமல்ஹாசன். (படம் பொன்விழாவில் வெளியிடப்படவில்லை).

தமிழுக்கு ஆஸ்கார் விருதைப் பெற்றுத்தரும் படமாக மருதநாயகம் அமையும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை என்று மருதநாயகம் புகழ் பாடுபவர்கள் கூறிவருகின்றனர். ஒரு தமிழ்ப்படத்திற்கு ஆஸ்கார் விருது கிடைத்தால் எந்தத் தமிழனும் பாராட்டாமல் இருக்க மாட்டான். ஆனால் மருதநாயகம் தமிழ்ப் படத்தை இங்கிலாந்து ராணி எலிசபெத் அம்மையார் தொடங்கி வைத்தது முதல் வெளிநாட்டு நடிகைகள், வெளிநாட்டு உடைகள், வெளிநாட்டுக் குதிரைகள், வெளிநாட்டு நாய்கள், வெளிநாட்டுப் போர்க் கருவிகள் இன்னும் என்னென்னவோ வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகிக் கொண்டிருப்பதாகப் பத்திரிக்கைகள் கூறுகின்றன. மருதநாயகம் வெள்ளையர் நாட்டுக்கு விசுவாசமாகயிருந்ததால் வெளிநாட்டுப் பொருள்களைக் கமல்ஹாசன் இறக்குமதி செய்தது மிகவும் பொருத்தமே.

கங்கையில் காகம் மூழ்கினால் காக்கை அன்னமாகுமா ? ஆகாது. அதே போலப் பொன்விழா ஆண்டில் படம் எடுத்தால் துரோகியும் தியாகியாகலாமா ? எதில் மூழ்கினாலும் "காக்கை காக்கைதான், அன்னம் அன்னம்தான்" அதே போல "துரோகி துரோகிதான், தியாகி தியாகிதான்"

மருதநாயகம் படத்திற்கு மாபெரும் விளம்பரங்களாக, கமல்ஹாசனின் பேட்டிகள் அனைத்து இதழ்களிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் அனைத்து இதழ்களும் போட்டி போட்டுக்கொண்டு விளம்பரப்படுத்தி வருகின்றன. அவ்வாறு வரும் பேட்டிகளுக்கு விளக்கம் கொடுத்து எழுதினால் அவற்றைப் பிரசுரம் செய்வதில்லை.

தினமணி இதழ்களில் 'மருதநாயகம் சர்ச்சை' என்னும் தலைப்பில் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. உண்மைக்கு மாறான கருத்துக்கள் அதில் இடம் பெற்றன. ஒரு ஆய்வாளன் என்ற முறையில் உண்மைக்கு மாறான அக் கருத்துக்களைச் சுட்டிக்காட்டி எழுதியுள்ளேன்.

தினமணி இதழில் வெளிவந்துள்ள 'மருதநாயகம் சர்ச்சை' என்னும் கட்டுரைக்கு விளக்கம் கொடுக்கும் முகத்தான் "மருதநாயகம் விவாத மேடை-I" என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையைப் பலரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தில் எழுதியுள்ளேன். ஆனால் தினமணியோ அதை வெளியிடாமல் சாதித்து விட்டது.

இக் கருத்துக்கள் யாவும் டாக்டர் கி. வேங்கிடசுப்பிரமணியன் அவர்களையும், அ. ராமசாமி அவர்களையும், வாசகர்களையும் திருப்திப் படுத்தியிருக்கும் என்று எண்ணுகிறேன்.

குருகுஹதாசப் பிள்ளை-திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம் 1931. பக். 57

மேலது நூல் - பக். 66.

‘ சாவி ’யின் பார்வையில் மருதநாயகம்

“சுப்புடு கேள்விகளுக்குக் கமல் பதில்கள்” என்னும் தலைப்பில் ‘சாவி’ 15-1-98 இதழில் ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. அக்கட்டுரையில் “மருதநாயகம்” பற்றி சுப்புடு கேள்விகளும், கமலின் பதில்களும் இடம் பெற்றுள்ளன. “மருதநாயகம்” பற்றி சுப்புடு எழுப்பிய கேள்விகள் யாவும் சம்பந்தப்பட்ட வரலாற்றின் அடிப்படையைக் கொண்டதாகவும், தமிழக மக்களின் சிந்தனைகளைத் தூண்டுவனவாகவும் உள்ளன.

1. மருதநாயகத்தை நீங்கள் எந்தக் கணிப்பில் தேச பக்தன் என்று கருதினீர்கள் ?

2. சரித்திரத்திலே அவன் கிழக்கிந்தியக் கம்பெனியின் கைக்கூலி. போர் வீரனாக இருந்தவன். அவன் எப்படித் தேசபக்தனாவான் ?

3. நம்மவரை அடக்குவதற்கு நாமே முடிவு செய்வது தேசபக்தி ஆகாது. அது போதாதென்று கட்சி மாறி, மதமும் மாறி ஆற்காடு நவாபிடம் போர்வீரனாகச் சேர்ந்தான். ஒரு மதத்தின் மேல் பற்று ஏற்பட்டு மாறினால் குற்றமில்லை. ஆனால் வெறும் சுயநலத்திற்காக மாறியது எவ்விதத்தில் நியாயம் ?

சுப்புடுவின் கேள்விகள் உயிரோட்டமுள்ளவை. அவருடைய கேள்விகளுக்குத் தக்க பதிலைக் கமல்ஹாசன் கூற வேண்டும். அதற்கு மாறாக நாட்டிலுள்ள முரண்பாடுகளைக் கூறி அந்த முரண்பாடுகள் உள்ள நாட்டில் வாழ்பவர்கள் நாம் என்கிறார். முறையான பதிலைக் கூறாமல் சம்பந்தமில்லாத பதிலைக் கூறியுள்ளதைக் காண முடிகிறது.

முதலாவது கேள்வியில் “மருதநாயகத்தை நீங்கள் எந்தக்கணிப்பில் தேசபக்தன் என்று சொல்கிறீர்கள்” என்று சுப்புடு, கமல்ஹாசனிடம் கேட்டுள்ளார். அவருடைய கேள்விக்கு கமல்ஹாசன் என்ன பதிலைக் கூற வேண்டும் ? இன்ன இன்ன வகைகளிலெல்லாம் சிறந்தவராக மருதநாயகம் செயல்பட்டுள்ளார். ஆதலால் “மருதநாயகம் ஒரு தேச பக்தர்” என்று கூறியிருந்தால் நல்லதாக இருக்கும். அப்படிக் கூறாமல், சென்னையைக் குத்தகைக்கு விட்ட நாயகரின் பெயரைத்தான் சுதந்திர இந்தியா மெட்ராசுக்குச் சூட்டியிருக்கிறது என்ற பதிலைக் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

சென்னையின் பெயர் ஏற்பட்டதற்கும், மருதநாயகத்தின் தேச பக்திக்கும் என்ன சம்பந்தம் என்று விளக்கம் கூறியிருக்க வேண்டும்.

1639-இல் கிழக்கிந்தியக் கம்பெனியார் சென்னைக்கு வந்து குடியேறியதற்கு முன்பே "மதராஸ் பட்டிணம்" என்னும் பெயரில் கிராமம் இருந்தது. சென்னை உயர்நீதி மன்றம் உள்ள இடத்தில் "சென்னைப்பட்டிணம்" என்னும் பெயரில் மற்றுமொரு நகரம் இருந்தது. அந்த இடத்தில் "சென்னகேசவர்" என்னும் கோயில் இருந்தது. இராணுவத்திற்கு இந்த இடம் தேவைப்பட்டதால் சென்ன கேசுவரர் கோயில் தகர்க்கப்பட்டது. அதன் பின்னர் மணலி முத்துக்கிருஷ்ண முதலியார் என்பவர் சைனா பஜாரில் தற்போதுள்ள சென்னை கேசவப் பெருமாள் கோயிலைக் கட்டினார். அந்த இடம் "சென்னை கோபுரம்" என்று வழங்கலாயிற்று. "சென்னி" என்ற சொல்லிருந்து "சென்ன" - "சென்னை" என மருவி வழங்குகின்றது என்னும் கருத்தை மா.சு. சம்பந்தன் என்பவர் கூறியுள்ளார். (சென்னை மாநகர் - மா.சு. சம்பந்தன் - பக். 34) கம்பெனியாருக்கு குத்தகைக்கு விட்ட சென்னப்ப நாயக்கரின் பெயரால் சென்னை என்று பெயர் ஏற்பட்டது என்றும் சிலர் கூறுகின்றனர். 1

சென்னைக்கு எப்படி 'சென்னை' என்று பெயர் ஏற்பட்டது ? என்று இன்றும் தெளிவாக உறுதி செய்யப்படவில்லை. 'சென்னை' என்பதற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பெயர் வைப்பதிலே 'சென்னை' சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், சென்னையை மீண்டும் வம்புக்கு இழுக்கிறார் கமல்ஹாசன். தேவையான பதிலைக் கூறாமல் முரணான பதிலைக் கூறுவதால் யாருக்கு லாபம் ?

"மன்றோவுக்கு சிலை உண்டு சென்னையில்" என்று கூறி இதிலும் முரண்பாடு உள்ளதாகக் கமல் கூறியுள்ளார். சர். தாமஸ் மன்றோ (1820 - 1827) என்பவர் சென்னையில் ஆளுநராக இருந்தவர். புத்தம் புதிய சீர்திருத்தங்கள் பலவற்றைக் கொண்டு வந்தார். அதனால் ஆங்கிலேயர் அவருக்குச் சிலை வைத்தனர். நம்மவர் இந்தச் சிலையை வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் சர். தாமஸ் மன்றோவுக்கு மட்டுமல்லாமல் இங்கிலாந்து மன்னர் பலருக்கும் சிலைகள் வைக்கப்பட்டு உள்ளன. அன்னியர் சிலைகள் அனைத்தையும் கூறாமல், சர். தாமஸ் மன்றோவின் சிலையை மட்டும் கமல் எடுத்துக் கூறியது ஏனோ ? அப்படியானால் சர். தாமஸ் மன்றோ சிலையைத் தவிர, மற்ற அன்னியர்கள் சிலைகள் இருப்பது முரண்பாடில்லையா ? சென்னையிலுள்ள அன்னியர்கள் சிலைகள் யாவும் அகற்றப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அச்சிலைகளை அகற்ற வேண்டும் என்னும் கருத்து மக்கள் மத்தியில் இல்லாமல் இல்லை. எப்போது வெடிக்கும் என்று சொல்வதற்கில்லை.

ஆங்கிலத் தளபதி நீல் சிலையை மக்கள் அகற்றியது கமலுக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். 1857-ஆம் ஆண்டு ஆங்கில ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற விடுதலைப் போரில் வயோதிகர்களையும், வாலிபர்களையும் ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தான் நீல் என்ற ஆங்கிலத் தளபதி. அவனைப் பாராட்டி ஆங்கிலேயர் 1861-ஆம் ஆண்டு சென்னை மவுண்ட் ரோட்டில் ஸ்பென்சர் அருகே 3 மீட்டர் உயரத்தில் வெண்கலச் சிலை ஒன்று வைத்தனர். வடநாட்டில் நீல் செய்த கொடுமைகள் அப்போது நம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாததால் சிலை வைப்பதை நம்மவர் எதிர்க்கவில்லை.

நீலின் கொடுமைகள் மக்களுக்குத் தெரிய வந்ததும் கொதித்தெழுந்தனர். கொடுங்கோலன் நீல் சிலையை அகற்றும் போராட்டம் 1927-ஆம் ஆண்டு எழுந்தது. சென்னை சட்டசபையில் இப்போராட்டம் பற்றி நீண்ட விவாதம் நடைபெற்றது. சுமார் 10 ஆண்டுகள் போராட்டம் நீடித்ததன் பின்னர் 1937-ஆம் ஆண்டு மக்கள் சக்தி வென்றது. கொடுங்கோலன் நீல் சிலை அகற்றப்பட்டு எழும்பூர் அருங்காட்சியகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இதைப் பற்றி விரிவான செய்தி தினமணி ஆகஸ்ட் 1997 சுதந்திரப் பொன்விழா மலர் பக்கம் 166-இல் “அவமானச் சிலையை அகற்ற 10 ஆண்டுகள் போராட்டம்” என்னும் தலைப்பில் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 2

கொடுங்கோலன் நீல் சிலையை அகற்றியதைப் போல் எஞ்சியிருக்கும் சர். தாமஸ் மன்றோ சிலை மட்டுமல்ல; ஏனைய அன்னியர் சிலைகளையும் அகற்ற வேண்டும் என்பதில் யாருக்கும் முரண்பாடு கிடையாது. இதிலுள்ள முரண்பாடு என்னவென்று கமலுக்குத்தான் வெளிச்சம். மருதநாயகத்திற்கும், மன்றோ சிலைக்கும் என்ன சம்பந்தம் ? எந்த வகையில் ஒற்றுமை, வேற்றுமை உள்ளது என்றாவது கூறியிருக்க வேண்டும்.

தமிழக அரசின் அலுவல்கள் நடப்பது Fort. St. George -ல் என்று கூறி இதிலும் முரண்பாடு உள்ளதாகக் கூறியுள்ளார்.

போர்ட் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கட்டிட வேலை 1640-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் நாள் தொடங்கப் பெற்றது. இக்கட்டிடத்தின் ஒரு பகுதி ஏப்ரல் 23-ஆம் நாள் முடிக்கப்பட்டது. செயின்ட் சார்ச் நினைவு நாளன்று இந்தக் கட்டிடம் கட்டி முடிந்ததால் “செயிண்ட் சார்ச் கோட்டை” என்று பெயரிட்டு அழைத்தனர் ஆங்கிலேயர். அந்தப் பெயரை மாற்ற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்தனர். முதல் கட்டமாக அந்த வளாகத்தில் கட்டப்பட்ட தலைமைச் செயலகம் நாமக்கல் கவிஞர் மாளிகை என்று தமிழக அரசால் மாற்றப்பட்டுள்ளது.

செயின்ட் சார்ச் கோட்டையில் அடைக்கப்பட்டு உயிர்நீத்த விடுதலைப் போராட்ட வீரர் முத்துராமலிங்க சேதுபதியின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று ஏற்கனவே மக்கள் குரல் எழுப்பி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முரண்பாடும் அகற்றப்படும் காலம் வெகுதூரம் இல்லை.

செயின்ட் சார்ச் கோட்டைக்கும், மருதநாயகத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் கமல். ஆங்கிலக் கம்பெனியின் மேலதிகாரிகளைச் சந்திக்க கமல் வந்திருக்கக் கூடும் என்று எண்ணுவதைத் தவிர வேறில்லை.

நமது நிஜமான தேசிய மொழி ஆங்கிலம் என்று கமல் கூறியுள்ளார். ஆங்கில மொழியை அகற்ற வேண்டும் என்னும் கோரிக்கைகளையும் அதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களையும் நாடறியும். இத்தகைய முரண்பாடுகள் உள்ள நாட்டில் நாம் வாழ்கின்றோம் என்று பதில் கூறிய கமல், இது போன்ற முரண்பாடுகளைக் களைய வேண்டும் என்று கூறுகிறாரா ? அல்லது அந்த முரண்பாடுகள் அப்படியே நடைமுறையில் இருக்க வேண்டும் என்று கூறுகிறாரா ? அல்லது அந்த முரண்பாடுகள் அப்படியே இருக்கட்டும், அந்த முரண்பாடுகளுக்குத் தக்கவாறு நாமும் மாறிக்கொள்வோம் என்கிறாரா ? காலுக்குத் தகுந்த காலணிகளை அணிந்து கொள்வதா ? அல்லது காலணிகளுக்குத் தகுந்தாற்போல் காலை மாற்றிக்கொள்வதா ? சுற்றி வளைக்காமல் நேரான பதிலைக் கமல் வழங்கியிருத்தல் வேண்டும். இத்தனை முரண்பாடுகள் உள்ள நாட்டில் வாழ்பவர்கள் நாம் என்று கூறிவிட்டு மருதநாயகம் என்ற யூசுப்கானை நான் தேசபக்தனாகக் கணிக்கவில்லை. சரித்திரப் புத்தகங்களில் அப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்டாக கால்டுவெல், ஹீல் போன்றவர்களின் குறிப்பும், நாட்டுப்புறப் பாடல்களும் அவன் உண்மை உருவைக் காட்டும்'' என்று பதிலாகக் கூறியுள்ளார். (சாவி - பக்கம் 17) கால்டுவெல், ஹீல் இருவருடைய நூல்களில் யூசுப்கான் தேசபக்தன் என்று கூறும் குறிப்பு எந்தப் பக்கங்களில் உள்ளது என்று கூறினால் என் போன்ற வாசகர்களுக்கு உண்மையைத் தெரிந்துகொள்ள உதவும். அப்படி ஒரு குறிப்பு அந்த நூல்களில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மருதநாயகம் என்ற யூசுப்கானை நான் தேசபக்தனாகக் கணிக்கவில்லை. சரித்திரப் புத்தகத்தில் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறது என்று கூறிவிட்டு, 'மருதநாயகம் வரலாற்றைப் பார்க்கும் போது ஆற்காட்டு நவாபுக்காக பாளையக்காரர்களோடு சண்டை போட்டு, அவங்க தலையை வெட்டி வேல் கம்புல சொருகி அவங்க கோட்டை வாசல்ல நட்டு வச்சதா இருக்கு. அதாவது ஒரு காட்டுமிராண்டி மாதிரி இருக்கிறான். அவன்

பிரிட்டிஷ்கானுக்கோ அல்லது ஆற்காட்டு நவாபுக்கோ ஒரு அடியாளாக இருந்திருக்கிறான். அவன் ஒரு அடியாள்தான். அவனை விடுதலை வீரன்னு நான் எங்கேயும் சொல்லவில்லை' என்று 'குங்குமம்' இதழில் கமல் கூறியுள்ளார். 3

இதற்கு மாறாக 'மருதநாயகம் அந்தப் போர் முறைகளில் எல்லாம் கைதேர்ந்த ஒரு வீரன். முதல் இந்தியன், சுதந்திரப் போரின் முதல் வீரன் !' என்றும் கூறியுள்ளார். 4

மருதநாயகத்தைப் பற்றிய முரணான வரலாற்றை கமல்ஹாசன் கூறுவதை வாசகர்களின் பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

★ 'மருதநாயகம்' என்ற யூசுப்கானை நான் தேசபக்தனாகக் கணிக்கவில்லை. சரித்திரப் புத்தகங்களில் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறது.

★ ஆற்காட்டு நவாபுக்காக பாளையக்காரர்களோடு சண்டை போட்டு, அவங்க தலையை வெட்டி, வேல் கம்பில் சொருகி அவங்க கோட்டை வாசல்ல நட்டுவச்சதாயிருக்கு. அதாவது ஒரு காட்டுமிராண்டி மாதிரி இருந்திருக்கான்.

★ அவன் பிரிட்டிஷ்காரனுக்கோ அல்லது ஆற்காடு நவாபுக்கோ ஒரு அடியாளா இருந்திருக்கான். அவன் ஒரு அடியாள்தான்.

★ அவனை விடுதலை வீரன்னு நான் எங்கேயும் சொல்லலை. மருதநாயகம் அந்தப் போர்முறைகளிலே கைதேர்ந்த ஒரு வீரன்.

முதல் இந்தியன்

சுதந்திரப் போரின் முதல் வீரன்.

முதலில் 'தேச பக்தனாகக் கணிக்கவில்லை' என்று கூறிவிட்டு, 'சுதந்திரப் போரின் முதல் வீரன்' என்று கூறுவது முரணான தகவலில்லையா?

பாளையக்காரர்களின் தலையை வெட்டி, வேல் கம்பில் சொருகி அவங்க கோட்டை வாசலில் நட்டு வைத்தல். இத்தகைய கொடுஞ்செயலை செய்த மருதநாயகத்தை விடுதலை வீரன் என்று சொல்லலாமா ? கமல்ஹாசனால் ஒரு காட்டுமிராண்டி மாதிரி இருந்தான் எனப்படுபவனைச் சுதந்திரப் போராட்ட வீரன் என்று சொல்லலாமா ?

இதற்குப் பிறகும் விடுதலை வீரனென்று கமல்ஹாசன் சொல்வது முரணல்லவா ! இதற்கெல்லாம் வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இக்கட்டுரையை சாவி இதழில் வெளியிடுமாறு 17-3-98-இல் அனுப்பி வைத்தேன். அதற்கு 'சாவி' இதழ் ஆசிரியர் எனக்கு எழுதியுள்ள பதிலை,

வாசகர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "இக் கட்டுரையை பிரசுரித்தால் பிரச்சனைகள் நேரும். தாங்கள் வலியுறுத்தாமல் விட்டுவிடுவது நல்லது" என்று பதில் அனுப்பிவிட்டார்.

அதற்குப் பதில் கூறும் முறையில் நான் சாவி இதழ் ஆசிரியருக்கு 25-3-98-இல் எழுதிய கடிதத்தில், "என்னுடைய கட்டுரையில் பிரச்சனைகளை உண்டாக்கக்கூடிய தவறான கருத்துக்கள் இருப்பதாயின் எடுத்துக்காட்டலாம். ஆனால் 'இதை வலியுறுத்தாமல் விட்டுவிடுவது நல்லது' என்று தாங்கள் எனக்கு ஆலோசனை கூறியுள்ளது குறித்து வருந்துகிறேன். தாங்கள் கூறிய மேற்கண்ட வாசகமானது என்னுடைய எழுத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதாக இருப்பதுடன், என்னை அச்சுறுத்துவதாகவும் இருக்கிறது.

இந்தக் கட்டுரையின் மூலம் எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் எதிர் கொள்ளத் தயாராக உள்ளேன் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்."

சாவி இதழின் இச்செயலை வாசகர்களாகிய உங்கள் கருத்துக்கே விட்டுவிடுகிறேன் !

கமல்ஹாசன் "மருதநாயகம்" திரைப்படத் தொடக்க விழாவிலிருந்து தொடங்குவதால், அதிலிருந்தே 'மருதநாயகம்' உண்மை வரலாற்றை நாமும் தொடங்குவது சாலச் சிறந்ததாகும். 'மருதநாயகம் திரைப்படத் தொடக்க விழா' என்னும் தலைப்பில் தொடங்கப்படுகிறது. தின இதழ்களில் வெளிவந்துள்ள செய்திகள் அடிப்படையிலும், மாதம், வாரம் வெளிவரும் இதழ்களுக்கு வழங்கிய பேட்டிகளின் அடிப்படையிலும் எழுதப்பட்டுள்ளது.

மருதநாயகம் பற்றி கமல்ஹாசனின் பேட்டியில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் உள்ளது. கமல்ஹாசன் பேட்டியில் எந்த இடத்திலும் பூலித்தேவனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இது சாமர்த்தியமான தந்திரம் என்று கொள்ளலாம். அதற்காக அவர் கையாண்ட முறையை ஒரு இராசதந்திரம் என்றும் சொல்லலாம்.

பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்று குவித்து தமிழ்நாட்டையே சுடுகாடாக்கியவன் மருதநாயகம். விடுதலைப் போரின் முதல் நாயகன் மருதநாயகம் என்று கமல்ஹாசன் கூறுவதால், 'விடுதலைக்காக உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் தத்தம் செய்த மாவீரன் பூலித்தேவன் விடுதலைப் போராட்ட முதல் வீரன் இல்லை' என்றுதானே பொருள். துரோகியைத் தியாகி என்றால், தியாகியை என்னவென்று அழைப்பது? துரோகி என்றுதானே அழைக்க வேண்டும். தன்னுடைய வாயிலிருந்து பூலித்தேவனைப் பற்றிக் குறைவான சொல் வந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக உள்ளார். கமல்ஹாசனை ஒரு இராசதந்திரி என்றும் அரசியல் சாணக்கியர் என்றும் கூறலாம்.

1. சென்னை மாநகர் - மா.சு. சம்பந்தன் - பக். 34.

2. தினமணி - ஆகஸ்ட் சுதந்திரப் பொன்விழா மலர் - 1997 - பக். 166

3. குங்குமம்   9-4-1997. பக். 42.

4. குமுதம்   23-10-97. பக்.6.

குமுதம் பார்வையில் மருதநாயகம்

மருதநாயகம் ஆவிதான் எங்களுக்கு உதவுகிறது!

"குமுதம்" 23-10-97 இதழில் வெளிவந்துள்ள கமல்ஹாசன் பேட்டியில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

"எங்க ஊர்க்காரர் அவருங்கிறது மட்டும் இல்ல. ஆனால் எல்லாத் தமிழருடைய தன்னம்பிக்கையையும் கொஞ்சம் நிமிர்த்தி வைக்கிற ஒரு வார் ஜோல்சர். மருதநாயகத்தோட சரித்திரமும், அந்த ஆள் வாழ்ந்த வாழ்க்கையும் எனக்குத் துணையாக இருக்கு. அது நிஜம். அவ்வளவு நேர்மையான ஆள். மருதநாயகம் போர் முறைகளிளெல்லாம் கைதேர்ந்த ஒரு வீரன். முதல் இந்தியன். சுதந்திரப் போரின் முதல் வீரன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கமல்ஹாசனின் பேட்டியில் கூறிய கருத்துக்களில் மருதநாயகத்தின் பெருமைகளை அடுக்கடுக்காகக் கூறி நிமிர்த்தி வைத்துள்ளார். ஆனால் யூசுப்கானை "முதல் இந்தியன்" "சுதந்திரப் போரின் முதல் வீரன்" என்று கூறிப் புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளார்.

ஆங்கிலேயர்களின் படைத்தளபதியாகவும், ஆளுநராகவும் பணிபுரிந்து, ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்களையெல்லாம் போரில் பணிய வைத்த ஒருவரை எப்படி விடுதலைப் போராட்ட வீரராகக் கூறலாம் என்று நகைமுகன் கேட்டுள்ளார். 1

1775-இல் முதன் முதலில் கப்பம் வசூலிக்க முதல் ஆங்கிலேயத் தளபதி அலெக்சாண்டர் ஹெரான் படையெடுத்து வந்த போது, வெஞ்சாமரம் வீசிக்கொண்டு வந்தவர் தானே இந்த யூசுப்கான். மாவீரன் பூலித்தேவன், கெரானை விரட்டியடித்த போது புறமுதுகு காட்டி ஓடியவன்தானே இந்த யூசுப்கான்.

கெரானை எதிர்த்துப் போரிட்டு ஓட ஓட அடித்து விரட்டி சுதந்திரப் போருக்கு முதல் முரசு கொட்டிய பூலித்தேவன் போன்ற பாளையக்காரர்களின் தியாகமும், அவர்களின் பின்னால் ஓரணியில் நின்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கிளர்ந்தெழுந்து வீரமரணம் அடைந்தவர்களின் தியாகமும் என்ன ஆவது ? அவர்கள் சிந்திய இரத்தம் எல்லாம் உண்மையான இரத்தமில்லையா?

பாளையக்காரர்களை எல்லாம் தோற்கடித்து, அவர்களின் கோட்டைகளை எல்லாம் இடித்துத் தரை மட்டமாக்கியதுடன், எள்ளும் எருக்கும் விதைத்துச் சுடுகாடாக்கியவர்தானே இந்த யூசுப்கான் ?.

இனிமேல் நம்மை யாரும் வெல்ல முடியாது என்னும் நிலை ஏற்பட்ட சூழ்நிலையில், மதுரை மன்னனாகப் பதவியேற்று, அந்தப் பதவியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்னும் பதவி வெறியில் ஆங்கிலேயரையும் ஆற்காடு நவாபையும் எதிர்த்தவன் தானே இந்த யூசுப்கான் ?.

மதுரைக் கோட்டையில் இருந்த ஆங்கிலக் கொடியை இறக்கி விட்டு ஆங்கிலேயர்க்கு எதிரியான பிரஞ்சுக்காரர்களின் கொடியைப் பறக்கவிட்ட சந்தர்ப்பவாதியாகி, துரோகத்தனத்தால் வீழ்ந்தவன்தானே இந்த யூசுப்கான்?.

இத்தகைய கொடுஞ் செயல்களைச் செய்து தமிழனையும், தமிழ் நாட்டையும் அந்நியருக்குக் காட்டிக் கொடுத்த முதல் தமிழன்தான் இந்த யூசுப்கான். அந்த யூசுப்கானைத்தான் தியாகி என்றும், சுதந்திரப் போரில் முதல் வீரன் என்றும் கமல்ஹாசன் கூறி வருகிறார்.

அந்நியரையும், அவர்களின் ஏஜென்டான யூசுப்கானையும் எதிர்த்துப் போரிட்டு வீரமரணம் அடைந்த பூலித்தேவர் போன்றவர்களெல்லாம் தேசத்துரோகிகளா ? அவர்கள் நடத்திய தெல்லாம் சுதந்திரப் போரில்லையா ? இவற்றையெல்லாம் தெளிவாக்குவது கமல்ஹாசன் கடமை.

"இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காகப் பாடுபட்ட வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பே சுதந்திரத்திற்காக 1764-ஆம் ஆண்டில் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடியவன் மருதநாயகம்" என்று கமல்ஹாசன் பேட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2

யூசுப்கானின் சமகாலத்தில் வாழ்ந்த பூலித்தேவர் போன்றவர்களை ஒப்புமை கூறாமல், காலத்தால் பிந்திய வீரபாண்டிய கட்டபொம்மனுடன் ஒப்பிட்டுக் கூறுவது யூசுப்கானையே முதல் விடுதலைப் போராட்ட வீரர் என்பதை நிலை நாட்டக் கையாண்ட தந்திரமாகும்.

யூசுப்கானை முதல் சுதந்திரப் போராட்ட வீரன் என்று சித்தரித்துப் படம் எடுப்பது விடுதலைப் போராட்ட வரலாற்றைக் கொச்சைப்படுத்தும் செயலே.

இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான விளக்கங்களை கூறாமல் காலம் கடத்துவது நல்லதல்ல. அது நாட்டு மக்களை அலட்சியப்படுத்தும் செயலாகும். ஆகையால் யூசுப்கான் சுதந்திரப் போராட்ட முதல்வீரனா ? என்பது பற்றி நாடெங்கும் கருத்தரங்கங்கள் நடத்துவதன் மூலம் நாட்டுமக்கள் மத்தியில் இப்பிரச்சனைகளைக் கொண்டு போக வேண்டும். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

தமிழகத்தில் சுதந்திரப் போராட்ட தியாகச் செம்மல்களின் வீர வரலாறுகள் இருட்டுக்குள் மூழ்கிக் கிடப்பதை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து

அறிமுகப்படுத்துவதை விடுத்து, சர்ச்சைக்குரிய படத்தை கமல்ஹாசன் எடுப்பது சுதந்திரப் பொன்விழாப் பரிசாகாது.

தன்னைப் பகுத்தறிவுவாதி என்று பெருமை கூறிக் கொள்ளும் கமல்ஹாசன், கருப்புச்சட்டையை அணிந்துகொண்டு, பெரியார் படத்தை சுவரில் மாட்டிக்கொண்டு 'மருதநாயகத்தோட ஆவி சும்மாவிடாது; அந்த ஆவிதான் எங்களுக்கு வழி காட்டுகின்றது' என்று இரட்டை வேடம் போடுவது வேடிக்கையாக இருக்கிறது.

பகுத்தறிவுத்தந்தை ஈ.வெ.ராமசாமிப் பெரியார், மாவீரன் பூலித்தேவனை முதல் விடுதலைப் போராட்ட வீரர் என்று சொன்னது கமல்ஹாசனுக்குத் தெரியாதா?. மருதநாயகம் புத்தகத்தை வெள்ளைக்காரனே எழுதியிருக்கிறான் என்று கமல்ஹாசன் பெருமையடித்துக் கொள்கிறார். மருதநாயகம் வெள்ளைக்காரனுக்கு கைக்கூலியாக இருந்து தமிழர்களைக் காட்டிக் கொடுத்ததால் ஆங்கிலேயர் புகழ்ந்து கூறுவது இயல்பு. வெள்ளைக்காரன் புகழ்ந்து எழுதிவிட்டால், அது தேனாக இனிக்கிறது கமல்ஹாசனுக்கு. இங்குள்ளவர்கள் எழுதினால் அது வேம்பாகக் கசக்கிறது. தென்னாட்டுப் பாளையக்காரர்கள் பற்றியும், ஆங்கிலக் கும்பினியர் நடைமுறைக் குறிப்பில் எழுதி வைத்துள்ளனர். அதில் மாவீரன் பூலித் தேவனைப் பற்றி உயர்வாக எழுதியிருப்பது கமல்ஹாசனுக்குத் தெரியாது போலும்.

"மருதநாயகம் போர் முறைகளில் கைதேர்ந்த ஒரு வீரன். முதல் இந்தியன். சுதந்திரப் போரின் முதல் வீரன்" என்று கமல்ஹாசன் கூறியுள்ளார். மருதநாயகம் போர் முறைகளிலெல்லாம் கைதேர்ந்த ஒரு வீரனாக இருக்கட்டும். அது அவனுடைய திறமையைக் காட்டுகிறது. மருதநாயகம் வீராதி வீரனென்றும், சூராதி சூரனென்றும் சொல்லட்டும். அதைப் பற்றிக் கூறுவது நமக்கு நோக்கமில்லை. ஆனால், மருதநாயகத்தை முதல் இந்தியன், சுதந்திரப் போரின் முதல் வீரன் என்று சொல்வதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. மருதநாயகம் எந்த வகையில் முதல் இந்தியன், சுதந்திரப் போரின் முதல் வீரன் என்பதற்கான சான்றுகளையாவது கூறியிருக்க வேண்டும்.

இந்திய நாட்டின் வளங்களைக் கேள்விப்பட்ட கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் முதன்முதல் இந்தியாவைக் கொள்ளையடித்தான். அதன்பிறகு அன்னியர் பலரும் இந்தியாவைக் கைப்பற்றி ஆண்டுவந்தனர். அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்பை முதலாவதாகக் கூறி வருகின்றனர். அலெக்சாண்டரை முதல்முதல் துணிந்து எதிர்த்த இந்தியன் போரஸ் என்ற புருசோத்தமன் என்பவன். முதல் விடுதலைப் போராட்ட வீரன் புருசோத்தமனா ? மருதநாயகமா ? பல நூறு ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, முன்னூறு ஆண்டுகளுக்குள் நடைபெற்ற எதிர்ப்பை முன்னுக்குக் கொண்டு வந்து, "முதல் இந்தியன்" என்று சொல்வதன் நோக்கம் என்ன ?

வீரபாண்டியக் கட்டபொம்மன் பிறப்பதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே 1750-இல் விடுதலை வித்தை ஊன்றி, 1755-இல் ஆங்கிலத் தளபதி கெரானை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் பூலித்தேவன் விடுதலைப் போரில் பின்னுக்குத் தள்ளப்பட்டது ஏன் ? இதையெல்லாம் யாரும் கண்டு கொள்வதில்லை. நான் மருதநாயகத்தைப் பற்றிக் கூறும்போது எதிர்க்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம் ? என்று கமல்ஹாசன் கேட்கலாம்.

வீரபாண்டிய கட்டபொம்மனை சாதித் தலைவராக்கப் பார்க்கின்றனர் சிலர். அவர்கள்தான் மீண்டும், மீண்டும் வீரபாண்டிய கட்டபொம்மனே முதல் முழக்கம் முழங்கினார் என்ற பல்லவியைத் தொடர்ந்து பாடி வருகின்றனர்.

ஆரம்பத்தில் வரலாற்று ஆய்வாளர்களிடம் கூட இக்கருத்து இருந்தது உண்மை. ஆனால் ஆதாரபூர்வமாக சான்றுகள் கிடைத்ததால் பழைய கருத்தை மாற்றிக் கொண்டு, மாவீரன் பூலித்தேவனே இந்திய விடுதலைப் போரின் முதல் வீரன் என்று எழுத ஆரம்பித்துவிட்டனர். "கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள்தான்" நிலைக்கும். அதற்குமேல் வெள்ளரிப் பழத்திற்குப் பூண் கட்டிய கதை போலாகும்.

சமீபத்தில் "வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கிலேய எதிர்ப்பு" என்னும் கட்டுரையில் ச. இரவி என்பவர் குறிப்பிடுவதாவது. 3

"இந்திய தேசியம் என்ற ஒருமைப்பாட்டுணர்வோடு, மக்கள் விடுதலைபெற வேண்டும் என்ற உணர்வோடு இருந்ததற்கான சான்றுகள் இல்லாத நிலையில் கட்டபொம்மனை விடுதலைப் போராட்ட வீரன் என்று கூறவதைக் காட்டிலும், ஆங்கிலேய எதிர்ப்பு வீரன் என்று கூறுவதே பொருத்த முடையதாக அமைகின்றது" என்று கூறப்பட்டுள்ளது. (ஆய்வுக்கோவை-2002)

உண்மைக்குப் புறம்பான வரலாறுகள் என்றும் நிற்பதில்லை. ஆகவே கமல்ஹாசன் 'மருதநாயகம் சுதந்திரப்போரின் முதல் வீரன்' என்று கூறுவதைத் தவிர்க்க வேண்டும். அதுதான் நாகரீகமாகும்.

'காலம் தெரிந்து கூவும் சேவலைக்

கவிழ்த்துப் போட்டாலும் நிறுத்தாது

கல்லைத் தூக்கிப் பாரம் வைத்தாலும்

கணக்காய்க் கூறும் தவறாது'

என்கிறது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல். ஏ ! சுதந்திரமே ! உனக்குக்கூட சாதியச் சாயம் பூசப்படுகிறதே. உன்னால் இதை எப்படிச் சகித்துக்கொள்ள முடிகிறது?.

1760-ஆம் ஆண்டு டிசம்பர் 20-இல் யூசுப்கானின் படையினர் பூலித்தேவனின் நெற்கட்டும் செவ்வலைத் தாக்குவதற்காக இரவோடு இரவாக மணல் மூட்டைகளை அடுக்கி, அதன் மேல் பீரங்கிகளை ஏற்றிக் கொண்டிருந்தனர். இதை அறிந்த பூலித்தேவரின் படைத்தளபதியும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவருமான வெண்ணிக்காலாடி என்பவர் தம்முடன் சில வீரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு போய் யூசுப்கானின் படையினருடன் போரிட்டார். அப்போது வெண்ணிக்காலாடியின் குடல் வெளியே சரியும்படி யூசுப்கானின் படைவீரர்களில் ஒருவன் வெட்டினான்.

வெளியில் சரிந்த குடலை வயிற்றுக்குள் தள்ளி, தன்னுடைய தலைப்பாகையை எடுத்து இறுகக் கட்டிக்கொண்டு மீண்டும் போரிட்டார். வெண்ணிக்காலாடி. வெண்ணிக்காலாடியே போரில் வெற்றி பெற்று வீரமரணம் அடைந்தார். இந்த வரலாற்றைப் பற்றி "பூலித்தேவன் சிந்து" என்னும் நாட்டுப்புறப்பாடல் கூறுகின்றது. இந்த இடம் இன்றும் "காலாடி மேடு" என்று வழங்கப்படுகிறது. மீண்டும் அதே இடத்திலிருந்து யூசுப்கான் நெற்கட்டான்செவ்வல் கோட்டையைத் தாக்கியதால் "கான்சாமேடு" என்றும் வழங்கி வருகின்றது. 1760-இல் நடைபெற்ற போரைப் பற்றி Robert Quam's Military Transaction in Indostan 1891, Vol-2, P.707 4 என்னும் நூல் கூறுகிறது. இதே போன்ற தளபதி அந்தஸ்திலுள்ளவர்களின் பட்டியல்களும் நீண்டு கொண்டே செல்லும் அளவிற்கு ஆதாரங்கள் உள்ளன. யூசுப்கான் தூக்கில் தொங்கிய 15-10-1764-க்கு முன்னரே பலர் வீரமரணம் அடைந்துள்ள போது யூசுப்கானை எப்படி முதல் இந்தியன் என்று சொல்ல முடியும் ?

"ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது, போராடி, ரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர கேட்டுப் பெறுவதோ, பேரம் பேசிப் பெறுவதோ அல்ல" என்று நேதாஜி பின்னாளில் முழங்கியதை இன்றைக்கு இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே செயலிற் காட்டி இந்திய விடுதலைக்காக முதல் முழக்கமிட்டவர் மாமன்னன் பூலித்தேவன்.

கப்பம் கேட்க வந்த ஆங்கிலக் கும்பினியரைக் கண்டு பல பாளையக்காரர்கள் கைகட்டி, வாய்பொத்தி, கூனிக்குறுகி, கப்பம் கட்டி நின்ற போது, "என் அப்பன், என் பாட்டன் வாழ்ந்து மடிந்த பூமிக்கு நான் ஏனடா கப்பம் கட்ட வேண்டும், ஒரு சல்லிக்காசு கூட கட்ட முடியாது. உன்னால் ஆனதைப் பார்" என்று நகைத்தார் பூலித்தேவர். இதைப் பற்றி எஸ்.சி. ஹீல் எழுதிய 'யூசுப்கான்' என்னும் நூலில் பக்கம் 39, 40-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

On the 2nd May. He Started for Madura - Three days March, Important Poligar known as the Pulidevar.

Colonel Heron sent his vakil in to the place to inform the Pulidevar of his business and the sum requested, which if he did not comply with, his town should be battened to pieces. The Fellow laughed at these threats, as he well known we had no heavy cannon and the colonel's servant had taken care to inform him that our stay would not be as long as his master was positively ordered to return. In consequence of which after throwing away a great quantity of ammunition and getting several of our men knocked on the head, the colonel very prudently sent a final message into the town to tell them he would retire from before the place provided twenty thousand rupees was paid down on the spot. They returned for answer the colonel might do as he pleased; that such a sum could not be raised, and they were determined not to pay them a single rupee. Our army at this time was much distressed for provisions of all kinds, and the sepoys ready to mutiny every hour of the day. This determined the colonel to give over any future attempts on town and march to madura, which the army reached about the 20th May.

இந்தியாவில் கப்பம் வசூலிக்க முதன்முதலில் வந்தது, முதல் ஆங்கிலத் தளபதி அலெக்சாண்டர் கெரான் என்பவராவார். இதைப் பற்றி எச்.ஆர். பேட்டி என்பவர் 'திருநெல்வேலி ஜில்லா' என்னும் நூலில் பக்கம் 387-ல் குறிப்பிட்டுள்ளார். கெரானின் அரட்டல், மிரட்டல்களுக்குச் சிறிதேனும் அச்சம் கொள்ளாமல் அவருடன் போரிட்டு, ஓட ஓட விரட்டியடித்து 1775 மே மாதம் 22-ஆம் நாள் வெற்றி வாகை சூடிய மறத்தமிழன் பூலித்தேவனன்றோ?

பூலித்தேவனுக்கு முன்னால் வேறு பாளையக்காரர்கள் யாராவது ஆங்கில - ஆற்காடு சக்திகளை விரட்டியடித்ததாக வரலாறு உண்டா ? இல்லை. இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வரலாறு ஒரு பக்கம் உண்மையைக் கூறும் போது, மறு பக்கம் ஒரு சிலரால் உண்மைக்கு மாறான வரலாறு திணிக்கப்பட்டு வரும் அவல நிலையை இன்று கண்கூடாகப் பார்க்க முடிகிறது. "பிரிட்டிசாருக்கு எதிராகப் புரட்சி செய்த முதல் மனிதராக வாழ்ந்தார் மருதநாயகம்" என்று எழுத்தாளர் சுஜாதா கூறியுள்ளார். 6

தமிழகத்திலுள்ள பிரபலமான எழுத்தாளர் சுஜாதா, வரலாற்றை மாற்றி எழுதுவது வருந்தத்தக்கதாகும். "பிரிட்டிசாருக்கு எதிராக புரட்சி செய்த முதல் மனிதராக மருதநாயகம் வாழ்ந்தார்" என்பதை ஒருவரியில் கூறாமல், அதற்கான சான்றுகளை எடுத்துக் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறியிருப்பாரானால் அதைப் பெருமையோடு ஏற்றுக் கொள்ளலாம்.

"நான்தான் இந்த மண். இந்த மண்ணின் விதை. மண்ணின் உரம். எனது தாத்தாவின் சாம்பல், எனது தந்தையின் சாம்பல் தான் இந்த மண். நானும் ஒருநாள் இந்த மண் ஆவேன். இந்த மண்ணை யாருக்கும் விலை பேச முடியாது" என கமல் வசனம் பேசியது வெளிவந்துள்ளது. 7

யூசுப்கான் ஆங்கிலேயரை எதிர்த்து முழங்கியதாகக் கூறப்படும் சம்பவம் நடைபெற்றது எப்போது ? இது சினிமாவிற்காக எழுதப்பட்ட வசனமே தவிர வேறில்லை. கான்சாகிப்பிடம் கப்பம் கேட்டு வந்தது யார் ? அதற்கான சம்பவமே நடைபெறவில்லை.

மாமன்னர் பூலித்தேவர் ஆங்கிலக் கம்பெனியாரை 1755-இல் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றது முதல் முழக்கமா ? அல்லது யூசுப்கான் தூக்கில் தொங்கிய 1764-க்கு முந்தியதா ? இந்தக் கணக்குக்கூட அநேகம் பேருக்குத் தெரியவில்லை. இந்திய விடுதலைப் போரில் முதல் முழக்கம் முழங்கியவர் மாமன்னன் பூலித்தேவர்தான் என்று வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாகக் கூறுகின்றன.

"கான்சாகிபு ஓர் இரும்பு மனிதன். பேருள்ளம் படைத்தவன். இவன் பேராற்றல் எல்லாம் வெள்ளை ஏகாதிபத்தியம் தமிழகத்தில் வேர் கொள்ளவே பயன்பட்டது. அந்நாளில் கான்சாகிபு என்றால் மக்கள் குலை நடுங்குவார்கள்" என்றும் "இராணுவ வாழ்வு தொடங்கிய நாள் தொட்டு விடுதலை வீரர்களைத் தாக்கியும், அழித்தும், கோழைகளை வளர்த்தும், வாழ்வித்தும், நாசவேலைகளை நடத்தி வந்த கான்சாகிபு அதுவரை தான் விதைத்த விதைகளை எல்லாம் தானே அறுவடை செய்ய ஆரம்பித்தான்" என்றும் பேராசிரியர் ந. சஞ்சீவி தமது நூலான கும்மந்தன் கான்சாகிபு பக்கம் 20, 34-இல் குறிப்பிட்டுள்ளார்.

கான்சாகிபின் பேயாட்டம் கன்னித் தமிழகத்தில் நடைபெறாதிருந்தால், தமிழகத்தின் அரசியல் வரலாற்றையே வேறுவிதமாகப் பூலித்தேவர் மாற்றியிருக்கக்கூடும். அஞ்சா நெஞ்சுடனும், தஞ்சமடைந்தோரைக் காக்கும் தறுகண்மையும் அரசியல் பேரறிவும், போர்த்திறனும், விடுதலை வேட்கையும் நிறைந்த பூலித்தேவர் வீர வரலாற்றைத் தமிழக விடுதலைப் போரின் முதல் ஏடு என்று சொல்வதே அறமாகும்" என்று பேராசிரியர் ந. சஞ்சீவி தமது 'வீரத்தலைவர் பூலித்தேவர்' என்னும் 'கலைமகள்' கட்டுரை (பிப்ரவரி 1958) - இல் குறிப்பிட்டுள்ளார். 9

மேற்கண்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் "பூலித்தேவரின் வீரவரலாற்றைத் தமிழக விடுதலைப் போரின் முதல் ஏடு" என்று சொல்வதே அறமாகும் என்றும்; "யூசுப்கானின் பேராற்றல் எல்லாம் வெள்ளை ஏகாதிபத்தியம் தமிழகத்தில் வேர் கொள்ளவே பயன்பட்டது" என்றும்; இருவரையும் ஒப்பிட்டுக் கூறியதிலிருந்து "பூலித்தேவரே முதல் முழக்கம்

முழங்கினார்" என்றும்; தமிழனான பூலித்தேவரை, தமிழனான யூசுப்கானே காட்டிக் கொடுத்தார் என்றும் தெளிவாகத் தெரிகிறது.

தினமணி 1-9-1998 இதழில், 'மருதநாயகம் வெள்ளைக்காரர்களுக்கு கூலியாக இருந்தவன்; வெள்ளையர்களை எதிர்த்த பூலித்தேவன் போன்றவர்களை எதிர்த்தவன். வெள்ளையர்கள் அவரது கோட்டையை முற்றுகையிட்டிருந்த அந்தத் தினங்களில்தான் அவர்களோடு போரிட்டான் என்கிறார்களே?' என்னும் கேள்வியைத் தமிழ்மகன் என்பவர் கமலிடம் கேட்டுள்ளார். 10

அந்தக் கேள்விக்கு நேரடியான பதிலை வழங்காமல், சுற்றி வளைத்து கமல் பதில் கூறியுள்ளார்.

முற்றுகையிட்ட தினம் என்றால் என்ன..... ஒருநாளா ? மூன்று வருடங்கள்.

1755 முதல் 1761 வரை ஆங்கிலேயருக்கு வரி கட்ட மறுத்துப் போரிட்டார் பூலித்தேவர். 1759 முதல் 1761 வரையிலும் ஆங்கிலேயருக்காக யூசுப்கான் வரிவசூல் செய்து வந்தார் என்று அரசு ஆவணங்கள் கூறுகின்றன. வரி கொடுக்க மறுத்தார் பூலித்தேவர். வரி கொடுக்காவிட்டால் போர் என்று முற்றுகையிட்டார் யூசுப்கான். 1795 நவம்பர் 6-ஆம் நாள் பூலித்தேவரின் நெற்கட்டான் செவ்வல் கோட்டையை யூசுப்கான் தாக்கினார். அந்த நாள் தான் முற்றுகையிட்ட நாள்.

கடும்போர் நடைபெற்றது. ஒருநாள் போரா? இரண்டு நாள் போரா ? பாரதப் போராகிய பதினெட்டு நாள் போரா ? அதையும் மிஞ்சும் வகையில் ஒரு மாத காலம் தொடர்ந்து போர் நடைபெற்றது. ஒருநாள் ஓய்வு, மறுநாள் போர். 1759 டிசம்பர் 6-ஆம் நாள் பூலித்தேவரின் வாசுதேவநல்லூர்கோட்டை போர்க்களம் ஆனது. இரண்டு மாதங்களாக நடைபெற்ற பின்னர் யூசுப்கான் தோல்வி அடைந்தார். பூலித்தேவர் மாபெரும் வெற்றி பெற்றார். இந்த போர்களைப் பற்றி எஸ்.சி. ஹீல் தமது நூலில் பக்கம் 75. 101-ல் குறிப்பிட்டுள்ளார். 11

1759 முதல் 1761 வரை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை போர் நடைபெற்று இறுதியில் 1761-ல் யூசுப்கான் வெற்றி பெற்றார்.

1759 முதல் 1761 வரை நடைபெற்ற போரைப்பற்றி, "மிகுந்த வல்லமை படைத்தவரும், பெரிய பாளையக்காரருமாகிய பூலித்தேவரை அடக்குவதில் கான்சாகிபு ஈடுபட்டார். அவரை அடக்க கான்சாகிபிற்கு மூன்று ஆண்டுகள் ஆயின" என்று பாரீசில் வெளியிடப்பெற்ற Merchand's Precis Historique - C (Paris - 1771) P-10 என்னும் நூல் கூறுகின்றது. 12

யூசுப்கானுக்கும் பூலித்தேவருக்கும் நடைபெற்ற போர்க் காலங்களிலோ அல்லது அதற்கு முந்தைய காலங்களிலோ ஆங்கிலேயர்களுக்கும் யூசுப்கானுக்கும் எந்த விதமான கருத்து வேறுபாடும் கிடையாது. எந்தவிதமான பிரச்சனையும் கிடையாது. ஏழு ஆண்டுகள் எதிர்த்திருக்கிறார் என்று கமல் கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

1761-இல் வரிவசூல் செய்து ஆற்காடு நவாபுக்கு அனுப்ப வேண்டும் என்று ஆங்கிலேயர் யூசுப்கானுக்கு உத்தரவிட்டனர். யூசுப்கான் ஆற்காடு நவாபிடம் கட்ட முடியாது என்று சொல்லி ஆங்கிலேயரை எதிர்த்து நின்றார். 1761-ல் இருந்து 1764 வரை ஆங்கிலேயருக்கும் யூசுப்கானுக்கும் விரோதம் நீடித்திருந்தது. ஏழு ஆண்டுகள் எதிர்த்தார் யூசுப்கான் என்று கமல் கூறுவது முழுப் பொய். 1760-ல் ஆங்கிலேயருக்கு அவர் மூன்றுமுறை கப்பம் கட்டியுள்ளார்.

பூலித்தேவர் 1750-இல் இருந்து 1767 வரையிலும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு வந்தார். 1761-இல் பூலித்தேவர் யூசுப்கானிடம் தோல்வி அடைந்தார். யூசுப்கான் கைகளில் சிக்காமல் அரண்மனையிலுள்ள சுரங்கப்பாதை வழியாகத் தப்பித்து கடலாடிக்குச் சென்றுவிட்டார். கடலாடியில் இருந்து கொண்டு யூசுப்கானை எதிர்க்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். 1764-இல் யூசுப்கான் இறந்த பின்னர் மீண்டும் நெற்கட்டான் செவ்வல் பாளையத்திற்குப் பூலித்தேவர் வந்து, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடத் தயார் நிலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். 1767-இல் டொனால்டு காம்பலை எதிர்த்துப் போரிட்டார். இதுவே பூலித்தேவரின் இறுதிப் போராகும்.

வரலாறு இவ்வாறு இருக்கும் போது, 1763, 1764-இல் யூசுப்கான் ஆற்காடு நவாபு, ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டது எப்படி முதல் விடுதலைப் போராகும் ? இந்துஸ்தானில் சிறந்த வீரன் மருதநாயகம்தான் என்று 'குமுதம்' பேட்டியில் கூறியது எப்படிப் பொருத்தமாகும் ?

நாட்டுப் பாடல்களும் யூசுப்கானின் உண்மை உருவைக் காட்டும் என்று கமல் கூறியுள்ளார். "கான்சாகிபு சண்டை", "பூலித்தேவன் சிந்து" ஆகிய நாட்டுப்புறப் பாடல்களில் "யூசுப்கான் ஒரு தேசபக்தன்" என்று வலியுறுத்தும் கருத்து எந்த இடத்திலும் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவில்லை. நாட்டுப்புறக்கதைப் பாடல்கள், அதிகமாகப் புகழ்ந்தும், அதிகமாகத் தாழ்த்தியும், மிகைப்படுத்தியும் கூறப்பட்டிருக்கும். ஆதாரமான சான்றுகளை மட்டும் கதைப்பாடல்களிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் விமர்சனம் இப்போது தேவையற்றது என்று கமல் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. வீரபாண்டிய கட்டபொம்மன் மட்டுமல்ல, அனைத்து வரலாற்றாளர்களும் எப்பொழுதும் விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இப்போது யூசுப்கானுக்கு ஏற்பட்டிருக்கும் விமர்சனத்தைப் போல் முன்னர் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் ஏற்பட்டது. அன்று வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிய விவாதத்தை தமிழ்வாணன் தொடங்கி வைத்தார். அதைக் கண்டித்து ம.பொ.சி., அண்ணா, ராஜாஜி, ராமமூர்த்தி, டாக்டர்.மு.வ., சின்ன அண்ணாமலை, உமாபதி, எம்.ஏ.வேணு, பாரதிமோகன், விஜயலட்சுமி ஆகியவர்கள் கடுமையாக விமர்சனம் செய்தனர்.

பெரியார் ஈ.வெ.ரா., ஆதித்தனார், சஞ்சீவி, துர்க்காதாஸ், எஸ்.கே.சாமி, புலியூர்க்கேசிகன், வேணுகோபால், ஈ.ஆர்.சகாதேவன், ராசாராம் போன்றவர்கள் தமிழ்வாணனுக்கு ஆதரவாக விமர்சனம் செய்தனர்.

தமிழ்வாணனை, "ஒரு பச்சைத் துரோகி, துணிந்து திட்டமிட்டுப் பொய் சொல்லுகிற இந்தப் புரட்டனைத் தமிழகத்தை விட்டே, குத்திக் கிழித்துக் காயப்படுத்தி அனுப்ப வேண்டும்" என்று ம.பொ.சி. கூறியும், சிறிதேனும் கவலைப்படாமல் துணிந்து நின்றார் தமிழ்வாணன். தன்னுடைய விமர்சனத்தை நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினார். தனிப்பெரும் வீரராகத் திகழ்ந்தார் தமிழ்வாணன்.

தமிழ்வாணன் தொடங்கிய விமர்சனம் காலங்காலமாகத் தொடர்ந்து தொடர் கதையைப் போல் வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியின் காரணமாகத்தான் யூசுப்கானின் விமர்சனமும் தற்போது வந்துள்ளது. இது காலத்தின் கட்டாயமாகும். யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

ஆகையால், வரலாற்றாளர்களைப் பற்றிய விமர்சனம், இப்போது மட்டுமல்ல, எப்போதும் தேவைதான். இப்படிப்பட்ட விமர்சனங்களால்தான் உண்மை வரலாறு வெளியே வரும்.

மேலை நாட்டில் சேக்ஸ்பியர் எழுதியுள்ள நூல்களைக் காட்டிலும், அவரின் நூல்கள் மீதான விமர்சன நூல்கள் மிகுதியாக வந்துள்ளன. விமர்சனக் கலை வளர்ந்து வருகின்றது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

"கட்டபொம்மனைப் பற்றிய தமிழ்வாணனின் பழைய கட்டுரைகளைப் படித்தால் கட்டபொம்மன் உண்மை ரூபம் தெரியும்" என்று கமல் கூறியுள்ளார். (சுப்புடுவுக்கு கமல் பதில்கள்) இது விமர்சனக் கலையால் ஏற்பட்ட வளர்ச்சி வரலாற்றில் விமர்சனம் எப்போதும் தேவை என்பதை கமல் ஏற்றுக்கொள்வார் என்று எண்ணுகிறேன். 13

பிரஞ்சுக்காரருக்கும், ஆங்கிலேயருக்கும் சண்டை நடந்தது. அப்போது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பெருந்துணை புரிந்தவர் கான்சாகிபு, இதனைப் பாராட்டி லாரன்ஸ் மேலதிகாரிகளுக்கு எழுதினார். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குச் சரியான கையாள் கிடைத்தான் என்று

வெள்ளை வர்க்கம் கொள்ளை மகிழ்ச்சி கொண்டது" என்று பேராசிரியர் ந. சஞ்சீவி தனது 'கும்மந்தன் கான்சாகிபு' என்னும் நூலில் பக்கம் 4-இல் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. 14

கும்பினியின் எல்லாச் சிப்பாய்களுக்கும் கமாண்டராக (கும்மந்தான்) யூசுப்கானை நியமிக்கவும், தங்கப்பதக்கம் வழங்கவும் ஆங்கிலேயர் முடிவு செய்தனர். அதன்படி தங்கப்பதக்கம் வழங்கப் பெற்றது. "ஆங்கிலக் கும்பினியின் ஊழியத்தில் இருந்த ஒரு சுதேசி அடைந்தது இதுவே முதல் முறை" என்று அறிஞர் எஸ்.சி. ஹீல் தம் நூலில் கூறியுள்ளார் என்று பேராசிரியர் ந. சஞ்சீவி தமது 'கும்மந்தான் கான்சாகிபு' என்னும் நூலில் பக்கம் 7-இல் கூறியுள்ளார். 15

மருதநாயகம் பற்றி எஸ்.சி. ஹீல் எழுதிய குறைபாடுகளையும் காண வேண்டும். வைத்தியனாக மாதம் 15 ரூபாய்க்கு வேலை செய்தான். இவனது தந்தைக்குச் சொந்தமான சொத்து ஏதும் இவனுக்கில்லை. வேறு எங்கும் வேலை செய்து அதனால் பெற்ற சொத்து ஏதுமில்லை. ஆனால் இவனிடம் தற்போதுள்ளவையெல்லாம் இந்த நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப் பட்டவையே யாகும் என்று பக்கம் 278-இல் குறிப்பிட்டுள்ளது.

Nine years ago he served Mohamad Khan at Vellore. (Nellore) as a Physician at 15 rupees per month. He had not any of his father's estate by him, nor has he acquired anything by servicing any others. All that he has at present is got out of my country by roguery. If he had defrayed the charges of the silbendy, repairs of the forts of his own accord or without my or your order it is no matter, because we may conclude what money he has got out of the country during his well known to the world.

யூசுப்கான் தூக்கிலிடப்பட்ட பின் அவன் இருப்பிடத்தில் பார்த்தபோது கொள்ளையடிக்கப்பட்ட ஏராளமான தங்கம், உணவுப் பொருட்கள், ஆயுதங்கள் ஆகியவை கோடடையில் காணப்பட்டன. (பக்கம் 267) 16

இரண்டு பகுதிகளில் உள்ளவர்களைத் தூண்டிவிட்டு கலகத்தை உண்டு பண்ணிவிடுவான் கான்சாகிபு. அப்போது இரண்டு பகுதிகளிலும் சண்டையிடும்போது பலகீனமான பகுதியினரிடமிருந்து பணத்தை கவர்ந்து விடுவான். (பக்கம் 305) 17

வரி வசூலித்திட எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டதோ, அதைவிட அதிகமாகவே யூசுப்கான் வசூலித்திருக்கிறான். இது நிரூபணமாகி உள்ளது (பக்கம் 276) (சென்னை கவர்னருக்கு எழுதிய கடிதம் - 1759.) 18

கம்பெனிப் படைகளுக்கு சுபேதாராக உள்ள யூசுப்கான் படிக்காதவன். புரிந்து கொள்ளத் தெரியாதவன், திருடன், இவனது திருட்டுத்தனத்தால் தான் பாண்டிச்சேரியில் இவனது காதுகள் துண்டிக்கப்பட்டன (பக்கம் 281) (நவாப் கடிதம் 1170-ஜனவரி - 30) 19

"எனது முழுத்திறமையையும் பயன்படுத்தி கிழக்கிந்தியக் கம்பெனியின் பணிகளை நிறைவேற்றுவேன். நான் யார் என்று வெளிப்படுத்துவதில் சற்றும் மாற மாட்டேன்.... தங்களைத் தவிர எனக்கு பாதுகாப்பு வேறில்லை. தாங்கள் எனக்களிக்கும் ஆதரவு தொடரட்டும்" என்று யூசுப்கான் மேலிடத்திற்கு 25-3-1756-ல் எழுதியுள்ளார். 20

'துப்பாக்கி செய்யும் ஒருவன் இந்த நாட்டில் இருக்கிறான். பாளையக்காரர்களுக்குத் துப்பாக்கிகள் பல செய்து கொடுத்திருக்கிறான். உத்தரவிட்டால் அவனைப் பிடித்து உங்களிடம் ஒப்படைக்கிறேன்' என்று மேலிடத்திற்கு யூசுப்கான் 15-8-1756-இல் எழுதிய கடிதம் கூறுகிறது. (யூசுப்கான் கடிதம் 15-8-1756) 21

துப்பாக்கி செய்யத் தெரிந்த தமிழன் இந்த நாட்டில் இருக்கக் கூடாது. அவனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று யூசுப்கான் கருதியதிலிருந்தே அவனது தமிழ்நாட்டின் மீதான பற்று வெட்ட வெளிச்சமாகிறது.

இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் தொடர்ந்து வரக்கூடிய கட்டுரைகளில் எடுத்துக் கூறப்படும். இந்நாட்டையும், நாட்டு மக்களையும் காட்டிக் கொடுத்து கடைசியில், ஆதரித்த ஆங்கிலேயருக்கும் துரோகம் செய்து மதுரை மன்னனாக ஆட்சி செய்யலாம் என்னும் பேராசையினால் செயல்பட்டான் யூசுப்கான்.

இத்தகைய யூசுப்கானை, "ஆங்கிலக் கம்பெனிக்கு நேர்மையான உண்மையான தொண்டன் யூசுப்கானைத் தவிர வேறு யாருமில்லை" என்று ஓம் என்பவர் புகழ்ந்து கூறியது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. (பக்கம் 274. கடிதம் நாள் 4-8-1757) 22

மேலே கூறப்பட்டுள்ள யூசுப்கானைத்தான் கமல்ஹாசன் அவ்வளவு நேர்மையான ஆள் என்று பெருமையாகப் பேசுகிறார். யூசுப்கானைப் பற்றி பெருமையாகக் கூறிய எஸ்.சி. ஹீல் புத்தகம் அவருடைய சிறுமையைப் பற்றியும் கூறுகிறது. "குணம் நாடிக் குற்றமும் நாடி" என்பதற்கேற்ப இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். அதை விடுத்து அவசர அவசரமாக யூசுப்கான் பிறந்த நூற்றாண்டை "17-ஆம் நூற்றாண்டு" என்றும்; யூசுப்கானைத் தூக்கில் போட்டது "அக்டோபர் 16-ஆம் தேதி" என்றும் கூறுவது முரணான வரலாறாகாதா?

"இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அடிக்கல் நாட்டிய இராபர்ட் கிளைவ், கடைசியில் தன் கழுத்தைத் தானே கத்தியால் அறுத்துக்கொண்டு செத்தான். ஏறத்தாழ அதே மாதிரியான முடிவே கான்சாகிபுக்கும் ஏற்பட்டது. ஏகாதிபத்தியத்துக்கு அடிக்கல் நாட்டியவனும், அவனுக்குக் கல்லும் கரண்டியும் கொத்தனைப் போல் எடுத்துக் கொடுத்த கான்சாகிபும் ஒரே மாதிரி செத்தார்களே என்று ஏங்குகிறது ஆங்கில எழுத்தாளர்களின் இதயம்'' என்று பேராசிரியர் ந. சஞ்சீவி தமது 'கும்மந்தான் கான்சாகிபு' என்னும் நூலின் பக்கம் 5, 6-இல் குறிப்பிட்டுள்ளார். 23

இத்தகைய செயல்களில் ஈடுபட்ட மருதநாயகம் என்ற யூசுப்கான் விடுதலைப் போராட்ட முதல் வீரனா ? அல்லது தேசத் துரோகியா ? மக்களே தீர்ப்பு வழங்கட்டும். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு !

மருதநாயகம் படத்தின் பெயரை மட்டும் மாற்றினால் போதுமா ?

"மருதநாயகம்" படத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்னும் தலைப்பில் 'குமுதம்' 14-5-98 இதழில் இந்து முன்னணித் தலைவர் ராம கோபாலனின் பேட்டி வெளிவந்துள்ளது.

"மருதநாயகம்" படத்தைப் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ராம. கோபாலனின் பதில்கள் வருமாறு.

"கான்சாகிபு" என்ற பெயரில் எடுக்காமல் மருதநாயகம் என்ற பெயரில் ஏன் கமல்ஹாசன் படம் எடுக்க வேண்டும் ?

கான்சாகிப்னு எடுக்கட்டுமே படம் ஓடாமல் போயிடுமேன்னு பயமா?

மருதநாயகம்ங்கிற பெயரைக் கான்சாகிபே தூக்கி எறிஞ்சிட்ட பிறகு கமல் எதுக்குத் தூக்கிப் பிடிக்கனும் ? என்னும் கேள்விகளை ராம. கோபாலன் எழுப்பியுள்ளார்.

ராமகோபாலனின் பேட்டிக்குப் பிறகு, அதற்கான பதிலை கமல்ஹாசன் கூறியிருத்தல் வேண்டும். கூறவில்லை. "மருதநாயகம்" பற்றிய குறைகளை யார் கேட்டாலும், "அதையெல்லாம் பத்தி எனக்குக் கவலையில்லை" என்று கமல்ஹாசன் பதில் கூறிவிடுகிறார். அதற்கு மேலும் கேட்டால், மருதநாயகத்தோட நெருப்பு சுட்டுடும் என்பார். 24

"மருதநாயகம்" என்னும் பெயரை எடுத்து விட்டு, "கான்சாகிபு" என்னும் பெயரை வைத்துவிட்டால் பிரச்சனை தீர்ந்து விடுமா ?

"முகமது யூசுப்கான்" என்பதே கமலுடைய மருதநாயகத்தின் உண்மையான பெயர்.

"மருதநாயகம்", "கான்சாகிபு" ஆகிய இரண்டு பெயர்களும் ஒட்டுப் பெயர்கள் (பட்டப் பெயர்) உண்மையான பெயர்களல்ல.

"கான்சாகிபு" என்னும் பெயர் யூசுப்கான் பதவிக் காலத்தில் அன்பாக அழைக்கப்பட்டதாகும். "யூசுப்கான்" என்னும் சொல்லிலுள்ள விகுதிச் சொல் "கான்". (யூசுப்+கான்) நாட்டுப்புறப் பாடல் ஆசிரியர் கூட "கான்" என்றே அழைக்கிறார். இஸ்லாம் மத்தைச் சேர்ந்தவர்களை "சாகிபு" என்று அழைப்பது வழக்கமாக இருந்து வருகிறது. (கான்+சாகிபு) "கான்சாகிபு" என்னும் பட்டப் பெயரால் அழைக்கப்பட்டார்.

“யூசுப்கான்” இறந்த பிறகு அவருடன் உறவாடியவர்கள், மிகவும் நெருக்கமானவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் அவரைப் பாராட்டும் முகத்தான் “மதுரை மன்னன்” என்றும், “மதுரை நாயகம்” என்றும் சிறப்பாக அழைத்திருப்பர். அதுவே, பிற்காலத்தில் “மருதநாயகம்” என்று மருவி வந்திருக்கக் கூடும்.

ஆகையால் “மருதநாயகம்”, “கான்சாகிபு” என்னும் ஒட்டுப் பெயர்களை எடுத்து விட்டு, “முகமது யூசுப்கான்” என்னும் உண்மையான பெயரால் படம் எடுப்பதுதான் வரலாற்றுக்குச் சிறப்பு செய்வதாகும். எஸ்.சி. ஹீல் “யூசுப்கான்” என்னும் தலைப்பில் நூல் எழுதியிருப்பதை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

படத்திற்குப் பெயர் சூட்டுவது கமல்ஹாசனின் உரிமை. சுமார் 25 கோடி செலவு செய்து படம் எடுப்பவர், அவருக்கு விருப்பப்பட்ட பெயரைத்தான் சூட்டுவார். பெயரில் என்ன இருக்கிறது ? எந்தப் பெயரை வைத்தால் என்ன ?

வரலாற்றுப் படமாக இருப்பதால், வரலாற்று நாயகனின் உண்மையான பெயரை, உள்ளதை உள்ளபடியே அழைக்க வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடலாம். அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் கமல்ஹாசனின் விருப்பம்.

படம் ஓடுமா ? ஓடாதா ? என்பதைப் பற்றியெல்லாம் நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அந்தக் கவலையெல்லாம் கமல்ஹாசனுக்கு இருக்க வேண்டும்.

ஆகையால் பெயரைப் பற்றிய சர்ச்சை ராமகோபாலன் போன்றோர்க்குத் தேவையில்லாத ஒன்று என்று தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன்.

ராமகோபாலன் வேண்டுகோளின்படி பெயரை மட்டும் மாற்றினால் போதுமா ? பெயர் மாற்றம் செய்வதின் மூலம் பிரச்சனைகள் தீர்ந்து விடுமா ? பெயர் மாற்றினால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை.

“இப்போ, பயங்கரவாதத்தின் ஆழத்தை ஜனங்கள் உணர ஆரம்பிச்சு இருக்கிற நிலையில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவரைச் சுதந்திரப் போராட்ட வீரன் மாதிரி சித்தரிச்சு ஏன் கமல் படம் முழுக்க எடுக்கணும் ?” என்ற ராமகோபாலனின் கேள்வி உயிரோட்டமுள்ளதாக உள்ளது. கமல்ஹாசனை கேட்க வேண்டிய நியாயமான கேள்வி. இந்தக் கேள்விக்குரிய பதிலை ராம கோபாலன் கமல்ஹாசனிடம் கேட்பாராயின் அதுவே உண்மை வரலாற்றுக்குச் செய்யும் தொண்டாகும்.

ராமகோபாலன் கேட்ட கேள்வியை பலரும் கேட்டு விட்டனர். ஆனால், கமல்ஹாசனிடமிருந்து அதற்கான நேர்மையான பதில் மட்டும் வருவதில்லை.

வல்லபாய் பட்டேலும் மருதநாயகமும் !

"தென்னகத்தின் ஹைதர், கட்டபொம்மன், திப்புவுக்கு முன்னால் வெகுண்டு எழுந்த வீரன் கான்சாஹேப்" என்று கமல் கூறியுள்ளார். "யூசுப்கான் முதல் விடுதலைப் போராட்ட வீரன்" என்னும் தமது கருத்தை நிலைநாட்டவே கமல் அவ்வாறு கூறியுள்ளார். அவர்களுக்கு முன்னால் எந்த வகையில் கான்சாகிபு வெகுண்டு எழுந்த வீரன் என்பதற்கான சான்றுகளைக் கூறவில்லை.

"யூசுப்கான் ஆங்கிலேயருக்கு வேலை செய்தான் என்பது மாசு எனின், சர்தார் வல்லபாய் படேலும் வெள்ளைக்காரனுக்கு வேலை செய்துவிட்டு பின்புதான் மனம்மாறி தேசபக்தர் ஆனார் என்ற உண்மை படேலை மாசுபடுத்துமா?" என்னும் கேள்வியைக் கமல் எழுப்பியுள்ளார்.

யூசுப்கான் தன்னுடைய பதவி ஆசையை நிறைவேற்றிக் கொள்ள ஆங்கிலேயரையும் ஆற்காடு நவாபையும் எதிர்த்தார். அதே போல சர்தார் வல்லபாய் படேலும், வெள்ளைக்காரனிடம் வேலை செய்துவிட்டு பின்னர் மனம் மாறி தேசபக்தர் ஆனார். இருவருடைய செயல்பாடுகளும் ஒத்ததாக இருக்கும் போது யூசுப்கான் செயல்பாடு மட்டும் மாசுபடுத்தும்; வல்லபாய் படேல் செயல்பாடு மாசுபடுத்தாது என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம் என்று கமல் கேள்வியை எழுப்பியுள்ளார்.

யூசுப்கானின் செயல்பாடும், படேலின் செயல்பாடும் அடிப்படையில் வேறுபாடு கொண்டதாகும். யூசுப்கான் வெள்ளைக்காரனிடம் பணியாளாக வேலை செய்தார். ஆனால் படேல் வெள்ளைக்காரனிடம் வேலை செய்யவில்லை. நான் படித்த புத்தகங்களில் அவ்வாறில்லை. சான்றுகள் காட்டமுடியுமா ?

படேலைப் பற்றிக் கீழ்க்கண்ட நூல்கள் கூறுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வல்லபாய் படேல் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த போது, ஆங்கில நாகரீகம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. அதனால் அவர் ஆங்கிலேயரைப் போலவே உடைகள் அணியத் தொடங்கினார் என்று புலவர் நாகசண்முகம் 'வல்லபாய் படேல்' என்னும் தமது நூலில் பக்கம் 27-இல் குறிப்பிட்டுள்ளார். 25

"இங்கிலாந்து வாழ்க்கை அவருக்கு மகிழ்ச்சி தந்தது. மேனாட்டு நாகரீக மோகம் அவரை இறுகப் பிணைத்துக் கொண்டதால் இந்திய

நாகரீகத்தின் மீது வெறுப்பும், அருவருப்பும் உண்டாயின. வேற்று நாட்டு நடையுடை பாவனைகளில் ஊறித் திளைக்கலாயினார்" என்று என்.ஆர். பத்மநாபன் என்பவர் "இரும்பு மனிதர் வல்லபாய் படேல்" என்னும் தமது நூலில் பக்கம் 16-ல் குறிப்பிட்டுள்ளார். 26

"இந்தியர்கள் அறிவீனர்கள். நம்மை ஆளுபவர்கள். நமக்கு நன்மை விளைவிக்கிறவர்கள். நம்மைக் காப்பாற்ற வந்தவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையே உயர்வானது. இந்தியர்கள் அடிமைகளாக இருக்கத்தான் தகுந்தவர்கள்" என்று எம்.வி. வெங்கட்ராம் என்பவர் 'வல்லபாய் படேல்' என்னும் தமது நூலில் பக்கம் 14, 15-ல் குறிப்பிட்டுள்ளார். 27

மேற்கண்டுள்ள நூல்களின் குறிப்புக்கள் ஆங்கிலமோகம் அவரைக் கவர்ந்தது. இந்திய நாகரீகத்தின் மீது வெறுப்பும் அருவருப்பும் உண்டாயின. இந்தியர்கள் அடிமைகளாக இருக்கத்தான் தகுந்தவர்கள் என்று படேல் எண்ணினார். அவருடைய சுயமான சிந்தனை அவ்வாறிருந்தது. அவருடைய சிந்தனையைத் தனக்குத்தானே சட்டமாக வைத்துக் கொண்டார். பிறரிடம் திணிக்கவில்லை. அவ்வாறு இருந்தவர், காந்திஜியைப் பார்த்த பிறகு, அவருடைய போதனைகளைக் கேட்ட பிறகு, மனம் வருந்தி ஆங்கில மோகத்தை மாற்றிக் கொண்டார். இதுவே படேலின் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவம்.

ஆனால், யூசுப்கான் அப்படியில்லை. வெள்ளைக்காரனுக்கு வேலை பார்த்தது மட்டுமில்லாமல், வெள்ளையர்களுடைய ஆணைகளை நிறைவேற்ற, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தார். "யூசுப்கான்" ஆங்கிலேயரை எதிர்க்க முற்பட்ட போது இந்த நாட்டு மக்களைக் கொன்று குவித்தது தவறு, அன்னியருக்கு ஆதரவாக நாட்டையும், நாட்டு மக்களையும் காட்டிக் கொடுத்தது தவறு என்று எந்த இடத்திலாவது மனம் வருந்தியவதாகச் செய்தி உள்ளதா ?

அவர் உண்மையில் வெள்ளைக்காரனிடம் வேலை பார்த்தது தவறு என்று மனம்மாறியிருந்தால் நடைபெற்ற சம்பவத்திற்கு நிச்சயமாக வருத்தம் தெரிவித்திருப்பார். வரலாறு அவ்வாறில்லை.

சாம்ராட் அசோகன் போரையே வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு மனமாறிய போது ஏற்பட்ட சம்பவங்கள் யூசுப்கானுக்கும் ஏற்பட்டிருக்கும்.

"யூசுப்கான் இராணுவ வாழ்வு தொடங்கிய நாள் தொட்டு விடுதலை வீரர்களைத் தாக்கியும், அழித்தும், கோழைகளை வளர்த்தும், நாசவேலைகளை நடத்தினான்" என்றும் "1761-ஆம் ஆண்டு வரை போராடிப் போராடிப் பூலித்தேவனின் கோட்டைகளைப் பிடித்தார்" என்றும் பேராசிரியர் ந.சஞ்சீவி 'கும்மந்தான் கான்சாகிபு' என்னும் தமது நூலில் பக்கம் 19-இல் குறிப்பிட்டுள்ளார். 28

பூலித்தேவரையும், பிற பாளையக்காரர்களையும் வெற்றி கொண்ட பிறகு, தென்னாட்டில் தன்னை எதிர்ப்பதற்கு ஆளே இல்லை. இனி நானே இந்த நாட்டுக்கு மன்னன். ஆற்காடு நவாபுக்கோ, ஆங்கிலேயருக்கோ அடிபணிய வேண்டிய அவசியமில்லை என்று முடிவு செய்தான். தன்னுடைய சுயநலத்திற்காக எதிர்த்தான். அதற்காக நாட்டு மக்கள் அனைவரையும் தன் பக்கம் இழுப்பதற்காகப் பல சலுகைகளை வழங்கினான்.

யூசுப்கானின் வரலாறு இவ்வாறிருக்க...

வல்லபாய் படேல், இந்திய தேசிய பக்த சிகாமணிகளுள் ஒருவர், காந்தியடிகள் வழி நின்ற தூய தொண்டர், அரசாங்கத்தை எதிர்த்து அஞ்சாது அகிம்சைப் போர் நடத்தி சர்தார் (தளபதி) என்று காந்தியடிகளால் அழைக்கப் பெற்றவர். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டில் சிதறிக் கிடந்த சுதேச சமஸ்தானங்களை இணைத்து 'அரசியல் ஐக்கியத் தந்தை' என்று பெயர் பெற்றவர் என்று கலைக்களஞ்சியம் தொகுதி-9, பக்கம்-157-ல் குறிப்பிடப் பட்டுள்ளது. 29

இத்தகைய, விடுதலைப் போராட்ட வீரர் வல்லபாய் படேலின் தியாகத்திற்கும் யூசுப்கானுக்கும் ஒப்புமை கூறி, படேலை மாசுபடுத்துவது கமலுக்கு அழகல்ல.

1. இந்தியா டுடே, அக்டோபர் - 22-1997.
2. தினகரன் 7-6-98.
3. வீரபாண்டிய கட்டபொம்மன் ஆய்வுக்கோவை 2002. பக்.188.
4. Millitary Transaction in Industan - Robert Orm-1891-Vol-2. P. 107.
5. Yusuf Khan - S.C. Hill - 39.
6. தினமணி- சுஜாதா - 24-10-1997.
7. தினமலர் - 17-10-1997.
8. கும்மந்தான் கான்சாகிபு - ந.சஞ்சீவி - பக்.20, 34.
9. கலைமகள், வீரத்தலைவர் பூலித்தேவர் - பிப்ரவரி 1958.
10. தினமணி 1-9-1998. தமிழ்மகள்.
11. Yusuf Khan - S.C. Hill P.75, 101.
12. Merchants Precis Historique - (Paris 1771) P.10.
13. சுப்புடுவுக்கு கமல் பதில்கள்.
14. கும்மந்தான் கான்சாகிபு - ந.சஞ்சீவி பக். 4.
15. கும்மந்தான் கான்சாகிபு - ந.சஞ்சீவி பக்.7.
16. Yusuf Khan - S.C. Hill P. 267.
17. யூசுப்கான் - பக்.302.
18. யூசுப்கான் - 276 (1759)
19. நவாப் கடிதம் - 1770 - ஜனவரி 30-281.
20. யூசுப்கான் கடிதம் (Country Correspondence) பக். 43.
21. யூசுப்கான் கடிதம் 15-8-1756.
22. ஓம் கடிதம் 4-8-1757. பக். 274
23. கும்மந்தான் கான்சாகிபு - ந. சஞ்சீவி பக். 5
24. குமுதம் - 23-10-97
25. வல்லபாய் படேல் - புலவர். நாகசண்முகம் பக். 27
26. இரும்பு மனிதர் வல்லபாய் படேல். -ஆர்.பத்மநாபன் பக்.14.
27. வல்லபாய் படேல் - எம்.வி.வெங்கட்ராம் பக்.14.
28. கும்மந்தான் கான்சாகிபு - ந.சஞ்சீவி. பக். 19.
29. கலைக்களஞ்சியம். தொகுதி-9. பக். 157.

செம்மலர் பார்வையில் மருதநாயகம்

இந்திய சுதந்திரப் பொன்விழாவை இந்திய நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் காலமிது. பொன்விழா விளம்பரங்களோ ஏராளம் ! ஏராளம் !

"மருதநாயகமா ? கான்சாகிபா" என்னும் தலைப்பில் 'செம்மலர்' (டிசம்பர் - 97) இதழில் உதயபானு எழுதிய கட்டுரை வெளியிடப்பட்டது. அந்தக் கட்டுரை "மருதநாயகம்" திரைப்படம் சம்மந்தமாகச் சில சர்ச்சைகளை கிளப்பி விட்டுள்ளன.

முதலாவது சர்ச்சையாக வருவது "மருதநாயகமா ? கான்சாகிபா ?" என்னும் தலைப்பைப் பற்றியதாகும். மத சகிப்புத் தன்மையோடு ஆட்சி நடத்திய இவரை "மருதநாயகம்" என்று அழைத்தாலும் தவறில்லை. "கான்சாகிபு" என்று அழைத்தாலும் தவறில்லை என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுரைத் தலைப்பில் யூசுப்கானையும் சேர்த்துக் கூறியிருக்க வேண்டும். உண்மையான பெயர் "யூசுப்கானா ? அல்லது கான்சாகிபா ? அல்லது மருதநாயகமா ?" என்பதைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

மருதநாயகம் யார் ? கான்சாகிபு யார் ? யூசுப்கான் யார் ? என்னும் வினாக்களில், மருதநாயகம் யார் ? என்னும் வினாவுக்கான விடை முதற்கண் தெரிய வேண்டும்.

"இராமநாதபுரம் பனையூரில் இந்து வேளாளனாகப் பிறந்து மருதநாயகம் என்னும் பெயரைக் கொண்டிருந்தவன்" என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இதற்கான வரலாற்றுச் சான்றுகள் ஏதுமில்லை. இது பிற்காலத்தில் ஏற்பட்ட செவிவழிச் செய்திகளே. 1

"மருதநாயகம்" என்னும் இயற்பெயர் அவருக்கில்லை. வேளாளர் குலமுமல்ல. இந்து மதமுமல்ல என்பதற்கான ஆதாரங்களே உள்ளன.

"முகமது யூசுப்கான்" என்பதே அவருடைய இயற்பெயராகும். யூசுப்கான் பிறவியிலேயே இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்றுகள் உள்ளன. அவரை யூசுப்கான் என்றே அழைத்து வந்தனர். "யூசுப்கான்" என்னும் சொல்லின் இறுதியிலுள்ள விகுதியை "கான்" என்றும் சுருக்கமாக அவர் பெயரை அழைத்தனர். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவராதலால் "கான்சாகிபு" என்று அன்போடு அழைத்து வந்தனர்.

ஆங்கிலக் கம்பெனிக்குப் பெருத்துணை புரிந்தவர் கான்சாகிபு என்பதால் எல்லாச் சிப்பாய்களுக்கும் கமாண்டராக அவரை நியமித்து, தங்கப்பதக்கமும் வழங்கினர் கம்பெனியினர். "கமாண்டர்" என்றே சொல்லே "கும்மந்தான்" ஆகி "கம்மந்தான்" என்று ஆகிவிட்டது. இது ஆங்கிலக் கம்பெனியில் ஒரு தமிழன் முதன் முதல் அடைந்த பதவியாகும். ஆகையால் "கம்மந்தான் கான்சாகிபு" என்று அழைக்கலாயினர்.

யூசுப்கானின் இறுதிக் காலத்தில் அவரை, "மதுரை மன்னன்" என்றும் "மதுரை நாயகர்" என்றும் அழைத்திருப்பர். மதுரை நாயகர் முஸ்லீமாக இருந்ததால் "மதுரை நாயகம்" என்றும், "மதுரை" என்னும் சொல் மருவி மருதை என்றும் வந்திருக்கக் கூடும். யூசுப்கானை மருதநாயகம் என்று அழைத்திருப்பர். மருதநாயகம் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பெயரே. இவரது இயற்பெயரல்ல.

இயற்பெயர் முகமது யூசுப்கான். "கும்மந்தான் கான்சாகிபு" என்பது பட்டம் வழங்கியதன் காரணமாக ஏற்பட்டது. அரசு ஆவணங்களில் "முகமது யூசுப்கான்" "கான்சாகிபு" என்னும் பெயர்களே உள்ளன. மருதநாயகம் என்பது பிற்காலத்தில் ஒரு சிலரால் செல்லமாக வழங்கப்பெற்ற பெயராகும். ஆதலால் யூசுப்கான் என்றோ கான்சாகிபு என்றோ அழைத்தாலே போதுமானதாகும். "மருதநாயகம்" என்னும் பெயருக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டிய அவசியமில்லை.

மதுரை வீரன் போன்ற பெயர்கள் மருதை வீரன் என சாதாரண மக்களால் வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது சர்ச்சையாக வருவது "மருதநாயகம்" இந்து வேளாளர் குலத்தில் பிறந்தாரா ? என்பதைப் பற்றியதாகும்.

இராமநாதபுரத்தில் பனையூர் என்னும் ஊரில் பிறந்தவர் மருதநாயகம். வேளாளர் குலத்தில் பிறந்த இவர் முஸ்லீமாக மதம் மாறி முகமது யூசுப்கான் என்னும் பெயரால் அழைக்கப்பெற்றார் என்று சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

"பிறந்தது பனையூர் மண்ணு" என்று 'கான்சாகிபு சண்டை' என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடலில் பக்கம் 17-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய பெயரை 'கான்' என்று குறிப்பிடுகிறார். இந்துவாக இருந்து முஸ்லீமாக மதம் மாறினார் என்பதற்கான சான்றுகள் அந்த நூலில் இல்லை.

தமிழகத்தில் பனையூர் என்னும் பெயரில் பல ஊர்கள் உள்ளன. எந்தப் பனையூரில் பிறந்தார் கான்சாகிபு என்று திட்டவட்டமான சான்று ஏதும் பாடலில் இல்லை.

‘ இதைப் பற்றி எஸ்.சி.ஹீல் எழுதிய “யூசுப்கான்” என்னும் நூலில் பக்கம் 118-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 3

யூசுப்கானின் பிறப்பு, சாதி, ஊர் ஆகியவை பற்றிய குறிப்புகளும் எஸ்.சி.ஹீல் நூலில் பக்கம் 310-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 4

பொன்னுச்சாமித் தேவரின் நினைவுக் குறிப்பிலிருந்து எடுத்து எழுதப் பெற்ற சான்றின்படி, முகமது யூசுப்கான் (கான்சாகிபு) இந்து, வெள்ளாளர் குடும்பத்தில் இராமநாதபுரத்தில் உள்ள பனையூரில் பிறந்தார் என்னும் குறிப்பு உள்ளது. (The Madura Country, A Manual Compied by order of the Madras Government 1868 - Page No. 46) மருதநாயகம் என்னும் பெயரைப் பற்றியோ, முஸ்லீமாக மதம் மாறினார் என்பதற்கான செய்திகள் பற்றியோ ஏதும் இல்லை.

மேற்கண்டுள்ள இரண்டு குறிப்புக்களையும் எழுதிய ஜே.எச்.நெல்சன் என்பவரும், இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் வழித் தோன்றலாகிய பொன்னுச்சாமித் தேவரும் சம காலத்தில் வாழ்ந்தவர்கள் என்று தெரிகிறது.

“யூசுப்கான்” இறந்த நூறு ஆண்டு காலத்திற்குப் பிறகு எழுதப்பெற்ற இரண்டு குறிப்புக்களும் ஒரே மாதிரியாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“யூசுப்கான்” பிறவியிலேயே இஸ்லாம் குலத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அவர் இந்துவாகப் பிறந்து பின்னர் இஸ்லாம் மதத்திற்கு மாறினார் என்பதற்கான சான்றுகளுமில்லை. 5

‘கான்சாகிபு சண்டை’ என்னும் நூலில் பக்கம் 17-ல் “வெற்றி விசையாலீம் குலம் விளங்க வருதீரன்” என்று கூறுவதால் யூசுப்கான் பிறவிலேயே இஸ்லாம் மதத்தில் ஆலிம் குலத்தைச் சேர்ந்தவன் என்பது தெளிவாகிறது.

மேலும் எஸ்.சி.ஹீல் நூலில் பக்கம் 286-இல் யூசுப்கான் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவன் என்பதற்கான குறிப்புகள் உள்ளன. 6 Khan (Sahibe) is by birth a "Moor", and is descended from the ancient seed of that nation என்றுள்ளது. “மூர்” என்னும் சொல்லுக்கு, வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அராபிய கலப்பின இஸ்லாமியர் என்னும் பொருளை சென்னைப் பல்கலைக் கழக அகராதி பக்கம் 646-இல் கூறுகிறது. 7

இந்தக் குறிப்பின்படி யூசுப்கான், அராபிய கலப்பின இஸ்லாமியர் இனத்தைச் சேர்ந்தவர் என்பது உறுதியாகிறது. யூசுப்கானின் முன்னோர் வடமேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து வந்து தமிழகத்தில் இராமநாதபுரம் பகுதியில் குடியேறியிருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம்.

யூசுப்கான் “மூர்” இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு எஸ்.சி.ஹீல் நூலின் பக்கம் 270-இல் மற்றும் ஒரு குறிப்பு உள்ளது. 8

We were greatly assisted in this day by a Moorman, who for his descended merit was made commander of our sepoys. This Man commonly called the Nellore subahdar (From the place when he came) has first company of sepoys in our service which were raised by him என்று உள்ளது.

ஏற்கனவே இச் செய்தி கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இது கடிதமாக எழுதப்பட்டதால் மீண்டும் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கண்ட கருத்துக்களும் பிற்காலத்தில் எழுந்தனைவே. "கான்சாகிபு சண்டை" என்னும் நூலில் பக்கம் 30-இல் வேளாள வம்சத்தை யூசுப்கான் குறைவாகக் கூறுவதால் யூசுப்கான் வெள்ளாள சாதியல்ல என்று யூகிக்க முடிகிறது. "பட்டோலை எழுதுங்கள் சாதி படை வெட்டத் தெரியுமோ தாண்டவராயா" என்பதாகும். 9

அமைச்சர் தாண்டவராயர் வெள்ளாள சாதி (பிள்ளை) என்று அறிந்து குறிப்பிடக் கூறி, ஓலை எழுதுவதுதான் உங்கள் வேலை. அதை விடுத்து வாளெடுத்துப் போரிடத் தெரியுமோ ? என்று கேட்பதிலிருந்து யூசுப்கான் பிள்ளைமார் சாதியைச் சேர்ந்தவரல்ல என்பதையே பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

மூன்றாவது சர்ச்சையாக வருவது யூசுப்கானின் திருமணம் பற்றிய செய்தி. "கான்சாகிபு சண்டை" நூலில் யூசுப்கானின் திருமணம் பற்றிக் கூறும் பாடலில் (பக்கம் 22) "மாசாவைக் கண்டு மையலாகி கல்யாணம் செய்தார் யூசுப்கான்" என்ற குறிப்புதான் உள்ளது. மாசா கத்தோலிக்க கிறிஸ்தவப் பெண் என்பதற்கோ, தலித் இனத்தைச் சேர்ந்தவள் என்பதற்கோ எந்த விதமான சான்றுகளுமில்லை.

"மல்லூறு ஆற்காடு தன்னில் பறைச்சி

மாசாவைக் கண்ணிலே கண்டானே கானன்"

என்ற பாடல் வரியில் "பறைச்சி" என்னும் வந்திருப்பதால் 'தலித்' என்று குறிப்பிட்டுள்ளார் போரலும். ஆனால் எஸ்.சி.ஹீல் தமது நூலில் பக்கம் 311-இல் மாசா ஒரு "பரங்கிப்பெண்" என்று குறிப்பிட்டுள்ளார். 10

(At Arcort he married a Parangi Woman)

பரங்கிப் பெண்ணான மாசா என்பவளை மணந்து கொண்டான் என்று கான்சாகிபு சண்டை நூல் பக்கம் 4-ல் குறிப்பிட்டுள்ளது.

"பரங்கி" என்னும் சொல்லுக்கும் "பறைச்சி" என்னும் சொல்லுக்கும் வேறுபாடு உள்ளது.

போர்த்துக்கீசியர்களை பரங்கியர் என்று அழைத்து வந்தனர். போர்த்துக்கீசியர் ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவர்கள். “பறையர்” இந்த நாட்டின் ஆதி திராவிடக் குடியைச் சேர்ந்தவர்கள். இவர்களே ‘தலித்’ இனத்தைச் சேர்ந்தவர்களாவர். பரங்கியரைத் தலித்துக்களுடன் ஒப்பிட முடியாது என்பது தான் என் எண்ணம்.

“சாதியிலே புலைச்சி நான்”, “மாடு தின்னும் புலைச்சி நான்” என்று “கான்சாகிபு சண்டை” நூல் பக்கம் 44-இல் குறிப்பிடுவதால் “புலைச்சி” என்றும் மாசா அழைக்கப்பெற்றாள். 11

“மாசா”வைத் தலித் இனத்தைச் சேர்ந்தவளாகக் குறிப்பிடக் கூடாது.

நான்காவது சர்ச்சையாக வருவது யூசுப்கானுக்கும் பூலித்தேவருக்கும் நடைபெற்ற போர்கள். யூசுப்கான் ஒவ்வொரு பாளையக்காரராக அடக்கி அவர்களிடமிருந்து கப்பம் வசூல் செய்கிறார். பின்னர் கான்சாகிபு பூலித்தேவரிடமும் கப்பம் கேட்டார். பூலித்தேவர் கப்பம் கட்ட மறுத்தார். அப்போதுதான் பூலித்தேவரோடு நீண்ட மோதல் ஏற்பட்டது.

1759-ஆம் ஆண்டு நவம்பர் 6-ஆம் நாள் யூசுப்கான் பூலித்தேவரின் நெற்கட்டான் செவ்வல் கோட்டையைத் தாக்கினார். சுமார் ஒரு மாதம் இந்தப் போர் நீடித்தது. யூசுப்கான், பூலித்தேவரின் வாசுதேவநல்லூர் கோட்டையைத் தொடர்ந்து தாக்கினார். இங்கும் ஒரு மாத காலத்திற்குப் போர் நீடித்தது. முடிவில் யூசுப்கான் தோல்வி அடைந்து அவமானப்பட்டுப் போனார். பூலித்தேவர் மாபெரும் வெற்றியைப் பெற்றார். இதைப் பற்றி எஸ்.சி.ஹீல் நூலில் பக்கம் 101-இல் குறிப்பிட்டுள்ளார். 12

1760-இல் நடைபெற்ற போரிலும் பூலித்தேவரிடம் படுதோல்வி அடைந்தார் யூசுப்கான். இதைப் பற்றியும் இராபர்ட் ஓம் குறிப்பிட்டுள்ளார்.

1759, 1760 ஆகிய இரண்டு வருடங்களிலும் யூசுப்கான் பூலித்தேவரிடம் படுதோல்வி அடைந்துள்ளார். பூலித்தேவரின் வெற்றிச் செய்திகளையெல்லாம் எடுத்துக் கூறாமல், 1761-இல் பூலித்தேவர் யூசுப்கானிடம் தோல்வி அடைந்தார் என்பதை மிகுந்த ஆர்வத்துடன் வெளியிட்டுள்ளார் கட்டுரை ஆசிரியர் உதயபானு.

1761-இல் யூசுப்கானுக்கும், பூலித்தேவருக்கும் சுமார் நான்கு மாதங்களாக நடைபெற்ற போரில், பூலித்தேவர் தோற்றுப் போனார்.

“மிகுந்த வல்லமை படைத்த பூலித்தேவரை அடக்க கான்சாகிபுக்கு மூன்று ஆண்டுகள் ஆயின” என்று பாரீசில் வெளியிட்டுள்ள நூல் கூறுகிறது.

பூலித்தேவர் கான்சாகிபிடம் தோல்வி அடைந்தது உண்மை.

அதையாரும் மறுத்துக் கூறுவதற்கில்லை. ஆனால் அந்தச் செய்தியைத் திரித்துக் கூறி சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவருக்குக் களங்கம் உண்டாக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பெருந்தன்மையோடு பூலித்தேவரை தப்பித்துச் செல்ல விட்டதாக யூசுப்கான் மேலிடத்திற்கு 25-5-1761-இல் எழுதிய கடிதம் கூறுகிறது.

பேராசிரியர் கு. ராஜய்யன், பேராசிரியர் எஸ். கதிர்வேல் ஆகியோர் இக்கடிதத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இருவருமே யூசுப்கானின் கடிதத்தைத் தவிர, வேறு சான்றுகளைக் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கு. ராஜய்யன் 24-10-1992-ல் எனக்கு அளித்த பேட்டியில், 'கான்சாகிபு மேலிடத்திற்கு அளித்த ஆதாரங்களை வைத்துத்தான் இந்தத் தகவலைத் தெரிய முடிகிறது. ஆனாலும் பூலித்தேவன் கோட்டையை விட்டு வெளியேற அனுமதி கொடுத்திருக்கலாம். இதற்கு உரிய சான்றுகள் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

பூலித்தேவரின் பரம விரோதியான யூசுப்கானின் கடிதத்தை மெய்யென ஏற்றுக்கொள்ளமுடியுமா ? பூலித்தேவர் 'பணிந்தார்' (சரண் அடைந்தார்) என்பது உண்மையில்லை. 'தோல்வி' என்பது போரின் முடிவில் ஒருவருக்கு ஏற்படும் இழப்பு. 'பணிதல்' என்பது தோல்வி அடைந்த பிறகு அடங்குதல் அல்லது 'வணங்கி நிற்றல்' என்பது பொருள்.

"பூலித்தேவர் கான்சாகிபிடம் தோல்வி அடைந்ததும் அவர் கைகளில் சிக்காமல் தப்பித்துக் கடலாடிக்குச் சென்று விட்டார். பூலித்தேவரைக் கைது செய்ய இயலாதது யூசுப்கானுக்குப் பெருத்த அவமானம். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்லிக்கொள்பவரைப் போல், யூசுப்கான் பூலித்தேவரை மன்னித்துப் பெருந்தன்மையுடன் அனுப்பி விட்டதாகச் சொல்வதெல்லாம் கட்டுக் கதை. இதற்கு வேறு சான்றுகள் இல்லை. தோல்வி அடைந்தாலும் கூட பூலித்தேவர் பாளையக்காரர்கள் வரலாற்றில் ஒரு புகழ்மிக்க இடத்தைப் பெற்றுள்ளார். நவாபிற்கு எதிராக பாளையக்காரர்களை ஒன்றிணைத்த தலையாய சிற்பியாகப் பூலித்தேவர் விளங்கினார்" என்று பேராசிரியர் கு. ராஜய்யன் 'மதுரை வரலாறு' நூலில் பக்கம் 209-இல் குறிப்பிட்டுள்ளார்."

'பெயர் பெற்ற பூலித்தேவரை, யூசுப்கான் பிடிக்க எவ்வளவோ முயன்றும் சாத்தியப்படவில்லை' என்று எம்.எஸ்.ராமசாமி ஐயங்கார் "திருநெல்வேலி" என்னும் நூலில் பக்கம் 58-இல் குறிப்பிட்டுள்ளார். 13

பூலித்தேவரை எப்படியும் தொலைத்துக் கட்ட வேண்டும் என்று ஒவ்வொரு வினாடியும் துடித்துக் கொண்டிருந்தார் யூசுப்கான். அதற்கு யூசுப்கான் கம்பெனியாருக்கு எழுதிய கடிதங்களே சான்றாகும். சில கடிதங்களில் குறிப்புகள் மட்டும் கூறப்படுகின்றன. பூலித்தேவர் மிகவும் ஆபத்தானவர். (Wicked) 14

மதுரைக் கோட்டையில் தம்மிடமிருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கிகளை பூலித்தேவர் நமக்கு எதிராகப் பயன்படுத்துகிறார். அவர் வெளியே வந்தால் தலையை எடுத்துத் தங்களுக்கு அனுப்புகிறேன். 15

பூலித்தேவர் கம்பெனியின் நடவடிக்கைகளை முற்றிலும் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். (யூசுப்கான் கடிதம் 30 மே 1756) உரிய காரணமின்றிப் பூலித்தேவரது ஐந்து ஆட்களை யூசுப்கான் துப்பாக்கியால் கொன்று விட்டான். 16

பூலித்தேவரால் ஏற்படும் தொல்லைகளும், குழப்பங்களும் விவரித்துச் சொல்ல முடியாத அளவிற்கு உள்ளது.

பூலித்தேவர் மேல் இத்தகு வேறுபாடுகள் இருக்கும்போது யூசுப்கானின் கைகளில் பூலித்தேவர் சிக்கியிருந்தால் சும்மா விட்டிருப்பாரா ? எப்படியும் பூலித்தேவரை தொலைத்துக் கட்டினால்தான் நிம்மதியாக வாழ முடியும் என்று ஒவ்வொரு வினாடியும் துடியாய் துடித்துக் கொண்டிருந்தார் யூசுப்கான். இது போன்ற யூசுப்கானின் செயல்களால் 'ஆங்கிலக் கம்பெனிக்கு நேர்மையான உண்மையான தொண்டன் யூசுப்கானைத் தவிர வேறுயாருமில்லை' என்று இராபர்ட் ஓம் என்பவர் குறிப்பிட்டுள்ளார். 17

பூலித்தேவரின் படைத்தளபதிகள் ஐவரை யூசுப்கான் கைது செய்தார். கைது செய்த இடத்திற்கே பீரங்கிகளைக் கொண்டுவரச் செய்து அவர்களைக் கட்டி வைத்துச் சுட்டுப் பொசுக்கினார் யூசுப்கான். பூலித்தேவரின் தளபதிகளுக்கே இந்த நிலை என்றால் பூலித்தேவர் யூசுப்கானின் கைகளில் சிக்கியிருந்தால் சும்மா விட்டிருப்பாரா ? அந்தச் சந்தர்ப்பம் யூசுப்கானுக்கு கிடைக்கவில்லை.

பூலித்தேவர், கடலாடிக்குச் சென்று, கும்பினியரை ஒழித்துக்கட்ட சகலவிதமான காரியங்களில் ஈடுபட்டிருந்தார். அதனால்தான் கான்சாகிபு இறந்த பிறகு பூலித்தேவனால் மீண்டும் ஆட்சியில் அமர முடிந்தது.

ஐந்தாவது சர்ச்சையாக, யூசுப்கான் இந்த நாட்டை ஆள வேண்டும் என்ற ஆசையும், ஆங்கிலக் கம்பெனியார்க்கும் ஆற்காடு நவாபுக்கும் ஏன் அடங்கி நடக்க வேண்டும் என்ற எண்ணமும் வந்திருக்கிறது என்று கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு கருத்துக்களையும் ஆராய்ந்தால் யூசுப்கானின் உண்மையான நிலை என்ன ? என்பது தெளிவாகிவிடும்.

தென்னாட்டுப் பாளையக்காரர்களை எல்லாம் அடிபணிய வைத்ததோடு, தலைசிறந்த வீரரான பூலித்தேவரையும் வெற்றி கொண்ட மமதையும், இனிமேல் நம்மை எதிர்ப்பதற்கு யாருமில்லை என்ற ஆணவமும் யூசுப்கானுக்கு ஏற்பட்டது.

ஆற்காடு நவாபோ, யூசுப்கானைப் பரம விரோதியாகக் கருதி வந்தாலும், ஆங்கிலக் கம்பெனியாரை எதிர்த்துப் பேசமுடியாத அளவிற்கு இயலாத தன்மையினாலும், பெயரளவிற்கு நவாபாக இருந்து கொண்டு யூசுப்கானையோ, ஆங்கிலக் கம்பெனியாரையோ எதிர்த்துப் பேசும் வல்லமை இல்லாத நவாப் நிலையை யூசுப்கான் உணர்ந்து கொண்டார்.

ஆங்கிலக் கம்பெனியாரோ, யூசுப்கானே இதுவரை கிடைத்த வெற்றிகளுக்கெல்லாம் காரணமானவர். இனி வரப்போகும் வெற்றிகளுக்கும் அவருடைய தயவுதானே தேவை என்று ஏராளமான பரிசுகளை அவ்வப்போது வழங்கி யூசுப்கானே சரணம் ! என்று ஏதும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர் என்பதையும் யூசுப்கான் தெரிந்து கொண்டார்.

இது போன்ற பல காரணங்களால், யூசுப்கானுக்கு இந்த நாட்டை ஆள வேண்டும் என்னும் பேராசையும், ஆங்கிலேயர்க்கும், ஆற்காடு நவாபுக்கும் ஏன் அடங்கி நடக்க வேண்டும் ? என்ற எண்ணமும் தன்னுடைய சுயநலம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு எழுந்தவை.

ஆற்காடு நவாபும், ஆங்கிலேயக் கம்பெனியாரும் அவர்களின் ஏஜன்டான யூசுப்கானும், தென்னாட்டுப் பாளையக் காரர்களிடம் கப்பம் வசூல் செய்ய வந்த போது "நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள், எங்கள் பாட்டன் பூட்டன் வாழ்ந்த மண். எங்கிருந்தோ வந்தவர்களுக்கு எதற்காக அடங்க வேண்டும் ? ஏன் கட்ட வேண்டும் கப்பம் ?" என்ற கேள்வியைத் தானே பாளையக்காரர்கள் கேட்டார்கள்.

அதற்கு யூசுப்கான் கொடுத்த மரியாதை என்ன ? பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்து ரத்த ஆறு ஓடியதே - அதற்கு இந்த யூசுப்கான் தானே காரணம்.

இந்த மண்ணின் மைந்தர்களின் இருபத்தொன்பது கோட்டைகளையும் இடித்து நொறுக்கித் தரைமட்டமாக்கியதற்கு இந்த யூசுப்கான்தானே காரணம் ?

ஆங்கிலத் தளபதி கெரான் படையெடுத்து வந்தபோது ஓட ஓட விரட்டி அடித்தார் பூலித்தேவர். ஆங்கிலக் கம்பெனியரால் செய்ய முடியாததை, தமிழனான யூசுப்கானைக் கொண்டு தமிழர்களையே காட்டிக் கொடுத்த கயமைத்தனத்தைச் செய்த ஆங்கிலேயர் ஆணையை நிறைவேற்றியவர்தானே இந்த யூசுப்கான் ?

இத்தகைய, தேசத்துரோகத்தில் ஈடுபட்ட யூசுப்கான், ஆங்கிலக் கம்பெனியருக்கும், ஆற்காடு நவாபுக்கும் ஏன் அடங்கி நடக்க வேண்டும் ? என்ற கேள்வியை எழுப்பியதாகக் கூறுவது கேலிக்கூத்தாக இருக்கிறது. நாட்டு மக்கள் நலன் குறித்துச் சொல்லப்பட்ட வாசகமல்ல. தன்னுடைய சுயநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சொல்லப்பட்டது.

யூசுப்கான் முஸ்லீம் என்பதற்காக யாரும் எதிர்க்கவில்லை. இந்த மண்ணின் மைந்தர்; இந்த மண்தான் அவருக்குத் தாயகம் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆங்கிலேயருக்குக் கைக்கூலியாக இருந்து இந்த நாட்டையே அடிமையாக்கக் காரணமாயிருந்த யூசுப்கானின் தான்தோன்றித் தனமே எதிர்க்கப்படுகிறது.

'யூசுப்கான் நிர்வாகத்தில் மக்களுக்காகச் செய்யப்பட்ட நன்மைகள் பலவாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் யூசுப்கானின் நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் கிடைக்கப் பெற்றுள்ள செய்திகள் மிகவும் குறைவே' என்று எஸ்.சி.ஹீல் புத்தகத்தில் பக்கம் 111-இல் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் சில சம்பவங்கள் மட்டும் எடுத்துக்காட்டப்படுகின்றன. 18

மதுரையில் இருந்த பிரபலமான கோயில்களில் வழிபாடுகளைக் கான்சாகிபு புதுப்பித்தார் என்று செய்தி கூறுகிறது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் செல்வம் மற்றும் அரும்பொருட்களை முழுவதுமாக கான்சாகிபு தானே கொள்ளையடித்தார் (அபகரித்துக் கொண்டார்). பின்னர் மீனாட்சி அம்மனின் கோபத்திற்கு உள்ளாகாமல் இருப்பதற்காக மனித நரபலியும் கொடுத்தார் என்ற செய்தி எஸ்.சி.ஹீல் நூலில் பக்கம் 112-ல் கூறுகிறது. 19

'மதுரைக் கோயில்களுக்கு நேரடியாக கான்சாகிபு தானங்கள் வழங்கியுள்ளதற்கான ஆதாரம் ஏதுமில்லை. ஆனால் இராமநாதபுரம் மன்னர் உடையத்தேவருக்கு "சாக்குடி" என்ற ஊரைத் தானமாகக் கொடுத்தார் கான்சாகிபு. அந்த நிலத்தை மதுரை மீனாட்சி கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தார் சேதுபதி. இது போன்ற செய்திதான் உள்ளது. 20

மேலும் நாட்டினை வெள்ளலூயர் நாடு, செருகுடி நாடு, மேலூர் நாடு என மூன்று பிரிவுகளாகப் பிரித்தார் யூசுப்கான். இந்நாடுகளிடையே இவரே கலகத்தை மூட்டி விட்டார். அவர்களுக்குள் கலகம் ஏற்பட்டு முறையிடும் போது பலவீனமான நாட்டிலிருந்து பணத்தைக் கறந்து விடுவார். இதைப் பற்றி எஸ்.சி.ஹீல் தமது நூலில் பக்கம் 302-இல் குறிப்பிட்டுள்ளார். 21

கம்பெனியின் தலைமைப் பொறியாளர் மேஜர் ஜான்கான் பிரெட்டனைச் சந்தித்ததும் கம்பெனி கவுன்சிலுக்கு எழுதியது குறிப்பிடத்தக்கது..

ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு யூசுப்கான் இழைத்த கொடுமைகள் (விவரிக்க முடியாதவை) ஒப்பிடமுடியாதவை. இதனைப் போன்றுதான் இவன் இந்நாட்டிற்கு ஏற்படுத்திய அழிவுகளும். இதைப் பற்றி எஸ்.சி.ஹீல் தமது நூலில் பக்கம் 148-ல் குறிப்பிட்டுள்ளார். 22

மக்களிடம் அதிகமாகக் கப்பத்தொகையை வசூல் செய்தான் என்பதைப் பற்றி நவாபு, சென்னை கவர்னருக்கு எழுதிய கடிதம் கூறுவதாவது : 23

மார்ச் 1759.

வரி வசூலித்திட எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டதோ அதைவிட அதிகமாகவே யூசுப்கான் வசூலித்து இருக்கின்றான். இதுவே நிருபணமாகி உள்ளது. 24

இவனுடைய தந்தைக்குச் சொந்தமான சொத்து ஏதும் இவனுக்குக் கிடையாது. வேறு எங்கும் வேலை செய்து அதனால் பெற்ற சொத்தும் ஏதுமில்லை. ஆனால் இவனிடம் தற்போது உள்ளவையெல்லாம் இந்த நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப் பட்டவையே என்ற செய்தி பற்றியும்; வீடு ஒன்று கட்டியுள்ளான் என்ற செய்தியும் எஸ்.சி.ஹீல் தமது நூலில் பக்கம் 278-இல் குறிப்பிட்டுள்ளார். 25

வருவாயை ஆடம்பரமாக யூசுப்கான் செலவழித்துள்ளது பற்றி எஸ்.சி.ஹீல் தமது நூலில் பக்கம் 259-லும் இவனின் வருமானத்தைப் பற்றி பக்கம் 287-இலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுக்கிக் கொண்டே போகலாம். மக்களுக்கு நன்மை செய்த பட்டியலை விட தீமை செய்த பட்டியலே நீண்டு கொண்டு செல்கின்றன. 26

யூசுப்கான் ஒரு சந்தர்ப்பவாதி. பல நிறம் காட்டும் பச்சோந்தி போன்று சமயத்திற்குத் தகுந்தாற் போலெல்லாம் பேசி மக்களைத் திசை திருப்புவது யூசுப்கானுக்கு கைவந்த கலை.

ஒரு உண்மையான முஸ்லிமாக இருப்பவர் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இந்துக்களே இந்த நாட்டின் உண்மையான சொந்தக்காரர்கள் என்று பிரகடனப்படுத்தினார் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியுமா ? இந்துக்களை தன் பக்கம் இழுப்பதற்கு யூசுப்கான் கையாண்ட தந்திரங்களில் இதுவும் ஒன்று.

நாட்டை நாயக்கர்களிடம் ஒப்படைத்து விட்டு தான் மந்திரியாக பணிபுரியச் சித்தமாயிருப்பதாக அறிவித்து, தெலுங்கு பேசும் மக்களைத் தன் வசப்படுத்த யூசுப்கான் கையாண்ட தந்திரங்களில் இதுவும் ஒன்று.

யூசுப்கான் மத நல்லிணக்கம் கொண்டிருந்தார் என்பதற்கான சான்றுகள் இல்லை. யூசுப்கான் ஒரு முஸ்லிமாக இருந்தும் இந்துக் கோயில்களை ஆதரித்து வந்தார் என்பதற்கு என்ன சான்றுகள் உள்ளன. மீனாட்சியம்மன் கோயிலைக் கொள்ளையடித்தது மத நல்லிணக்கமாகுமா ?

சந்தர்ப்பவாதம்.

யூசுப்கான் 1759 முதல் 1764 வரை தொடர்ந்து போர்களிலேயே காலங்களை கழித்து வந்தார். அதிலும் யூசுப்கான் இறுதிக்காலத்தில் 1761-ல் பூலித்தேவர் போர், 1762-இல் பாளையக்காரர்கள் எதிர்ப்பு போர், 1763-இல் திருவிதாங்கூர் போர், 1764-இல் ஆற்காடு நவாபு - கம்பெனியார் போர் ஆகியவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தக் குறுகிய காலத்திற்குள் எத்தனை நன்மைகளை மக்களுக்குச் செய்திருக்க முடியும் ? மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகவே தெரிய வருகிறது.

போர் விதிகளை மீறி இரவு நேரத்தில் ஆங்கிலேயர் கூடாரங்களைச் சேதப்படுத்துவது பகல் நேரத்தில் போருக்குப் போவதில்லை என்பதற்கும் சான்றுகள் உள்ளன.

ஆறாவது சர்ச்சையாக வருவது யூசுப்கான் கொல்லப்பட்ட நாள்.

கான்சாகிபு 1764-இல் அக்டோபர் 16-ஆம் நாள் அன்று கொல்லப்பட்டார் என்று கட்டுரை ஆசிரியர் கூறுவது தவறாகும்.

யூசுப்கான் கொல்லப்பட்ட நாளைப் பற்றி எஸ்.சி.ஹீல் தமது நூலில் பக்கம் 285, 312-இல் குறிப்பிட்டுள்ளார்.

அதில் யூசுப்கான் 1764 அக்டோபர் 13-ஆம் நாள் கைது செய்யப்பட்டார். 14-ஆம் தேதி கோட்டை கைப்பற்றப்பட்டு, தூக்கில் போடப்பட்டார் என்று செய்திகள் கூறுகின்றன.

Madura was accordingly taken possession of at 6 p.m. on 14th October. Yusuf Khan and his family were taken as prisoners, and the next day Yusuf Khan was hanged. (Yusuf Khan - S.C. Hill. P.312) 27

(சுக்கிராம் இராபர்ட் ஓமிற்கு எழுதிய கடிதம் - 24-10-1764)

Madura wass taken on the 13th of this month from the Commandant Khan Sahibe after sixteen months siege. The French officer who was under his service sent a message to our army that Nawab should save his life and with his troops. He will taken khan sahibe to prison (sic) and deliver the fort, which proposal nawab consented and got the fort the same the 13th of this month, and the khan sahibe was hanged on the 15th.

இந்த ஆதாரங்களின்படி யூசுப்கானைத் தூக்கில் போட்டது அக்டோபர் 15- 1764 என்பதே சரியாகும். தமிழக முதல்வரும், கமல்ஹாசனும் அக்டோபர் 16, 1764 என்று கூறுகிற தவறான வரலாற்றை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும் ? வரலாற்றில் இது பெரும் பிழையை உண்டாக்கியுள்ளது. கட்டுரை ஆசிரியர் வேண்டுமானால் அதை ஏற்றுக்கொள்ளலாம். நாம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

தவறான தகவலைச் சுட்டிக்காட்டக் கூடாதா ? தவறைத் தவறு என்று ஒப்புக்கொள்ளாமல், இதற்கெல்லாம் பதில் கூறுவது என்னுடைய வேலையும் மில்லை என்று தட்டிக் கழிப்பது கமல்ஹாசனுக்கு அழகல்ல.

“மருதநாயகம்” திரைப்படம், நாவலோ, கதையோ அல்ல. அது ஒரு வரலாற்றுப் படம். இந்திய விடுதலைப் போராட்டம்.

மருதநாயகம் திரைப்படத்தில் வரலாற்றுக்கு மாறுபட்ட சம்பவங்கள் வரப்போவதாக, படத்தயாரிப்பாளர் கமல்ஹாசனின் அறிவிப்பை ஒட்டியே இந்தக் கேள்விகள் எழுகின்றன. முரணான வரலாற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் முன்கூட்டியே ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். படம் வெளிவந்த பிறகு முரணான வரலாற்றைச் சுட்டிக் காட்டி என்ன பயன் ? அதனால் பல பிரச்சனைகள் எழும். சுட்டிக் காட்டுவது தவறில்லை.

படம் வருவதற்கு முன்பே சிலர் ஏன் பதற வேண்டும் ? தங்கள் நிலைப்பாடுகளுக்கு ஆபத்து வந்துவிடுமோ என ஏன் அஞ்ச வேண்டும் ? என்று கட்டுரை ஆசிரியர் கேட்பது கமல்ஹாசனுக்கு வக்காலத்து வாங்குவது போல் இருக்கிறது.

பூலித்தேவரை நேருக்குநேர் எதிர்க்கத் துணிவில்லாத கம்பெனியார், தமிழனாகிய யூசுப்கானைப் பயன்படுத்தினார்கள். தன்னுடைய பதவி வெறியால் சொந்த நாட்டவரையே காட்டிக் கொடுத்த யூசுப்கானை முதல் விடுதலைப் போராட்ட வீரனாகச் சித்தரித்துத் திரைப்படம் எடுக்கப் போவதாக கமல்ஹாசன் அறிவித்தார். துரோகியைத் தியாகியாகச் சித்தரித்தால் தியாகியை எப்படிச் சித்தரிப்பது ?

இதைச் சுட்டிக்காட்டுபவர்களெல்லாம் சாதியவாதிகளல்ல. சுதந்திரப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தாமல் "மருதநாயகம்" திரைப்படத்தைத் தயாரித்து பொன்விழாப் பரிசாக வழங்க கமல்ஹாசனுக்கு ஆலோசனைகளை கூற வேண்டுமாய் கட்டுரை ஆசிரியரை வேண்டுகிறேன்.

1. கும்மந்தான் கான்சாகிபு - ந.சஞ்சீவி. பக்.1
2. கான்சாகிபு சண்டை - நா. வானமாமலை - பக்.17
3. யூசுப்கான்-எஸ்.சி.ஹீல். பக்.118
4. மேற்படி நூல் - பக்.310
5. கான்சாகிபு சண்டை - நா. வானமாமலை-பக். 17
6. யூசுப்கான் - எஸ்.சி.ஹீல். பக்.118.
7. சென்னைப் பல்கலைக் கழக அகராதி. பக். 646
8. யூசுப்கான் - எஸ்.சி.ஹீல் பக். 270
9. கான்சாகிபு சண்டை - நா. வானமாமலை -பக். 30
10. யூசுப்கான் - எஸ்.சி.ஹீல் பக். 311
11. கான்சாகிபு சண்டை - நா. வானமாமலை - பக்.44
12. யூசுப்கான் - எஸ்.சி.ஹீல் பக்.101.
13. திருநெல்வேலி - எம்.எஸ்.இராமசாமி அய்யங்கார். பக். 58
14. யூசுப்கான் கடிதம் - சூலை-1756
15. யூசுப்கான் கடிதம் - ஆகஸ்ட் - 1756. கடித எண். 255
16. தீத்தாரப்பர் கடிதம் - 21 ஆகஸ்ட் 1757.
17. யூசுப்கான் - எஸ்.சி.ஹீல். பக்.274
18. மேற்படி நூல் - பக்.111
19. மேற்படி நூல் - பக். 112
20. மேற்படி நூல் - பக். 112
21. மேற்படி நூல் - பக். 302
22. மேற்படி நூல் - பக். 148
23. நவாபு கடிதம் - மார்ச் 1759
24. யூசுப்கான் - எஸ்.சி.ஹீல் - பக்.276.
25. மேற்படி நூல் - பக்.278
26. மேற்படி நூல் - பக். 287
27. மேற்படி நூல் - பக். 312.

இதயம் பேசுகிறது பார்வையில் மருதநாயகம்

மருதநாயகத்தால் தமிழகத்தில் தீ பரவும் !

"இதயம் பேசுகிறது" இதழ் 15-10-98-இல் 'சிற்றிதழ் அறிமுகம்'. 'இந்து தமிழன்' என்னும் தலைப்பில் மருதநாயகத்தால் தமிழகத்தில் தீ பரவும் ! என்ற செய்தியை வெளியிட்டுள்ளது. மருதநாயகம் எடுக்கும் கமல்ஹாசனை "இந்து தமிழன்" ஒரு பிடி பிடித்திருக்கிறது. "மருதநாயகத்தால் தமிழகத்தில் தீ பரவும்" எனப் பசும்பொன்னடியான் எழுதிய கட்டுரையில் கூறியுள்ளதாவது.

"கான்சாகிப் - இதுதான் நாமறிந்த வரலாற்றுப் பெயர். கான்சாகிப்பின் வரலாறு சுவையான சம்பவங்களைக் கொண்டது. வாழ்க்கையில் வெற்றிகளைப் பெறும் வேட்கை காரணமாக நினைத்ததை அடைய மத மாற்றம் துணைபுரியும் என்ற திட்டத்திலோ என்னவோ, மருதநாயகம் என்ற தனது வேளாள குலப்பெயரை உதறி எறிந்துவிட்டு, முஸ்லீம் மதத்தில் சேர்ந்து, வழிபாட்டு முறையை மாற்றிக்கொண்டு, 'கான்சாகிப்' என்ற பெயர் மாற்றிக் கொண்டார். பின்னாளில் தமிழர் குழுக்களுடன் மோதிவிட்டு இறுதியில் வெள்ளையர்களையும் எதிர்த்து அவர்கள் கையாலேயே மாண்டார். எனவே கான்சாகிப்பின் வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க கமல்ஹாசன் தீர்மானித்ததில் வியப்பேதமில்லை.

கமல்ஹாசன் ஓர் அற்புதக் கலைஞர் என்பதிலும், புதிதாகச் சிந்தித்து வித்தியாசமாகச் செய்வதில் அக்கறை கொண்டவர் என்பதிலும், வெற்றி அடைய வேண்டும் என்பதற்காகத் தன்னை வருத்திக் கொள்ளக்கூடத் தயங்காதவர் என்பதிலும், யாரையும் காட்டிக் கொடுக்கக்கூடத் தான் தயங்காதவர் என்பதிலும் அய்யமில்லை.

முன்பே பல சந்தர்ப்பங்களில் காரியம் சாதிக்க கமல்ஹாசன் நிறம் மாறியதுண்டு. 'தேவர் மகன்' என்ற பெயரில் படம் எடுத்து பின்பு ஏன் அந்தப் பெயரில் எடுத்தோம் என்று வருந்துகிறேன் என்று அறிக்கை வெளியிட்டார்.

இதெல்லாம் கமல்ஹாசன் தன் சுய லாபத்திற்காகப் போட்டுக் கொண்ட வேடங்கள். ஆனால் இப்போது போட்டிருக்கும் வேடம் ஆபத்தான வேடம் !

'கான்சாகிப்' என்ற பெயரில் கமல்ஹாசன் படம் எடுக்கட்டும். மனதார வாழ்த்துவோம். பாராட்டுவோம். 'வெற்றியும் பெற வைப்போம்' எனும் லட்சக்கணக்கான ரசிகர்கள் கமல்ஹாசனுக்கு உண்டு.

கான்சாகிப்பின் பூர்வீகப் பெயரில் படம் எடுப்பது யாரை ஏமாற்ற ? யாரைப் பழிக்க ? யாரைத் தூண்ட ? ஏடாகூடமாக ஏதாவது செய்து பிரச்சனையாக்கி மலிவான விளம்பரம் தேடி அதன்மூலம் லாபம் அடைய வேண்டும் என்று ஏன் முயல வேண்டும் ?

அதுவும் கொழுந்துவிட்டு எரியும் மதமாற்றப் பிரச்சனை தென்மாவட்டங்களில் தவித்துக் கொண்டிருக்கும் போது, கமல்ஹாசன் இந்துக்களைச் சவாலுக்கு இழுக்கும் வகையில், இந்துவாக இருந்து முஸ்லிமாக மாறிய கான்சாகிப்பின் வீர வரலாற்றைப் பாருங்கள்; நீங்களும் மகத்தான செயல்களைச் செய்ய மதம் மாறுங்கள் ! என்று சொல்வதைப் போல் கான்சாகிப் கதையை, கான்சாகிப்பே கைவிட்ட 'மருதநாயகம்' என்ற பெயரில் படம் எடுப்பது இந்துக்களுக்கு விடப்பட்ட சவாலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

எனவே, 'மருதநாயகம்' படத்தின் பெயரை 'கான்சாகிப்' என்று மாற்றாமல் வெளியிட்டால் தமிழகத்தில் எதிர்ப்புத் தீ பரவும் என்பது மட்டும் உறுதி ! "

'இந்து தமிழன்' இதழில் வெளிவந்துள்ள இந்தக் கட்டுரையின் கருத்தும், இந்து முன்னணித் தலைவர் இராமகோபாலன் 'குமுதம்' இதழ் 14-5-98-இல் வெளியிடப்பட்டுள்ள கருத்தும் ஒன்று போல் உள்ளது. இருவரும் 'மருதநாயகம்' என்னும் பெயரை "கான்சாகிப்" என்று மாற்ற வேண்டும் எனக் கூறுகின்றனர்.

"மருதநாயகம்" என்னும் பெயரை மாற்றி "கான்சாகிப்" என்னும் பெயரில் வெளியிடுவதை ஏற்றுக்கொள்வதாகக் கூறுகின்றனர். அப்படியானால் இந்துவாகப் பிறந்த 'மருதநாயகம்' முஸ்லிம் மதத்திற்கு மாறி 'கான்சாகிப்' என்னும் பெயரை மாற்றிக் கொண்டான் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா ?

தமிழனாகப் பிறந்த மருதநாயகம், இஸ்லாம் மதத்தில் சேர்ந்து ஆங்கிலேயர்களுக்குத் தமிழர்களையே காட்டிக் கொடுத்தான். காட்டிக் கொடுத்தவனை விடுதலைப் போராட்டத்தின் முதல் வீரன் என்று கமல்ஹாசன் கூறிவருகிறார். அப்படியானால் இந்த மண்ணைக் காப்பாற்றத் தன்னுயிர் பறி கொடுத்தவர்கள் எல்லோரும் துரோகிகளா ? பெயர் மாற்றம் முக்கியமல்ல, துரோகி தியாகியாக மாறினால் தியாகிகளெல்லாம் துரோகிகளா ? இக்கருத்தை வலியுறுத்திப் படம் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான் ஒரே வழி !

மருதநாயகம் ஒரு சந்தர்ப்பவாதி !

கமல்ஹாசன் பேட்டியில், 'மருதநாயகம் என்ற இந்து, முகமதியனாக மதம் மாறினான்' என்று கூறும்போதுதான் மதத்தின் பெயரால் ஏற்படும் அபாயம் தெரியவந்தது.

கமல்ஹாசன் 'குங்குமம்' 23-1-98 இதழுக்கு வழங்கிய பேட்டியில் 'மருதநாயகம் என்ற கான்சாகிப் இந்துவாகப் பிறந்து இஸ்லாமைத் தழுவியவர்' என்று குறிப்பிட்டுவிட்டு 'முஸ்லீமாக மாறும் இந்து... இந்து மதத்திற்குப் பெருமை சேர்க்கிறானா ? இஸ்லாமுக்குப் பெருமை சேர்க்கிறானா ? நான் இதற்கு பிற்பாடு பதில் சொல்லிக்கொள்கிறேன்' என்று நழுவிவிடுவதின் காரணம் என்ன? அதன் உள் நோக்கம் யாது ?

ஒரு மதத்தின் மேல் பற்று ஏற்பட்டு மாறினால் குற்றமில்லை. ஆனால் வெறும் சுயநலத்திற்காக மாறியது எந்த விதத்தில் நியாயம் ? என்று சுப்புடு கேட்ட போது (சாவி 15-1-98) கமல்ஹாசனுக்கு ஞானம் பிறந்திருக்கிறது. 1998 'தேவி' தீபாவளி மலரின் நேர்காணலில் கமல்ஹாசன் கூறியிருப்பதாவது "தீவிர ஆராய்ச்சிக்குப் பிறகு பூதாகரமாகத் தெரிய வந்தது இருபதாம் நூற்றாண்டுக்கு தொடர்புடைய நிகழ்வுகள் - சீரழிவுகள் - மதபேதங்களினால் வரும் குழப்பங்கள் - கோபதாபங்கள், எல்லாமே அதில் தெரிந்தன. அவைகளுக்கு உரிய பதிலும் அங்கேயே கிடைத்தன. அவன்தான் மருதநாயகம்.

எனக்கு இஸ்லாமைப் பரப்பும் நோக்கமில்லை. இந்துத்துவத்தைப் பரப்பும் கொள்கையுமில்லை. இஸ்லாமைத் தாழ்த்துவதோ இந்துத்துவத்தை உயர்த்துவதோ எதுவும் கிடையாது" என்று கமல்ஹாசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேட்டி யாரை ஏமாற்ற ? நாட்டு மக்களையா ? மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு இது நியாயமான பதில் ஆகுமா ?

பிறவியிலேயே இஸ்லாம் மதத்தினனாக இருந்த முகமது யூசுப்கானை, இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறினான் என்று படம் எடுப்பதன் உள் நோக்கம் என்ன ?

மருதநாயகம் இந்துவாக இருந்தாலென்ன ? இஸ்லாமியனாக இருந்தாலென்ன ? மத மாற்றம் பேச வேண்டிய காரணம் என்ன ? தென்பாண்டிச் சீமையில் பற்றி எரியும் மதச்சண்டையும், சாதிச் சண்டையும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இது போன்ற படம் வெளிவருவது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தார் போலாகாதா ? நெருப்புடன் விளையாடுகிறார் கமல்ஹாசன்.

முகமதுயூசுப்கான் இஸ்லாம் மதமாக இருந்தாலும், அவன் மதவாதியாக இல்லாமல் ஒரு சந்தர்ப்பவாதியாக வாழ்நாள் முழுவதும் இருந்து வந்தான்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலைக் கொள்ளையடித்து உயர்ந்த ஆபரணங்களை அள்ளிச் சென்றான் யூசுப்கான். அந்தக் கொடுமையான பாவத்தைப் போக்க ஓர் இளம் பிராமணப் பெண்ணை நரபலி கொடுத்தான். அது மட்டுமல்லாது பிற்காலத்தில் இந்துக்கள் ஆதரவு தேவை என்பதற்காக மதுரையில் கோயிலின் அருகிலிருந்த மசூதியை அப்புறப்படுத்தினான் யூசுப்கான். இந்த யூசுப்கானை எப்படி மதவாதியாக ஏற்றுக்கொள்வது ? யூசுப்கான் ஒரு 'சந்தர்ப்பவாதி' யேயாவான்.

இதயமே! நூறு கோடி கொடு !

மான நஷ்டம் கேட்கிறார் கமல்

25-10-98 "இதயம் பேசுகிறது" இதழில் 'ரஜினியை ஏமாற்றிய கமல்' என்ற தலைப்பில் கமல்ஹாசனைப் பற்றி ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. 'அந்தக் கட்டுரையால் தனது புகழுக்குக் களங்கமும், 'மருதநாயகம்' படத்துக்கு இழப்பும் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையில் இடம் பெற்றிருந்த தகவல்கள் அனைத்துமே பொய்' என்பதாக கமல் ஒரு வக்கீல் நோட்டீசை இதயத்திற்கு அனுப்பியிருக்கிறார். அவர் சார்பாக அந்த நோட்டீசை அனுப்பி இருப்பவர் மரியாதைக்குரிய பிரபல வழக்கறிஞர் கே.ஏ. பஞ்சாபகேசன்.

'பொய்த் தகவல்களை வெளியிட்டதாக நிபந்தனையற்ற மன்னிப்புக் கோர வேண்டும். மன்னிப்புக் கேட்காத பட்சத்தில் இந்திய குற்றவியல் சட்டப்பிரிவு 500, 501, 502-ன் கீழ் கிரிமினல் வழக்குத் தொடங்கப் போகிறேன். அதோடு 'ரஜினியை ஏமாற்றிய கமல்' கட்டுரையால் தனக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக வெளியீட்டாளரும், அச்சிட்டவரும் ஆளுக்குத் தலா ரூ.50 கோடி நஷ்ட ஈடு தரவேண்டும் என்று சிவில் வழக்குப் போட இருக்கிறேன்' என்று வக்கீல் தனது நோட்டீசில் குறிப்பிட்டுள்ளார்.

தேசியம், இந்தியா என்பதிலெல்லாம் நம்பிக்கை கொண்டிருந்த தியாகி சீனிவாசன் அவர்களுக்குப் பிறந்த கமல், வரலாற்றில் சர்ச்சைக்குரிய இந்திய விடுதலைக்கே எதிராக நின்றதாகக் கருதப்படும் "மருதநாயகம்" என்ற கான்சாகிப் பாத்திரத்துக்காக இவ்வளவு பட வேண்டுமா ? என்ற ஆதங்கத்தால் தான் சில விமர்சனங்கள் வாசகர்கள் முன் வைக்கப்பட்டன.

'இது பொறுப்புள்ள ஒரு பத்திரிக்கையின் தர்மம்' என்றுதான் 'இதயம்' கருதுகிறது. 25-10-98 இதழில் வெளியான கட்டுரையின் கடைசிப் பகுதியில், 'மருதநாயகம் என்ற தேச விரோத கதாபாத்திரத்திற்காக நடிப்பு மாமணி கமல் இவ்வளவு கஷ்டங்களை, அவப் பெயர்களைச் சம்பாதிக்க வேண்டுமா ? வருத்தமாக இருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளது.

'இதயம்' ஆசிரியர் இந்த வழக்கைச் சந்திக்கத் தயார் என்று கூறியிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். 'நியாயத்துக்கு அழிவே கிடையாது !' என்னும் இதயத்தின் குரலை மதிக்கிறோம்.

'குங்குமம்' பார்வையில் மருதநாயகம்

மருதநாயகத்திற்கு எதிர்ப்பு !

'குங்குமம்' இதழ் 24-10-97-இல் 'மருதநாயகத்திற்கு எதிர்ப்பு' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வந்துள்ளது. கோடம்பாக்கம் வட்டாரத்தில் சர்ச்சையும் கிளம்பியிருக்கிறதாம்.

பிரிட்டிஷ் துருப்புகளுக்கு ஆதரவாக வெள்ளையர்களை எதிர்த்த பூலித்தேவன் போன்ற பாளையக்காரர்களின் எதிரி மருதநாயகம் ! பிறகு யூசுப்கான் என்று பெயர் மாற்றம் செய்து இந்துக்களை வதைத்தவன் என்று சரித்திர வரலாறுகளை செராக்ஸ் காப்பியுடன் பேசுகிறார்கள். கோடம்பாக்கம் வாசிகள் அவனை வீரபாண்டிய கட்டபொம்மனாகச் சித்தரிக்கிறார்கள் என்றும் அவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

இவர்கள் சினி பீல்டில் கமலின் எதிர்கோஷ்டி என்று நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன ? என்பதாகும்.

இந்துவாக இருந்து பெயர் மாற்றம் செய்தவன் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அவன் பிறவியிலேயே முஸ்லீம். இந்துக்களை வதைத்தவன் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் பாளையக்காரர்களில் பெரும்பான்மையினர் இந்துக்களாக இருந்தனர். அவர்களை இந்து என்னும் பார்வையில் பார்த்தான் என்று சொல்வதற்கில்லை. எதிரிகள் என்றே பார்த்தான். கான்சாகிப் படையிலும் இந்துக்கள் படைவீரர்கள் இருந்தனர். இந்து மதத்தினர் என்ற வேறுபாட்டிற்கான காரணங்கள் இல்லை. மருதநாயகம் இந்து மதமுமில்லை, முஸ்லீம் மதமுமில்லை. அவன் ஒரு சந்தர்ப்பவாதியாவான். இதைப் பற்றி வேறொரு பகுதியில் காணலாம்.

மருதநாயகத்தை, வீரபாண்டிய கட்டபொம்மனாகச் சித்தரிக்கிறார்கள் என்று சொல்வது ஒரு வகையில் பொருத்தம். வீரபாண்டிய கட்ட பொம்மனின் ஆங்கிலேய எதிர்ப்பு மூன்று நிலைகளில் வெளிப்படுகின்றது.

அவைகளாவன : வரிகட்ட மறுத்தல், கொள்ளையடித்தல், போரிடுதல் என்பன.

வீரபாண்டிய கட்டபொம்மன் இடையிடையே வரிக்கட்டி வந்திருப்பதும் தெரிய வருகிறது. கி.பி. 1798-இல் கட்டபொம்மன் 3310 பக்கோடாக்களே வரிபாக்கி வைத்திருந்ததாகவும், ஆனால் கணக்கைச் சரிபார்த்ததில் 1000

பக்கோடாக்களே பாக்கி இருந்ததாகவும் 'தென்னிந்திய வரலாறு' கூறுகின்றது. (ச. இரவி - வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கிலேய எதிர்ப்பு - 2002. பக் 188) இதிலிருந்து கட்டபொம்மன் வரி கட்டியது உண்மை என்று தெரிய வருகிறது. 1

வீரபாண்டிய கட்பொம்மனைப் போலவே மருதநாயகமும் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டினான். ஆங்கிலேயருக்கு அடி பணிந்து 2 இலட்ச ரூபாயை மதுரை, திருநெல்வேலி கிஸ்திக்காக முதல் தவணையாகத் திருச்சிக்கு அனுப்பி வைத்தான் யூசுப்கான். 1760 பிப்ரவரி 7-ஆம் தேதி தனது கடிதத்தில் தெரிவித்தான். மார்ச் 27-ம் தேதி அதே ஆண்டில் கவுன்சிலுக்கு இன்னொரு அறிவிப்புக் கிடைத்தது. அதில் அடுத்த தவணை கிஸ்தியும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. 2

கட்டபொம்மன் நடத்தியதாக 'ஐந்து இடங்களில் நடைபெற்ற கொள்ளைகளை' கட்டபொம்மன் கதைப் பாடல்கள் கூறுகின்றன. அவை : எட்டையபுரத்தில் நடத்திய கொள்ளை, இராமநாதபுரத்தில் நடத்திய கொள்ளை, தூத்துக்குடியில் நடத்திய கொள்ளை, ஆங்கிலேயர் நெற்களஞ்சியத்தில் இரண்டு இடங்களில் அடிக்கப்பட்ட கொள்ளை. 3

வீரபாண்டிய கட்டபொம்மனைப் போலவே கான்சாகிபும் கொள்ளை அடித்தான் என்று ஆவணங்கள் கூறுகின்றன. 'யூசுப்கானிடம் தற்போது உள்ளவை எல்லாம் இந்நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டவை. யூசுப்கானை தூக்கிலிடப்பட்ட பின் அவன் இருப்பிடத்தில் பார்த்த போது கொள்ளையடிக்கப் பட்டவைகள் காணப்பட்டன' என்று எஸ்.சி. ஹீல் - யூசுப்கான் - பக். 278 நூலில் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து திருட்டுத் தொழிலைச் செய்து வந்திருக்கிறான் என்பது தெளிவாகிறது. பணம் சேர்த்து வைப்பதுதான் அவனின் குறிக்கோள் என்பதற்கு அவனுடைய வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன. 4

மதுரைக் கோட்டையைக் கைப்பற்றிய போது 4 இலட்சம் பக்கோடா (14 இலட்ச ரூபாய்!) இருப்பதாகத் தெரிகிறது. யூசுப்கான் வரிவசூலை ஆடம்பரமாகச் செலவழித்துள்ளதாகவும் தெரிகிறது. 5

நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமாகவே யூசுப்கான் வசூலித்தான். இத நிரூபணமாகி உ.ள்ளது. 6

கட்டபொம்மனைப் புளியமரத்தில் தூக்கிலிட்டதைப் போல், யூசுப்கானையும் மாமரத்தில் தூக்கிலிட்டனர் ஆங்கிலேயர்.

'இந்திய தேசியம்' என்ற ஒருமைப் பாட்டுணர்வோடு, மக்கள் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வோடு இருந்ததற்கான சான்றுகள் இல்லாத நிலையில் கட்டபொம்மனை விடுதலைப் போராட்ட வீரன் என்று கூறுதைக் காட்டிலும் ஆங்கிலேய எதிர்ப்பு வீரன் என்று கூறுவதே பொருத்தமுடையதாக அமைகின்றது. கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்ப்பதைத் தன்னுரிமை பெறுவதற்குப் பயன்படுத்தியிருக்கின்றான். 7

கட்டபொம்மனைப் போலவே யூசுப்கானின் வரலாறும் ஒன்று போலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருவரும் ஆங்கிலேயரைத் தழுவிச் சென்றதால், இருவர் மரணமும் ஒன்று போல் நேரிட்டது.

கும்பினியர்க்கு வரி கட்ட வேண்டுமென்றும் அதற்காகத் தன்னை வந்து பேட்டி காண வேண்டுமென்றும் ஜாக்சன் துரை கூறியபோது, பேட்டி காண முடியாது என்று கட்டபொம்மன் மறுத்திருக்க வேண்டும். ஆனால், கலெக்டரைப் பார்ப்பதன் மூலம் பகைமையைக் குறைத்துக் கொள்ளலாம் என்று நம்பினான். இந்த இடத்தில் கட்டபொம்மனின் தன்மானம் பறிபோனது. தனியே சென்று கலெக்டரைச் சந்தித்தால் தீங்கு நேரும் என்று எண்ணி, 1798-இல் தளபதிகள் முன் செல்ல, தம்பிமார் புடைசூழ, கலெக்டரைக் காணத் திருநெல்வேலிக்குச் சென்றான் கட்டபொம்மன். இவன் பேட்டிக்கு வந்ததைக் கண்டு யாவரும் வியந்தனர்.

வரி கட்ட முடியாது என்று பாஞ்சாலங்குறிச்சியிலேயே கட்டபொம்மன் இருந்திருக்க வேண்டும். வரி கட்ட மறுப்பதென்றால் கலெக்டரைக் காணவேண்டிய அவசியம் என்ன ? 8

வீரபாண்டிய கட்டபொம்மனை அவமதிக்கும் நோக்கத்தோடு ஜாக்சன் குற்றாலத்திற்குச் சென்றுவிட்டான். பேட்டி காண வந்த தன்னை அவமானப்படுத்தி விட்டான் ஜாக்சன் என்பதை வீரபாண்டிய கட்டபொம்மன் நன்கு உணர்ந்தான். அவன் ஒரு சுதந்திர வீரனாக இருந்திருப்பானேயானால் குற்றாலத்தைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டான். தம்மை அவமானப்படுத்திய ஜாக்சனைப் பேட்டி காண வேண்டிய அவசியமில்லை என்று திரும்பி வந்திருக்க வேண்டும். இந்த இடத்தில் ஒரு கோழை போல் நடந்து கொண்டான். இது வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முதன்முதல் ஏற்பட்ட கருப்புப் புள்ளியாகும்.

குற்றாலம் நோக்கிச் சென்ற வீரபாண்டிய கட்டபொம்மனின் பயணம் பரிதாபமாக இருந்தது. தொடர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு பல கருப்புப் புள்ளிகள் ஏற்பட்டன.

"தயவுள்ள பிரதானிக்குஞ் சேனைக்குஞ்

சகல பேர்க்கொரு சேதி சொல்லி

கண்ட சனம் நீங்களெங்கே போரீரென்று

கண்டிப்பாய் கேட்டவர் தங்களுக்கு

என்குலம் போற்றிய குற்றால நாதரை

இப்போ தெரிசிக்கப் போகிறோமென்று

சொல்லுங்கள் சொல்லுங் களென்று கட்டபொம்மு

துரையுஞ் சொல்லி வழி கூடி"

இதைப் பற்றி 'வீரபாண்டிய கட்டபொம்மு' கதைப்பாடல் கூறுகிறது. 9

வீரபாண்டிய கட்டபொம்மனே படைவீரர்களுக்குச் சொல்வதாக, இப்பாடல் கூறுகிறது. பேட்டிக்குப் போவது வெளியே தெரிந்தால் மக்கள் கேவலமாகப் பேசுவார்கள் என்னும் கருத்தின் அடிப்படையில் இப்பாடல் அமைந்துள்ளது.

ஜாக்சன், வீரபாண்டிய கட்டபொம்மனை அவமானப்படுத்த வேண்டும் என்று திருநெல்வேலியிலிருந்து குற்றாலத்திற்குச் சென்றுவிட்டான். ஜாக்சன் குற்றாலம் சென்று விட்டான் என்று தெரிந்தவுடன் வீரபாண்டிய கட்டபொம்மன் என்ன செய்திருக்க வேண்டும் ? நம்மை அவமானப் படுத்திய ஜாக்சனை பேட்டி காண வேண்டிய அவசியமில்லை என்னும் முடிவுக்கல்லவா வந்திருக்க வேண்டும் ? அதை விடுத்து, குற்றாலம் சென்றான். அங்கும் பேட்டி கொடுக்காமல் ஜாக்சன் சொக்கம்பட்டிக்குச் சென்றுவிட்டான். இப்படியாகக் கட்டபொம்மன் சிவகிரி, சேத்தூர், திருவில்லிபுத்தூர், பேரையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி ஆகிய ஊர்களுக்கெல்லாம் சென்று ஜாக்சனைப் பேட்டி காண முடியாமல் 23 நாட்களைக் கடந்து முடிவில் இராமநாதபுரம் வந்து சேர்ந்தான்.

ஜாக்சனின் சதித்திட்டம் வீரபாண்டியனுக்கு விளங்கியும் கூட பின் தொடர்ந்து சென்றான் என்றால் அவனைத் தன்மானம் காந்த மாவீரன் என்று

எப்படிச் சொல்வது ? நாம் ஏன் வீணாக ஜாக்சனைப் பகைத்துக் கொள்ள வேண்டும் ? ஏதாவது நொண்டிச் சாக்கைச் சொல்லி தற்போதைக்கு சமாளித்துக் கொள்வது என்னும் நோக்கமே தவிர வேறு நோக்கமில்லை. வீரபாண்டிய கட்டபொம்மன் விடுதலை வீரனாக இருந்திருப்பானே யானால் இவ்வளவு தூரம் 23 நாட்களாக வந்து ஜாக்சனைப் பேட்டி காண வேண்டிய அவசியமில்லை. இவனைப் போய் விடுதலை முழக்கத்தின் முதல்வன் என்று கூறலாமா ?

திருச்சி சென்று வீரபாண்டியன் பேட்டி கண்டதும் குறிப்பிடத் தக்கதாகும். ஆங்கிலேயரைத் திருச்சியில் பேட்டி கண்டு, பல வெகுமதிப் பொருட்களைக் கட்டபொம்மன் பெற்று வந்தான் என்பது மேற்கண்ட செயலை உறுதிப்படுத்துகிறது.

இந்த வகையில்தான் யூசுப்கானையும், கட்டபொம்மனையும் ஒன்று போல் இருப்பதாக கோடம்பாக்கத்தார் நினைத்தனர் போலும். 'இந்திய தேசியம்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வோடு மக்கள் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வே இருந்ததற்கான சான்றுகள் இல்லாத நிலையில் கட்டபொம்மனை "விடுதலைப் போராட்ட வீரன்" என்று கூறுவதைக் காட்டிலும் ஆங்கிலேய எதிர்ப்பு வீரன் என்று கூறுவதே பொருத்தமுடையதாக அமைகின்றது. 10

"வீரபாண்டிய கட்டபொம்மன் கண்டிப்பாகச் சுதந்திரத்திற்காகத்தான் போராடினாரான்னா சரித்திரத்தைப் பார்த்தா தெரியும். யாருக்குமே அந்த கான்சஃப்ட் இருந்திருக்க முடியாது. சட்டுனு யாரைக் கேட்டாலும் நேசனல் பாலிடிக்ஸ் பத்தி தெரிஞ்சிருக்காது." 11 என்று கமல்ஹாசன் கூறுவதும், கோடம்பாக்கத்தார் கூறுவதும் ஒன்று போல் உள்ளது. இதிலிருந்து வீரபாண்டிய கட்டபொம்மனும், மருதநாயகமும் சுதந்திரப் போராட்ட வீரர்களல்ல. வெள்ளையர் எதிர்ப்பாளர் என்று சொல்வதே சாலச்சிறந்தது.

அதற்காக மருதநாயகத்தை விமர்சிப்பவர்கள் எல்லாம் சினிபீல்டில் கமலின் எதிர்க்கோஷ்டியினர், அவர்கள் அங்கலாய்க்கிறார்கள் என்று 'குங்குமம்' கூறியதிலிருந்து அதுவும் மருதநாயகத்திற்கு நேரடியான ஆதரவாளர் என்று வெளிப்படையாகக் காட்டிக் கொள்வது வருந்தத்தக்க விசயம். வரலாற்று சர்ச்சை தேவைதான் என்றாலும் முரண்பாடான தகவல்களைத் தவிர்க்க வேண்டும்.

"வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படம் பெரும் சர்ச்சைக்கு ஆளானது. கட்டபொம்மன் தமிழனல்ல, தெலுங்கன். சுதந்திரப் போராட்ட

வீரனல்ல. கொள்ளைக்காரன். உண்மையிலேயே பிரிட்டிஷ் அரசை எதிர்த்துக் குரல் கொடுத்த தமிழன் பூலித்தேவன் தான். அதனால் கட்டபொம்மனைச் சுதந்திரப் போராட்ட வீரனாகச் சித்தரிப்பதை நிறுத்த வேண்டும்" என்று தமிழ்வாணன் குரல் கொடுத்தார். இது பற்றி 'கொள்ளைக்காரன் கட்டபொம்மு' என்ற நூலையும் வெளியிட்டார். ஆனால் கட்டபொம்மன் திரைப்படம் இன்று வரையில் இந்திய சுதந்திரப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு சிறந்த படமாகப் போற்றப்பட்டு வருகிறது.

'கட்டபொம்மன்' திரைப்படம் வெளிவரு முன்பு கிராமங்கள் தோறும் 'கட்டபொம்மன்' நாடகம் பிரபல்யமாக நடந்து வந்தது. அதனால் கட்டபொம்மனைத் தெரிந்த அளவு பூலித்தேவனை மக்களுக்குத் தெரியவில்லை. மேலும் கட்டபொம்மனின் உண்மை வரலாற்றைச் சித்தரிக்காமல் வேறு விதமாகச் சித்தரித்து வெளியிட்டதும், கட்டபொம்மனாக 'நடிகர் திலகம் சிவாஜிகணேசன்' நடித்ததும் தான் அதன் வெற்றிக்குக் காரணமாகும்.

1. வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கில எதிர்ப்பு - 2002
- ச. இரவி. பக். 188.

2. யூசுப்கான் - எஸ்.சி.ஹில் - பக். 102.

3. வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கில எதிர்ப்பு - பக். 189.

4. யூசுப்கான் - எஸ்.சி.ஹில் - பக். 278.

5. மேற்படி நூல் - யூசுப்கான் - பக். 287.

6. மேற்படி நூல் - யூசுப்கான் - பக். 276.

7. வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கில எதிர்ப்பு 2002
- ச. இரவி 2000. பக். 192

8. பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் - செகவீர பாண்டியனார் 1939. பக். 84.

9. வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடல்
- நா. வானமாமலை 1971. பக். 37

10. மேற்படி நூல் - பக். 192.

11. குங்குமம் 9-4-1999. பக். 42.

மருதநாயகமும் மகாத்மா காந்தியும் !

காரைக்குடியில் மருதநாயகம் படப்பிடிப்பில் ஏற்பட்ட கலவரத்தினால் கமலே நேரிடையாக ஒவ்வொரு ஊருக்கும் போய், ஊர் பெரியவர்களைச் சந்தித்துப் பேசி ஆதரவு திரட்டினார் என்று தெரிய வருகிறது. சில இடங்களில் நல்ல காரியங்களுக்காக நிதி உதவி செய்து வருவதாகக்கூட கேள்வி. மேலும் பல ஊர் ஜனங்களில் பெரும்பகுதியினருக்கு சாப்பாடும் சம்பளமும் கொடுத்து சமாளிக்கப்பட்டதாம். 1

காரைக்குடி, கேரளா மற்றும் சில இடங்களில் நடைபெற்ற கலவரங்களால் மருதநாயகம் படம் எடுப்பது தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். அதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

"மருதநாயகம்' படத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் கமல். பி.பி.சி நிறுவனம் அளிப்பதாகக் கூறியிருந்த உதவித்தொகை கிடைக்காததால் பணியாற்றியவர்களுக்குச் சம்பளத் தொகையைக் கொடுத்துள்ளார். கேசவப் பெருமாள் கோயில் தெருவிலுள்ள அலுவலகத்தை காலி செய்து விட்டு, அங்கிருந்த பொருட்களை எல்டாம்ஸ் ரோட்டிலுள்ள தனது பழைய வீட்டுக்குக் கொண்டு சென்று விட்டார். மருதநாயகம் படத்துக்காக வளர்த்து வந்த தாடியையும் ஷேவ் செய்து எடுத்துவிட்டார்" என்று "தினமலர்" கூறுகிறது. 2

"மருதநாயகம்" படப்பிடிப்புக்காகச் சென்ற அடிப்பொடிகள் பலர் அவரை அனாதை ஆனந்தனாக விட்டு விட்டு தலை தப்பி வந்துவிட்டனர். காரணம் வேறு யாருமல்ல. கமலேதான்" என்று சி.பொ.என்பவர் 'துணுக்கு மூட்டை' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். 3

"மருதநாயகம் படத்தின் பெயரை 'கான்சாகிபு' என்று மாற்றாமல் வெளியிட்டால், தமிழகத்தில் எதிர்ப்புத் தீ பரவும் என்பது மட்டும் உறுதி" என்று 'இந்து தமிழன்' இதழ் கூறுகிறது. 4

காரைக்குடி, கேரளாவில் நடந்த கலாட்டாக்களைக் கேள்விப்பட்ட ரஜினி, "படம் எப்படியானாலும் வரட்டும், ஆனால் டென்சனாகி பப்ளிக்கிடம் கெட்ட பெயர் எடுத்துடாதீங்க" என்று அட்வைஸ் செய்தார். மருதநாயகம் ஷூட்டிங்கே நடக்கவில்லை. படம் வெளிவருமா ? என்ற சந்தேகம் இன்னும் தமிழ்த் திரைப்பட உலகில் உலவுகிறது. காரைக்குடியே கலாட்டாகளமானது. ஏகப்பட்ட பிரச்சனை. அதை ஒரு வழியாக சமாளித்துக் கொண்டு கேரளாவிற்கு படப்பிடிப்புக்குச் சென்றார். அங்கேயும் கலாட்டா. 5

மருதநாயகம் என்ற தேசவிரோதமான கதாபாத்திரத்திற்காக நடிப்பு மாமணி கமல் இவ்வளவு கஷ்டங்களை - அவப் பெயர்களைச் சம்பாதிக்க வேண்டுமா ? வருத்தமாக இருக்கிறது ! 6

25-1-98 'இதயம் பேசுகிறது' இதழ் 'ரஜினியை ஏமாற்றிய கமல்' என்ற தலைப்பில் கமல்ஹாசனைப் பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையில் தனது புகழுக்குக் களங்கமும், மருதநாயகம் படத்துக்கு இழப்பும் ஏற்பட்டிருக்கிறது என்று 100 கோடி மான நஷ்டம் கேட்டு கமலின் வழக்கறிஞர் கே.ஏ.பஞ்சாபகேசன் நோட்டீஸ் விட்டுள்ளார். 7

எது எப்படியோ, மருதநாயகம் படப்பிடிப்பு நிறுத்தப் பட்டுள்ளது. மருதநாயகம் படத்தை நான் பண்ணவில்லை. தள்ளி வைத்திருக்கிறேன். ஆனால் நிச்சயமாக எடுப்பேன். அந்த இடைக்காலத்தில் வெளியாகப் போகும் படம் 'ஹேராம்' என்று கமல்ஹாசன் கூறியுள்ளார். 8

'மருதநாயகம்' படத்தை அறிவித்த போது இந்துத்வா சக்திகளிடமிருந்து எதிர்ப்பு எழுந்தது. அவர்களைத் திருப்தி பண்ணுவதற்குத் தான் இந்த 'ஹேராமா ?' என்ற கேள்வி எழுந்தது.

'மருதநாயகம்' படத்தை வெளியிடுவதற்கு முன்னோடியாக 'ஹேராம்' படத்தை வெளியிட்டு விட்டால், 'மருதநாயகம்' படத்தையும் எந்தவிதமான எதிர்ப்புமின்றி வெளியிட்டு விடலாம் என்னும் நப்பாசையில் கமல்ஹாசன் இருப்பதாகத் தெரியவருகிறது. 'ஹேராம்' படத்திற்குக் கிடைக்கும் ஆதரவும், எதிர்ப்பும் பொறுத்திருந்து பார்த்தால்தான் தெரியும்.

'என்னால் காந்தியை மகாத்மாவா பார்க்க முடியல' என்று கமல்ஹாசன் தொடர்ந்து கூறிவருகிறார். ஆனால் அவரின் ரசிகர்களே '21-ஆம் நூற்றாண்டின் மகாத்மா கமல்ஹாசன்' என்று கூறி சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர். இது எந்த வகையில் நியாயமாகும் ? காந்திக்கு மகாத்மா என்ற பட்டம் பொருந்தாது என்று கமல்ஹாசன் கூறுகிறார். மறுபக்கம் அவரின் ரசிகர்கள் 21-ஆம் நூற்றாண்டின் மகாத்மா என்று கூறுவது பொருந்துமா ? 'என்னை மகாத்மாவாக ஆக்காதீர்கள்' என்று ரசிகர்களுக்கு அறிக்கை விட வேண்டியது தானே நியாயம். அதை விடுத்து வீணான சர்ச்சைகளை உண்டுபண்ணி, தேவையில்லாத பிரச்சனைகளை உருவாக்குவதன் மூலம் விளம்பரம் தேடும் கமலின் தந்திரங்களில் இதுவும் ஒன்று என எண்ணத் தோன்றுகிறது.

மகாத்மா காந்தியையும், தேசிய இயக்கத்தையும் விமர்சனம் செய்யும் முயற்சியை கமல்ஹாசன் விட்டுவிட வேண்டும் என்று த.மா.கா. மகளிர் குழு தலைவி ஜெயந்திநடராசன் எம்.பி., ஓர் அறிக்கையில் பதிலளித்துள்ளார். இதற்கு கமல்ஹாசன் மகாத்மாவை விமர்சனம் செய்ய எனக்கு உரிமையுண்டு என்று கூறியுள்ளார். இதற்குப் பதில் கூறும் முகத்தான் மகாத்மாவின் புகழை நிலைநிறுத்தும் உரிமை மற்றவர்களுக்கும் உண்டு என்று ஜெயந்தி நடராசன் கூறியுள்ளார். (தின இதழ்களில் வெளிவந்துள்ளன)

கமல்ஹாசன் நற்பணி மன்றம், ஜெயந்தி நடராசனின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு மன்னிப்பும் கேட்க வேண்டும் என்று கடுமையாகக் கண்டனம் செய்தது. (தினபூமி - 30-11-98) இந்நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணமென்ன ? மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார் போன்றவர்களைப் பற்றிய விமர்சனம் தான் ! 9

வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதைப் போல் 'ஹேராம்' முடிந்துவிட்டது. இனி மீண்டும் "மருதநாயகம்" சர்ச்சையை ஆரம்பித்து விட்டார். இதை விபரீதமாகக் கொள்ளாமல் விளையாட்டாகக் கருதுவது இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லதல்ல.

"ஹேராம்' படம் வெளிவந்துவிட்டது. இந்திய நாடு முழுவதும் மிகவும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த மக்களுக்கு எதிர்ப்பை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ்சினிமாவை உலகத் தரத்திற்குச் சமமாக உயர்த்தி உள்ள கமல்ஹாசனுக்கு முதலில் ஒரு சபாஷ் போட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கதையைக் கையாளுகிற தைரியம் வேறு யாருக்கும் வராது. அதை துணிந்து எடுத்திருக்கிறார் கமல்ஹாசன்.

தமிழ் சினிமாவில் 'ஹேராம்' படத்தின் மூலம் மகுடத்தை கமல்ஹாசன் சூட்டியுள்ளார். இப்படத்தின் மூலம் கமல்ஹாசனின் நீண்டநாள் கனவான ஆஸ்கார் விருதுக் கதவுகள் திறக்கக் காத்திருக்கிறது" என்று 'தினபூமி'யில் செய்தி வந்துள்ளது. (தினபூமி 18-2-2000)

ஆனால் அதே நேரத்தில் மத்தியப்பிரதேச மாநிலத்தில் 'ஹேராம்' படத்தை எதிர்த்துக் காங்கிரஸ்காரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜபல்பூர் மாவட்டத்திலுள்ள திரையரங்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். படத்தைப் பாதியில் நிறுத்த முயன்ற இளைஞர் காங்கிரசாரைப் போலீசார் தடுத்து நிறுத்தினர்.

கல்கத்தாவில் 'ஹேராம்' படத்தை எதிர்த்துக் காங்கிரசார் கடும் ரகளை செய்தனர். படப்பெட்டியைக் கடத்த முயற்சித்தனர். பேனர்களையும், போஸ்டர்களையும் தீ வைத்து எரித்தனர். 'ஹேராம்' படம் மூலம் காந்தியை இழிவுபடுத்தியதாகக் கூறி இந்த அமளியில் ஈடுபட்டுள்ளனர் என்று தமிழ்முரசு இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (தமிழ் முரசு - 22-2-2000)

'ஹேராம்' படத்திற்கு வடநாட்டில் எதிர்ப்பு இருந்த அளவு தென் தமிழகத்தில் இல்லை. 'அய்யா மூப்பனாருக்கு விளக்கிக் கூறப்பட்டுவிட்டது. இனி அவர் பார்த்துக் கொள்வார்' என்று கமல்ஹாசன் கூறியதால் காங்கிரஸ் தொண்டர்கள் கட்டுப்பட்டனர் என்று தினபூமிச் செய்தி கூறுகின்றது. (தினபூமி - 1-12-1999) தென்பகுதியில் போராட்டம் வெடிக்காமல் செய்த மூப்பனாருக்கு கமல் நன்றி செய்யக் கடமைப்பட்டுள்ளார். 10

இந்நிலையில் சினிமா உலகில் சர்ச்சைக்குரிய திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடுவது கமல்ஹாசனின் பொழுதுபோக்காகிவிட்டது. ஒரு பக்கம் 'ஹேராம்' சர்ச்சை நடந்து கொண்டிருக்கும் போதே, மறுபக்கம் 'மருதநாயகம்' படத்தைப் பற்றிய சர்ச்சையைத் தொடுத்துள்ளார்.

'மருதநாயகம் படத்தை நான் ட்ராப் பண்ணவில்லை. தள்ளி வைத்திருக்கிறேன். ஆனால் நிச்சயமாக எடுப்பேன். மருதநாயகம் ஒரு அருமையான சினிமா ப்ராசெக்ட். அதைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை' என்று கூறினார் கமல்ஹாசன்.

சில பிரச்சனைகள் காரணமாக இதன் படத்தயாரிப்பில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. மற்றபடி மருதநாயகம் என்றாவது ஒருநாள் திரைக்கு வருவார். இப்படத்திற்காக நிறைய அனுமதிகள் வாங்க வேண்டி உள்ளன. சரித்திர ஆராய்ச்சி யாளர்கள் தொகுத்துத்தந்த பல அரிய செய்திகளின் அடிப்படையில் இதன் மூலக்கதை, திரைக்கதை அமைந்துள்ளது என்று கூறுகிறார் கமல்ஹாசன். 11

மருதநாயகம் படத்தை ட்ராப் பண்ணச்சொல்லி, அதை எடுக்க வேண்டாம் என்று யார் சொன்னார்கள் ? அருமையான சினிமா புராசெக்ட்டை கைவிடும்படி யார் சொன்னார்கள் ? எந்தப் பிரச்சனைகள் காரணமாக இந்தப் படத்தின் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதைப் பகிரங்கமாக வெளியிடத் தயாரா ? ஒருநாள் திரைக்கு வருவார் என்று கூறுகிறார். வரவேண்டாம் என்று தடுத்தவர்கள் யார் ?

சரித்திர ஆராய்ச்சியாளர்கள் தொகுத்துத்தந்த பல அரிய செய்திகளின் அடிப்படையில் இதன் மூலக்கதை, திரைக்கதை அமைந்துள்ளது என்று கமல்ஹாசன் கூறியுள்ளாரே, அப்படியானால் மருதநாயகம் திரைப்படத்தின் மூலக்கதை, திரைக்கதை, வெளியிடத் தயாரா ? மருதநாயகம் எதிர்ப்பாளர்கள் அதை வெளியிட வேண்டும் என்று தானே சொல்லுகிறார்கள். அதை வெளியிடுவதில் என்ன சிரமம் உள்ளது ? கமல்ஹாசன் வெளியிடவில்லை என்றால், அதனால் ஏற்படக் கூடிய சரித்திர முரண்பாடுகளுக்கும் அவரே காரணமாவார். மருதநாயகம் திரைப்படத்தை வர வேண்டாம் என்று யார் தடுத்தது ? யாரும் தடுக்காத நிலையில் இவ்வாறு அறிக்கை விடுவது விளம்பர நோக்கோடும், வணிக நோக்கோடும்தான் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

சரித்திர ஆராய்ச்சியாளர்கள் தொகுத்துத்தந்த பல அரிய செய்திகளின் அடிப்படையில் மருதநாயகம் திரைப்படத்தின் மூலக்கதையும், திரைக்கதையும் அமைந்துள்ளது என்று கமல்ஹாசன் கூறினாலும் (தினமணி 2-5-2002) மூலக்கதையைப் பற்றியோ, திரைக்கதையைப் பற்றியோ இதுவரை கமல்ஹாசன் வெளியிட்டது கிடையாது. அதை வெளியிட்டால் ரசிகர்களுக்குத் தெரிந்து விடும். உண்மையான கருத்து என்ன உள்ளது என்று எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்துவிடும். எதிர்ப் பாளர்களும் அதைத்தானே சொல்கிறார்கள். இதற்குத் தயக்கம் ஏன் காட்ட வேண்டும் ?

மூலக்கதையையும், திரைக்கதையையும் 'சினிமா ஸ்பெசல்' வெளியிட் டுள்ளது. அது எந்த அளவிற்கு உண்மையாக இருக்கும் என்று சொல்வதற் கில்லை. அந்தக் கட்டுரையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள 'சினிமா ஸ்பெசல்' கட்டுரையை தனியாக வெளியிட்டுள்ளோம்.

மருதநாயகம் விடுதலைப் போராட்ட வீரன் அல்ல என்று சொல்ல கமல்ஹாசன் தயாராக உள்ளாரா ? ஆங்கிலேயருக்காகப் பல்லாயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த மருதநாயகம் தியாகியானால் தமிழ் மண்ணைக்காக்க, தமிழ் வீரர்களைக் காணிக்கையாக்கி பலி கொடுத்த வீரத்தமிழன் பூலித்தேவன் துரோகியா ? மாவீரன் பூலித்தேவன் மட்டுமல்ல; கொல்லங்கொண்டான் வாண்டையாத் தேவர், சேத்தூர் பாளையக்காரன் திருவநாதன் மற்றும் சொக்கம்பட்டி, ஊத்துமலை, தலைவன் கோட்டைப் பாளையக்காரர்களையெல்லாம் எதிர்த்துப் போரிட்ட மருதநாயகம் விடுதலைப் போராட்ட வீரனா ? மருதநாயகம் விடுதலைப் போராட்ட வீரன் என்பதற்குச் சான்றுகளை கமல்ஹாசன் கூறுவாரா ? ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர்களைக் காட்டிலும், ஆங்கிலேயருக்கு வரிவசூல் செய்த யூசுப்கான் எந்த வகையில் உயர்ந்தவர் ?

ஆங்கிலேயருக்கு அடிபணிந்து யூசுப்கான் சென்னை கவுன்சிலின் உத்தரவுப்படி கப்பம் கட்டினான். சென்னை கவுன்சிலின் உத்தரவுப்படி 2 இலட்ச ரூபாய் மதுரை, திருநெல்வேலி கிஸ்திக்காக முதல் தவணையாகத் திருச்சிக்கு அனுப்பியதாக யூசுப்கான் 1760 பிப்ரவரி 7-ஆம் தேதி தனது கடிதத்தில் தெரிவித்தான். மார்ச் 27-ஆம் தேதி அதே ஆண்டில் கவுன்சிலுக்கு இன்னொரு அறிவிப்புக் கிடைத்தது. அதில் அடுத்த தவணை கிஸ்தியும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. 12

At this time the Nawab was in great want of money, and on the 7th February, 1760, the council received a letter from Yusuf Khan, saying he had, in accorance with then orders, sent two lakhs of rupees to Trichirapaly as the first instalment of his rent from Madura and Tirunelvely. On the 27th March, council received notice of a further instalment being on the way and decided to instruct yusufkhan to send his rent direct to madras, as the nawab would not allow a penny to escape him if the money once got into to his hands. It looks, there after, as if the nawab had detained the first instalment. In June Yusuf Khan sent a furtherremittance, which must have been much appreciated by the council in their desperate and expensive campaign against Lally, but they were still unable to make up their minds to accept Yusuf Khan's proposal for a three years tender of the rentership. In this letter of the 20th Sep. 1762. (Appendix - I : P. 243) to Mr. Pigot.

Yusuf Khan Says : "When our army besieged pondicherry I sent from hence to the Nawab about two lakhs of pagodas, the rent of these country, as the Nawab said he wanted them for the use of his army".

“எனது முழுத்திறனையும் பயன்படுத்தி கிழக்கிந்தியக் கம்பெனியின் பணிகளை நிறைவேற்றுவேன். நான் யார் என்று வெளிப்படுத்துவதில் சற்றும் மாறமாட்டேன் ... தங்களைத் தவிர எனக்கு பாதுகாப்பு வேறில்லை. தாங்கள் எனக்கு அளிக்கும் ஆதரவு தொடரட்டும் என்று யூசுப்கான் எழுதிய கடிதம் குறிப்பிடுகிறது. 13

என்னுடைய திறமைகளை எல்லாம் பயன்படுத்திக் கிழக்கிந்தியக் கம்பெனிப் பணிகளை நிறைவேற்றுவேன். நான் ஆங்கிலேயரின் கையாள் என்பதிலிருந்து மாறமாட்டேன். எனக்கு அளிக்கும் ஆதரவு தொடரட்டும் என்று கூறிய யூசுப்கான் இந்திய விடுதலைப் போரின் முதல் வீரனா ?

யூசுப்கானின் திறமையைப் பார்த்து ஆங்கிலேயர் பாராட்டும் கடிதத்தில் உன்னுடைய உழைப்பு மற்றும் பொறுப்பு பாராட்டத்தக்கது. அந்தப் பகுதி நலனுக்கும் கம்பெனியின் நலனுக்கும் ஏற்றதை நீ தொடர்ந்து செய் ! என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பெனி நலனுக்காகப் பாடுபடும் யூசுப்கான் இந்திய விடுதலைப் போராட்ட முதல் வீரனா ?

‘மதிப்பளிக்காத வார்த்தைகளை மக்களிடம் பேசுவதுடன் அச்சுறுத்தலும் மேற்கொண்டு வருகிறான்’ என்று தீத்தாரப்ப முதலி, யூசுப்கானைப் பற்றி 2-8-1765-இல் கடிதம் மேலிடத்திற்கு எழுதியுள்ளார். மக்களிடம் மதிப்பளிக்காத வார்த்தைகளைப் பேசுவதும், அச்சுறுத்துவதும் போன்ற மக்கள் விரோதப் போக்கைத் தாரக மந்திரமாகக் கைக்கொண்ட யூசுப்கான் இந்தியவிடுதலைப் போராட்ட முதல் வீரனா ? 14

மேலும், மக்கள் விரோதப் போக்கை அவன் கைவிட்ட பாடில்லை என்பதற்கான செய்தி நவாபிடமிருந்து மேலிடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

முகமது யூசுப்கான் மதுரையில் உள்ள கோட்டையில் தங்கியிருந்தான். நாட்டு நிர்வாகத்தைப் பற்றி அறிந்திராமல் இருந்ததுடன், படை வீரனாகவும் யூசுப்கான் இருந்தமையால், யூசுப்கானால் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகள் குறித்து மக்கள் புகார் செய்தனர். நாட்டில் வசூலிக்கப்படும் வருமானத்தை வீணாகவும் யூசுப்கான் செலவு செய்தான். 15

Mohamed Yusuf Khan stays on the fort of Madura. as he is a Military man, and not acquainted with the nature of the management of affairs of the country people are complaining of his hard ships and he allows extra vagant pay to the people out of the revenues collected in the country, so that, the circars money is sent in vain. (Country Correspondence 29-1-1758. P. 14 - கடித எண். 31)

மக்கள் புகார் செய்யும் அளவிற்கு நிலைமை இருந்திருக்கிறது. நாட்டில் வசூல் செய்த வரிப்பணம் வீணடிக்கப்பட்டது. இப்பேர்பட்ட யூசுப்கான் இந்திய விடுதலைப் போரின் முதல் வீரனா ?

யூசுப்கான் பலவீனமான பகைவர்களைத் தாக்கினான். கோட்டைகளைத் தாக்கியதுடன், பயந்து ஓடிய மக்களையும் இரக்கமின்றிக் கொன்றான். 16

Khan Sahibe won. marching to the west he attacked the less powerful of the rebels, stormed them and merciless ly slaughtered the fleeing population.

இதுபோன்ற மக்கள் விரோதப்போக்குகள் ஏராளமாக உள்ளன. இத்தகைய போக்கையுடைய யூசுப்கான் இந்திய விடுதலைப் போரின் முதல் வீரனா ?

துப்பாக்கிகள் செய்யும் ஒருவன் இந்த நாட்டில் இருக்கிறான். பாளையக்காரர்களுக்கும், மாபூஸ்கானுக்கும் துப்பாக்கிகள் பல செய்து கொடுத்துள்ளான். தாங்கள் உத்தரவிட்டால் அவனைப் பிடித்து தங்களிடம் அனுப்புகிறேன். 17

He (Mahaphooz caun) sent for Mayanas Brother and kept him with him in the fort, and intends to fight after he had gathered together all the Nant Callers. He at present is preparing to fight mounting large guns upon the bastions of the said fort. They are intercepting it seizing the letters, which are coming to me from different places. The Subedars are still prisoners.

மாபூஸ்கானுக்கும், பாளையக்காரர்களுக்கும் துப்பாக்கி செய்து கொடுக்க (தமிழன்) ஒருவன் இருக்கிறான். அதைக் கூட யூசுப்கானால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவனைப் பிடிக்க அனுமதி வேண்டும் யூசுப்கான் இந்திய விடுதலைப் போராட்ட முதல் வீரனா ?

மதுரைக் கோட்டையிலிருந்து எடுக்கப்பட்டு பூலித்தேவரிடம் இழக்கப்பட்ட 18 பவுண்டர்களை நமது சிப்பாய்கள் மீட்டுத்தந்தார்கள். நான் அவைகளை நமது சிப்பாய்களின் துணையுடன் மதுரைக்கு அனுப்பி வைத்தேன். தற்போது அதே துப்பாக்கிகளை நமக்கு எதிராகவே பயன்படுத்தி உள்ளான். அவன் (பூலித்தேவன்) வெளியே வந்தால், அவனது தலையை எடுத்துத் தங்களுக்கு அனுப்புகிறேன் என்று மேலிடத்திற்கு யூசுப்கான் கடிதம் எழுதுகிறான். 18

The 12 pounders in Madura fort which was left by colonel Heron the 18 pounders took out and lost with Pulidevar, but was retaken by our seapoys some time after wards. Before I know anything of this Trouble I sent it to Madura, under the care of our sepoys, which guns he wants now to fight us with. If he will come out in field, I'll take his head and sent it to your Honour.

ஆங்கிலேயருடைய ஆயுதங்களை அவர்களுக்கு எதிர்ப்பாகப் பயன்படுத்தும் பூலித்தேவனின் தலையை எடுத்துத் தங்களுக்கு அனுப்புகிறேன் என்ற கூறிய யூசுப்கான் இந்திய விடுதலைப் போராட்ட வீரனா?

யூசுப்கானைப் பற்றி பூலித்தேவர் என்ன கருத்து கொண்டுள்ளார் என்பதைப் பற்றி சந்திரராவ் என்பவர் நவாப்புக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பூலித்தேவன் விரும்புவது என்னவென்றால் யூசுப்கானை இந்நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்பதுதான்.

What he desires is that Yusuf caun be removed from this country. 19

ஆங்கிலேயரை இந்த நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று சொல்வது சம்பிரதாயம். ஆனால் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள யூசுப்கானையும், இந்த நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று பூலித்தேவர் சொல்லுகிறார் என்று சொன்னால், எத்தகைய வேதனையோடு சொல்லியிருப்பார் என்பது சிந்திக்கத் தக்கதாகும். இத்தகைய கொடியவன் இந்தியாவின் விடுதலைப் போராட்ட முதல் வீரனா ?

யூசுப்கான் மேலிடத்திற்கு எழுதிய கடிதத்தில் பூலித்தேவனின் எதிர்ப்பைப் பற்றி எழுதியுள்ளான். அதில் பூலித்தேவரால் ஏற்படும் தொல்லைகளும், குழப்பங்களும் தான் சொல்ல முடியாத அளவிற்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளான். 20

It is impossible for me to express the troubles & Disturbance which are raised by Poolidevar.

ஆங்கிலேயர்களை எதிர்த்து, பூலித்தேவரால் தொல்லைகளும், குழப்பங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்று கூறும் யூசுப்கான் சுதந்திரப் போராட்ட வீரனா ?

யூசுப்கான் மேலிடத்திற்கு எழுதிய கடிதத்தில் நான் திருவில்லிபுத்தூரில் இருக்கும் போது பூலித்தேவனுடைய வக்கீல் என்னிடம் வந்தார். அவருக்குப் பரிசுகள் கொடுத்தேன். பூலித்தேவரைப் பணிய வைக்க வேண்டுமென ஊக்கப்படுத்தினேன். பூலித்தேவர் மிகவும் ஆபத்தானவர். அவர் இன்னும் பணியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

Pooleys Vakeel came to me when in the village of cheval patore at the time I gave his a present of a Truban, sash for Zary see and sent him word with great encouragement to finish his affairs soon. He said Pooley is very wicked, and he never applied to any sardar.

பூலித்தேவர் ஆபத்தானவர். அவர் இன்னும் பணியவில்லை அதனால் பூலித்தேவன் வக்கீலை தன் வசப்படுத்துவதை முன்னிட்டு பரிசுகள் என்னும் பெயரில் லஞ்சம் கொடுத்ததுடன், பூலித்தேவனைப் பணிய வைக்க வேண்டும் என்று ஊக்கப் படுத்தினேன் என்ற யூசுப்கான் கூறியுள்ளார். மாவீரன் பூலித்தேவனைப் பணிய வைப்பதற்கு மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொள்ளும் யூசுப்கான் இந்திய விடுதலைப் போரின் முதல் வீரனா ?

கமல் மன்னிப்புக் கேட்க வேண்டும் !

"குங்குமம்" 30-4-1999 இதழில் 'கமல் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வந்துள்ளது. அக்கட்டுரையில் 'என்னால் காந்தியை மகாத்மாவாகப் பார்க்க முடியவில்லை' என்று கமல்ஹாசன் கூறியிருப்பதைக் கண்டித்து பகிரங்க மன்னிப்புக் கடிதம் வெளியிட வேண்டும் என்று மதுரை எஸ். நடராசன் குறிப்பிட்டுள்ளார்.

சத்யஜித்ரேயைப் போல் நானும் மேதைதான் என்கிறார் கமல். சத்யஜித்ரே இவரைப் போல நடிகர் இல்லைதான். ஆனால் அவரைப் போல இவர் இயக்குநரில்லை என்று குறை கூறியுள்ளார் அறந்தை மணியன், சென்னை.

வீரபாண்டிய கட்டபொம்மனோட கால கட்டம் 1690 என்று கமல்ஹாசன் தவறுதலாகக் கூறியுள்ளார். வீரபாண்டிய கட்டபொம்மனின் கால கட்டம் 3-1-1760 முதல் 16-10-1799 என்று வரலாறு கூறுகிறது. 1690-இல் வீரபாண்டிய கட்டபொம்மனும் மருதநாயகமும் பிறக்கவே இல்லை. மருதநாயகத்தைத் தூக்கில் போட்ட போது வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு வயது 4.

"தென்னகத்தில் ஹைதர், கட்டபொம்மன், திப்புவுக்கு முன்னால் வெகுண்டு எழுந்த வீரன் கான்சாகிப் என்று கமல்ஹாசன் சாவி இதழுக்குப் பேட்டி வழங்கியுள்ளார். (15-1-98 பக்கம் - 18) சுதந்திரத்திற்கு வித்திட்டு அதற்கென்று தன்னை அர்ப்பணித்துக் கொண்டு ஒரு புதுவிதமான ராணுவ மிடுக்குடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட மருதநாயகத்தை எத்தனை பேருக்குத் தெரியும் என்று கமல்ஹாசன் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுச் செய்திகளை உள்ளபடியே கூறுவதுதான் இந்த நாட்டுக்குச் செய்யும் பணியாகும்" என்று இராசபாளையம் ந. இராசையா குறிப்பிட்டுள்ளார்.

கமல் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற தலைப்பில் மேற்கண்டுள்ள மூவரும் கூறியுள்ள கருத்துக்களைப் பற்றிக் கமல்ஹாசன் சிந்திக்க வேண்டும்.

1. தினமலர் தீபாவளி மலர் 1998

2. மேற்படி இதழ் - டிசம்பர் 98 - வாரமலர்

3. மேற்படி இதழ் - துணுக்கு மூட்டை.

4. இதயம் பேசுகிறது 25-10-98.

5. மேற்படி இதழ் 8-11-98. பக். 11

6. மேற்படி இதழ் 8-11-98. பக். 11

7. மேற்படி இதழ் 8-11-98. பக். 11

8. சினிமா எக்ஸ்பிரஸ் 1-நவம்பர்-99.

9. தினபூமி 30-11-99.

10. மேற்படி இதழ் 1-12-1999.

11. தினமணி 2-5-2000.

12. யூசுப்கான் எஸ்.சி. ஹீல். பக்.102.

13. Country Correspondence-25. March 1756. P.40 கடித எண். 86

14. மேற்படி நூல் 2-8-1756. பக். 111. கடித எண் 220

15. மேற்படி நூல் 29-1-1758. பக். 14. கடித எண் 31

16. History of Madurai - Dr. K. Rajayan - P. 168

17. Coutry Correspondence-25. March 1756. P.40 கடித எண். 86

18. மேற்படி நூல் 23-8-1756. பக். 130. கடித எண். 255.

19. மேற்படி நூல் 8-3-1758. பக். 31. கடித எண். 76.

20. மேற்படி நூல் 10-5-1758. பக். 37. கடித எண். 91.

‘சினிமா ஸ்பெசல்’ பார்வையில் மருதநாயகம்

“சினிமா ஸ்பெசல்” 1988-ஆம் ஆண்டு மே இதழில் ஒரு அதிர்ச்சி ரிப்போர்ட்; ‘மருதநாயகத்திற்கு எதிராகச் சில சதிவேலைகள்’ என்னும் தலைப்பில் பாலன் அவர்களின் கட்டுரை வெளிவந்தது. அதற்கு விளக்கம் கூறும் முகத்தான் ஒரு கட்டுரையைத் தங்களின் மேலான பார்வைக்கு அனுப்பினேன்.

தற்போது ‘சினிமா ஸ்பெஷல்’ 1998-ஆம் ஆண்டு செப்டம்பர் இதழில் “படப்பிடிப்பிலே மருதநாயகம் சூடுபிடித்தது” என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அதைப்பற்றிய உண்மை நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று “மருதநாயகம் திரைப்படக் கதை - விமர்சனம்” என்னும் கட்டுரையை அனுப்பியுள்ளேன். ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் தங்களின் முடிவாகும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் வாழ்ந்த மருதநாயகம் என்ற தமிழ் வீரனின் வரலாறுதான் கமல் தயாரிக்கும் மருதநாயகம் படத்தின் கதை என்று ‘சினிமா ஸ்பெஷல்’ குறிப்பிட்டுள்ளது. இதுவரை வெளியிடப் பெறாத மருதநாயகம் சினிமா திரைக்கதையை தங்களின் இதழில் வெளியிட்டிருப்பது ஒரு திருப்பு முனை.

‘சாவி’ 15-1-98 இதழில், சுதந்திரப் போரின் முதல்வீரன் மருதநாயகம் என்று கமல்ஹாசன் பேட்டியில் கூறியுள்ளார். பிரிட்டிஷாருக்கு எதிராகப் புரட்சி செய்த முதல் மனிதராக வாழ்ந்தார் மருதநாயகம் என்று கமல்ஹாசன்; மருதநாயகம் படத்தின் ஆலோசகரும் பிரபல எழுத்தாளருமான சுஜாதா ஆகியோர் கூறியுள்ளனர்.

ஆனால் மருதநாயகம், சுதந்திரப் போரின் முதல் வீரன் என்று இதுவரையிலும் கூறி வந்ததைத் தவிர்த்து மருதநாயகம் என்ற தமிழ்வீரன் என்று தங்களின் இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராட்டுக்கள். இதை கமல்ஹாசன் ஒத்துக் கொண்டாரா இல்லையா ? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

‘மருதநாயகம் என்ற தமிழ் வீரன்’ என்று அழைப்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. ‘மருதநாயகம் சுதந்திரப் போரின்

முதல் வீரன்' என்று கூறுவதைத்தான் எதிர்க்கிறேன். மருதநாயகம் பூலித்தேவனுக்கு முன்னரே முதல் சுதந்திரப் போரின் முதல் வீரன் என்பதற்கான சான்றைக் கூறினால் ஏற்றுக் கொள்கிறேன்.

கதையின் தொடக்கமே பிரச்சனையை உருவாக்கக் கூடியதாக உள்ளது. இந்து மதத்தைச் சேர்ந்த மருதநாயகம் முஸ்லீம் மதத்திற்கு மாறி, யூசுப்கான் என்னும் பெயரை மாற்றிக் கொண்டான் என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் வரலாற்றில் பெரும் பிழை ஏற்படக் காரணமாக உள்ளது.

மருதநாயகம் இந்து மதத்தைச் சேர்ந்தவனல்ல. இந்து மதத்திலிருந்து முஸ்லிம் மதத்திற்கு மாறியவனல்ல. அவன் பிறவியிலேயே முஸ்லிம் என்பதுதான் உண்மை என்று பல சான்றுகளைக் கூறுகின்றனர்.

"கான்சாகிபு சண்டை" என்னும் கதைப் பாடலில் (பக்கம் 17) "விசையாலீம் குலம் விளங்க வருதீரன்" என்று குறிப்பிட்டிருப்பதில் யூசுப்கான் பிறவியிலேயே முஸ்லீம் மதத்தில் ஆலீம் குலத்தைச் சேர்ந்தவன் என்பது தெளிவாகிறது.

எஸ்.சி.ஹீல் எழுதிய 'யூசுப்கான்' என்னும் நூலில் யூசுப்கான் முஸ்லீம் மதத்தில் 'மூர்' வம்சத்தைச் சேர்ந்தவன் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கம் 286)

யூசுப்கானின் இயற்பெயர் மருதநாயகம் என்றோ அவன் இந்துவாக இருந்து முஸ்லிமாக மாறினான் என்றோ கூறுவதற்கான சான்றுகள் ஏதுமில்லை. செவி வழிச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டே பிற்காலத்தில் அவ்வாறு கூறினர் போலும்.

மருதநாயகம் இந்துவாக இருந்தாலென்ன ? முஸ்லிமாக இருந்தால் என்ன ? அவன் ஒரு சிறந்த வீரனாக இருந்தான் என்று திரைப்படம் எடுத்தால் யாரும் எதிர்ப்புக்கொடுக்கப் போவதில்லை.

ஆனால், கமல்ஹாசனின் பேட்டியில் "முஸ்லிமாக மாறும் இந்து, இந்து மதத்திற்குப் பெருமை சேர்க்கிறானா ? இஸ்லாமுக்குப் பெருமை சேர்க்கிறானா ? என்னும் கேள்வியை எழுப்பிவிட்டு, அதற்குப் பதில் கூறாமல், இதற்குப் பிற்பாடு பதில் சொல்லிக் கொள்கிறேன் என்று கூறியிருப்பது (குங்குமம் 23-1-98) எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தார் போல் ஆயிற்று.

மருதநாயகம் இந்துவுக்குப் பெருமை சேர்த்தாலென்ன ? இஸ்லாமுக்குப் பெருமை சேர்த்தாலென்ன ? அதைப் பற்றிக் கமல்ஹாசன் கவலைப் படுவது

ஏன் ? இத்தகைய விவாதங்கள் இந்து, முஸ்லீம் ஒற்றுமையைக் குலைக்கும் செயலாகாதா ? கமல்ஹாசனின் மேற்கண்ட பேட்டிகளால்தான் மருதநாயகம் படத்திற்கு எதிர்ப்பு உருவாகி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மருதநாயகம் பெயரை மாற்ற வேண்டும் என்னும் கோரிக்கையை இராமகோபாலன் வைத்துள்ளார். இல்லாவிட்டால் படத்தை ஓட விட மாட்டோம் என்றும் கூறியுள்ளார்.

'தமிழ் மண்ணில் பிறந்த பிறவி முஸ்லிம்' என்று வெள்ளையரின் கடிதம் கூறுகிறது. (மகாவீரன் கான்சாகிப் - பக்கம் 58) இத்தகைய மாறுபட்ட கருத்துக்கள் மதத்தின் பெயரால் வருவதால், மருதநாயகம் படத்தில் மத வெறியைத் தூண்டிவிடாமல் உண்மையான வரலாற்றை வெளியிடுவது கமல்ஹாசனின் கடமையாகும்.

அதைவிடுத்து, கருத்துக் கூறுபவர்களை எல்லாம் அலட்சியப் படுத்திவிட்டு, "வெவ்வேறு ஆட்கள் வெவ்வேறு சுயநலத்திற்காக மருதநாயகம் இது அல்ல ; அதுவரல, அது இல்லன்னு சொல்லிக் கிட்டிருக்காங்க அதையெல்லாம் பத்தி எனக்குக் கவலையில்லை" என்று கமல்ஹாசன் பேட்டி கொடுத்திருப்பது பிரச்சனையை அதிகமாக்குமே தவிரத் தீர்ப்பதற்கு உதவாது.

மருதநாயகம் வெள்ளாளப் பிள்ளைமார் ஜாதிக் குடும்பத்தில் பிறந்தவன் என்று கூறுவதற்கும் சான்றுகளில்லை. பழைய நீலன் கதையில் வெள்ளாள சாதியில் பிறந்ததாகச் செய்தி உள்ளது என்று கூறுகின்றனர். அது எந்த வகையில் உண்மை என்று சொல்வதற்கில்லை. அந்த நூலைப் பார்த்த பிறகுதான் அதைப் பற்றிய விமர்சனங்களைக் கூறுவது நல்லது.

கான்சாகிபு கதைப்பாடலில் (பக்கம் 18) "அன்பான பிரட்டனிடம் பிள்ளை போல் சேர்ந்தான்", "பிரட்டனிடம் பிள்ளை போல் வளர்ந்து" என்னும் பாடல் வரிகளிலிருந்து பிள்ளை என்ற சாதியைச் சேர்ந்தவன் என்று வழங்கியிருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இதைத் தவிர முதல் தரமான சான்றுகளில்லை.

மருதநாயகம் எந்த ஜாதியாயிருந்தால் என்ன ? திட்டவட்டமாகத் தெரியாத நிலையில் அதை விவாதப் பொருளாக ஆக்குவது ஏன் ?

கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் (பக்கம்-30) மருதநாயகம் வேளாளர் வம்சத்தைப் பற்றிக் குறை கூறுவதிலிருந்து அவன் வேளாள பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்தவரில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

வெத்திலை கொழுந்து கிள்ளுஞ் சாதி - நீயும்

வேளாள வம்சம் இல்லை - மணிமார்பா

மேழிபிடித்துழுவுஞ் சாதி - பாரில்

விளங்கவே எழுத்தாணி பிடித்தெழுதுஞ்சாதி

நாளுங் கொடிக்கால் பார்க்குஞ்சாதி நீங்கள்

நதிகுல மென்னேயிருந்த ராஜ்ஜியங்களறியும்

பட்டோலை யெழுது முங்கள் சாதி - உனக்கு

படைவெட்டத் தெரியுமோ தாண்டவராயா ?

இப்பாடலில் நீங்கள், உங்கள் என்று தாண்டவராயனிலிருந்து வேறுபடுத்திக் கூறுவதால் மருதநாயகம் 'பிள்ளைசாதி' யைச் சேர்ந்தவனல்ல என்ற யூகிக்க இடமுள்ளது.

யூசுப்கானின் இயற்பெயர் மருதநாயகம் என்று சொல்வதற்கான சான்று எந்த நூலிலும் இருப்பதாகத் தெரியவில்லை. மருதநாயகம் இறந்த பிறகு அவனிடம் விசுவாசமாக இருந்தவர்கள் "மருதநாயகமாக விளங்கினான்" என்று புகழ்ந்து கூறியிருப்பர். அதனால் மருதநாயகம் என்னும் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

உண்மையான பெயரான யூசுப்கான் என்று அழைக்காது மருதநாயகம் என்னும் ஒட்டுப்பெயரால் அழைப்பது ஏன் ? பெயரில் கூட பிரச்சனை உண்டாக வேண்டுமா ? இதையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

உண்மையான பெயரான யூசுப்கான் என்று படம் எடுக்க வேண்டியதுதானே. அந்தப் பெயரில் படம் எடுத்தால் ஓடாது என்பதால் மருதநாயகம் என்னும் பெயரில் கமல்ஹாசன் படம் எடுக்கிறாரா ? என்னும் வினா எழுந்துள்ளது.

பிரிட்டிஷாருக்குக் கப்பம் கட்ட மறுத்துப் போரிட்ட பூலித்தேவன் உள்பட பலரை அடக்கி பிரிட்டிஷாரின் நன்மதிப்பைப் பெற்று, அவர்களின் அனுமதியுடன் மதுரையில் ஆட்சியில் அமர்ந்தான் மருதநாயகம்.

அடக்குதல் என்றால் என்ன ? எதிரிகளை ஒடுக்க அதிகாரத்தில் உள்ளவர்கள் மேற்கொள்ளும் கடுமையான நடவடிக்கையாகும். எதிரியைப் பேசவிடாமல் கட்டுப்படுத்தி பணிய வைத்தல் என்றும் கூறலாம்.

மருதநாயகம், பூலித்தேவன் உள்படப் பலரை அடக்கினான் என்றால் பொருள் என்ன ? வெள்ளைக்காரனின் ஏஜண்டாக அதிகாரத்திலிருக்கும் மருதநாயகம் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்ட மறுத்த பூலித்தேவன் போன்றவர்களை ஒடுக்கி அடி பணிய வைத்தான். அதாவது கப்பம் கட்ட ஒத்துக்கொள்ள வைத்தான் என்றுதானே பொருள்.

பூலித்தேவன் கும்பினியருக்கோ, ஆற்காட்டு நவாபுக்கோ ஒரு போதும் கப்பம் கட்டவில்லை என்பதை வரலாறு மிகத் தெளிவாக கூறுகின்றது.

கி.பி. 1750-இல் இருந்து சுமார் 15 ஆண்டுகள் வெள்ளையரை எதிர்த்துப் பல தோல்விகளைக் கண்டபோதும் பூலித்தேவன் எவர்க்கும், எப்போதும் அடங்கினானென்றோ, பணிந்தானென்றோ கப்பம் கட்டினா னென்றோ வரலாற்றில் சான்றுகளில்லை.

யூசுப்கானுக்கும் பூலித்தேவனுக்கும் நடைபெற்ற போர்களில் பல தோல்விகளை யூசுப்கான் கண்டான். அதனால் யூசுப்கான் பூலித்தேவனுக்கு அடங்கி விட்டான் என்று சொல்ல முடியுமா ? அந்தநேரத்தில் அது தோல்வி. அவ்வளவுதான் !

அதே போல் பூலித்தேவன், யூசுப்கானை எதிர்த்துப் பல வெற்றிகளைப் பெற்றாலும் முடிவில் தோல்வியடையும் தருவாயில் யூசுப்கானின் கைகளில் சிக்காமல் பூலித்தேவன் கோட்டையை விட்டு வெளியேறித் தப்பித்துச் சென்றான் என்பது தானே உண்மை.

பூலித்தேவர், யூசுப்கானிடம் (கான்சாகிபு) தோற்றுப் போனார் என்று (ப. சிவனடி - இந்திய சரித்திரக் களஞ்சியம் - 7. பக்கம் 51, 52) பூலித்தேவனைக் காட்டிலும் மாபெரும் வீரனாகத் தன்னைக் காட்டிக் கொள்வதற்காக யூசுப்கான், பூலித்தேவனை அடக்கினேன் என்பதற்காக மேலிடத்திற்கு எழுதிய கடிதத்தைச் சான்றாக ஏற்றுக் கொள்ள முடியுமா ?

பூலித்தேவன் தோல்வியடையும் நிலையில், யூசுப்கான் கைகளில் சிக்காமல் தப்பித்துக் கடலாடிக்குச் சென்று விட்டான் என்றும் செய்தியைக் கேட்டதும் யூசுப்கானுக்கு இடி விழுந்தது போன்ற நிலை ஏற்பட்டது.

பூலித்தேவன் தோல்வியடைந்ததும் அவரின் தலையை வெட்டிக் கொண்டு வருகிறேன் என்று மேலிடத்தார்க்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதாலும் எரிமலையானான் யூசுப்கான்.

அந்த ஆவேசத்தில் யாராலும் தகர்க்க முடியாத பூலித்தேவனின் கோட்டையைத் தகர்த்து தரைமட்டமாக்கினான் யூசுப்கான். தப்பிச் சென்ற பூலித்தேவன் மீண்டும் இந்த கோட்டைக்கு வந்துவிடக் கூடாதே என்னும் பயத்தினால்தான் பூலித்தேவனின் கோட்டையை இடித்துத் தரை மட்டமாக்கினான். ஆனாலும் பூமிக்குள் இருக்கும் மதில்களை ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தான். காரணம் பெரிய பெரிய கூழாங்கற்களை அடுக்கி வைத்து, அதன் மேல் பெரிய செங்கல்களை வைத்து, பதனீர், கடுக்காய், முட்டை ஆகியவற்றைச் சாந்துடன் கலந்து கட்டிய கட்டடம். அதனால் அந்த வாணக் கட்டிடத்தை அவனால் தகர்க்க முடியவில்லை. பூலித்தேவனைப் போல் அவனுடைய கோட்டைச் சுவர்களும் உறுதியாக இருந்தன. பூலித்தேவனுடைய வரலாற்றைப் புதைத்ததைப் போல், அவனின் கோட்டைச் சுவர்களின் அடித்தளமும் மண்ணிற்குள் புதைக்கப் பட்டன. அக்கோட்டைச் சுவர்கள் வெளியே தெரிய விடாமல் மறைத்தான் யூசுப்கான். பூலித்தேவனின் கோட்டைச் சுவர்கள் பூமிக்குள் இன்னமும் சோக கீதங்களைப் பாடிக்கொண்டே இருக்கின்றன.

யூசுப்கானின் ஆத்திரம் அத்துடன் முடிந்ததா ? பூலித்தேவன் நண்பர்களின் 29 கோட்டைகளை எல்லாம் தரைமட்டமாக்கி, கோட்டை இருந்த அடிச்சுவடே இருந்த இடம் தெரியாமல் செய்த சாதனையாளன் யூசுப்கான்.

இத்தகைய எண்ணங் கொண்ட யூசுப்கானின் கைகளில் பூலித்தேவன் சிக்கியிருந்தால் சும்மா விட்டிருப்பானா ?

வெள்ளையரை எதிர்த்து முதன்முதல் வாளெடுத்துப் போரிட்ட பூலித்தேவனையும், அவரின் நண்பர்களான கொல்லங்கொண்டான் வாண்டாயத்தேவன், வடகரை சின்னனஞ்சாத் தேவன், சேத்தூர் திருவநாதத் தேவன் போன்ற பாளையக்காரர்களையும் தோற்கடித்து, அவர்களின் கோட்டைகளையும் தரைமட்டமாக்கி சுதந்திர விரோதியாக உலாவந்தவன்தான் இந்த யூசுப்கான்.

பூலித்தேவனை வெற்றி கொண்ட மமதையில் தென்னாட்டுக்குத் தானே அதிபதியாக இருக்க வேண்டும் என்னம் சுயநலத்தால் யூசுப்கான் கும்பினியரைக் கடைசி இரண்டு ஆண்டுகள் எதிர்த்தான்.

ஒரு யூசுப்கான் பிறக்காமல் இருந்திருப்பாரேயானால் இந்த மண்ணில் ஆங்கிலேயர் காலூன்றியிருக்க முடியாது. வரலாறே வேறு விதமாகப் போயிருந்திருக்கும். அதற்கு வழிவகுத்தவன் யூசுப்கானேயாவான்.

எந்தக் கும்பினியரின் ஆட்சியை இந்த நாட்டில் நிலைநிறுத்த, தாயகத்தின் விடுதலை வீரர்களைச் சுட்டுப் பொசுக்கினானோ, அந்தக் கும்பினிய ஆட்சியே அவனுக்கு விரோதமாக வந்தது.

தமிழ்நாட்டில் பிறந்து, தமிழனாக வாழ்ந்த யூசுப்கான் தமிழ் வீரர்களையே காட்டிக்கொடுத்து, தமிழர்களின் ரத்த ஆற்றில் நீந்தியவன். அப்பேர்ப்பட்ட யூசுப்கானையும் விடுதலை வீரனென்று சொல்லும் அளவிற்கு கமல்ஹாசன் வரிந்து கட்டிக் கொண்டு வந்து நிற்பதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நாட்டின் விடுதலைக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் போராடி மடிந்த பூலித்தேவன் போன்றவர்களின் தியாகத்தைக் கொச்சைப் படுத்துகிறார் கமல்ஹாசன்.

சுதந்திரப் பொன்விழா ஆண்டில் துரோகியைத் தியாகியாகச் சித்தரித்து கமல்ஹாசன் படம் எடுக்கிறார் என்றால் அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும்.

ஒரு கட்டத்தில் பிரிட்டிஷாரின் கோபத்துக்குள்ளாகி அவர்களுக்கே எதிரியாகிறான். இந்தக் காலகட்டத்தில் தான் அவனுக்கு சுதந்திர வேட்கை ஏற்படுகிறது. பிரிட்டிஷாரை எதிர்க்கிறான் என்று கமல்ஹாசனின் மருதநாயகம் கதை கூறுகிறது.

மருதநாயகம் பிரிட்டிஷாரை எதிர்க்கும் கால கட்டம் எது ? பூலித் தேவனையும், அவன் நண்பர்களையும் வெற்றி கொண்ட பிறகு, தன்னை வெல்ல எவராலும் முடியாது என்கின்ற நிலை 1761-ல்தான் யூசுப்கானுக்கு ஏற்பட்டது.

மதுரை மன்னனாக சிம்மாசனத்தில் அமர்ந்தான் யூசுப்கான், தான் கும்பினியரின் ஏஜண்ட் என்பதை மறந்து, மதுரையை ஆட்சி செய்யும் உரிமை அனைத்தும் தனக்கே உரியது என்னும் மமதையில் செயல்பட்டு வந்தான்.

இதனால், ஆற்காடு நவாபும், கும்பினியரும் தன்னை எதிர்க்க வருவார்கள் என்பதை உறுதியாகக் கொண்டு, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் படைபலத்தைப் பெருக்கினான். படை வீரர்களுக்குத் தாராளமாகப் பணத்தை அள்ளி வீசினான். தனக்கு விரோதமாகச் செயல்பட்டவர்களுக்கெல்லாம் ஏராளமான சலுகைகளை வழங்கி அவர்களின் ஆதரவைப் பெற்றான்.

யூசுப்கான் தன்னிச்சையாகச் செயல்படுவதைக் கண்ட நவாபும், கும்பினியரும் கப்பத் தொகையைக் கட்டும்படி யூசுப்கானுக்குக் கட்டளை பிறப்பித்தனர். யூசுப்கான் ஆரம்பத்தில் சாக்குப் போக்குச் சொன்னாலும் இறுதியில் இரண்டு லட்ச ரூபாய் கப்பத் தொகையாகக் கட்டினான்.

இது போன்ற பல பிரச்சனைகள் ஏற்பட்டதால் 1761-இல் இருந்தே யூசுப்கான் வேறுபடலானான் என்று அரசு ஆவணங்கள் கூறுகின்றன. நவாபிடமே கப்பத் தொகையைக் கட்ட வேண்டும் என்று கும்பினியர் அறிவுறுத்திய போது, யூசுப்கான் நவாபிடம் கப்பத் தொகையைக் கட்டாது கும்பினியரிடம் கட்டுவதாகக் கூறினான். அதை மேலிடம் ஏற்றுக்கொள்ள வில்லை. இதனால் யூசுப்கான் ஆத்திரமடைந்தான்.

தன்னுடைய சுய கௌரவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டதாக யூசுப்கான் எண்ணினான். ஆற்காடு நவாபையும், கும்பினியரையும் எதிர்ப்பதற்கு இதுவே காரணமாக அமைந்தது. தன்னுடைய சுய நலத்துக் காகத்தான் நவாபையும், கும்பினியரையும் எதிர்த்தானேயன்றி, இந்நாட்டையும், நாட்டு மக்களையும் அவர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஒரு போதும் யூசுப்கானுக்கு இருந்ததில்லை.

யூசுப்கான், கும்பினியருக்கு இதுவரை விசுவாசமாக இருந்து இந்நாட்டு மக்களைக் கொன்று குவித்து, துரோகம் செய்தது தவறு என்று ஒரு போதும் ஒத்துக் கொண்டது கிடையாது.

அந்நியரை இந்த நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று ஒரு போதும் சொன்னது கிடையாது. ஆங்கிலேயர் தனக்குச் சாதகமாக இருந்த போது அவர்களின் எதிரியான பிரஞ்சுக்காரரைத் தீவிரமாக எதிர்த்தான் யூசுப்கான்.

பிரஞ்சுக்காரர் தயவு தனக்குத் தேவைப்படும் பொழுது ஆங்கிலேயரை எதிர்க்கலானான் யூசுப்கான். ஆங்கிலேயரை ஆதரித்த போது ஆங்கிலேயர் கொடியை கோட்டையில் பறக்க விட்டான். அவர்கள் எதிரியான போது ஆங்கிலேயர் கொடியை இறக்கித் தீயிலிட்டுக் கொளுத்தினான். ஆனால் அதே கம்பத்தில் பிரஞ்சுக் கொடியை ஏற்றி அவர்களின் ஆதரவைப் பெற்றான் யூசுப்கான். இச் செயல் யூசுப்கானின் சந்தர்ப்பவாதத்தைக் காட்டுகிறது.

ஆங்கிலேயராக இருந்தாலென்ன, பிரஞ்சுக்காரராக இருந்தா லென்ன, டச்சுக்காரராக இருந்தாலென்ன அனைவரும் அந்நியரே என்று எப்போதாவது குரல் கொடுத்ததுண்டா யூசுப்கான் ?

1763-இல் ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. (செ. திவான் - மருதநாயகம் 143) இதனால் யூசுப்கானிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் பின் வாங்கினர். இதற்குப் பிறகு தான் வெள்ளையரின் விரோதியாக யூசுப்கான் அறிவிக்கப்பட்டார். அதற்குப் பின்னர்தான் கும்பினியர் மதுரையின் மீது போர் தொடுத்தனர்.

யூசுப்கானுக்கும் கும்பினியருக்கும் நடைபெற்ற போர் சுமார் இரண்டு ஆண்டுகளேயாகும். யூசுப்கானின் துரோகச் செயலுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்றுதான் கும்பினியர் கட்டளையிட்டனர். யூசுப்கானைக் காப்பாற்றுவதற்கே இத்தகைய கட்டளையிட்டனர் என்று வரலாற்றாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், ஆற்காடு நவாபு தனக்குத் துரோகம் செய்த யூசுப்கானை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது உடனே கொல்ல வேண்டும் என்று தனது முடிவை செயலில் காட்டினார்.

தன்னுடைய சூரத்தனத்தைக் காட்டி பூலித்தேவனை வெற்றி கொள்ள முடியாது. சூழ்ச்சியால்தான் வெல்ல முடியும் என்னும் துரோகச் செயலில் இறங்கினான் யூசுப்கான். நெற்கட்டுஞ் செவ்வலுக்கு அருகிலுள்ள மறவர் பாளையமான நடுவக்குறிச்சி பாளையக்காரனை விலை கொடுத்து வாங்கினான் யூசுப்கான். பூலித்தேவன் வீரர்களில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு பொருள் ஆசை, பதவி ஆசை ஆகியவற்றைக் காட்டி தன்னுடைய படையில் சேர்த்துக் கொண்டான். மறவர் சீமை, புதுக்கோட்டை தொண்டைமான் சீமை படைகளும் வந்து குவிந்தன. பூலித்தேவனின் நண்பனான திருவிதாங்கூர் மன்னனுக்கு களக்காட்டைத் தருவதாக ஆசை வார்த்தையைக் காட்டி அவனையும் தன்னுடைய அணியில் சேர்த்துக் கொண்டான் யூசுப்கான்.

இத்தகைய பெரும் படையைக் கொண்டு பூலித்தேவனின் கோட்டையைச் சுற்றி வளைத்துக்கொண்டு, வெளிவட்டாரத்தோடு தொடர்பு கொள்ள முடியாமல் துண்டித்தான் யூசுப்கான். யூசுப்கான் தன்னுடைய பதவி வெறியால் சொந்த நாட்டையே காட்டிக் கொடுக்கும் கயவனாக மாறினான்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்னும் பழமொழிக்கு இணங்கி பின்னாளில் யூசுப்கானுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. யூசுப்கானின் கோட்டையைச் சுற்றி வளைத்து வெளி வட்டாரத் தொடர்புகளை துண்டித்தனர் கும்பினியர். பூலித்தேவனுக்கு ஏற்பட்ட நிலையைப் போல் யூசுப்கானுக்கும் ஆங்கிலேயர் ஏற்படுத்தினர்.

யூசுப்கானை அவனுடைய நண்பர்களே காட்டிக் கொடுத்தனர். இது போன்ற நிலை பூலித்தேவனுக்கு ஏற்படவில்லை. தன்னுடைய ஒப்பற்ற தலைவனான பூலித்தேவனை யூசுப்கானின் கைகளில் சிக்காமல் கோட்டையை விட்டு வெளியேற்றிக் கடலாடியில் பத்திரமாகச் சேர்த்தனர். இது தான் மருதநாயகத்தின் கதை. இக்கதையில் ஆரம்பத்தில் பெயர் மாற்றம், சாதி, மத மாற்றம் போன்றவைகள் சமுதாயத்திற்குப் புறம்பானதாகக் சித்தரிக்கப்பட்டுள்ளது. கடைசியில் பூலித்தேவன் போன்றவர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்தி சுதந்திர வேட்கை என்றால் என்னவென்று தெரியாத சுயநலவாதியான மருதநாயகமே சுதந்திரப் போரின் முதல் வீரன் என்று கூறுவது வரலாற்றில் பெரும் பிழையை ஏற்படுத்துவதாக உள்ளது. வருங்காலச் சமுதாயத்தினருக்கு தவறான வரலாற்றை உணர்த்துவதுடன், துரோகத் தனம் தான் வெல்லும், தியாகம் தோற்கும் என்னும் நிலையை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் மருதநாயகம் திரைப்படத்தில் மேலே கூறப்பட்ட குறைபாடுகளை அகற்றி, இருபொருள் கூறும் வசனங்களையெல்லாம் தவிர்த்தல் வேண்டும். ஏற்கனவே மருதநாயகம் திரைப்படம் தொடக்க விழாவில் எடுக்கப்பட்ட டிரெய்லரில் பேசப்பட்ட வசனமே இதற்குச் சான்று.

எனவே, படப்பிடிப்பிலே மருதநாயகம் சூடுபிடிக்கட்டும். ஆஸ்கார் விருதை வெல்லப் போட்டி போடட்டும். அதைப் பற்றி யாரும் குறை கூறுவதற்கில்லை. ஆனால் மக்களை மாக்களென்று எண்ண, தான் வைத்ததுதான் சட்டம், அதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அடம்பிடித்து, கருத்துக் கூறுபவர்களையெல்லாம் சுயநல வாதிகளென்று நையாண்டி செய்யும் இழி செயலை முதலில் கமல்ஹாசன் கைவிட வேண்டும்.

கமல்ஹாசன் பெரிய படத்தயாரிப்பாளராக இருக்கலாம். சிறந்த நடிகராகவும் இருக்கலாம். திரையுலக மேதையாகவும் இருக்கலாம். பெரும் பணக்காரராகவும் இருக்கலாம். அதற்காக, மருதநாயகம் பற்றிக் கருத்துக் கூறுபவர்களை எல்லாம் எதிரிகளாகப் பாவித்து, அவர்களை யெல்லாம் சுயநலவாதிகளாக்கி ஏதோ பிச்சைக்காசுக்காகக் கருத்துக் கூறுகிறார்கள் என்ற எண்ணத்தை விடுத்துச் செயல்படுவதுதான் கமல்ஹாசனுக்கு அழகாகும்.

கருத்து எங்கிருந்து வந்தாலும் நல்லவற்றை ஏற்றுக்கொண்டு, அல்லாதவற்றைத் தவிர்த்துக் கொள்வதுதான் நாகரீகமாகும்.

மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்குப் பதில் கூறுவதில் தவறேதுமில்லை. சந்தேகங்களைக் கேட்பவர்கள் அனைவரும் தீண்டத்தகாத சாதியாரில்லை. மருதநாயகம் வரலாற்றுத் திரைப்படமாக இருப்பதால்தான் கருத்தைக் கூறுகின்றனர். சிறுகதையையோ, நாவலையோ திரைப்படமாக எடுத்தால் அதைப்பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை.

நாட்டு நலன் கருதி, சாதி, மதம் போன்ற பிரச்சனைகளை வரவிடாமல் தடுத்து, விடுதலைப் போரைக் கொச்சைப்படுத்தாமல் மரியாதை கொடுத்து மருதநாயகம் திரைப்படம் வெளியிடப்பட வேண்டும் என்னும் ஆலோசனையை கமல்ஹாசனுக்கு கூறிக் கொள்கிறேன். இதை ஏற்றுக்கொள்வது நிராகரிப்பதும் கமல்ஹாசனுடைய முடிவாகும். அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவரே முழுப் பொறுப்பாவார்.

படப்பிடிப்பிலே 'மருதநாயகம்' சூடு பிடித்தது

'சினிமா ஸ்பெசல்' செப்டம்பர் 1998-இல் மருதநாயகம்

படத்தின் கதை :-

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பனையூர் என்ற கிராமத்தில் வெள்ளாளப் பிள்ளைமார் சாதிக் குடும்பத்தில் பிறந்து, ஏழ்மையில் கஷ்டப்பட்டு பாண்டிச்சேரிக்குப் பிழைப்பதற்காகச் சென்று அங்கே மூஸா என்ற முஸ்லீமின் உதவியுடன் சின்னச்சின்ன வேலைகள் செய்து பின்னர் முஸ்லீம் மதத்திற்கே மாறி யூசுப்கான் என்று பெயரிட்டுக் கொண்டவன் இந்துவான மருதநாயகம்.

வயிற்றுப்பாட்டுக்காக நவாபின் படையில் வீரனாகச் சேர்ந்து, தன் வீரதீரச் செயல்களால் படிப்படியாக உயர்ந்து படைத்தளபதி ஆனான். பிரிட்டிஷாருக்குக் கப்பம் கட்ட மறுத்துப் போரிட்ட பூலித்தேவன் உள்படப் பலரை அடக்கிப் பிரிட்டிஷாரின் நன்மதிப்பைப் பெற்று, அவர்கள் அனுமதியுடன் மதுரையில் ஆட்சியில் அமர்ந்தான். பிரெஞ்சுப் பெண் ஒருத்தியைக் காதலித்து மணந்து ஆண் குழந்தையையும் பெற்று சந்தோஷமாக ஆட்சியைச் செலுத்திய யூசுப்கான் என்கிற மருதநாயகம். ஒரு கட்டத்தில் பிரிட்டிஷாரின் கோபத்திற்குள்ளாகி அவர்களுக்கே எதிரியாகிறான். இந்தக் கால கட்டத்தில்தான் அவனுக்குச் சுதந்திர வேட்கை ஏற்படுகிறது. பிரிட்டிஷாரை எதிர்க்கிறான். வெள்ளை ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியால், நம்பியவர்களே துரோகிகளாகி நயவஞ்சகமாக மருதநாயகத்தைப் பிடித்துக் கொடுக்க பிரிட்டிஷாரால் தூக்கிலிடப்பட்டு தலை, கை, கால்கள் தனித்தனியாக வெட்டப்பட்டுக் கொல்லப்படுகிறான் மருதநாயகம். இதுதான் மருதநாயகம் படத்தின் கதை.

மருதநாயகத்தின் முதற்கட்டப் படப்பிடிப்பு காரைக்குடி அருகிலும், கேரள மாநிலத்தின் உள்ள சாலக்காடு மலைக்காட்டுப் பகுதியிலும் நடந்தது. மருதநாயகமும் அவர் தோழர்களும் பெரிய வர்க்கத்தினரின் குற்றச்சாட்டுகளுக்குள்ளாகிப் பின் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஆடைகளை உருவி வெறும் கோவணத்துடன் பஞ்சாயத்தாரின் முன்னிலையில் முட்டி போட்டு உட்கார வைக்கப்படுகின்றனர்.

ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் பஞ்சாயத்து நடக்கிறது. மருதநாயகம் கண் முன்னாலே அவர் நண்பர்கள் வேலால் குத்திக் கொல்லப்படுகிறார்கள். மருதநாயகத்துக்கும் பஞ்சாயத்துத் தீர்ப்பு அதுதான். அதனால் அங்கிருந்து காளைமாடு ஒன்றின் முதுகில் ஏறித் தப்பி ஓடி விடுகிறான் மருதநாயகம். இந்தக் காட்சியில் கோவணத்துடன் நடித்தார் கமல்.

மருதநாயகத்தின் தோழர்கள் பலர் மரங்களில் தூக்கில் தொங்க விடப்படுவது, அவர்கள் வசித்த குடிசைகள் தீ வைத்துக் கொளுத்தப்படுவது போன்ற காட்சிகளும் காரைக்குடியில் எடுக்கப்பட்டன.

இது தொடர்பாக இதன் ஆசிரியருக்கு 10-10-98-இல் கடிதம் எழுதப்பட்டது.

மக்கள் விரோதி மருதநாயகம்!

'ஹீரோ' இதழ் மருதநாயகம் பற்றிக் கூறுவது

1764-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் தேதி.

தூக்கில் போடுவதற்காக அந்தக் கைதியை கோட்டை வாசலுக்கு சிப்பாய்கள் இழுத்து வந்த போது, சரித்திரத்தில் இடம் பெறப் போகிற அந்தச் சம்பவத்தை வேடிக்கை பார்க்க மதுரை நகரமே திரண்டு வந்திருந்தது.

கைகள் இரண்டும் பின்புறமாய் இழுத்துக் கட்டப்பட்ட நிலை யிலிருந்த கைதியை, மரத்தடியிலிருந்த மர பீடத்தின் மீது ஏற்றி நிறுத்தி னார்கள் சிப்பாய்கள். மரக்கிளையிலிருந்து தொங்கும் தூக்குக் கயிற்றை எடுத்து அவன் கழுத்தில் மாட்டினார்கள்.

அவன் நின்று கொண்டிருக்கும் மர பீடத்தை அந்தப் பக்கம் நகர்த்தித் தள்ளிவிட்டால் போதும். கால்கள் நழுவி தூக்கில் தொங்கி அவன் உயிரை விட்டுவிடுவான்.

மரபீடத்தை சிப்பாய்கள் நகர்த்தித் தள்ளி விட்டார்கள்.

அடுத்த விநாடி, அந்தக் கைதி உட்பட, யாருமே எதிர்பார்க்காத ஒன்று நடந்தது.

அவன் மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக தலையில் காலூன்றி நின்று கொண்டிருந்தான்.

மேலே அவனைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டிய மரக்கிளை முறிந்து, அவனுக்குப் பக்கத்தில் கீழே விழுந்து கிடந்தது.

கைதி இன்னும் உயிரோடுதான் இருக்கிறான் என்பதை உணர்ந்த மறுகணமே அவனை நோக்கிப் போர்வாளுடன் பாய்ந்து வந்தார்கள் சிப்பாய்கள். சிறிதும் தாமதிக்காமல் அவன் தலைவேறு, கைவேறு, முண்டம் வேறாகத் துண்டு துண்டாக வெட்டிச் சிதைத்தார்கள்.

பின்னர் தலையைப் பார்சல் பண்ணி, ஆட்சியாளர்களின் பார்வைக்கு அனுப்பி வைத்தார்கள்.

தனது முப்பத்தொன்பதாவது வயதில் இத்தனை கொடூரமாய் உயிரிழந்த அந்தக் கைதி.....

மருதநாயகம் பிள்ளை என்ற முகமது யூசுப்கான் என்ற 'கம்மந்தன் கான்சாகிப்'

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது பனையூர் குக்கிராமம். இங்கு 1725-ஆம் ஆண்டு இந்து சைவ வேளாளக் குடும்பத்தில் பிறந்தான் மருதநாயகம் பிள்ளை.

(ஆவலைத் தூண்டும் ஒரு வினோத விஷயம்... மருதநாயகமும் நானும் ஒரே மாவட்டத்தில் பிறந்தவர்கள்" என்று சொல்லிப் பூரித்துப் போகிறார் கமல்ஹாசன்)

மருதநாயகத்தின் அப்பா தையல் தொழில் செய்து வந்தார். 'அப்பா தொழில் மகனுக்கு' என்ற சனாதன தர்மப்படி சிறு வயதிலேயே மருதநாயகமும் தையல் தொழிலுக்குள் நுழைத்து விடப்பட்டான். அனால் ஏனோ அந்த தொழில் அவனை வசீகரிக்கவில்லை.

முரட்டு சுபாவமும், துடுக்குத் தனமும் மிகுந்த மருதநாயகம் ஊருக்குள் செய்த போக்கிரித்தனங்கள் நிறைய்ய்ய்ய.....! இப்படித்தான் ஒரு நாள் பெரிய தப்பு ஒன்றைச் செய்து விட்டு, 'இனி இங்கு இருந்தால் ஆபத்து' என்று எண்ணி ஊரைவிட்டே ஓடிப்போனான்.

(ஆனால் அவன் ஊரைவிட்டு வெளியேறியதற்கு கமல்ஹாசன் சொல்லும் காரணம் வேறு. "மருதநாயகம் சிறுவயதிலேயே அறிவு ஜீவியாகத் திகழ்ந்தான். சாதி, மதம் பிற்போக்கு விஷயங்களில் அவன் முற்போக்கான, சுதந்திரமான, தாராளமான, கருத்துக்களைக் கொண்டிருந்தான். அவனுடைய கருத்துக்களை ஒத்துக்கொள்ளாத அவன் சாதிக்காரர்கள் அவனைச் சாதியிலிருந்தே விலக்கி வைத்துத் தண்டித்தார்கள். இதனால்தான் அவன் ஊரைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என்பது கமல்ஹாசனின் கற்பிதம். ஆனால் தலைமுறை தலைமுறையாக, செவி வழிச் செய்தியாய் மருதநாயகம் கதையை உள்வாங்கி வைத்திருக்கும் சிவகங்கைப் பகுதி பெரியவர்கள் கமல்ஹாசனின் இந்த கற்பிதத்தை முற்றாக மறுக்கிறார்கள்)

பிழைப்புத் தேடி ஊர் ஊராய் சுற்றியலைந்துவிட்டு, ஒரு வழியாக பாண்டிச்சேரி வந்து சேர்ந்தான் மருதநாயகம். சொந்த ஊரில் அரை குறையாய்க் கற்றிருந்த தையல் தொழிலை பாண்டிச்சேரியில் செய்யத் தொடங்கினான்.

தையல் தொழில் அவனுக்குக் கை கொடுக்கவில்லை; ஆனால் அதன் மூலம் ஐரோப்பியர்களின் அறிமுகமும், அன்யோன்யமும் அவனுக்குக் கிடைத்தன.

தையல் தொழிலை உதறிவிட்டு 1744-ஆம் ஆண்டு தனது பத்தொன்பதாவது வயதில் மூசாலாலி என்ற பிரஞ்சுப்படைத் தலைவனிடம் உதவியாளனாகச் சேர்ந்தான். அந்த தலைவனிடமே நவீன ஐரோப்பிய போர்முறைகளைக் கற்றுத் தேர்ந்தான்.

அப்போதுதான் தனது முரட்டு சுபாவத்துக்கும், ஆபத்துக்களைக் கண்டு அஞ்சாத துணிச்சலுக்கும் பொருத்தமான தொழில் - 'கொலைத் தொழிலே' என்று கண்டான்.

கொலைத் தொழிலுக்குப் பாராட்டும், பதக்கமும், பதவியும் கொடுத்துக் கவுரவிக்கும் ஒரே அமைப்பு ராணுவம்தான்.

மருதநாயகம் 'பட்டாளத்தானாய்' மாறியதற்கு இதுதான் காரணம். மற்றபடி வெறும் பணத் தேவையோ தேசாபிமானமோ காரணமல்ல!

'எப்போதும் போர்க்களத்திலேயே இருக்க வேண்டும்; மனிதத் தலைகள் இடற நடக்க வேண்டும்; மனித ரத்த வாடை வீசும் காற்றையே சுவாசிக்க வேண்டும்' என்கிற அளவுக்கு அவன் போர் வெறியன் ஆனான்.

("... இறுதியில் 'போர்' அவனை மதமாகப் பிடித்துக் கொண்டது" என்று மிகச் சரியாக சொல்கிறார் கமல்ஹாசன்)

போர் அவனை மதமாகப் பிடித்துக் கொண்ட பிறகு, அடிக்கடி நிறத்தை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தி போல - எங்கே போர் நடந்தாலும் ஏதாவது ஒரு அணியில் நின்று போரிட வேண்டும் என்ற வெறியில் - அடிக்கடி விசுவாசத்தை நிலையில்லாமல் மாற்றிக் கொள்ளும் அற்பக் குணம் கொண்ட மனித மிருகமாய் மாறிப் போனான் மருதநாயகம்.

அதனால்தான் தனக்கு ஐரோப்பியப் போர்முறைகளைக் கற்றுத் தந்த மூசாலாலி என்ற பிரஞ்சுப்படைத் தலைவனைக் கைகழுவிவிட்டு, பிரஞ்சுக் காரர்களோடு வாணிபம் மற்றும் ஆதிக்கத்துக்குப் போட்டியிடும் ஆங்கிலேயர்களில் ஒருவனான 'பார்டன்' என்பவனிடம் மெய்க்காப் பாளனாகச் சேர மருதநாயகத்தால் முடிந்தது. பிறகு அவனையும் தூக்கியெறிந்து விட்டு தஞ்சை மராட்டிய இந்து மன்னனான பிரதாப

சிங்கனின் படையில் சேர்ந்து அவனுடைய வெற்றிகளுக்காகப் போரிட முடிந்தது. அதன் பிறகு அந்த இந்து மன்னனையும் ஒதுக்கிவிட்டு, நெல்லூருக்குச் சென்று முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த நெல்லூர் நவாபின் படையில் பணியாற்ற முடிந்தது. பின்னர் முகமது கமால் என்ற நெல்லூர்க்காரன், கேப்டன் ராபர்ட் கிளைவ் என்ற ஆங்கிலேயனுக்காக 'இந்தியர்களைக் கொண்ட சுதேசிப்படை' ஒன்றை திரட்டுகிறான் என்பதை அறிந்து, அவன் மூலம் 1752-ஆம் ஆண்டு தனது 27-ஆவது வயதில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ராணுவப் பிரிவில் சேர்ந்து 'யுத்தம்' என்ற பெயரில் வெறியாட்டம் ஆடமுடிந்தது.

இப்படி விசுவாசத்தை நிலையில்லாமல் அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்த மருதநாயகம், கிழக்கிந்தியக் கம்பெனியின் சுதேசிப் படையில் சேர்ந்த பிறகுதான் - ஒப்பு நோக்கில் சற்று நீண்ட காலத்துக்கு - ஆங்கிலேயரின் விசுவாசியாய் தொடர்ந்து இருந்து வந்தான்.

அதற்கு முக்கியக் காரணங்களும் இருந்தன.

மஹதியின் பார்வையில் மருதநாயகம் !

சையத் அகம்மது என்ற மஹதி என்பவரின் பார்வையில் மருதநாயகம் எவ்வாறு திகழ்ந்தார் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்வது இன்றியமையாதது.

"தமிழ்நாட்டின் தவப்புதல்வர் !

தான் பிறந்த பொன்னாட்டின் கர்வத்தை ஓங்கச் செய்த வீரப் பெருமகனார் !

அவர் வாழ்வு ஒரு வீரக்காவியம் !

இதோ எங்கள் வீரர் என்று பெருமையுடன் தமிழ்நாட்டினர் கான்சாகிபை உலகிற்கே அறிமுகப்படுத்தலாம் !

தம் தோள் வலிமையால் அசாதாரண இராணுவ வீரரானார்.

வெள்ளையரும் வியக்க வீரதீரச் செயல்களைப் புரிந்தார்.

ஆங்கிலேயராலும் அடக்க முடியாத பிரஞ்சுக்காரரரையும், தென்னாட்டுப் பாளையக்காரரரையும் அடக்கினார்.

தன்னேரில்லா ஆங்கிலேயர் படைத்தளபதியானார். அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எதிரிகள் நடுங்கினர்.

கொலை, கொள்ளை, குழப்பம், அராஜகம் மலிந்து கிடந்த மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலே தம் வலிமையால் அவற்றையெல்லாம் போக்கி, சாந்தியையும், சமாதானத்தையும் நிலவச் செய்தார்.

அன்னியரின் கொடியைப் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டுத்தள்ளி, தம்முடைய சுதந்திரக் கொடியை மதுரைக் கோட்டையின் மீது உயர்த்தினார்.

வலிமைவாய்ந்த ஆட்சியை நிறுவி, மக்கள் மகிழ, மேதாவிகள் புகழ ஐந்தாண்டுகள் சீருடனும், சிறப்புடனும் செங்கோல் செலுத்தினார். அவர் நிர்வாகத் திறமையை வைரிகளும் வியந்து போற்றினர்.

அவர் நாட்டைத் தம் வசப்படுத்திய பின் சுதந்திரமாக வாழ்ந்தார். மக்களுக்காக வாழ்ந்தார். அவர் மக்கள் நலனுக்காகச் செய்த சீரிய பணிகள் பல என்று கான்சாகிபைப் பற்றி முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கான்சாகிபு முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவன் என்பதால் மஹதி அவரைப் புகழ்ந்து எழுதியுள்ளார் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

பூலித்தேவன் சிறந்த வீரன். போர்த்தன்மை வாய்ந்தவன். ஆயினும் அப்போது கான்சாகிபை எதிர்க்க விரும்பவில்லை. ஆகையால் தன் தூதனைக் கான்சாகிபிடம் அனுப்பி பணம் கட்டத் தவணை கேட்டான். கான்சாகிபும் பூலித்தேவனை நன்கறிவார். அவனைத் தன் நண்பனாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அவர் நோக்கம். ஆகையால் கேட்டபடி தவணை கொடுத்தார்". (மாவீரர் கான்சாகிபு - மஹதி - 1961 - பக்.39)

மஹதி கூறியவற்றிற்கு ஆதாரமில்லை. கான்சாகிபிடம் பணம் கட்டத்தவணை கேட்டான் என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இதற்கு மாறாக யூசுப்கான் மேலிடத்திற்கு எழுதிய கடிதம் கூறுவது (Country Correspondence 1756. பக். 101. கடித எண். 200)

"பூலித்தேவன் வக்கீல் வந்தார். அவருக்குப் பரிசுகள் கொடுத்தேன். பூலித்தேவரைப் பணிய வைக்க வேண்டுமென்று ஊக்கப்படுத்தி அனுப்பி யுள்ளேன்" என்று கூறியுள்ளார். பூலித்தேவன் வக்கீலுக்கு லஞ்சம் என்னும் பெயரில் பரிசு கொடுத்துள்ளார். அவனைப் பணிய வைக்க வேண்டும் என்று கான்சாகிப் கூறினார் என்பது தெளிவாக இருக்கிறது. அத்துடன் நின்றுவிடவில்லை. பூலித்தேவர் மிகவும் ஆபத்தானவர். (Wicked) அவர் இன்னும் பணியவில்லை என்றும் எழுதியுள்ளார். இந்நிலையில் பூலித்தேவனை நண்பனாக்கிக் கொள்ளவேண்டும் என்பது கான்சாகிபின் நோக்கம் என்றும் கூறியுள்ளார். கீரியும் பாம்புமாய் இருவரும் இருக்கும் போது பூலித்தேவனை நண்பனாக்கிக் கொள்வது யூசுப்கானின் நோக்கம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா ? இதன் மூலம் மாவீரன் பூலித்தேவனைப் பணிய வைக்க வேண்டும் என்னும் நோக்கம் கொண்டிருந்தான் கான்சாகிபு என்று தெரிகிறது.

பூலித்தேவனை எவ்வளவோ மதித்தார் கான்சாகிபு. அவனைத் தம் நண்பனாக்கிக் கொள்ளவே முயன்றார். துரதிருஸ்டவசமாகப் பூலித் தேவனின் உள்ளத்திலேயே சமய வெறுப்பு குடிகொண்டுவிட்டது. 'கான் நீட்டிய நேசக் கரத்தை உதறித் தள்ளிவிட்டான் பூலித்தேவன்' என்று மஹதி கூறியுள்ளார்.

இதுவரை யாரும் கூறாத குற்றச்சாட்டைப் பூலித்தேவன் மேல் மஹதி சூட்டியுள்ளார். மஹதி கூறிய கருத்து பூலித்தேவனுக்கு ஒரு போதும் ஏற்பட்டதில்லை. பூலித்தேவன் ஒரு சிவபக்தன். எல்லா மதத்தினரையும் ஆதரித்தான் என்று வரலாறு உள்ளது. இதற்கு ஆதாரமாக ஒரு சம்பவத்தை மட்டும் நினைவு கூர்கிறேன்.

ஆற்காடு நவாபின் சகோதரன் மாபூஸ்கான் பூலித்தேவனிடம் சரணடைந்தார். அவர் பரம எதிரியாயிருந்தும் அவரையும், அவருடன் வந்தவர்களையும் முஸ்லீம் என்ற வேறுபாடு கொள்ளாமல் தன்னுடைய கோட்டைக்குள்ளே தங்க வைத்தார். அவர்கள் வழிபட அல்லாக் கோயிலையும் கட்டிக் கொடுத்தார். அவர்கள் தங்கியிருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அல்லா கிணறு, அல்லா தெரு என்னும் பெயர்கள் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றன. மஹதி கூறிய சமய வெறுப்பு எப்போதும் ஏற்பட்டதில்லை. இதே போன்று பல சான்றுகள் உள்ளன.

மஹதி நூல் பக். 65-ல் பூலித்தேவன் உள்ளத்தில் சமய வெறுப்பு குடி கொண்டது என்று மஹதியைத் தவிர வேறு ஒருவரும் கூறவில்லை.

ஒரு சமயம் சீவலப்பேரிக்கு அருகிலுள்ள காரியா ஊரில் உள்ள முகமதியர்களை ஒரு பிரிவினர் துன்புறுத்தினர். உடனே மாவீரன் பூலித்தேவன் விரைந்து சென்று இருபிரிவினருக்கும் சமாதானம் செய்து வைத்தார். இரு பிரிவினரும் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இச் செய்தியை சங்கரன்கோயில் வட்டம், கோவில்பட்டி வட்டம், திருநெல்வேலி வட்டம் ஆகிய மூன்று வட்டங்களும் சந்திக்கும் எல்லையில் கல்வெட்டு வைக்கப்பட்டிருந்தது என்று ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். எளியவர்களுக்கு இரங்கும் மனம் படைத்தவன், சாதி மத பேதமற்ற செம்மல் மாவீரன் பூலித்தேவன் என்பதை நாடறியும். (இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம் - ந.இராசையா - 1985 - பக்.40)

வருங்காலத்தில் தமிழ்நாட்டைக் கான்சாகிபு ஆளுவதா? அல்லது பூலித்தேவன் ஆளுவதா ? என்ற பிரச்சனை எழுந்திருந்தது. இருவரும் பச்சைத் தமிழர்கள். நாட்டுப் பற்றுக்கொண்டவர்கள். அன்னியர்களை விரட்ட முனைந்தவர்கள். அது ஓர் ஆதிக்கப் போராட்டமேயாகும்" என்று மஹதி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். (மாவீரன் கான்சாகிபு-மஹதி-பக்.41)

இது மஹதியின் அனுமானம் என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். பூலித்தேவனும் கான்சாகிபும் இரு துருவங்கள். இரு துருவங்களும் இணையுமா ? ஒருபோதும் இணையாது. கொள்கை ரீதியாக இருவருமே வேறுபட்டவர்கள். மாவீரன் பூலித்தேவன் அன்னியரை விரட்ட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத முடிவில் இருந்தான். மீண்டும் பாண்டியர் ஆட்சியை மதுரையில் ஏற்படுத்த வேண்டும். அதற்காக அந்த வாரிசை கண்டுபிடித்து மதுரையில் அமர்த்த வேண்டும் என்று முனைந்தான் மாவீரன் பூலித்தேவன். ஆனால் கான்சாகிபோ மதுரையில் தானே மன்னாக முடிசூட்ட வேண்டும் என்னும்

சுயநலத்தில் இருந்தான் என்பது தெளிவாக உள்ளது. கான்சாகிபு நடத்திய சுயநலப் போராகும். அதாவது அது ஓர் ஆதிக்கப் போரேயாகும். ஆனால் மாவீரன் பூலித்தேவனோ, மதுரையை தான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. மாவீரன் பூலித்தேவன் நினைத்திருந்தால் மதுரை சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பார் என்பது திண்ணம்.

பஞ்சபாண்டியர் பரம்பரையைச் சேர்ந்த அரசிளங்குமரனான குலசேகர தீக்ஷிர வரகுணராமபாண்டியன் என்பவன் சிவகங்கையில் வாழ்ந்து வந்தான். பூலித்தேவன் பழந்தமிழ்ப் பாண்டிய மரபிலுதித்த அந்த அரசிளங்குமரனிடத்திலேயே புதிதாகத் தான் விலை கொடுத்து வாங்கியுள்ள 'சோழஉவந்தான்' பாளையத்தை ஒப்படைக்க விரும்பினான். (தமிழ் வீரன் பூலித்தேவன் - துர்க்காதாஸ் எஸ்.கே.சாமி - பக். 82)

மதுரையில் தான் ஆட்சியில் அமர வாய்ப்பு ஏற்பட்ட போதும் அதை விரும்பாமல் பாண்டியர் கையில் மதுரையை ஒப்படைக்க வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தான்.

மதுரை மன்னனாக முடிசூட்டப்பட குறுக்கே இருந்தவன் பூலித்தேவனே என்று கான்சாகிபு உறுதியாக நம்பினான். அவரை வெற்றி கொண்ட அடுத்த நிமிடமே கான்சாகிபு மதுரை மன்னனானான். மதுரை நாயகத்தின் ஆசை நிறைவேறியது. வரலாறு இவ்வாறு இருக்கும் போது -

'ஆங்கிலேயரைக் காட்டிலும் கொடுமையானவன் கான்சாகிபு. தென் தமிழகத்தில் நடந்த போர்களுக்கெல்லாம் காரணம் கான்சாகிபேயாவான் அவன் நடத்திய கொலை, கொள்ளை வேறு யாருமே செய்திருக்க முடியாது. தன் நாட்டு மக்களைக் கொன்று குவித்து ரத்த ஆறு ஓடுவதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடியவன் கான்சாகிபு. அப்பேர்ப்பட்ட துரோகி மருதநாயகத்தை முதலில் இந்நாட்டை விட்டு வெளியில் துரத்த வேண்டும் என்று வேதனையோடு கூறினார் மாவீரன் பூலித்தேவன்.

யூசுப்கான் எழுதிய கடிதத்தில் தற்போது நமது துப்பாக்கிகளையே நமக்கு எதிராகவே பயன்படுத்த விரும்புகிறான். அவன் வெளியே வந்தால், அவனது தலையை எடுத்துத் தங்களுக்கு அனுப்புகிறேன் என்று குறிப்பிட்டு உள்ளார்.

கான்சாகிபுவின் கொடுமையைப் பற்றி சொல்லும்போது மாவீரன் பூலித்தேவன் 'இந்த நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்' என்று சொன்னார். ஆனால் கான்சாகிபோ, பூலித்தேவனின் தலையை எடுத்து அனுப்புகிறேன் என்று கூறினார். இதிலிருந்தே பூலித்தேவன் கொடூர மானவரா? கான்சாகிபு கொடூரமானவரா? என்பது தெளிவாகத் தெரிகிறது.

'சீவில்லிபுத்தூர் அருகே பூலித்தேவனுக்காகத் துப்பறிந்து கொண்டிருந்த ஐவர் கான்சாகிபால் பிடிக்கப்பட்டு பீரங்கி வாயில் வைத்துச் சுடப்பட்டனர் என்று மஹதி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். (மாவீரன் கான்சாகிபு - மஹதி - பக்.42) கான்சாகிபே கொடூரமானவர் என்பதற்கான செயல்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

'பூலித்தேவன் மட்டும் கான்சாகிபுக்கு உறுதுணையாகயிருந்தால் வரலாறே மாறிப்போயிருக்கும். அவ்வாறு நடவாதது நாட்டின் துரதிருஸ்டமே யாகும்' என்று மஹதி கூறியதை ஏற்றுக்கொள்ள முடியாது. பூலித்தேவன் கான்சாகிபுக்கு எப்படி உறு துணையாக இருக்க முடியும் ? வெள்ளையருக்காக தமிழ்மக்களைக் கொன்று குவித்த கான்சாகிபுக்கு ஆதரவாக பூலித்தேவன் ஏன் உறுதுணையாக இருக்க வேண்டும் ? துரோகத்துக்கு உடன் போகச் சொல்லுவது மஹதிக்கு வேண்டுமானால் நியாயமாகத் தெரியலாம். தமிழனாகிய கான்சாகிபு தமிழ்மக்களையும், தமிழனான பூலித்தேவனையும் ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தார். கான்சாகிபு மட்டும் பிறவாதிருந்தால் இந்தியத் திருநாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியே ஏற்பட்டிருக்க முடியாது. கான்சாகிபு தமிழ் மண்ணில் பிறந்தது துரதிருஷ்டமேயாகும்.

இதே போல் கான்சாகிபு மதுரையில் ஆண்ட காலத்தில் மாவீரன் பூலித்தேவன் ஆற்காட்டில் நவாபின் பணியாளராக வேலை செய்து வந்ததாக 'கான்சாகிபு சண்டை' என்னும் நூல் கூறுகிறது.

மாவீரன் பூலித்தேவன் வரலாறு முழுவதும் நவாபை எதிர்த்து அவனது ஆட்சியை ஒழிக்க அணி திரட்டுவதாகவே உள்ளது. பலமுறை தோல்வியடைந்த பின்னரும், மீண்டும் மீண்டும் நவாபு எதிர்ப்பு, பிரிட்டிஷ் எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வீரத்தோடு போராடிய மாவீரன் பூலித்தேவன். தன் கடைசி நாட்களில் அடிமையாகக் கழித்ததை நம்பமுடிய வில்லை. தாண்டவராயனது சூழ்ச்சியையும், நரித்தந்திரத்தையும் புகழ்ந்து பேசும் பாடகனது மனப்பான்மையில் - மாவீரன் பூலித்தேவனும் வீரத்தால் சாதிக்க முடியாததை, நவாபைச் சார்ந்து, கான்சாகிப் பற்றிக் கோள்மூட்டி, அவனை அழிக்கும் தந்திரத்தால் சாதிக்க முயன்றான் என்று கூறுவது மாவீரன் பூலித்தேவனும் தாண்டவராயனைப் போல் அரசியல் தந்திரம் வாய்ந்தவன் எனக்காட்டும் 'பாடகனது முயற்சி'யென்று கொள்ள வேண்டும். தவிரவும் கான்சாகிபு இறந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் பிரிட்டிஷ் தளபதி டொனால்டு காம்ப்பெல் வாசுதேவநல்லூரை முற்றுகையிட்ட பொழுது மாவீரன் பூலித்தேவன் கோட்டையிலிருந்து போராடினான் என்று காம்ப்பலே கூறியிருக்கிறான். 'கதைப்பாடல் கூறும் இச் செய்தி

உண்மையல்ல' என்று நா. வானமாமலை 'கான்சாகிபு சண்டை' என்னும் நூலில் 13-ஆவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இச் செய்திக்கு மேலும் வலுவூட்டும் வண்ணம் வேறு ஒரு செய்தியும் உள்ளது. மாவீரன் பூலித்தேவன் 1761 முதல் 1765 வரை தலைமறைவாகக் கடலாடியில் வசித்து வந்தான் என்பதை அனைவரும் அறிவர்.

மேலும் மாவீரன் பூலித்தேவன் தலைமறைவாக இருந்த நேரத்தில், வெள்ளையரை எதிர்த்து மீண்டும் போரிட வேண்டிய காரணங்களால் அதற்கு வேண்டியவற்றைத் தயார் செய்து கொண்டிருந்தார். ஆற்காடு நவாபும், ஆங்கிலேயரும் பரம விரோதியாகப் பாவித்து இருந்த இத்தகைய சூழ்நிலையில் மாவீரன் பூலித்தேவன் எப்படி ஆற்காடு நவாபின் அடியாளாக இருந்திருக்க முடியும் ?

மாவீரன் பூலித்தேவனைத் தோற்கடிப்பதற்காகச் சிவகங்கை மறவர்களும் ஆங்கிலேயருக்குத் துணையாக வந்ததால் சிவகங்கையின் உதவியை மாவீரன் பூலித்தேவன் நாடவில்லை. ஆகையால் மாவீரன் பூலித்தேவன் சிவகங்கையுடன் வேறுபாடு கொண்டிருந்ததால் தாண்டவராயன் மிகைப்படுத்திச் சொல்லியிருக்கலாம் என்று தெரிகிறது.

மருதநாயகம் பெயரில் குழப்பம்

முகமது யூசுப்கானா ? கான்சாகிபா ? மருதநாயகமா ?

இதில் எது உண்மையான பெயர்.

முகமது யூசுப்கான் என்பதே உண்மையான பெயராகும். “யூசுப்கான்” என்னும் சொல்லை யூசுப் + கான் எனப் பிரித்தால், அதன் விகுதி “கான்” எனப்பிரியும். ஆதலால் யூசுப்கானை அனைவரும் கான் என்றே அழைத்தனர். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களை “சாகிப்” என்று அழைப்பதும் உண்டு. இஸ்லாமியராகிய கான், “கான்சாகிப்” என்று அழைக்கப்பட்டான் போலும். “கான்சாகிப் சண்டை” என்னும் நூலில் அவன் “கான்” என்றே அழைக்கப்படுகிறான்.

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய சிப்பாய்களுக்கு முதல் கமாண்டராக நியமிக்கப்பட்ட முதல் தமிழனே யூசுப்கான்தான். கமாண்டர் என்னும் சொல்லே தமிழில் “கும்மந்தான்” என்று அழைக்கப்பட்டது. பின்னர் அந்தச் சொல் ‘கம்மந்தான்’ என்றும், “கொம்மந்தான்” என்றும் அழைக்கப்பெற்றது. அச்சொல்லே ‘கொம்மந்தன் கான்சாகிபு’ என்றும் ‘கம்மந்தான் கான்சாகிபு’ என்றும் வழங்கலாயிற்று.

‘யூசுப்கான்’ என்னும் மூலப் பெயருடன் ‘கான்சாகிபு’ என்னும் துணைப் பெயரும் ஏற்பட்டது. இந்த நிலையில் யூசுப்கானை ‘மதுரை நாயகர்’ என்றோ ‘மதுரை நாயகம்’ என்றோ வழங்கி இருப்பர். யூசுப்கான் இஸ்லாமியராக இருந்ததால் நபிகள் நாயகத்தின் பிரதிநிதியாக மதுரையை ஆண்டு வந்தார் என்பதால் மதுரை நாயகம் என்னும் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

மதுரை வீரன், மருதை வீரன் என்றும், மதுரை அப்பன், மருதைஅப்பன் என்றும் பெயர்கள் வழக்கத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகையால் உண்மையான பெயர் முகமது யூசுப்கான். கொம்மந்தான் கான்சாகிபு இடையில் வந்த பெயராகும். மருதநாயகம் என்பது காரணப் பெயராகவும் பட்டப் பெயராகவும் வழங்கலாயிற்று.

மதுரை நாயகம், கான்சாகிபு சில வரலாற்று உண்மைகள் (பக்கம் 857-ல்) என்னும் கட்டுரை - 'மருதநாயகம் என்று இப்போது குறிப்பிடப்படும். பெயர் 'மதுரை நாயகம்' என்பதன் மாறிய வடிவமே என்றும்; மதுரைப் பகுதியை ஆண்டதால் இப் பெயர் வந்தது என்றும்; அவனது இயற்பெயர் நீலகண்டப் பிள்ளை, அது நீலன் என்று கதைப்பாடலில் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது என்றும் கூறப் பட்டுள்ளது'. (தினமணி 11-6-1998)

கதைப்பாடலில் இவ்வாறு கூறப்பட்டாலும், முகமதிய மதத்தில் பிள்ளை, சாதி என்று அழைக்கும் வழக்கம் இல்லை என்பது தெளிவாகும். சமீபத்தில் ஒரு தின இதழில் கடலாடிக்குப் பக்கத்தில் மங்களபுரம் என்னும் ஊரில் உள்ள பிள்ளைமார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மருதநாயகத்தின் வாரீசு தாரர்கள் என்று செய்தி வந்தது.

இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. நீலன் கதைப் பாடல் கூறும் கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மருதநாயகத்திற்கு நீலன் என்ற பெயர் இருந்ததையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கான தெளிவான ஆதாரங்கள் இல்லாததால் ஏற்றுக்கொள்ள முடியாது. யூசுப்கான் பிள்ளைமார் சாதியைச் சேர்ந்தவனல்ல என்பதுதான் உண்மை.

நீலன் கதையை ஆராய்ச்சி செய்து அதன் பின்னர் கூட உண்மையான வரலாறு கிடைக்குமாயின் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

மருதநாயகம் மதத்தில் குழப்பம் !

மருதநாயகம் இந்துவாகப் பிறந்து முஸ்லீம் மதத்தில் சேர்ந்தார் என்று சிலர் கூறுகின்றனர். அவ்வாறு அவர் சேர்ந்திருப்பரானால், எங்கு, எப்போது சேர்ந்தார் ? என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை. அவர் பிறவி முஸ்லீம் என்பதற்கான ஆதாரம் உள்ளது.

''விசையாலீம் குலம் விளங்க வருதீரன்'' என்னும் பாடல் வரியின் மூலம் குறிப்பிடுவதால் யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லீம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும் எஸ்.சி. ஹீல் எழுதிய நூலில் Khan (Sahib) is by birth a Moor and is descended from the ancient seed of that nation என்னும் குறிப்பு 286-ஆம் பக்கத்தில் உள்ளது.

"MOOR" என்னும் சொல்லுக்கு வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அராபிய கலப்பின இஸ்லாமியர் என்னும் பொருளை சென்னைப் பல்கலைக் கழக அகராதி பக்கம் 646-இல் கூறுகிறது. இக்குறிப்பின்படி யூசுப்கான் அராபிய கலப்பின இஸ்லாமியர் இனத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது. இதையே ஆதாரமாகக் கொள்ளலாம். யூசுப்கான் இஸ்லாம் மதத்தில் ஒரு பிரிவான மூர் வகுப்பில் பிறந்த தமிழன். அவனுடைய சந்ததியினர் தமிழகத்தில் வந்து குடியேறி இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லீம் ஆவார்.

'யூசுப்கான் இந்துவாகப் பிறந்து பின் முஸ்லீமாக மாறினார் என்னும் செய்தியை ஓர் ஆய்வாளன் என்ற முறையில் நிராகரிக்கிறேன்' என்று பேராசிரியர் ஹ.மு. நதர்சா மறுப்பதாகக் கூறுகிறார். யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லீம் என்று ஏற்றுக்கொள்ளலாம். யூசுப்கான் முஸ்லீம் மதத்தில் இருந்து கொண்டே இந்துக்காரர்களுக்கும் சில நன்மைகள் செய்து சந்தர்ப்ப வாதியாக நடந்து கொண்டார். எனவே யூசுப்கான் ஒரு சந்தர்ப்பவாதியே.

மருதநாயகம் சாதியில் குழப்பம் !

மருதநாயகம் பனையூரில் ஒரு வேளாளர் குடும்பத்தில் பிறந்தார் என்று கூறுகின்றனர். மருதநாயகம் பிள்ளை என்ற பெயரைக் கொண்டிருந்தார் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. 'யூசுப்கான் வேளாளர் குலத்தில் பிறக்கவுமில்லை. பெயர் மருதநாயகம் பிள்ளையும் இல்லை' என்பதை மஹறதி எடுத்துக்காட்டியுள்ளார்.

"கான்சாகிபு சண்டை" பாடலில் யூசுப்கான் பிள்ளை சாதியைச் சேர்ந்தவன் என்பதற்கான ஆதாரங்கள் இல்லை.

"சிறந்த வெள்ளைக் காரனிடத்தில் கானு

சீராய் மூன்றரை வருடம் பிள்ளையாய் வளர்ந்தான்"

"பிரட்டனிடம் பிள்ளையைப் போல் வளர்ந்தான்"

என்னும் பாடல் வரிகளில் உள்ள "பிள்ளை" என்ற சொல்லை எடுத்துக்கொண்டு பிள்ளைச் சாதியைச் சேர்ந்தவரென்று சொல்லுகிறார்கள் போலும். அந்த நூலில் யூசுப்கான் பிள்ளைச் சாதியைச் சேர்ந்தவன் என்பதற்கு வேறு ஆதாரமில்லை.

இத்தனை வீரயஞ் சொன்னால் பயலே

இனிமேலும் கானுதுரை சொல்லுகிறேன் கேளு

வெத்திலை கொழுந்து கிள்ளுஞ்சாதி நீயும்

வேளாள வம்சமில்லை மணிமார்பா

மேழிபிடித்து உழுவும் சாதி பாரில்

விளங்கவே எழுத்தாணி பிடித்தெழுதும் சாதி

நாளுங் கொடிக்கால் பார்க்கும்சாதி நீங்கள்

நதிகுல மென்றே யிருந்த ராஜ்ஜியங்களறியும்

பட்டோலை எழுதுமுங்கள் சாதி உனக்கு

படை வெட்டத் தெரியுமோ தாண்டவராயா (ப-30)

இப்படிக் கான்சாகிபு எழுதி அனுப்ப அதற்கு எதிரூபம் எழுதுகிறார் தாண்டவராயன்.

இந்தப்பாடலில் கான்சாகிபு பிள்ளை சாதியைப் பற்றிக் குறைவாகப் பேசியுள்ளார். கான்சாகிபு பிள்ளை சாதியைச் சேர்ந்தவனாக இருந்தால் பிள்ளைமார் சாதியைக் குறைவாகப் பேசியிருக்கமாட்டார். இதிலிருந்து கான்சாகிபு பிள்ளை சாதியைச் சேர்ந்தவரல்ல என்பது தெளிவாகும்.

நதிகுலம் என்று கூறுகிறார். நதி குலம் என்றால் கங்கைக் குலம் என்று வேளாளர் குலத்திற்குப் பெயர். அதையே ஆற்றின் பெயர் என்று கூறுகிறான். உழுவதும் ஏட்டில் எழுதவும் பழகிய வேளாளன் வாள் பிடித்து போர் புரிய முடியுமா ? என்றுதான் கேட்கிறான் என்று 'கான்சாகிபு சண்டை' என்னும் நூலில் கூறப்பட்டதிலிருந்து கான்சாகிபு பிள்ளை சாதியைச் சேர்ந்தவரல்ல என்பது தெளிவாகிறது.

"மதுரை கான்சாயபு கையில் கொடுத்தார் அந்த

மதயானை கான்சாயபு வாசித்துப் பார்த்தார்"

என்ற பாடலில் கான்சாகிபு என்றே அழைக்கப்படுகிறது என்பதில் இருந்தே கான்சாகிபு இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர் என்றும், பிள்ளை சாதியைச் சேர்ந்தவரல்ல என்பதும் தெளிவாகிறது.

"எங்கும் எதிலும் கலப்படம் அதை எடுத்துச் சொன்னாலே புலப்படும்" என்னும் பாடல் நினைவுக்கு வருகின்றது. அது போல் எல்லா வரலாறுகளிலும் பொய்யும், மெய்யும் கலந்துவிட்டது. அதை எடுத்துச் சொன்னால் உண்மை புலப்படும். ஒரு பொய்யைத் திரும்பத்திரும்பச் சொல்லி வந்தால் மெய்யாகிவிடும் என்று சிலர் கூறுகின்றனர். என்னதான் பொய் வரலாற்றைத் திரும்பத்திரும்பச் சொன்னாலும் சில நாட்களிலே வெட்ட வெளிச்சம் ஆகிவிடும். கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள்தான். அதற்குப் பிறகு தானாக அழிந்து விடும். உண்மையான வரலாறு என்றும் நிலைத்து நிற்கும். இது காலத்தின் கட்டாயம்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் உண்மையான வரலாற்றை, உள்ளது உள்ளபடியே இல்லாமல், மாறுபட்ட நிலையில் திரைப்படம் எடுக்கப்பட்டது. உண்மைக்குப் புறம்பான சம்பவங்கள் இருந்தும், திரைப்படம் மக்களிடம் பேராதரவைப் பெற்றது. வீரபாண்டிய கட்டபொம்மன் முதல் விடுதலைப் போராட்ட வீரனாகத் தள்ளப்பட்டான். அப்போது அதை எதிர்த்து யாரும் குரல் கொடுக்கவில்லை.

துர்க்காதாஸ்சாமி, புலியூர்க்கேசிகன், பேராசிரியர் சஞ்சீவி, தமிழ்வாணன், டைரக்டர் ராசாராம், வேணுகோபாலன் போன்ற இளைஞர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பல்வேறு விதமாக விமர்சனம் செய்தனர். தமிழ்வாணன், வீரபாண்டிய கட்டபொம்மனைக் கொள்ளைக்காரன் என்றும், முதல் விடுதலைப் போராட்ட வீரனல்ல என்றும் மக்கள் மத்தியில் உண்மையை எழுத்தில் வடித்தார்.

தமிழகத்திலுள்ள அனைவரின் பார்வையும் தமிழ்வாணன் மீது விழுந்தது. தமிழ்வாணன் விமர்சனத்துக்குரியவராக ஆகிவிட்டார். தமிழ்வாணனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று பலரும் பேசிய போது அதைச் சிறிதும் மனம் தளராமல் 'துணிவே துணை' என்று எதிர்த்து வந்தார்.

ம.பொ. சிவஞானம் போன்றவர்கள் தமிழ்வாணனை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். "தமிழ்வாணன் ஒரு தற்குறிப்பயல் ! ஒரு காண்டாமிருகம், ஒரு தறுதலை, ஒரு நாய்" என்றெல்லாம் குரல் கொடுத்தனர். அதே போல் தமிழ்வாணனுக்கு ஆதரவுக்குரலும் கொடுக்க ஆரம்பித்தனர். (கல்கண்டு 7-12-1958)

இந்தச் சூழ்நிலையில் கட்டபொம்மன் வாழ்க! என்றும், பூலித் தேவன் வாழ்க ! என்றும் இரண்டு கூட்டங்கள் கோஷமிட்டுக் கொண்டு வருவதாகத் தினத்தந்தியில் கார்டூன் சித்தரிக்கப்பட்டிருந்தது. பூலித்தேவன் வாழ்க என்று கோஷமிட்டுக் கொண்டுவரும் கூட்டத்தில் கண்ணாடியோடு ஒரு படம் வரையப்பட்டிருந்தது. "தங்களைக் குறித்தே அந்தப் படம் வரையப் பட்டிருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்ராயம்" என்று ஏ.எச்.அப்துல்லத்தீப் சேட் எழுதியுள்ளார். (கல்கண்டு 12-10-1958)

ஆதரவுக்குரலும், எதிர்ப்புக் குரலும் ஒலிக்க ஆரம்பித்தது. பாமர மக்களைத் தவிர ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் மாவீரன் பூலித்தேவனே இந்திய விடுதலைப் போரின் முதல் நாயகன் என்று குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

அன்று அவர்கள் ஆரம்பித்த விவாத மேடை இன்று மருதநாயகம் வரலாற்றிலும் தொடர ஆரம்பித்தது. மருதநாயகத்தின் வரலாற்றைத் 'தினமணி' இதழ் தொடங்கி வைத்தது. முதல் விவாத மேடையில், பெரிய புள்ளிகளான டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணியம், பேராசிரியர். அ.இராமசாமி போன்ற அறிஞர்கள் மருதநாயகம் விவாத மேடையை ஆரம்பித்து வைத்தனர்.

மருதநாயகத்தை உயர்ந்த வீரனாக, முதல் இந்தியனாக, விடுதலைப் போராட்ட முதல் நாயகனாக சினிமா மூலம் நாட்டு மக்கள்

முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார் பிரபலப் படத்தயாரிப்பாளரும், சிறந்த நடிகருமான கமல்ஹாசன்.

மருதநாயகம் வரலாறு சூடுபிடிக்கலாயிற்று. அதன் மூலம் மருதநாயகம் என்றால் யாரென்று தெரியாமல் இருந்த பாமர மக்கள் கூடத் தெரிந்து கொள்ளும் அளவிற்கு விளம்பரம் செய்தார் கமல்ஹாசன். அனைத்துப் பத்திரிக்கைகளிலும் பேட்டி கொடுத்தார். பேட்டியை அனைத்து இதழ்களும் வெளியிட்டு மருதநாயகத்திற்கு ஒரு சரியான விளம்பரமாக அமைந்தது. தமிழகம் மட்டுமல்லாது, இந்திய அளவிலும், ஏன் உலக அளவிலும் மருதநாயகம் வரலாறு கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது.

பல அறிஞர்களும் இந்த விவாத மேடையைப் பயன்படுத்தினர். தங்களின் கருத்துக்களை நாடறியச் செய்தனர். மருதநாயகம் விவாத மேடை சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டது. எங்கும் மருதநாயகம் பவனிவர ஆரம்பித்து விட்டார்.

இந்த விவாத மேடையில் முதன்மையாக வைக்கப்பட்ட பொருள்கள் என்ன ? என்று சிந்தித்தால் அதிகமில்லை என்று தான் சொல்லலாம். இதில் கலந்து கொண்ட அனைத்து அறிஞர்களும் மருதநாயகம் பெயரில் ஒரு குழப்பம். சாதியில் ஒரு குழப்பம். மதத்தில் ஒரு குழப்பம். பிறப்பில் ஒரு குழப்பம். இப்படி ஒரு சில குழப்பங்கள் மூல காரணமாக இருக்க இவற்றின் அடிப்படையாக மேலும் பல குழப்பங்கள் வருகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக மருதநாயகம் இந்திய விடுதலைப் போரின் முதல் நாயகன் என்று வரும் குழப்பமே மிகவும் மேலோங்கி நிற்கிறது.

இதன் பின்னர் மருதநாயகம் விவாதம், பத்திரிக்கைத் துறையில் மட்டும் உலாவிக் கொண்டிருந்தது. தற்போது பொதுமக்கள், சாதியத் தலைவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பலரும் ‘மருதநாயகம் விடுதலைப் போராட்ட வீரன் அல்ல. அவர் ஆங்கிலேயருக்கு அடியாளாகச் செயல்பட்டார்’ என்று அறிக்கை விட்டனர்.

மருதநாயகம் முதல் விடுதலைப் போராட்ட வீரனா ? அல்லது மாவீரன் பூலித்தேவன் முதல் விடுதலைப் போராட்ட வீரனா ? என்ற விவாத மேடை ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக ‘ஹீரோ’ என்ற இதழில் வெளிவந்த ஒரு செய்தி இங்கே அறிமுகப்படுத்தப்படுகிறது. அதில் ஆசிரியரின் வேகத்தைக் காணலாம்.

மருதநாயகம் பிறப்பும் இறப்பும் !

மருதநாயகம் எப்போது பிறந்தார் என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்க வில்லை. சிவகங்கைக்கு அருகிலுள்ள பனையூரில் 1725-ல் மருதநாயகம் பிறந்தார். (சுதந்திரப் பொன்விழா மலர் - மாவீரன் மருதநாயகம். பக். 25) இதை ஒற்றி கான்சாகிபு 1725-இல் பிறந்தாரென்று எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் தமது நூலில் கூறியிருப்பதாக திவான் தமது 'மருதநாயகம் கான்சாகிப்' நூலில் பக்கம் 15-இல் குறிப்பிட்டுள்ளார்.

கான்சாகிபு பிறந்தது மதுரைப் பனையூராகும் என்று மஹதி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். (மாவீரன் கான்சாகிப் - மஹதி - பக்.14)

கான்சாகிபு 1720-1730க்குள் பிறந்திருக்க வேண்டும் என்று அ. மாதவையா தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். (துட்சிணா சரித்திரம் - அ.மாதவையா - 1925. பக். 88)

இராமநாதபுரம் மாவட்டம் பனையூரில் பிறந்ததாக பொன்னுச்சாமித் தேவரின் குறிப்பு ஒன்று கூறுகிறது. பரமக்குடிக்கு அருகிலுள்ள பனையூரில் மருதநாயகம் பிறந்ததாகக் கமல்ஹாசன் கூறுகிறார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் என்னும் ஊரின் அருகில் ஒரு பனையூர் உள்ளது. அந்த ஊரில் ஏன் பிறந்திருக்கக்கூடாது ? என்ற ஐயப்பாட்டிற்கும் தக்க பதில் கிடைக்கவில்லை. 'கான்சாகிபு சண்டை' நூலில் "பிறந்தது பனையூர் மண்ணு" என்ற குறிப்பு மட்டும் உள்ளது.

எஸ்.சி.ஹீல் நூலில் 1-ஆம் பக்கத்தில் யூசுப்கான் பிறப்பைப் பற்றி குறிப்பு உள்ளது. According to tradition Yusufkhan was born a Hindu, of the vellala caste at Paniyur, in the district of Ramnad. His name being Maruthanayagam Pillai என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நூல்கள் கூறியுள்ளபடி யூசுப்கான் எந்தநாளில் எந்த ஆண்டு பிறந்தார் என்பதற்கோ, எந்த ஊரில் பிறந்தார் என்பதற்கோ ஆதார பூர்வமான தகவல்கள் கிடைக்கவில்லை. முன்னூறு ஆண்டுகள் கூட ஆகாத நிலையில் வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்து கொள்வதில் இத்தனை குழப்பங்களா ? ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். திருநெல்வேலி மாவட்டம் வீரத்தின் விளைநிலம். இந்த மண்ணில் பிறந்தவர்கள் வீரமுள்ளவர்களாகப் பிறந்து தியாகம் செய்வார்கள். காட்டிக் கொடுக்கும் கயவர்களாக ஒரு போதும் இருந்ததில்லை. ஆகையால் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பனையூரில் பிறந்திருக்கமாட்டான் கான்சாகிபு என்பதைத் துணிந்து சொல்லிவிடலாம்.

வீரபாண்டிய கட்டபொம்மன், மருதநாயகம் இறப்பில் குழப்பம்

மருதநாயகம் என்னும் யூசுப்கானைத் தூக்கில் போட்ட நாள் அக்டோபர் 15 என்று கும்பினியரின் ஆவணங்கள் தெளிவாகக் கூறுகின்றன. எஸ்.சி.ஹில் எழுதிய நூலில் பக்கம் 226-இல் யூசுப்கானின் மரணம் அக்டோபர் 15-ஆம் நாள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு உண்மைச் சம்பவங்கள் இருந்தும் 1764-இல் இதே அக்டோபர் 16-ஆம் நாளில் தான் மருதநாயகம் மதுரையில் தூக்கில் போடப் பட்டார் என்னும் தவறான செய்தியை கமல்ஹாசன் கூறினார். (ஜூனியர் விகடன் 19-10-1997. பக். 10)

கட்டபொம்மன், மருதநாயகம் ஆகிய இருவருக்குமே இன்றுதான் நினைவுநாள். விடுதலைக்காகப் போராடிய அவர்களின் நினைவு நாளில் இவ்விழாவினை நடத்த கமல்ஹாசன் தீர்மானித்தது பாராட்டுக்குரியது என்று தமிழக முதல்வர் கலைஞர் பேசினார். (தினமணி அக்டோபர் 17-1997. பக். 10) தவறான செய்தியைக் கலைஞர் கூறியமை வரலாற்றில் பெரும் பிழையை ஏற்படுத்தியது. பெரியவர்கள் கலந்து கொள்ளும் விழாவில் இத்தகைய முரணான தகவல்கள் இடம் பெறலாமா ? இதிலாவது உண்மை வரலாற்றைக் கூறியிருக்க வேண்டாமா ?

மருதநாயகம் நினைவு நாள் அக்டோபர் 15, 1764. கட்டபொம்மனின் நினைவு நாள் அக்டோபர் 16, 1799. கட்டபொம்மனின் நினைவு நாளில்தான் மருதநாயகம் திரைப்படத் துவக்க விழா நடந்தது.

தமிழக முதல்வர் கலைஞர் பேசும் போது, "கட்டபொம்மன், மருதநாயகம் ஆகிய இருவருக்குமே இன்றுதான் நினைவுநாள். விடுதலைக்காகப் போராடிய அவர்களின் நினைவுநாளில் இவ்விழாவினை நடத்தத் தீர்மானித்தது பாராட்டுக்குரியது" என்று குறிப்பிட்டார். இந்த முரண்பாட்டை ஒரு பத்திரிக்கையாவது கண்டு கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. உண்மை வரலாற்றை ஒப்புக் கொண்டு தவறைத் திருத்திக் கொள்வதுதான் சாலச்சிறந்தது.

ஆவணங்களில் மருதநாயகத்தின் உண்மை வரலாற்றின் முன்பகுதி சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளோம். அதனைத் தொடர்ந்து இதுவும் வெளியிடப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் லாரன்ஸ் தனது மிலிடிரி ஜர்னலில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

“நாங்கள் ஒரு ‘மூர்’ இனத்தவனால் உதவப்பட்டோம். நெல்லூர் சுபேதாரரான இவன் பிறவிலேயே ஒரு வீரன்” என்று (யூசுப்கான் எஸ்.சி.ஹீல் - பக். 270)

ஆங்கிலக் கம்பெனிக்கு நேர்மையான, உண்மையான தொண்டன் யூசுப்கானைத் தவிர வேறு யாருமில்லை. (Letter to Council dated 4th August. P. 175) (Orms M.S.S. XIII P. 3430. P. 274)

“எனது முழுத்திறனையும் பயன்படுத்திக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணிகளை நிறைவேற்றுவேன். நான் யார்? என்று வெளிப்படுத்துவதில் சற்றும் மாற மாட்டேன். தங்களைத் தவிர எனக்குப் பாதுகாப்பு வேறில்லை. தாங்கள் எனக்களிக்கும் ஆதரவு தொடரட்டும்” என்று யூசுப்கான் கம்பெனியார்க்கு கடிதம் எழுதியுள்ளார். (Country Correspondence Military Department - 1756. March 26. P. 40)

“பாளையக்காரர்களோ பெரிய காலிகளாக இருந்து பொய் சொல்லு கிறார்கள். இவர்களை நான் என்னால் முடிந்த அளவு சமாளிக்கிறேன்” என்று யூசுப்கான் மேலிடத்திற்குக் கடிதம் எழுதினான். (கடித நாள் - 20- மே - 1756)

பூலித்தேவர் கொடூரமானவர். யாருக்கும் எப்போதும் பணியாதவர். இன்னும் கம்பெனி விவகாரங்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார். கம்பெனியாரை மதிப்பதில்லை. கம்பெனியார் படைக்கும் அஞ்சுவதில்லை. (கடித எண் 200 - 31 சூலை - 1756. பக். 101)

“ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கு யூசுப்கான் இழைத்த கொடுமைகள் (விவரிக்க முடியாதைவை) ஒப்பிட முடியாதவை. இதனைப் போன்றுதான் இவன் இந்நாட்டிற்கு ஏற்படுத்திய அழிவுகளும் ஆகும்” என்று கம்பெனியின் தலைமைப் பொறியாளர் மேஜர் ஜான்கால் பி. பிரஸ்டனைச் சந்தித்து கவுன்சிலுக்குப் பின்வருமாறு எழுதுகிறான். (எஸ்.சி.ஹீல் - பக். 148)

“யூசுப்கானது ஆட்கள், அப்பகுதி மக்களையும் வணிகர்களையும் கடிதத்தில் விவரிக்க முடியாத அளவிற்குத் தொல்லைகளுக்கு ஆளாகி வருகிறார்கள்” என்று தீத்தாரப்ப முதலி மேலிடத்திற்கு எழுதியுள்ளார் (7-ஆகஸ்ட் - 1756-பக். 105)

சந்திரராவ் நவாபுக்கு எழுதிய கடிதம் (நாள் : 8 மார்ச் 1758-பக். 31 - கடித எண். 76)

பூலித்தேவன் விரும்புவது என்னவென்றால் யூசுப்கானை இந்த நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்பதுதான். (What he desired is that Yusufkhan be removed from this country)

ஒரு ஊரில் மட்டும் ஐநூறு கள்ளர்களைக் கொன்றார் யூசுப்கான். அடக்குமுறைகளையும், அட்டூழியங்களையும் செய்து வந்தார். (இந்திய சரித்திரக் களஞ்சியம் - ப. சிவனடி. பக். 375) ஐநூறு தலைகளையும் வெட்டிக் குவித்து தோரணமாகத் தொங்கவிட்டான் யூசுப்கான்.

பயந்து தப்பியோடிய மக்களை யூசுப்கான் இரக்கமின்றிக் கொன்றார். (மதுரை வரலாறு - டாக்டர். கு. ராசய்யன்)

கான்சாகிபு மதிப்பளிக்காத வார்த்தைகளை மக்களிடம் பேசுவதுடன் அச்சுறுத்தலும் மேற்கொண்டு வருகிறார். (தீத்தாரப்ப முதலி கடிதம் 2-8-1756- Country Correspondence - P. 111 - 1756)

கம்பெனிப் படைகளுக்குச் சுபேதாராக உள்ள யூசுப்கான் படிக்காதவன்; புரிந்து கொள்ளத் தெரியாதவன். திருடன். இவனது திருட்டுத் தனத்தால் தான் பாண்டிச்சேரியில் Monsieur Law-ஆல் இவனது காதுகள் துண்டிக்கப் பட்டன. யாரும் காணாதவாறு தலைப்பாகையைக் கட்டி மறைத்துக் கொள்வான். இவனைத் தூக்கிலிட்ட போதுதான், இவனது காதுகள் இல்லாததை அனைவரும் பார்த்தனர். (எஸ்.சி.ஹீல். பக்கம். 281)

They Persuaded me to give the said countries of Yusufkhan, who was subadar of sepoys in the company's Service, illiterate, void of understanding and roguish. His ears were cut off at Pondicherry by Monsieur Law for his rogouery, which was seen by every person when he was hanged.

யூசுப்கான் ஒரு திருடன். பாண்டிச்சேரியை சேர்ந்தவரான மோன்சியூர் லா என்பவரால் யூசுப்கானின் காதுகள் துண்டிக்கப்பட்டன. படிக்காதவனாக இருந்தாலும், புரிந்துக் கொள்ள முடியாதவனாக இருந்தாலும் பரவாயில்லை. காலப் போக்கில் மாறிக்கொள்ளச் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் திருடன் என்ற பட்டம் பெறுவது மிகவும் இழிந்த செயலாகும். திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடியது குறிப்பிடத் தகுந்தது.

எஸ்.சி. ஹீல் புத்தகத்தில் பக்கம் 278-இல் யூசுப்கானிடம் தற்போது உள்ளவை எல்லாம் இந்நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டவை.

யூசுப்கானைத் தூக்கிலிட்ட பின் அவன் இருப்பிடத்தில் பார்த்தபோது கொள்ளையடிக்கப்பட்டவை காணப்பட்டன என்று பக்கம் 267-இல் குறிப்பிடப்பட்டுள்ளதையும் தொடர்ந்து திருட்டுத்தொழிலைச் செய்து வந்திருக்கிறான் என்பது தெளிவாகிறது. பணம் சேர்த்து வைப்பது தான் அவனின் குறிக்கோள் என்பதற்கு அவனுடைய வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

மதுரையில் ஏற்பட்ட செலவினங்கள் திருநெல்வேலி வருவாயில் ஈடுகட்டப்பட்டது. இந்நிலையில் கேப்டன் கார்ன் குறிப்பிட்டபடி மதுரைக் கோட்டையைக் கைப்பற்றப்பட்டபோது 4 லட்சம் பக்கோடா (14 இலட்ச ரூபாய்) இருந்ததாகத் தெரிகிறது. யூசுப்கான் வரி வசூலை ஆடம்பரமாகச் செலவழித்துள்ளது தெரிகிறது. (எஸ்.சி.ஹீல் - பக்கம். 287)

யூசுப்கானால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகள் குறித்து மக்கள் புகார் செய்தனர் என்று முதலியின் வழக்கில் மேலிடத்திற்கு எழுதியுள்ளார். (Country Correspondence 1758. P. 7)

"உன்னுடைய உழைப்பு மற்றும், பொறுப்பு பாராட்டத்தக்கது. அந்தப் பகுதி நலனுக்கும், கம்பெனியின் நலனுக்கும் ஏற்றதைத் தொடர்ந்து செய்" என்று மேலிடம் கூறியுள்ளது. (12-6-1756)

'ஒரு துரோகியை, விசுவாச மில்லாதவனை, நம்முடைய மண்ணுக்கும் விசுவாசமில்லாமல், தன்னை உயர்த்தி விட்டவனுக்கும் விசுவாசமில்லாமல் நடந்து கொண்டதால் பாதிக்கப்பட்ட மருதநாயகம் என்ற கான்சாகிபை பெரிய தியாகியாகக் காட்ட முயற்சி செய்கிறார். மருதநாயகம், அவனுடைய விசுவாசமின்மை காரணமாகத் தூக்கிலிடப் பட்டானே தவிர, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகத் தூக்கிலிடப் படவில்லை' என்று நகைமுகன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஹீரோ நவம்பர் - 97)

கப்பம் கட்டிய மருதநாயகம் விடுதலைப் போராட்ட வீரனா ? மதுரை, திருநெல்வேலி பகுதிகள் வரிவசூலுக்கு நவாபுக்கு விட்டுவிட்டபடியால் நவாபுக்குத்தான் வரி செலுத்தப்பட வேண்டும் என்ற நிலையில் நவாபுக்கு யூசுப்கான் ஒரு பணியாளராகயிருந்து செயல்படுவதை எதிர்த்தான். இதனால் நவாபுக்கு எதிராகச் செயல்படத் துணிந்தான். (எஸ்.சி. ஹீல். பக். 110)

On the 9th January, 1762. Mr. Pigot advised the Nawab to let Yusuf khan have the rentership for 9 lakhs, which it will be remembered was yusufkhan's first offer, and on the 18th the Nawab's reply was received saying he had arranged with yusufkhan for that sum. On the 29th the council received notice from Mr. Newton, pay

master at Trichirapaly, of a remittance from Yusufkhan of nearly four lakhs of rupees, asking now that as the Madura and Tirunelvelly countries are let to rent by the Nawab and not by us, the rents should he paid to the Nawab"

This Order he appears to have received on the 8th February, and this final settlement of the question, though Yusufkhan had obtained the rentership on his own terms as regards the amount of the rent, placed him in the position of a servant of the Nawab, whom he hated and distrusted.

இதன் பொருள் சிந்திக்கத்தக்கதாகும். மருதநாயகம், நவாபுக்கு வரி செலுத்த மாட்டேன். ஆங்கிலேயரிடம்தான் கட்டுவேன் என்று கூறினார் என்பதன் பொருள் நன்கு விளங்கும். கப்பம் கட்ட மறுக்கவில்லை. கப்பம் ஆங்கிலேயரிடம் கட்டுவேன், நவாப்பிடம் கட்டமாட்டேன் என்பதுதான் அதன் பொருள்.

“மண்ணை விலைக்கு வாங்க வந்தவங்க இந்த ஆங்கிலேய, டச், பிரான்ச் எல்லாருமே... இந்த மண்ணைத் தரகு பேசி விக்கிறார் நவாபு. இரண்டு பேருமே வந்தவங்க. வந்தேறிகள், சரித்திரம் தெரியாமல் கேள்வி கேட்கிறாங்க. எனக்கு அந்த மண்ணோட என்ன தொடர்புன்னு இந்த மண்ணை விக்கிற வியாபாரிகள் கேட்கிறாங்க. நான்தாண்டா இந்த மண்ணு. நான்தான் விதை. நான்தான் உரம். எங்க அப்பன் சாம்பலும், எங்க முப்பாட்டன் சாம்பலும் இந்த மண்ணில் இருக்கு. நாளைக்கு நானும் இருப்பேன். இந்த மண்ணுல இந்த மண்ணை எவனுக்கும் விக்க அவனுக்கு மட்டுமல்ல, எனக்குக்கூட உரிமையில்லை. காற்றை விலை பேசுறான். கடலை குத்தகை பேசுறான். இந்த அற்பத்தனம் பணபலம் அதிகமாயிட்டே அல்லாஹ் !” என்று கமலின் வசனம் முடிகிறது. இதைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

அடிக்கடி கூறப்பட்டது போல, வரிவசூலித்திட எவ்வளவு நிர்ணயிக்கப் பட்டதோ அதைவிட அதிகமாகவே யூசுப்கான் வசூலித்திருக்கிறான். இது நிரூபணமாகி உள்ளது. (எஸ்.சி. ஹீல் பக். 276)

I Suppose that as soon as this was made public Yusufkhan informed you that the charges exceeded the income, and so you intend to advance him money on behalf of the company to meet them.

"நீ எவ்வளவு தொகை வரியா வசூலிக்கிறாயோ, அத்தொகை முழுவதையும் கேப்டன் கைலாடுக்குச் செலுத்திவிட வேண்டும். நாட்டிலுள்ள நிலைமை மற்றும் கிளர்ச்சிகள் பற்றிய விவரங்களையெல்லாம் கைலாடுக்குத் தெரிவித்து, கைலாடின் உத்தரவுகள் மற்றும் ஆலோசனைகளின்படி நடக்கவேண்டும் என்று யூசுப்கானுக்குத் தெளிவாக அறிவித்தும், நிர்ணயிக்கப்பட்ட பணத்தைவிட அதிகமாக வசூலித்ததுதான் காரணம் என்று ஆதாரபூர்வமாக தெரிகிறது. (எஸ்.சி. ஹில் - பக். 272)"

Received half the amount for the company, and also settle a method for the future payment of the share due to the company in regular manner. whatever money you receive must be remitted to captain caillaed, to whom you will communicate the occurrence that may happen and follow his orders and advice on all occasions.

இதனைத் தொடர்ந்து மருதநாயகம் உண்மை வரலாற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு மேலும் வலுவூட்டுவதற்குப் பல காரணங்களை நகைமுகன் கூறியுள்ளார். கமல்ஹாசன் கூறியுள்ள கருத்துக்களைச் சட்டரீதியாகப் பார்க்கிறார் நகைமுகன். அதனையும் இத்துடன் பிரசுரம் செய்வது சாலச்சிறந்தது.

சரித்திரம் ஒரு தரப்பினருக்கு ஒரு விதமாயும், இன்னொரு தரப்பினருக்கு வேறு விதமாயும் பொருள் தருவது சுவாரஸ்யமான விஷயம்தான்.

வீரபாண்டிய கட்டபொம்மன் - ம.பொ. சிவஞானத்துக்கு 'சுதந்திரப் போராட்ட வீரனா'கவும், தமிழ்வாணனுக்குக் 'கொள்ளைக்காரனா'கவும், காட்சி தந்து தமிழ்நாட்டில் சரித்திர ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்தினான்.

மாவீரன் பகத்சிங் - காந்திக்குப் 'பயங்கரவாதி'யாகவும், நேருவுக்கு 'போராளி' யாகவும் முகம் காட்டி இந்தியா முழுக்க பெரும் தத்துவப் போர் நடக்கக் காரணமானான்.

அந்த வரிசையில் இன்று - மருதநாயகம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு விசித்திரம் போல் - விதிவிலக்கு போல் - வாழ்ந்து மறைந்த மருதநாயகம் என்ற முகமது யூசுப்கான் என்ற 'கம்மந்தான் கான்சாகிப்' நடிகர் கமல்ஹாசனுக்கு... மன்னிக்கவும் ... இயக்குநர் கமல்ஹாசனுக்கு... 'இந்திய விடுதலைக்கு வித்திட்ட முதல் சுதந்திரப் போராட்ட வீரனா'கவும், 'சிப்பாய்க் கலகத்துக்கு முன்னோடி'யாகவும் காட்சி தருகிறான்.

ஆனால் நமக்கு அவன் ஆங்கிலேயரின் ஏவல் நாயாகவும், அவர்களின் ஆதிக்கத் தேமல் தமிழகம் முழுவதும் படரக் காரணமானவனாகவும், அவர்களின் ஆதிக்கத்தை ஏற்க மறுத்து நெஞ்சுயர்த்திய சுதந்திரப் போராட்ட வீர மறவர்களைக் கடித்துக் குதறி இரத்தம் குடித்த கொடூரமிருகமாகவும், அந்நியரின் லாப வேட்கையைப் பூர்த்தி செய்ய தன் தாய்நாட்டு மக்களைக் கொன்று குவித்து, கசக்கிப் பிழிந்து வரிவசூல் செய்த மக்கள் விரோதியாகவும், இன்றுள்ள எந்த அரசியல்வாதியையும் மிஞ்சும் அளவுக்கு பதவிப் பித்துப் பிடித்து அலைந்த இழி பிறவியாகவும் தன்னை அடையாளம் காட்டுகிறான்.

இயக்குநர் கமல்ஹாசன் தன் கதைக்கு 'கான்சாகிப் சண்டை' என்ற நாட்டுப்புறக் கதைப் பாடலையும், Hill என்ற ஆங்கிலேயன் எழுதிய 'YusufKhan, the Rebel Commandant' என்ற புத்தகத்தையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்.

ஆனால் மருதநாகயம் பற்றிய சரித்திரக் குறிப்புகள் மேற்கண்ட இரண்டோடு நின்று விடவில்லை. இன்னும் நிறைய இருக்கின்றன.

அவற்றின் அடிப்படையில் தான் நாம் மருதநாயகத்தை 'மக்கள் விரோதி' என்று ஆணித்தரமாகக் கூறுகிறோம்.

"மருதநாயகம் என்ற துரோகியைத் தேசாபிமானியாய், தியாகியாய் கமல்ஹாசன் சித்தரிக்க முயல்வதா?" என்று கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள தனித்தமிழ் கழகத் தலைவர் நகைமுகன், கமலின் முயற்சியைத் தடுத்து நிறுத்தத் தேசபக்தர்களை அணி திரட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறார். தவிர முன்னாள் பிரதமர் குஜ்ராலிடம் இது தொடர்பாகப் புகார் செய்திருக்கிறார். கமல்ஹாசனுக்கு வக்கீல் நோட்டீசு அனுப்பியிருக்கிறார். இந்த நோட்டீசுக்கு கமல் தரப்பில் அனுப்பியுள்ள பதில் திருப்தி தருவதாக இல்லாததால், நகைமுகன் வழக்குத் தொடரவும் முடிவு செய்துள்ளார்.

நாம் நகைமுகனைச் சந்தித்து "நீங்கள் கமல்ஹாசனை எதிர்ப்பது ஏன் ? " அவர் ஃபெப்ஸியை ஆதரிக்கிறார் என்பதாலா ? நீங்கள் காட்டுகிற எதிர்ப்பு நீதிமன்றத்திலும், அரசு மட்டத்திலும் ஒரு வேளை எடுபடாமல் போனால் என்ன செய்வீர்கள் ?" என்றெல்லாம் சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தோம்.

அவர் அளித்த பதில் இங்கே....

எங்கள் எதிர்ப்பு என்பது, மருதநாயகத்தை 'சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்டவன்' என்கிற சித்தரிப்புக்கான எதிர்ப்புதானே தவிர,

கமல்ஹாசனுக்கான எதிர்ப்போ அல்லது திரைப்படத்துறையில் இருக்கிற ஃபெப்ஸி - படைப்பாளிகள் சங்கங்களுக்கு இடையிலான பிரச்சனையில் நாங்கள் தலையிட்டுக் காட்டுகிற எதிர்ப்போ கிடையாது.

'துரோகம்' என்ற வினைச்சொல் இன்று தமிழ் கூறும் நல்லுலகில் 'எட்டப்பன்' என்ற பெயர்ச்சொல்லால் குறிப்பிடப்படுவதை நாம் அறிவோம். அந்த எட்டப்பனுக்கு வரலாற்றில் ஒரு முன்னோடியாக இருக்கிறான் என்றால் ..... அவன் தான் மருதநாயகம்.

உண்மையான ஒரு தேசபக்தரை - ஒரு சுதந்திரப் போராட்ட வீரரைப் பற்றிக் கமல்ஹாசன் படம் எடுக்கிறார் என்றால் அதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் மருதநாயகம் என்கிற தேசத்துரோகியை 'தேசாபிமானி' யாகக் காட்ட படம் எடுக்கிறார் என்பதுதான் நமக்கு ஏற்புடையதாக இல்லை.

கமல்ஹாசன் ஆரம்பத்திலிருந்தே ஒரு விஷயத்தை மறைத்து வருகிறார். அது என்னவென்றால், "வரலாற்றில் 'கான்சாகிப்' என்றொரு வில்லன் கேரக்டர் இருக்கிறது. அவன்தான் மருதநாயகம்" என்று சொல்லாமல் அதை மறைத்துவிட்டு, இவர் ஏதோ மருதநாயகம் என்ற கேரக்டரை புதிதாய்த் தேடிக் கண்டெடுத்தவர் போல "நான் மருதநாயகம் என்ற சுதந்திரப் போராட்ட முன்னோடி பற்றி படம் எடுக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். 'அவன் தான் கான்சாகிப்' என்ற உண்மையை ஏன் மூடி மறைக்கிறார் என்று தெரியவில்லை.

மருதநாயகம் அவனுடைய விசுவாசமின்மை காரணமாகத் தூக்கிலிடப்பட்டானே தவிர சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகத் தூக்கிலிடப்படவில்லை.

தூக்கிலிடப் பட்டவனெல்லாம் தியாகி அல்ல! ஆட்டோ சங்கர் கூடத்தான் தூக்கிலிடப்பட்டான். அதற்காக அவனை மருதுபாண்டியருடனும், தீரன் சின்னமலையுடனும் ஒப்பிட்டு 'தியாகி' என்று பாராட்டிவிட முடியுமா ?

ஆனால் கமல்ஹாசன் அதைத்தான் செய்தார். ஒரு துரோகியை - விசுவாசமில்லாதவனை, நம்முடைய மண்ணுக்கும் விசுவாசம் இல்லாமல், தன்னை உயர்த்தி விட்டவனுக்கும் விசுவாசம் இல்லாமல் நடந்து கொண்டதால் பாதிக்கப்பட்ட மருதநாயகம் என்ற கான்சாகிப்பைப் 'பெரிய தியாகி'யாகக் காட்ட முயற்சி செய்கிறார். அது நமக்கு ஏற்புடையதாக இல்லை. அதன் காரணமாகத்தான் நாம் எதிர்க்கிறோம்.

நம்முடைய மண்ணுக்கு விசுவாசமில்லாத ஒரு கேரக்டரை இந்த நேரத்தில், இந்திய சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், உயர்த்திப் பிடிக்க வேண்டிய அவசியம் என்ன ? ஒரு புறம்

தியாகிகளை கவுரவிக்கிறார்கள். "சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக எழுதப் போகிறேன்" என்று சொல்லுகிறார் கலைஞர் கருணாநிதி. மறுபுறம் அவரே போய் ஒரு துரோகியைத் தியாகியாய் சித்தரிக்க முயலும் இந்தப் படத்தின் தொடக்கவிழாவில் கலந்து கொள்கிறார். இது எந்த வகையில் நியாயம் ?

ஆங்கிலேயனுக்கு ஆதரவாகச் செயல்பட்ட ஒருவனைப் பற்றிய படம் என்பதால் இங்கிலாந்து ராணி வந்து கலந்து கொண்டார். அவர் கலந்து கொள்ளத்தானே செய்வார்...! ஆனால் இங்கே இருக்கிறவர்களுக்கு என்ன வந்தது ? இந்திய சுதந்திரத்தினால் பயனடைந்திருக்கிற, அதனால் முதலமைச்சராகி இருந்திருக்கிற கருணாநிதியும், 'தேசியம் காக்கிறேன்' என்று சொல்லிக் கொண்ட மூப்பனாரும் கலந்து கொண்டதுதான் நமக்குப் பெரிய ஆச்சரியத்தை தருகிறது.

இதை இந்திய அரசு எப்படி அனுமதிக்கிறது ... ?

மருதநாயகம் படத்துக்கு கிட்டத்தட்ட முப்பது கோடி ரூபாய் செலவு பிடிக்கும் என்கிறார்கள். பொதுவாக இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், அதிலும் குறிப்பாகத் திரைப்படத்துறையில் கடுமையான பொருளாதார நெருக்கடி இருக்கிறது என்பது நமக்குக் கிடைக்கிற தகவல்.

இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு சில நிமிடங்கள் மட்டுமே ஓடக்கூடிய 'மாதிரி ஓட்டப் படத்தை' ஒரு கோடி ரூபாய் செலவில் எடுத்து வெளியிட முடியுமென்றால் அது எப்படிச் சாத்தியமாயிற்று ?

வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்றோ ரெல்லாம் மக்கள் மத்தியில் பிரபலமான சரித்திர புருஷர்கள். ஆனால் இவர்கள் அளவுக்கு மக்கள் மத்தியில் பிரபலம் ஆகாத, மக்களிடம் வரவேற்பு இருக்குமா? இருக்காதா ? என்று சரிவரத் தெரியாமல் இருக்கிற ஒரு கேரக்டரை, அல்லது மருதநாயகம் தான் கான்சாகிப் என்று தெரிந்தால், 'அவன் ஒரு துரோகி' என்று சொல்லப்படக்கூடிய ஒரு கேரக்டரை, முப்பது கோடி ரூபாய் பட்ஜெட் போட்டு எடுக்கிறார்கள் என்றால், என்ன காரணத்துக்காக, எதை நம்பி எடுக்கிறார்கள் ?

'பிரம்மாண்டமாகப் படம் எடுத்தால் ஓடும்' என்பதை நம்பி எடுக்கிறார்கள் என்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஏனென்றால் 'ராஜராஜசோழன்' என்ற சரித்திரப் படம் கூட பிரம்மாண்டமாகத் தயாரிக்கப்பட்டதுதான். அத்தனை பிரமாண்டமாகத் தயாரித்தும் படம் தோல்வி கண்டது என்பதை நாமும் அறிவோம். கமல்ஹாசனும் அறிவார்.

இதையெல்லாம் தெரிந்து கொண்ட பிறகும் முப்பது கோடி ரூபாய் பட்ஜெட்டில் இந்தப் படத்தை எடுக்கிறார்கள் என்றால், அது லாப நஷ்டத்தைக்

கணக்குப் பார்க்காமல், வேறு யாரையோ திருப்திப்படுத்துவதற்கா, அந்நியரை திருப்திப்படுத்துவதற்கா எடுக்கிற முயற்சி என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவேதான் நான் இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

இந்த முப்பது கோடி ரூபாய் ஃபைனான்ஸ் எங்கிருந்து வருகிறது ? உள்ளூர்க்காரர்கள் தருகிறார்களா ? அல்லது வெளிநாட்டுக்காரர்கள் கொடுக்கிறார்களா ?

இந்திய அரசுக்கு எதிரான சக்திகள் வெளியிலிருந்து, பிரிட்டிஷோ, பிரஞ்சோ, முஸ்லிம் அல்லது அரபு நாடுகளோ இதற்கு ஃபைனான்ஸ் பண்ணுகிறதோ என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அதனால்தான் நான் முன்னாள் பிரதமர் குஜ்ராலுக்கு இது பற்றி 'சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்' என்று கேட்டிருக்கிறேன்.

'மருதநாயகம்' படப்பிடிப்பை சென்னை ஃபிலிம் சிட்டியில் நடந்த தமிழக அரசு எப்படி அனுமதித்தது ? என்பதும் நமக்கு விளங்கவில்லை.

கோட்சேயை 'மாவீரன்' என்று காட்ட ஒரு படம் எடுக்கப்போகிறோம் என்றால், அந்த படத்தின் படப்பிடிப்பை ஃபிலிம் சிட்டியில் நடத்த தமிழக அரசு அனுமதிக்குமா ? "மகாத்மா காந்தி தேசப்பிதா. அவருக்கு எதிராக இருந்தவர் பற்றி படம் எடுக்க அனுமதிக்கமாட்டோம்" என்று சொல்லியிருப்பார்கள் இல்லையா? பார்க்கப் போனால் சுதந்திரப் போராட்டத்தை முடித்து வைத்தவர்தான் மகாத்மா காந்தி. ஆனால் சுதந்திரப் போராட்டத்தை தொடக்கி வைத்தவர் பூலித்தேவன். அந்த பூலித்தேவனுக்கு எதிராக இருந்த மருதநாயகம் என்ற கான்சாகிப்பைப் பற்றி மட்டும் படம் எடுக்க அனுமதிக்கலாமா?

மருதநாயகத்தை நல்லவனாகக் காட்டும் படத்தை எடுக்கவும், வெளியிடவும் இன்று அனுமதித்தால், நாளைக்கு கோட்சே, எட்டப்பனை யெல்லாம் நல்லவர்களையும், தியாகிகளாகவும் சித்தரிக்கும் நிலை வராது என்று என்ன நிச்சயம் ?

இந்தப் பிரச்சினையில் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக கமல்ஹாசனுக்கு நாம் வக்கீல் நோட்டீஸ் அனுப்பினோம். அதற்கு அவர் தரப்பிலிருந்து எனக்கு பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே அவர், "வரலாற்றைத் திரிக்கிற நோக்கம் எனக்கு இல்லை. உள்ளது உள்ளபடித்தான் படமெடுக்கப்போகிறேன்" என்று பொதுப்படையாகக் கூறியிருக்கிறார்.

வக்கீல் நோட்டீசில் நாம் முக்கியமாகக் கேட்டிருந்தது என்ன வென்றால் "மருதநாயகம் படம் பற்றி சந்தேகங்களை நிவர்த்தி செய்ய, அதன் முழு திரைக்கதையை ஏதாவது ஒரு பத்திரிக்கையில் வெளியிட வேண்டும். இல்லையென்றால் நாங்கள் கோர்ட்டுக்குப போவோம்" என்பதுதான். ஆனால் அவர் "நான் அதை வெளியிட வேண்டியதில்லை" என்று பதில் கொடுத்திருக்கிறார்.

ஆகவே தான் கோர்ட்டுக்குப் போகிறோம். ரிட் போடுகிறோம். "மருதநாயகம் படத்தில் வரலாற்றுத் திரிபு இருக்கக்கூடாது. அப்படித் திரிபு இருக்கும் பட்சத்தில் சென்சார் அதற்கு அனுமதி தரக்கூடாது" என்று உத்தரவிட வேண்டும். மேலும், இது முப்பது கோடி ரூபாய் சம்மந்தப்பட்ட விவகாரம் என்பதால் இந்தப் படத்துக்கான நிதி ஆதாரம் எங்கிருந்து வருகிறது என்பதை விசாரிக்கச் சொல்லி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். தவிர இந்த படத்தின் படப்பிடிப்பை ஃபிலிம் சிட்டியில் நடத்த எந்த அடிப்படையில் அனுமதி கொடுத்தார்கள் என்பதை விளக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளின் அடிப்படையில் எங்கள் வழக்கு இருக்கும்.

நீதிமன்றத்தில் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம். நீதி மன்றத்திலும், அரசு மட்டத்திலும் நியாயம் கிடைக்காவிட்டால் என்ன செய்வீர்கள் ?" என்ற கேள்விக்கு எங்களுடைய பதில் :

தியேட்டர்களில் மருதநாயகம் படத்தை ஓட விடமாட்டோம். நீதிமன்றத்தில் நீதி கிடைக்கும். கிடைக்காவிட்டால் மக்கள் மன்றத்துக்குச் செல்வோம். சரித்திரத் திரிபு இருக்கும் பட்சத்தில் மக்கள் இந்த படத்தின் ட்ரெய்லரைக்கூட தியேட்டர்களில் திரையிட விட மாட்டார்கள்.

இந்திய விடுதலையை சாதித்தது மக்கள் எழுச்சிதான். அதே மக்கள் எழுச்சி விடுதலைப் போராட்ட வரலாற்றைத் திரிபுகளிலிருந்தும் பாதுகாக்கும் !

‘பூலித்தேவன் சிந்தில்’ கான்சாகிபு

பூலித்தேவன் கதைப்பாடல் கி.பி. 1768-இல் அரங்கேற்றப்பட்டது என்று தெரிகிறது. மாவீரன் பூலித்தேவனும், யூசுப்கானும் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட நாட்டுபுற இலக்கியம் ‘பூலித்தேவன் சிந்து’. இந்நூலில் திருவனந்தபுரம் சம்பவம் என்னும் தலைப்பில் ஒரு பாடல் வந்துள்ளது. அதில் கான்சாகிபு தலைமையில் தளபதி டார்மிக் ஆயிரம் துருப்புக்களுடன் கொல்லம் மைதானத்தில் டேரா அடித்துப் படைகளை அணிவகுத்துக் கொண்டு திருவாங்கூர் ராம்வர்மன் ராஜாவுக்குத் தூது அனுப்பினான். திருவாங்கூர் மன்னன் படைபலம் பத்தாது என்று கருதி மந்திரியுடன் ஆலோசித்து நெல்கட்டும் செவ்வல் பூலித்துரைக்கு ஓலை அனுப்பினார்.

திருவாங்கூர் மன்னனின் ஓலையை மாவீரன் பூலித்தேவன் படித்து, வாசுதேவநல்லூர், நெல்கட்டும் செவ்வல், பனையூர் ஆகிய கோட்டைகளி லிருந்து ஆயிரக்கணக்கான படைவீரர்களை அழைத்துக்கொண்டு திருவாங்கூர் சென்றார். இரவிவர்மன் மகாராஜா மாவீரன் பூலித்தேவனை வரவேற்றார். பத்மநாபர் கோவிலில், ராமராசரும், மாவீரன் பூலித்தேவரும் வழிபட்டனர். அப்போது மாவீரன் பூலித்தேவன், அஞ்சவேண்டாம் ராமராசரே, என்னுடைய கைப்பட்டாளங்களாலேயே கான்சாவைக் கொல்வேன் என்றார். ஜெயபேரிகை முழங்கியது. கணப்பொழுதில் கான்சாவைக் கொல்வேன், கான்சாகிபு படையைக் காற்றில் பஞ்சு போலத் துரத்திவிடுவேன் என்று ஆங்காரத்தோடு பூலித்தேவன், கான்சாகிபைக் கொல்ல புறப்பட்டார். கான்சாகிபு தலையை நான் வெட்டுவதற்குக் கத்திமுனையில் நிற்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

போர்க்களத்தில் கான்சாகிபு பட்டாளத்தைத் தாக்கினார். கான்சாகிபு போர் வீரர்கள் போருக்கு அஞ்சிப் புலம்புகின்றனர். பொல்லாத பூலித்தேவன் வந்துவிட்டதால், கான்சாகிபால் பூமியைப் பிடிக்க முடியாது. வீச்சுக்கு நூறு தலை தப்பாது. வெட்டி எறிவார் பூலித்துரை மன்னனும் என்று கூறினர். மேலும் காலம் கொடுங்காலமாக உள்ளது. இப்போ கான்சாகிபு கையில் சிக்கினோம். ஓடி ஒளிந்துகொள்ள வேண்டுமென்றால் மாவீரன் பூலித்தேவன் கொன்றுவிடுவார். பூலித்தேவன் வாளில் செத்தாலும் புண்ணியம் உண்டு என்று படை வீரர்கள் பேசிக்கொள்கிறார்கள். அப்போது கான்சாகிபு வந்து அவர்கள் தயங்கி நிற்பதைப் பார்த்து துடுக்காய் யுத்தம் செய்யாதவர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுவேன், பாய்ந்து யுத்தம் செய்யாத பேரை பட்டாவாளாலே வெட்டிவிடுவேன். உயிரைப் பெரிதென்றுயெண்ணாமலே யுத்தம் செய்வோருக்கு மெடல் கொடுப்பேன். மேலான உத்தியோகங்கள் தருவேன். வேண்டிய சம்பளங்களும் தருவேன்.

இப்படிக் கான்சாகிபு கூறியதும் படைகள் வீறு கொண்டு எழுந்தன.

அடே பராக்கிரமபாண்டியனே! அதோ, குதிரையில் இருப்பவன் தானே கான்சாகிபு என்று கேட்டார் மாவீரன் பூலித்தேவன். அதற்கு அவன் ஆம் மகாராஜா என்றார். உடனே மாவீரன் பூலித்தேவன் கான்சாகிபு எதிரில் வந்து நின்றார். அடே திருட்டு கான்சா, திருச்சி, திருநெல்வேலி, திருவில்லிபுத்தூர் இப்படி பல இடங்களில் சண்டையில் தோல்வியுற்று புறமுதுகு காட்டி ஓடினாய். மலையாள சீமையில் பிடிக்க வந்தாய் போலும். திடமாக நின்று என்னுடன் யுத்தம் செய்வாய்.

உக்கிரம் கொண்ட பூலி நீர்தானோ ? என்னுடைய டேராவில் கள்ளத்தனமாக நடந்து பீரங்கியை ஆட்பண்ணி, சிப்பாய்களையும், கர்னல்களையும், மோசப்படுத்தி தற்போது மலையாள சீமையையும் காக்க வந்தீர் போலும். உம்முடைய படைகளையும் கொன்று உம்மையும் கைது பண்ணிவிடுகிறேன் பார் என்று கான்சாகிபு கூறினார்.

அடே பேதை கான்சாகிபு! நல்ல வார்த்தை சொன்னாய். சொல்லும் சொல்லுக்கு அஞ்சாது போர் என்றால் நில் என்று பூலித்துரை கூறினார். இப்போதே உன்னை வெட்டுவேன். நீ கெட்டிக்காரனென்றால் வாளை இப்போதே தட்டுவாய் என்றார் மாவீரன் பூலித்தேவன். கடல் போல் வளைந்து நின்ற வெள்ளையர்களைக் குத்திக் கொன்றார். மேற்குப் பெருங்கடல் போல வளைந்து நின்ற வெள்ளைப் பட்டாளத்தை வெட்டிக் கொன்றார் மாவீரன் பூலித்தேவன்.

காண்டீபனும், கர்ணனும் போல யுத்த களத்தில் சண்டை நடந்தது. வீச்சுக்கு ஆயிரம் பேரை வெட்டி வீழ்த்தினார் மாவீரன் பூலித்தேவனின் படைத்தளபதி பாண்டியத் தேவன்.

காற்றாய்ப் பறந்து கான்சாகிபு தலையைக் கண்டதுண்டம் செய்தார் பூலித்துரை. கர்னல் துரையைத் தன்னுடைய வேல்கம்பால் குத்திக் கொன்றார் சொக்குத் தேவன். கான்சாகிபு படையை அடித்து விரட்டி வெற்றியை அடைந்தார் மாவீரன் பூலித்தேவன். வெள்ளையர்களை வேங்கையைப் போல் அடிப்பதால் ஓடலாயினர். இந்நிலையில் தளபதி டக்ளஸ் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்.

வெற்றி சங்கு ஊதப்பட்டுவிட்டது. பல்லாயிரம் வாத்தியம் முழங்க பட்டத்துயானையும் முன்னடக்க, ஐநூறு பெண்கள் திரண்டு வந்து ஆரத்தி எடுத்தனர். ராமராசன் கொலு மண்டபத்தில் மாவீரன் பூலித்தேவன் கொலுவிருந்தார். ஏராளமான பரிசுகளைப் படைவீரர்களுக்கு வழங்கினார்.

ராமராசன் பணமுடிப்பு, பட்டு, பட்டாடைகளையும் படைவீரர்களுக்கு வழங்கினார். மாவீரன் பூலித்தேவனையும், அவர் பட்டாளத்தையும் ராமராசா புதுமையுடன் அனுப்பி வைத்தார்.

கான்சாகிபு, கர்னல் ஆகியவர்களைக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டது. அதை நாய், நரிகள் தின்றன என்று கூறப்பட்டது. ஆனால் கான்சாகிபும், கர்னலும் எப்படியோ படைத்தளத்தை விட்டு காயங்களுடன் தப்பித்து ஓடியிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. அதைப் பார்த்த நவாபு, கான்சாகிபிடம் அடே நன்றி கெட்ட ராஜதுரோகி திருச்சி, தென்மலை, சிவகிரி, கயத்தார் இப்படி பல இடங்களில் ஆயிரம் பட்டாளங்களைக் கொண்டு போய் செயிக்காமல், தம் சேனைகளையும், கர்னல் ஜெனரல்களையும் இழந்து உன் உயிரைக் காப்பாற்ற ஓடி வந்த பேதையே ! நீ செய்த அபகீர்த்தியை ஒழிக்க வேண்டுமேயானால் நீ மலையாள சீமைக்குப் போய் திருவாங்கூர் மன்னனைப் பார்த்து அவருக்கு உதவ வேண்டும். அதன் மூலம் மாவீரன் பூலித்தேவனின் நட்பைப் பிரிக்க வேண்டும். ராஜாரவிவர்மனை, கம்பெனியார் பக்கம் கொண்டுவர வேண்டும்.

அவ்வாறு வெற்றி பெறாமல் வந்தாயானால் ரத்து செய்வேன் உந்தன் வேலையை. ஜெயிக்காமல் வந்தாயானால் நானே உன்னைக் குத்திக் கொன்று விடுவேன். விரைவாகப் போவாய் என்று நவாபு கூறினார். நவாபுவின் ஆணையை நிறைவேற்றும் வண்ணம் கான்சாகிபு மீண்டும் திருவாங்கூர் சென்று ராமராசனைக் கண்டு பேசினார். ஆசை வார்த்தைகளைக் கூறி மாவீரன் பூலித்தேவனின் நட்பைப் பிரித்தான் கான்சாகிபு. வஞ்சக வலையில் விழுந்த திருவாங்கூர் மன்னன் மாவீரன் பூலித்தேவனுக்கு எதிராகப் படைகளை அனுப்பினான். மாவீரன் பூலித்தேவனுடைய வீரத்திற்கு முன்னால் திருவாங்கூர் படை நிற்க மாட்டாமல் புறமுதுகு காட்டி ஓடியது.

முதலில் கான்சாகிபு வெட்டிக் கொல்லப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் உயிருடன் வந்ததாகக் கூறப்படுகிறது. கதைப்பாடலில் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம். கான்சாகிப்பின் சடலத்தை நாயும், நரியும் தின்றன என்று கூறுவதும் மிகைப்படுத்திக் கூறப்பட்டவையாகும். எப்படியோ தப்பித்துப் போயிருக்க வேண்டும் கான்சாகிபு.

'பூலித்தேவன் சிந்து' நூலிலும் கான்சாகிபை நல்லவன் என்று சித்தரிக்கவில்லை. கான்சாகிபின் படைகளுக்கே கான்சாகிபு மீது நல்ல எண்ணம் இல்லாமையைக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் லஞ்சம் கொடுத்து தன் பக்கம் சேர்த்துக்கொள்ளும் செயலில் தீரனாகவும் தெரிகிறது. கான்சாகிபின் வெற்றிகள் அனைத்தும் இப்படித்தான் இருந்தது போலும். மருதநாயகத்தின் உண்மை உருவத்தைக் காணமுடிகிறது.

முடிவுரை

பதினெட்டாம் நூற்றாண்டில் நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரன் மாவீரன் பூலித்தேவன், ஆற்காடு நவாபையும், ஆங்கிலக் கம்பெனியாரையும் எதிர்த்துப் போரிட்டார். ஆங்கிலக் கம்பெனியாரை மட்டுமின்றி, ஏனைய அந்நியரையும் எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

தமிழகத்தில் அப்போதிருந்த பாளையக்காரர்களில் மாவீரன் பூலித் தேவன் ஒருவரே, ஆங்கிலக் கம்பெனியரை எதிர்த்து நீண்ட போரை நடத்தினார். பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து போரிட்டு பல்லாயிரக் கணக்கான மக்களைக் காணிக்கையாகக் கொடுத்து இந்த நாட்டையே சிவப்பாக்கினார். இதில் பல வெற்றிகளையும் கண்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்கிலக் கம்பெனியாரை விரட்டியடிக்க ஒரு கூட்டணியை அமைத்தார். அந்தக் கூட்டணியில் மறவர் பாளையங்களெல்லாம் ஓரணியில் திரண்டு வந்தன. ஆனால் கிழக்குப் பாளையங்களான நாயக்கர்கள் பாளையங்கள் மட்டும் மாவீரன் பூலித்தேவன் கூட்டணியில் சேராமல், ஆங்கிலக் கம்பெனியாருக்கு கப்பம் கட்டி வந்தனர்.

ஆங்கிலக் கம்பெனியாரை இந்த நாட்டை விட்டு விரட்டுவதற்கு ஒற்றுமை இல்லாத நிலை அப்போது ஏற்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மனின் தாத்தா பொல்லப்பாண்டிய கட்டபொம்மனும், எட்டப்ப நாயக்கரும் அவர்களைச் சேர்ந்த ஏனைய பாளையக்காரர்களும் கம்பெனியாருக்குக் கப்பம் கட்டியதுடன், கம்பெனியாருக்குப் படை உதவியும் செய்தனர்.

பாஞ்சாலங்குறிச்சியாரும், எட்டப்பரும் ஆங்கிலக் கம்பெனியாருக்கு ஆதரவு கொடுக்காதிருந்தால், தமிழனான யூசுப்கான், தமிழனான மாவீரன் பூலித்தேவனை எதிர்க்காமல் இருந்திருந்தால், திருவாங்கூர் மன்னனும் நம்பிக்கைத் துரோகம் செய்யாதிருந்தால் இந்த நாட்டை ஆங்கிலக் கம்பெனியர் கைப்பற்றியிருக்க முடியாது. நிலைமையே வேறுவிதமாகப் போயிருக்கும். ஆனால் அத்தனை சக்திகளையும் எதிர்த்து தாயகத்தின் மண்ணை ஆங்கிலக் கம்பெனியாரிடமிருந்து காப்பாற்ற தன்னுடைய இறுதி

மூச்சு உள்ளவரையிலும் மாவீரன் பூலித்தேவன் போரிட்டார். இத்தகைய நீண்ட போரை, பூலித்தேவனைத் தவிர வேறு எவரும் சந்தித்ததாக வரலாறு இல்லை. அத்தகைய வரலாற்றுப் பெருமை மாவீரன் பூலித்தேவன் ஒருவருக்கே இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் மாவீரன் பூலித்தேவனும், யூசுப்கானும் தான் சிறந்த வீரர்களாக விளங்கி வந்தனர் என்று சிலர் எழுதி வந்தனர். அவ்வாறு சிறந்த வீரன் வரிசையில் மாவீரன் பூலித்தேவனோடு, யூசுப்கானை ஒப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாவீரன் பூலித்தேவனுக்கு நிகர் அவரேதான். வேறு யாரையும் ஒப்புமை சொல்லத் தகுதியில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மாவீரன் பூலித்தேவன் நடத்திய போர்களிலெல்லாம் தர்ம யுத்தம் செய்து வந்தார். ஆனால் யூசுப்கான் தர்மயுத்தம் செய்யாமல் லஞ்சம் கொடுத்து தன்பக்கம் இழுத்துக் கொள்வதும், போர் அறிவிப்பு இன்றி இரவு நேரங்களில் கூடத் தாக்கியதாகவும் “கான்சாகிபு சண்டை” நூல் கூறுகிறது. மாவீரன் பூலித்தேவனின் நண்பனாக விளங்கிய திருவனந்தபுரத்து அரசனை இலஞ்சம் கொடுத்து மாவீரன் பூலித்தேவனுக்கு எதிராகப் போரிட வைத்தவர் கான்சாகிபு.

மாவீரன் பூலித்தேவனுக்கு ஆதரவாயிருந்த மறவர் பாளையமான நடுவக்குறிச்சி பாளையக்காரனை தன் வசம் கையூட்டுக் கொடுத்து சேர்த்துக் கொண்டார் யூசுப்கான். சூரத்தனத்தைக் காட்டி மாவீரன் பூலித்தேவனை வெற்றி கொள்ளமுடியாது, சூழ்ச்சி செய்வதன் மூலம்தான் வெற்றிகொள்ள முடியும் என்னும் முடிவிற்கு கான்சாகிப் வந்தார். மாவீரன் பூலித்தேவனின் புரட்சி அணியில் இருந்த வீரர்கள் பலருக்குப் பொருளாசையைக் காட்டியும், பதவி மோகத்தைக் காட்டியும் தனது படையில் சேர்த்துக்கொண்டார் யூசுப்கான்.

வயிற்றுப் பிழைப்புக்காக கைக்கூலியைப் பெற்று தங்கள் தலைவனைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த கயவர்களில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் யூசுப்கான் அணியில் சேர்ந்தனர். பல்வேறு கிராமங்களிலிருந்தும் படைகள் வந்து குவிந்தன. யூசுப்கானுக்கு ஆதரவாகத் திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், நாலுகோட்டை, மதுரை, சிவகங்கை ஆகிய இடங்களிலிருந்து படைகளைக் குவித்தார் யூசுப்கான். ஏராளமான கூலிப் பட்டாளத்தையும் கொண்டு யூசுப்கான், தன்னந்தனியாக நின்று கொண்டிருந்த மாவீரன் பூலித்தேவனைத் தாக்கினார்.

மாவீரன் பூலித்தேவனை வெற்றி கொள்ள மூன்று ஆண்டுகள் ஏற்பட்டது யூசுப்கானுக்கு. வெள்ளையரை, அவர் வாழ்வை, வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் செய்ய முதன்முதலில் வாளுருவி "வெள்ளையனே வெளியேறு" என முழங்கியவர் மாவீரன் பூலித்தேவன். அத்தகு சிறப்புமிக்க மாவீரன் பூலித்தேவன் தோல்வி அடைந்ததோடு மட்டுமல்லாமல், அத்தகைய துயரச் செய்திகளை எண்ணி வருந்தி, வெள்ளை ஏகாதிபத்திய வெறிக்கும்பலை ஒழித்துக் கட்டும் வரை தான் உயிரோடு இருந்துதான் ஆக வேண்டும் என்று சங்கரகோமதியை வேண்டிக்கொண்டார். கடலாடியில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று இரத்த ஆறு ஓடச் செய்த துரோகத்தைச் செய்த முகமது யூசுப்கானைத் தியாகியென்றும், இந்திய விடுதலைப் போரின் முதல் வீரன் என்றும், முதல் இந்தியனென்றும் கூறி இந்திய விடுதலைப் போரையே கொச்சைப்படுத்தி வருகிறார் பிரபல படத் தயாரிப்பாளரும், சினிமா நடிகருமான கலைமாமணி கமல்ஹாசன். நாடு இவரை மன்னிக்காது.

இத்தகைய கொடிய செயல்களைச் செய்த யூசுப்கானை எப்படியும் வஞ்சம் தீர்க்க வேண்டும்; அதற்காகத் தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்று மாவீரன் பூலித்தேவன் கங்கணங்கட்டிக் கொண்டு 'மீன் வரும்வரை கொக்கு எப்படி காத்துக்கொண்டு நிற்குமோ' அதைப் போல மாவீரன் பூலித்தேவன் யூசுப்கானைக் கொல்வதற்காகக் காத்துக்கொண்டு இருந்தார்.

இந்நிலையில், மாவீரன் பூலித்தேவன் கடலாடியில் இருப்பதை அறிந்தும் அவர் பக்கத்தில் செல்வதற்கு யூசுப்கான் அஞ்சினார். அந்தமட்டில் மாவீரன் பூலித்தேவன் குறுக்கீடு இல்லாமல் இருந்தார் போதும் என்று எண்ணி, மதுரை மன்னனாவதற்கு இதுவே தக்க சமயம் என்று முடிவு செய்தார். பதவி ஆசை அவரை விரட்டியது. தன்னை எதிர்ப்பவர்களைக் கைக்குள் வைத்துக் கொண்டு தென்னாட்டுக்கு நானே தலைவன். நானே அதிபதி என்று எண்ணி கம்பெனியாரையும், ஆற்காடு நவாபையும் துச்சமாக எண்ணி, கும்பினியர் ஆணைகளை மதியாமலும், கீழ்ப்படியாமலும் இருக்கத் தொடங்கினார். இதனால் ஆற்காடு நவாபு யூசுப்கானைக் கொல்ல வேண்டும் என்று கம்பெனியாரிடம் வேண்டினார். கம்பெனியாரும் அதற்கு ஒத்துக்கொண்டனர்.

எந்த கும்பினியர் ஆட்சிக்காகத் தாயகத்தின் விடுதலை வீரர்களைச் சுட்டுப் பொசுக்கினானோ, அந்தக் கம்பெனியர் ஆட்சியே யூசுப்கானுக்கு விரோதமாக வந்தது. கம்பெனியாரின் தீவிர முயற்சினால் 1764 அக்டோபர் 14-இல் கைது செய்யப்பட்டு, 15-ஆம் நாள் மதுரை சம்மட்டிபுரத்தில் மாலை 5 மணிக்கு யூசுப்கான் தூக்கிலிடப்பட்டார். யூசுப்கான் எந்தத் துரோகச் செயல்களைச் செய்து மாவீரன் பூலித்தேவனை வெற்றி கண்டாரோ அதே வழியைப் பின்பற்றி கம்பெனியாரும், ஆற்காடு நவாபும் யூசுப்கானைத் தூக்கில் போட்டனர். ‘கெடுவான் கேடு நினைப்பான்’ என்னும் பழமொழிக்கு ஏற்ப யூசுப்கான் சுதந்திர வீரர்களுக்குச் செய்த கேடுகளெல்லாம், கம்பெனியாரின் மூலம் அவருக்கே வந்து சேர்ந்தது. சுதந்திர வீரர்கள் தலைகளை வெட்டி, ஈட்டிகளில் குத்தி பவனிவரச் செய்தார். தலைகளை வெட்டிக் கோட்டை வாசலில் தோரணம் கட்டி மகிழ்ந்த யூசுப்கானுக்கு அதே நிலை ஏற்பட்டது. வெள்ளையர்கள் யூசுப்கானின் உடலைக் கண்ட துண்டமாக வெட்டிப் பல திசைகளிலும் வீசி எறிந்தனர். எஞ்சியதை சம்மட்டிபுரத்தில் புதைத்தனர். சம்மட்டிபுரத்தில் யூசுப்கானின் சமாதி பள்ளி வாசலில் இருப்பது குறிப்பிடத்தக்கது. யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லீமாக இருந்ததால் அவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் சமாதியைக் கட்டியுள்ளனர்.

யூசுப்கான் இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட மாவீரன் பூலித்தேவன் மீண்டும் நெற்கட்டான் செவ்வல் வந்து கான்சாகிபினால் இடிக்கப்பட்ட கோட்டைகளைக் கட்டி, வெள்ளையரை விரட்டி அடிக்க மீண்டும் படைபலத்தைப் பெருக்க ஆரம்பித்தார். 1767-இல் டொனால்டு காம்பெல்லோடு மாவீரன் பூலித்தேவன் போரிட்டார். வாசுதேவநல்லூரில் நடைபெற்ற போர் முறைகளைக் கண்டு வியந்து மேலிடத்திற்கு டொனால்டு காம்பல் எழுதிய கடிதம் சென்னை ஆவணக் காப்பகத்தில் இன்றும் உள்ளது.

தன் வாழ்நாள் இறுதிவரை அந்நியரை விரட்டியடிக்க அரும்பாடு பட்ட மாவீரன் பூலித்தேவன் தன் மனைவி மக்களைப் பிரிந்தான். தன் மனைவி கயல்கண்ணி நாச்சியாரை வெள்ளையர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். குழந்தைகள் எங்கே சென்றனர் என்று தெரியாத நிலையிலும் நாட்டைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாய் செயல்பட்டு வந்தான். தலைமறைவாக இருந்து கொண்டு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி மக்களுக்காகவே வாழ்ந்தான். ஆதலால்தான் பல ஆண்டுகளாக

நடைபெற்ற போர்களிலெல்லாம் மக்கள் ஆர்வத்துடன் செயல்பட்டனர். இத்தகைய தியாகச் செம்மலின் வீரத்தையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைக் கொன்று இரத்த ஆறு ஓடச் செய்த துரோகத்தைச் செய்த முகமது யூசுப்கானை தியாகி என்றும், இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் வீரரென்றும் கூறி இந்திய விடுதலைப் போரையே கொச்சைப்படுத்தி வருகிறார் பிரபல சினிமா நடிகர் கமல்ஹாசன். யூசுப்கான் இந்த நாட்டுக்குச் செய்த துரோகத்தை கமல்ஹாசன் மறந்து மருதநாயகம் என்னும் பெயரில் திரைப்படம் எடுப்பதை இந்த நாட்டு மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

மாவீரன் பூலித்தேவனின் விடுதலை முழக்கம் அந்த நூற்றாண்டு முழுவதும் எதிரொலித்துக்கொண்டு இருந்தது. அந்நியரை விரட்டியடிக்க வேண்டும் என்ற எண்ணத்திற்காகன விதை 1750-இல் ஊன்றப் பட்டுவிட்டது. அதன் வளர்ச்சிதான் முத்துவடுகநாதர், வேலுநாச்சியார், முத்துராமலிங்க சேதுபதி, வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமத்துரை, மருதுபாண்டியர் ஆகியோர் வெள்ளையரை எதிர்த்தனர். அதன் பின்னர் 1860-இல் வேலூர் புரட்சி, 1857-ல் சிப்பாய்க்கலகம் ஆகிய போர்கள் நடைபெற்றன. பின்னர் மக்கள் சக்தியாக மலர்ந்து 1947-இல் விடுதலை ஏற்படக் காரணமாக இருந்தது மாவீரன் பூலித்தேவனின் புரட்சியே.

யூசுப்கானின் ஆங்கில எதிர்ப்பு சுயநல எதிர்ப்பாகும். தன்னலங்கருதிய போர் சுதந்திரப் போர் ஆகுமா ? அதன் மூலம் விடுதலை வேண்டி எத்தனை போர்கள் நாட்டில் நடைபெற்றன.

மாவீரன் பூலித்தேவனின் நோக்கம் தமிழ்நாட்டில் தமிழர்களே ஆட்சி செய்ய வேண்டும். மதுரையில் மீண்டும் பாண்டியர் ஆட்சியை நிலை நாட்ட வேண்டும். அந்நியரை விரட்டியடிக்க வேண்டும் என்பதே. மதுரையை மாவீரன் பூலித்தேவன் கைப்பற்றிய போதும், தான் மதுரையின் மன்னனாக முடிசூட்டிக்கொள்ளாமல், பாண்டியன் வாரிசைக் கண்டு பிடித்து மதுரை மன்னனாக அமர்த்தி அழகு பார்த்தவன். ஆனால் யூசுப்கானோ தானே மதுரை மன்னன் என்னும் பதவி ஆசையில் ஒட்டிக்கொண்டார். ஒரு சமயம் யூசுப்கான் மதுரை ஆட்சியைத் தெலுங்கர்களிடம் ஒப்படைத்துவிட்டு தற்போது இருக்கும் பணியிலேயே செயல்படுகிறேன் என்று கூறியதற்குத் தமிழனிடம் ஆட்சியைக்

கொடுக்கமாட்டேன் என்பது தானே பொருள். இறுதி வரை யூசுப்கான் சுயவாதியாகவே இருந்து வந்தான் என்பதுதான் உண்மை. இவரைத்தான் சுதந்திரப் போராட்ட முதல் வீரன் என்று கூறியுள்ளார் கமல்ஹாசன்.

திருவனந்தபுரத்திலிருந்து திருச்சி வரையிலும் மாவீரன் பூலித்தேவன் ஆட்சி செய்திருக்க முடியும். ஆனால் அதற்காக அவன் முயன்றானில்லை. திருச்சி வரையிலும் மாவீரன் பூலித்தேவன் வந்துவிடுவான் என்ற ஆற்காடு நவாபு முகமது அலி மேலிடத்திற்கு எழுதிய கடிதமே சான்றாகும்.

அத்தகைய வீரனின் வரலாறு மறைக்கப்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மனை முன்னுக்குக் கொண்டு வந்து பூலித்தேவனைப் பின்னுக்குத் தள்ளினர். அரசும் ஆதரவாகவே இருந்தது. போலிகளின் வரலாறுகளைக் கொண்டு வந்து கூத்தாடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஆய்வாளர்களின் புதிய பார்வையால் மாவீரன் பூலித்தேவனின் வரலாறு ஒளிவிட ஆரம்பித்து விட்டது. தமிழகம் முழுவதும் மாவீரன் பூலித்தேவனின் விடுதலை முழக்கம் எதிரொலிக்க ஆரம்பித்துவிட்டது.

இந்த நிலையில் மாவீரன் பூலித்தேவன் வரலாற்றைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, மருதநாயகத்தை முன்னுக்குக் கொண்டு வர முயன்று கொண்டிருக்கிறார் கமல்ஹாசன்.

"உண்மை ஒருநாள் வெளியாகும் - அதில்

உள்ளங் களெல்லாம் தெளிவாகும்

பொறுமை ஒருநாள் புலியாகும் - அதற்குப்

பொய்யும் புரட்டும் பலியாகும்"

என்றும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கூறியதைப் போல் உண்மையான வரலாறு ஒருநாள் நிச்சயம் வெளியாகும். அதில் பொய்யும் புரட்டும் ஒருநாள் பலியாகும். அதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. உண்மை வரலாறு ஒருநாள் வெளிவரும். அதில் மருதநாயகத்தின் உண்மை வரலாறும் வெளிவரும் காலம் வெகுதூரமில்லை.

'மருதநாயகம்' திரைப்படம் வெளிவரலாம். அல்லது வராமல் போகலாம். அது இன்றைய முக்கிய பிரச்சனை அல்ல. மருதநாயகம்

படத்தின் மூலம் உண்மைக் கருத்தை வெளியிடுவதில் யாரும் குறுக்கீடு செய்யமாட்டார்கள். ஆனால் மருதநாயகத்தை சுதந்திரப் போரின் முதல்வன் என்றோ, விடுதலைப் போராட்ட வீரன் என்றோ, முதல் இந்தியன் என்றோ அறிமுகப்படுத்துவதென்றால் அதற்கான ஆவணங்களைக் கொண்டு வந்து மக்கள் முன் வைக்க வேண்டும். திரைக்கதையையும், மூலக்கதையையும் எடுத்துக்கூறி மக்களின் ஐயத்தைப் போக்க வேண்டும். மாவீரன் பூலித்தேவன் தனது இலட்சியத்தில் வெற்றி பெறவில்லை. ஆனால் அவனுடைய எழுச்சி, வீரம், தியாகம் ஆகியவை என்றென்றும் மக்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது. பூலித்தேவன் வீரத்தையும், விவேகத்தையும், தியாகத்தையும் வருங்கால இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துக்கூறுவது இன்றியமையாக் கடமையாகும். அதே போல மருதநாயகத்தின் உண்மை வரலாறும் மக்கள் மத்தியில் உலாவர வேண்டும்.

மதிப்புரை

மாமன்னன் பூலித்தேவன்

குமுதம் 8-4-93.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆற்காடு நவாபையும், ஆங்கிலக் கும்பினியரையும், எதிர்த்துப் போரிட்ட புரட்சியாளன் பூலித்தேவனின் வரலாறு அரிய புகைப்படங்களுடன் உள்ளது.

தமிழரசி 28-3-93.

கட்டபொம்முவிற்கு அரை நூற்றாண்டுக்கு முன்பே, இந்தியாவில் முதன்முதலில் விடுதலை முழக்கம் செய்து, ஆங்கிலேயரை எதிர்த்தவன் பூலித்தேவன். அவனது வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

சுபமங்களா. சூலை 1993.

பூலித்தேவனுடைய வீரவரலாற்றைப் பற்றிக் கூறக்கூடிய வகையில் ஒரு நூல் கூட வெளிவரவில்லை. அந்தக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகத்தான் எழுதியது இந்நூல், நூற்றுக்கணக்கான புத்தகங்கள் என்னும் செய்தி நூலாசிரியரின் போரார்வப் பெருமைமிக்க உணர்ச்சியைப் புரிந்து கொள்ள உதவுகிறது. நூலாசிரியர், ஆய்வுப் போக்கும் கதைப் போக்குமாகப் பின்னிப் பிணைய இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புற இலக்கியத்தை மிகத் திறமையாக நூலாசிரியர் இந்நூலில் பயன்படுத்தியுள்ளது பாராட்டுதலுக்குரியது.

தமிழரசு 1-8-93.

'வெள்ளையனே வெளியேறு' என்று முதல் முழக்கமிட்டவன் பூலித்தேவன் என்பதைத் தம் ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் கோடிட்டுக் காட்டுகிறார். நூலாசிரியரின் உழைப்பும் உறுதியும் இந்நூலில் நன்கு வெளிப்படுகிறது. ஆராய்ச்சி நோக்குடைய இளைஞர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

தராசு 13-4-1993.

மாமன்னன் பூலித்தேவனின் வீரவரலாறு சரித்திரச் சான்றுகளுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தினத்தந்தி 26-3-1993.

தமிழ்நாட்டில் வெள்ளையரை எதிர்த்து முதல் முழக்கமிட்ட மாவீரன் பூலித்தேவன். அவனைப்பற்றிய விரிவான வரலாறு, ஆசிரியர் அரும்பாடுபட்டு அருமையான படங்களையும் சேர்த்திருக்கிறார்.

இந்நூல் நல்ல கட்டமைப்புகளையும் உடையதாக உள்ளது. படித்தவுடன் புரியும் வண்ணம் பாங்குடன் அமைக்கப்பட்டுள்ளது. தனித் தமிழ்நடை, தடையற்றது, சொல்லாட்சி ஈர்ப்பு சக்தி உடையது. சான்றுகள் ஆணித்தரமானவை. நடுவு நிலைப் போக்கு. இந்த நூல் ஒரு கடுமையான உழைப்பு. காலங்களால் மறைக்கப்பட்டுக் கிடந்த கருவூலத்தை முறையாக வெளியே கொண்டு வந்துள்ளது.

பேராசிரியர். டாக்டர். **சாரதா நம்பி ஆரூரன். ஆனந்தவிகடன் 4-9-94.**

பூலித்தேவன் நடத்திய ஒருநாள் போரில், சின்ன நாளிக்கு பதினொன்னரைப்படி தாலி அறுத்து விழுந்தது என்பது அனைவரையும் துயரத்தில் ஆழ்த்துகின்றது. ஆராய்ச்சி அடிப்படையில் எழுதப்பட்ட நூல் இது.

இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்

தினமலர் 13-3-85.

பல வரலாற்று நூல்களையும் ஆராய்ந்து இந்திய விடுதலைப் போரில் கட்டபொம்மனுக்கு முன்பு ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவன் பூலித்தேவனே என்று இதன் ஆசிரியர் வாதாடுகிறார். மேலும். ம.பொ.சி. கூறிய கருத்துக்களை மறுத்து பூலித்தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறார். சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராக முதல் குரல் கொடுத்தவன் பூலித்தேவன் என்பதற்கு பல சான்றுகளைக் கையாண்டுள்ளார்.

தினமணி 13-5-85.

'வெள்ளையனே வெளியேறு' என்று முதன் முதலாகக் குரல் கொடுத்தவன் வீரன் பூலித்தேவன்தான். பூலித்தேவனைப் பற்றி முழுமையான நூலோ முழுமையான சரித்திரமோ இதுவரை வெளியாகவில்லை. இந்த குறையைப் போக்கிட எண்ணிய புலவர் இராசையா தந்துள்ள முழுமையான குறிப்புகள் அடங்கிய புத்தகம்தான் 'இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்' என்னும் நூல்.

குமுதம் 14-2-85

'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கிய புரட்சி வீரன் பூலித்தேவனது வரலாறு ந. இராசையா அவர்களால் எழுதப்பட்ட சிறந்த நூல்.

தமிழுரசு 16-9-85.

பூலித்தேவனைக் குறித்த நூல்தான் என்றாலும், அவன் காலத்தில் தமிழகத்தின் நிலை, மக்களின் வாழ்க்கை முறை, போர்ப்பண்பு போன்ற பல்வேறு செய்திகளைத் தெரிவித்திருக்கின்றார். ஆசிரியர் ஆய்வு மனப்பான்மை கொண்டவர் என்பதும், கடுமையான ஆராய்ச்சிப் பணியாற்றியுள்ளார் என்பதும் இந்நூலின் மூலம் தெரிய வருகிறது.

தராசு 13-12-85

தென்பாண்டி நாட்டின் தீரன் பூலித்தேவன் புகழ்பாடி அறிமுகப்படுத்தி வைக்கிறது நூல்.

தேவர் முரசு மே-1985.

இதுவரையிலும் எழுதப்பட்டுள்ள நூல்கள் பெரும்பாலும் தேசிய அளவிலேயே வெளியிடப்பட்டுள்ளன. வட்டார அளவில் வரலாறுகள் எழுதப்படவில்லை என்ற குறை என்னால் நீங்கியது என்று சொல்லாமல் செயலிலே காட்டியுள்ள திரு. புலவர். இராசையா அவர்கள், தேசிய வரலாறுகள் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற பழந்தமிழ்ப் பண்புள்ள புலவர் இராசையா அவர்கள், இந்தியவிடுதலைப் போரின் முதல் முழக்கம் என்னும் நூல் வெளியிட்டுள்ளார்.

தேவர் குலம் மார்ச் 1985.

மண்மூடிப் போகவிருந்த சரித்திரச் சான்றுகளை இதோ! கண் முன்னே நிறுத்திவிட்டார். இந்தச் சுவடி ஆதாங்களைத் 'தேனீ' போல சேகரிக்க எத்தனை படி ஏறி இறங்கினாரோ ! அவருக்கு நன்றி கூறுவோம்.

புதுக்கோட்டைச் சண்டை

தினத்தந்தி 19-6-2002

மாவீரன் பூலித்தேவன் பற்றிய அதிசயச் செய்திகளைக் கொண்ட நூல் 'புதுக்கோட்டைச் சண்டை'. படிப்பதற்குச் சுவையானதாகவும், விறுவிறுப்பாகவும் உள்ளது.

குமுதம் 25-11-2002

கதைப்பாடலாக மட்டுமே இருந்து வந்த தமிழகத்தின் ஒரு பகுதி சரித்திரத்தின் நூல் வடிவம். ஆசிரியர். ந. இராசையா.



பூலித்தேவன் வரலாற்று ஆராய்ச்சி ஞாயிறு

டாக்டர் ந. இராசையாவின் பிற நூல்கள்

இந்திய விடுதலைப்போரின் முதல் முழக்கம்

விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு

மாமன்னன் பூலித்தேவன்

பதினெட்டாம் நூற்றாண்டின் போர்வாள் மாவீரன் பூலித்தேவன்

பூலித்தேவன் சிந்து (கதைப் பாடல்)

பூலித்தேவன் சிந்து (ஆய்வு)

புதுக்கோட்டைச் சண்டை

தேவதானம் பெரியகோவில்

The First Freedom Fighter - The Story of Pulittevan

ஊத்துமலை ஜமீன் வரலாறு (குறு நூல்)

மருதநாயகம்